# சீறா ஆய்வுத் திரட்டு (1)

வெளியீடு:

டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி

இளையான்குடி

O,1KUM:4
N75

R. R. No 1964/355/79

# சீறா ஆய்வுத் திரட்டு

527

963
24. 7. 78

Dr. ZAKIR HUSAIN COLLEGE
ILAYANGUDI
ஓதுக! உம் இறைவன் திருப்பெயரால்
READ IN THE NAME OF THY LORD

ASSISTANT REGISTRAR OF BOOKS
24 JUL 1978
MADRAS 600 009
... & PR. DEPARTMENT

-: வெளியீடு :-

டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி

இளையான்குடி

First Edition - June 1975

0-,1KUM;g
N75

(c) The Principal,
*Dr. Zakir Husain College,*
*Ilayangudi.*

*Published by*
*Dr. Zakir Husain College,*
*Ilayangudi-623 702.*

ARCHIVES LIBRARY
106828
MADRAS

Price Rs. 10-00

*Printed at* Pandyan Printers, Madurai-1.

# உன்னை அழைக்கிறோம்!

ஒரு தனி இலக்கியத்துக்கு விழா எடுத்துப் போற்றும் பணியினைத் தமிழ்நாட்டில் தொடங்கி வைத்தவர், 'கம்பரடிப் பொடி' சா. கணேசன்தான். அதைப் பெருக வளர்த்தவரும் அவரே. இசுலாமியத் தமிழின் தலை இலக்கியமான சீறாப் புராணத்துக்கு எங்கள் கல்லூரியில் கடந்த பிப்ரவரித் திங்கள் 23-ஆம் நாள் நாங்கள் விழா எடுத்தோம்.

'விளம்பர ஒப்பனை' யினை மிகுதியாகப் பெற்றிருந்த விழா மலர், இலக்கிய ரசிகர்களின் அழகிய கண்களைக் கொஞ்சம் உறுத்திற்று. எனவே விழா மலரில் இடம்பெற்ற சில கட்டுரைகளோடு விழாவில் இலக்கியவாணர்கள் ஆற்றிய உரையினையும், வாசித்த கவிதை, கட்டுரைகளையும் இணைத்து இயற்கையழகோடு இந்தச் 'செம்பதிப்பு' வெளியாகிறது.

★ ★ ★

பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக, சமயங்களோடு தன்னைப் பிணைத்துக்கொண்ட ஒருமொழியில் இப்படி ஒரு திறனாய்வு நூல் வெளிவருவது ஆச்சரியமில்லை. ஆனாலும் சீறாப்புராணத்திற்கு இப்படியொரு திறனாய்வு நூல் இதுவரை வெளிவராதது ஆச்சரியம் தான். மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் இசுலாமியத் தமிழிலக்கியம் பிள்ளைப் பருவம் கண்ட காலத்தில் பிறந்த நூல் சீறாப் புராணம். திரு. தெ. பொ. மீ. சரியாகச் சொன்னதுபோல், "உலகின் இருபெரும் பண்பாடுகள் தத்தம் தனித்தன்மையை இழவாது ஒன்றையொன்று கலந்து அளவளாவி உலகை அளக்கவேண்டும் என்றெண்ணிய ஒரு மாகவிஞனின் அழகிய கனவு" அந்நூல்.

பாலப் பருவம் தாண்டியபின், இந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இசுலாமியத் தமிழிலக்கியம் மார்க்கண்டேயப் பிராயத்திலேயே நின்றுபோனது வருந்தத்தக்க செய்திதான். காரணம் என்ன? திரைகடலோடித் திரவியம் தேடப்போன இசுலாமியத் தமிழர்க்கு இந்த இலக்கியத் திரவியங்களை மேலும் ஈட்டவும், அனுபவிக்கவும், பிறருக்கு அள்ளித்தரவும் நேரமில்லையா? நினைப்பில்லையா? இல்லை, இரண்டும்தானோ?

அது ஒருபுறம் இருக்கட்டும். இராம காதைக்கு ஒரு 'கம்பராமாயண சாகிபு' கிடைத்த மாதிரி உமறுப் புலவர்க்கு ஒரு தொண்டன் கிடைக்காமற்போனது யாருடைய தவக்குறைவு? "வள்ளலார் வாய்மொழி அருட்பாவே" என்று வரிந்து கட்டிக்கொண்டு களத்திலே

குதித்த பாவலர் சேகுத்தம்பிக்கு மறுதரப்பில் இணையில்லையே என்று இசுலாமியத் தமிழர்கள் தவங்கிடந்தார்களே. தவம் பலித்ததா? 'பலித்திருக்கிறது' என்று இதோ இந்த நூல் சாட்சி சொல்கிறது.

"பாலமுதம் இளம்பிறையில் வடித்தெடுத்துப்
பசுந்தமிழாம் தேன்கலந்து 'சீறு' என்னும்
மூலஒளிக் கிண்ணத்தில் ஏகதெய்வ
முறைமணக்கச் செய்உமறுப் புலவன்வாழ்க!"

இந்தக் குரல் எங்கிருந்து வருகிறது தெரியுமா? கம்பன் புகழ் பரப்பும் காரைக்குடி மண்ணிலிருந்துதான். நெற்றியிலே திருமண்ணும், நெஞ்சிலே இறை நினைவுமாய்த் திகழும் தேசிகனாரின் கண்டத்திலிருந்து இந்தச் சொற்கள் உருவாகி ஒளிர்ந்தபோது, எங்கள் வறண்ட களிமண் பூமியின் காட்டகத்திச்செடிகள் கூடச் சிலிர்த்துப் போயினவே! 'தமிழ் மண்ணில் நன்றியுணர்ச்சி செத்துப் போகவில்லை' என்று அந்தப் 'பழுத்த வைணவர்' அன்றைக்குச் சாட்சி சொன்னார். மாசி மாதத்தில் சிறு தூறலிலும் பனியிலும் நனைந்துபோய் மூச்சுத் திணறிய அந்த ஒரு பகற்பொழுது எங்களுக்குச் சொர்க்கத்தையல்லவா நினைவூட்டிற்று! அன்று 'நீராட வழியின்றி நிலம் வறண்ட வேளையிலும் சீறுவில் நீராடத் திரண்டுவந்த பெருங்கூட்டம்' எங்களுக்கு எதைக் காட்டிற்று? தமிழனுக்கு இன்னும் இலக்கிய சுகங்களை அனுபவிக்க மறந்து போகவில்லை என்பதைத்தானே!

கருத்தரங்கம், சுவையரங்கம், இசையரங்கம் என்று வகைவகைகளாக 'சீறுப்புலவு' உணவை இந்தப் புலவர்கள்தாம் எப்படியெல்லாம் பரிமாறினார்கள். இதோ ஒரு பகுதியை களிம்பேறாத 'எழுத்து'ப் பாத்திரத்தில் உங்களுக்கும் எடுத்து வந்திருக்கிறோம். சாப்பிட்டுவிட்டுச் சொல்லுங்களேன்..!

★ ★ ★

கட்டுரை எழுதி வழங்கிய அறிஞர்க்கும், கருத்தரங்கச் சான்றோர்க்கும், மெய்ப்புக்களைத் திருத்த அயராது பயணம்செய்த அன்பர் திரு. தொ. பரமசிவன் அவர்களுக்கும், பாண்டியன் அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி.

டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி
இளையான்குடி

---

அச்சிட்டோர்: பாண்டியன் பிரிண்டர்ஸ், தெற்கு வெளி வீதி, மதுரை

# பண்பாட்டுக் கூடல் . . . . . .

டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்
முன்னாள் துணைவேந்தர்
மதுரைப் பல்கலைக்கழகம்

000

**30** ஆண்டுகளுக்கு முன் நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றியபோது பழைய தமிழ் நூல் கண்காட்சியொன்று நடத்த ஏற்பாடு செய்தேன். அப்பொழுது மாணவர்களை அழைத்துச் சொன்னேன்; ''இஸ்லாமிய கிறித்துவ இலக்கியங்கள் நாட்டில் பெரு வழக்கில் இல்லாமல் போய்விட்டன. அவை எங்கிருந்தாலும் தேடிக்கொண்டு வாருங்கள்.''

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பரங்கிப் பேட்டைக்கு அருகில் இருந்த காரணத்தால் மாணவர்கள் பல இஸ்லாமிய நூல்களைக் கண்டு பிடித்துக் கொண்டு வந்தார்கள். அவற்றையெல்லாம் பார்த்தபோது எனக்கு ஒரு வருத்தம் ஏற்பட்டது. இவ்வளவு இஸ்லாமியத் தமிழ் நூல்கள் இருந்தும், இவையெல்லாம் மக்களிடம் வழக்கில் இல்லையே என்று. நூல்கள் கிடைப்பதே அருமை. அவற்றைப் புரிந்து கொள்வதும் அருமை. இந்த இருள் நீங்கி என்றைக்கு இந்தப் புலவர் பெரு மக்களின் தொண்டெல்லாம் நிலை பெறப்போகிறது என்று வருத்தப் பட்டேன். இஸ்லாமியக் கொள்கையினைத் தமிழ் மக்கள் எல்லோரும் அறிந்து, உணர்ந்து இன்புற வழி வகுத்துக்கொடுத்தார் உமறுப் புலவர். மற்ற இஸ்லாமியப் புலவர்களும், அந்த வழியைப் பின் பற்றினர்.

இன்றைய உலகிற்கு பண்பாட்டு ஒற்றுமை தேவைப்படுகிறது. தமிழ், இஸ்லாம் ஆகிய இரண்டு பண்பாடுகளையும் இணைக்க முற் பட்டவர் உமறுப்புலவர். இரண்டு பண்பாடுகள் இணைகின்றபோது சில விபத்துக்களும் ஏற்படலாம். ஏதேனும் ஒன்றின் அடிப்படை மறைந்து போகும். அப்படி இணைகின்றபோது எந்தப் பண்பாட்டின் தனிச்சிறப்பும் மறைந்து போகக்கூடாது. அதன் உயிர்நிலை காப்பாற் றப்படவேண்டும். உதாரணமாக, மேல் நாட்டுப் பண்பாட்டில் நாம் மயங்கி விடுகிறோம். அதன் சிறந்த ஆழ்ந்த விஞ்ஞானப்போக்கில் ஈடுபடாமல் அவர்களின் உடை, உணவு, குடிப்பழக்கம் முதலியவற்றில் மயங்கி விடுகிறோம். நம்முடைய பண்பாட்டின் அடிப்படையை நாம்

உணர்வதில்லை. எனவே அதை மறந்து விடுகிறோம். ஆனால் பண்பாடு உயிர் போன்றது. பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக வரலாற்றில் புதிய பண்பாடு ஒன்று உருவாவதும் உண்டு.

இஸ்லாம், தமிழ் என்ற இரண்டு பண்பாடுகளும் தங்களின் தனித்தன்மையினை இழந்து போகாமல் இணைந்து அளவளாவி உலக அரங்கிற்கு உயரவேண்டும் என்று உமறுப்புலவர் கனவு கண்டார். அவரது தொண்டு பெரிய, சிறந்த தொண்டு. பண்பாட்டு ஒற்றுமை இல்லாமல்தான் இப்பொழுது உலகம் திண்டாடுகின்றது. இந்த இரண்டு பண்பாடுகளின் ஒற்றுமையினையும் உமறுப்புலவர் ஒரு கவிஞனின் அழகிய கனவாகச் செய்திருக்கிறார். துரதிர்ஷ்டவசமாக, அவரது தொண்டின் ஆழத்தைத் தமிழுலகம் அறிந்தபாடில்லை. இஸ்லாமிய உலகமும் உணர்ந்தபாடில்லை.

அவரது தொண்டின் சிறப்பை நாம் அறிகின்றபோது தமிழ் இஸ்லாம் ஆகிய இரண்டு பண்பாடுகள் இணைவதற்கு மட்டுமல்லாமல், உலகில் எந்த இரண்டு பண்பாடுகளும் இணைவதற்கு அது ஒரு வழி காட்டியாக அமையும்.

முதல் பாடல் 'திருவினும் திருவாய்' என்று தொடங்குகின்றார். இந்தத் 'திரு' விற்கு 'லட்சுமி' என்று இந்த இடத்தில் பொருள் கொள்ளக்கூடாது. கல்வி, செல்வம், பண்பு இவையனைத்தையும் வளர்க்கும் பொருளாக அந்தத் திருவினைக் குறிப்பிடுகின்றார். இந்த முதற் பாடல் தமிழ், இஸ்லாம் ஆகிய இரண்டு பண்பாடுகளின் ஒற்றுமையை மட்டும் கூறுவதல்ல. உலகின் எல்லாப் பண்பாட்டினரும் இதை ஒப்புக்கொள்வர். 'Even a materialist'— அவன்கூட ஒத்துக் கொள்வான். அவனும் எல்லாம் நிறைந்த பேராற்றல் என்றுதானே சொல்லுகிறான்.

உமறுப்புலவர் நூலெழுதிய காலத்திலே அவர்க்கு ஒரு இடர்ப் பாடு ஏற்பட்டது. பாத்திரங்களின் பெயர்களெல்லாம் அரபு மொழியில் அமைந்திருக்கின்றன. இந்த அரபு மொழிப் பெயர்களையெல்லாம் தமிழ்ப்பாட்டில் உறவாடவிட ஒரு வழியினைக் கையாண்டார் உமறுப் புலவர். தமிழிலே சந்த விருத்தம் என்ற ஒன்று உண்டு. பிறமொழிச் சொற்களெல்லாம் சந்தக்குழிப்பிற்கு ஏற்ப வந்தால் அவை தமிழ்ச் சொற்கள் போலவே ஆகிவிடும். 'அபுபக்கர்' என்றால், "இது என்ன தமிழா" என்று கேட்போம். 'தபுதக்க' என்கின்றபோது 'அபுபக்கர்' என்று வந்துவிடும். அந்தச் சொல்லுக்கு ஏற்ப, பாடலுக்கான சந்தக் குழிப்பை எடுக்கின்றபோதே 'புரசைக் கடக்கரிகள்' என்று எடுத்து

விடுகிறார். தபுதக்க என்கின்றபோது அபுபக்கர் என்பது தமிழ்ச் சொல்லாகிவிடுகிறது. இந்தக் குறிப்போடு சீறாப்புராணத்தைப் படித்தால் அரபுச்சொற்கள் தமிழ்ச்சொற்களைப் போலவே காதுக்கும் உள்ளத்திற்கும் இனிக்கும்.

இஸ்லாமிய வரலாற்றில் அலி அவர்கள் சிறந்த வீரர். அந்த அரபுப்பெயருக்குத் தமிழில் வேறு பொருளும் கொள்ளலாம். அவ்வாறு பொருள் கொண்டுவிடக்கூடாது என்று உமறுப்புலவர் அலி என்று வருகின்ற இடத்தில் எல்லாம் 'புலி அலி' என்றே சொல்லுகின்றார்.

பருப்பதராஜனைக் கண்ணுற்ற படலத்தில் ''இதைத் தூளியாக்குவேன்'' என்றபோது, ''இவர்களை அழிக்க வேண்டாம் இவர்கள் மார்க்கத்தை அறியாது போனாலும், இவர்களின் பின் சந்ததியாராவது அதை அறிந்துகொள்வார்'' என்று சொல்கின்ற பரந்த மனப்பான்மையை எண்ணும்போது, புத்தரிலும், ஏசுவிலும் உருகிய உள்ளம் அங்கேயும் உருகுகின்றது.

அடுத்து தசைக்கட்டியைப் பெண்ணுருவாக்கிய படலம் ஒன்று இருக்கின்றது. ஞானசம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கியதாக ஒரு கதை தமிழ் நாட்டிலும் உண்டு. ஒவ்வொரு கவிஞனுக்கும் பெண்ணின் அழகை எங்காவது முழுவதும் வருணிக்கின்ற ஒரு கடப்பாடு உண்டு. அது வெறும் பெண் வருணனை அல்ல. அது அழகின் வடிவம். அது தெய்வீகமாக வரவேண்டும். சேக்கிழார் பாடும் பூம்பாவை வருணனை ஒரு தெய்வீகக் காட்சியாய், ஆண்டவனின் அருளே பொங்கி வருவது போல் அமைந்துள்ளது. இங்கே சீறாப்புராணத்தில் தசைக்கட்டியிலிருந்து பெண்ணுருவம் வருகின்றது. மெல்ல மெல்ல எழுகின்றது. முதலில் கூந்தல் தெரிகின்றது. பிறகு புருவம் தெரிகின்றது. மூக்கு கழுத்து கால் வரை படிப்படியாகத் தெரிகின்றது. அழகான வருணனைப்பகுதி இது. பிற காவியங்களின் அழகான பகுதிகளை மனத்தில் வாங்கிக்கொண்டு இதைப் பார்க்க வேண்டும். சங்ககாலம் தொடங்கி அவர் காலம் வரையுள்ள நல்லதையெல்லாம் எடுத்துக்கொண்டு நபிகள் பெருமானாரின் வரலாற்றை உமறுப்புலவர் பாடியிருக்கின்றார்.

என்னுடைய வருத்தமெல்லாம் இருபெரும் பண்பாடுகள் இணைந்து, அளவளாவி, ஒன்றையொன்று வளர்த்து, உலகத்தையே வளர்க்கவேண்டும் என்ற கவிஞனின் பெரும் கனவைத் தமிழகமும் இஸ்லாமிய உலகும் அறியவில்லையே என்பதுதான்.

எத்தனையோ இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள் உள்ளன. குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல் நல்ல பதிப்பே இல்லை. சூஃபி மதக்கருத்தையும், நம் நாட்டு வேதாந்தக் கருத்தையும் கொண்டு பாடுகிறார் அவர். வியக்கத்தக்க நிலை அது. இன்னும் அம்மானை, படைப் போர் நாடகங்கள் எல்லாம் நிறைய இருக்கின்றன. இவற்றைப் படிக்கின்ற இஸ்லாமியத் தமிழ் மகன் இவற்றின் ஆழ்பொருளை எல்லாம் கண்டுணர வேண்டும். தமிழ் மாணவர்கள் இவற்றையெல்லாம் திரட்டி, காத்து, சுவைத்து மகிழ வேண்டும்.

இப்படிப்பட்ட நிலையினை நாம் அடைந்தால், இந்த இருபதாம் நூற்றாண்டின் அல்லல்களையெல்லாம் நீக்கமுடியும்.

உமறுப்புலவரின் உள்ளம் காண நாம் இன்று கூடியிருக்கிறோம். இந்த விழாவின் தொடக்கத்தில் அவரே மழையாக வந்து நம்மையெல்லாம் வாழ்த்தியிருக்கிறார்.

இஸ்லாத்தையும், தமிழையும் ஒன்றுபடுத்திய புலவர்களின் தொண்டையெல்லாம் வாழவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[23—2—1975 அன்று இளையான்குடி டாக்டர் சாகிர் உசேன் கல்லூரியில் நடைபெற்ற சீறாப்புராணப் பெரு விழாவினைத் தொடங்கி வைத்து டாக்டர். தெ. பொ. மீ. அவர்கள் ஆற்றிய உரை.]

# ஒரு புதுமை மலர்ந்திருக்கிறது .....!

**அல்ஹாஜ் கா. அப்துல் சமது**, எம். ஏ., எம். பி.

இசுலாத்தின் தமிழ்த்தொண்டுக்கு மிகக்கம்பீரமான ஒரு தொடக்கத்தைத் தந்தவர் உமறுப்புலவர் அவர்கள். உமறப்பா அவர்களின் காப்பிய வெற்றிக்குப் பல காரணங்கள் உண்டு. அவர்களுடைய 'சொல்லாட்சி'யைத்தான் எடுத்துக் கொள்ளுங்களேன்.

சீருப்புராணத்திலே அரபுச் சொற்கள் பலவற்றைத் தமிழோடு இணைத்துப் பாடியிருக்கிறார்கள். ''தமிழ்ச்சொற்களே'' என்னுமளவுக்கு அவையெல்லாம் இன்றைக்குத் தமிழோடு ஒன்றிப்போய் விட்டன. 'வரலாறு' என்று பொருள்படும் 'சீரத்' என்ற அரபிச் சொல்தான், இன்று 'சீறு'வாக மாறியிருக்கிறது. 'சீறு' என்ற சொல்லே செந்தமிழின் ஒரு சொல்லாக ஒப்புக்கொள்ளுமளவுக்கு இன்று மாறியிருக்கிறது என்றால் சீறுவின் சொல்லாட்சியை வியந்து பாராட்டாமலிருக்க முடியாது.

மிக்க வேதனையோடு பேராசிரியர் தெ பொ. மீ. அவர்கள், இங்கே சொன்னார்கள். ''இப்படிப்பட்ட மாப்புகழ் கொண்ட ஒரு காப்பியத்தை — யாருக்காக எழுதப்பட்டதோ அந்த — இசுலாமிய சமுதாயத்தினரும் புரிந்து கொள்ளவில்லை, எந்த மொழியிலே அது இயற்றப்பட்டதோ, அந்த மொழி பேசக்கூடிய—தமிழர்களும் புரிந்து கொள்ளவில்லை.'' என்று.

அது ஒரு காலம் இருந்தது. அந்தக் காலத்துக்கெல்லாம் விடிவு காணக்கூடிய ஒரு முயற்சியைத் தொடங்கி வைத்த பெரியாரே, இன்று காலையிலே சீறுவிழாவையும் தொடக்கி வைத்த பெரியார், பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள்தான் என்பதை நன்றியுணர்வோடு நாம் நினைத்துப் பார்க்கவேண்டும்.

அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த காலத்திலேதான், சீருப்புராணத்தின் ஒரு சில பாக்களையாவது பாடநூற்களிலே இணைக்க வேண்டுமென்ற இயக்கத்தை ஏற்படுத்தினார்கள். அதன் பயனாக அந்தக் கல்லூரியில் படித்த மாணவர்கள் எல்லாம் சீறுவினைக் கட்டாயமாகக் கற்றறிந்த ஒரு நிகழ்ச்சியை, நம் கல்வி வரலாற்றிலே காண்கிறோம்.

இன்னும் ஒரு காலம் இருந்தது. சீருப்புராணத்திலிருந்து நான்கு வரிகளைத்தான் பாடத்திட்டத்திலே இணைக்க முடியும் என்று. பாடத்திட்டக் குழுவிலே இடம்பெற்ற பேரறிஞர்கள் "அது படித்தால் போதும்; அந்த அளவிற்கு இடம் கொடுத்தால் போதும்" என்று எண்ணினார்களோ, அல்லது அதைவிட அதிகமாக எடுத்துப் போடுவதற்கு அன்று அவர்கள் கையில் நூல் கிடைக்கவில்லையோ, எது காரணமோ நாம் அறியோம்.

இன்று ஒரு புதுமை மலர்ந்திருக்கிறது; புது வாழ்வு பிறந்திருக்கிறது என்பதற்கு ஒரு சான்று நமக்குக் கிடைத்திருக்கிறது. இன்று நான் இந்தப் பட்டியலைப் பார்க்கிறேன். சீருப்புராணத்திற்காக ஒரு நாள் முழுமையாக ஒதுக்கப்பட்டு, தொடக்கவிழா ஆற்றப் பெரும் பெரும் பேராசிரியர்கள் அழைக்கப்பட்டு, சிறப்புரையாற்ற அரபியும் தமிழும் அறிந்த அறிஞர்கள் அழைக்கப்பட்டு இத்தனையும் நடந்த பிறகு கருத்தரங்கம் இப்போது தொடங்குகிறது.

இன்றைய நாகரிக உலகில் இலக்கியத்தைப் பற்றி விவாதிப்பதற்காக இப்படிப்பட்ட கடுமையான வெயிலிலே அதுவும் உணவருந்திய பிறகு, இப்படியொரு பெருங்கூட்டம் கூடியிருக்கிறது என்று சொன்னால் என்னால் என் கண்களையே நம்பமுடியவில்லை. ஆனால் இங்கே எவ்வளவு இலக்கியச்சுவைத் தேர்ச்சிமிக்கவர்கள் எல்லாம் இருக்கிறார்கள் என்பதற்கு இதோ என் முன்னே கூடியிருக்கக் கூடிய கூட்டமே ஒரு சான்றாக இருக்கிறது. 'ஏதோ நாலு வரியைத்தான் பாடத்திட்டத்திலே போட்டுச் சொல்லிக் கொடுப்பதற்குத் தகுதி பெற்றது' என்று எண்ணப்பட்டு வந்த இலக்கியத்திற்கு விரிவுரை செய்வதற்காக, ஒரு பேராசிரியர் பேரணியே இங்கே திரண்டு வந்திருக்கிறது. பண்பாட்டினுடைய மணம், எங்கோயிருந்து தவழ்ந்து வந்து இன்று இளையான்குடியிலே சோபிதமாகப் பரிணமிக்கிறது!

இது, சீருவால் நாம் பெறுகின்ற பேறு!

[23—2—1975 அன்று இளையான்குடி, டாக்டர். சாகிர் உசேன் கல்லூரியில் நடைபெற்ற சீருப்புராணப் பெருவிழாவில், கருத்தரங்கத் தலைமையேற்ற அல்ஹாஜ் கா. அப்துல் சமது, எம். ஏ., எம். பி. அவர்கள் உரையின் ஒரு பகுதி]

★

# சீருவின் காப்பிய நலன்கள்

பேராசிரியர், வித்துவான் செ. அய்தர் அலி. எம். ஏ.

0. 1. சீரு ஒரு வரலாற்றுக் காப்பியம். அக்காப்பியத்தின் தலைவர் வரலாற்று நாயகர். புலவன் வரலாற்றுச் செய்திகளை மட்டிலும் தொகுத்தால் காப்பியம் சுவையற்றதாக மாறிவிடும், புனைவுகளுக்குச் சிறப்பிடம் தந்தால் வரலாற்றுக் கூறு சிதைந்து விடும். அவன் இவ்விரண்டையும் புறக்கணித்து விடவும் கூடாது. எனவே வரலாற்றுக் காப்பியம் படைக்கும் புலவனின் பொறுப்பு, கற்பனைக் காப்பியங்கள் படைப்போனைவிட அதிகமாகும். இவ்வுண்மையை உமறு தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தார். வரலாறு தழுவிய காப்பியம் எனப் பொருள்படும் வகையில் 'சீருப் புராணம்' எனப்பெயர் சூட்டியுள்ளமை அதைப்புலப்படுத்துகிறது.

0. 2 காப்பிய இலக்கணம் வகுத்த தண்டியாசிரியர், தம் காலத்தில் நிலவிய மரபுகளின்படி இலக்கணம் வகுத்துள்ளார். காப்பியத்திற்கு அவர் கூறும் ஏழு பண்புகளுள், 'நாற்பொருள் பயக்கும் நடைநெறித்தாகி' என்பதும், 'தன்னேரில்லாத்தலைவனை யுடைத்தாய்' என்பதும் குறிக்கத்தக்கன.[1] பிறபண்புகள் எல்லாம் வருணனைகள், சுவைகள், காப்பியப் பகுப்புமுறைகள் பற்றிக் கூறுவன. இப்பண்புகள் காப்பியத்திற்குக் காப்பியம் மாறுபடும் ஆகையால், தற்கால இலக்கியத் திறனாய்வாளர் இவற்றைக் காப்பியங்களின் பொதுப்பண்புகள் என ஏற்றுக்கொள்வதில்லை. காப்பியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு பயக்கும் வகையில் அமைய வேண்டும். இந்நாற்பண்புகளில் குறைபாடுடையனவற்றைச் சிறு காப்பியம் என அழைக்க வேண்டும் எனத்தண்டியாசிரியர் விதிப்பார். [2] அவர் கருத்துப்படிக் காப்பியங்களின் சிறுமை, பெருமை அந்நான்கு உறுதிப்பொருள்களின் அடிப்படையில் அமையும்.

0. 3. தற்கால இலக்கியத் திறனாய்வாளர் வெவ்வேறு பண்புகள் இரண்டின் முரண்பாடே காப்பியத்தின் கரு எனக் கருதுவர். இக்கருவின் வளர்ச்சியும், முதிர்ச்சியும், உயர்பண்பின் வெற்றியும் காப்பியத்தின் வடிவ அமைப்பு என்பர். பண்புகளின்

---

1. தண்டியலங்காரம் : நூற்பா 8
2. ஷை : நூற்பா 10

முரண்பாடு, காப்பியம் முழுவதிலும் பரந்து காணப்படவேண்டும் என்றும், காப்பியத்தில் அமையும் துணைக்கதைகள், வருணனைகள் யாவும் இம்முழுமையைத் தழுவிச் செல்வனவாக அமைய வேண்டும் எனவும் முடிவு செய்வர். காப்பியத்தில் சொல்லும் செய்தி காப்பியம் முழுவதிலும் பரந்து காணப்படவேண்டும் என்பதைத் தண்டியாசிரியரும் வலியுறுத்தியுள்ளார். ''பாவிகமென்பது காப்பியப் பண்பே''[3] என்பது அவர் கருத்து.

1. 1. சீறாவின் காப்பியக்கரு, அறியாமைக்கும் மெய்யறிவுக்கும் இடையில் தோன்றிய போராட்டமாகும். ''இருளெனுங் குபிரின் குலமறுத்து அறநெறி விளக்க மறுவிலா தெழுந்த முழுமதி'' எனத்தம் காப்பியத் தலைவரை உமறு அறிமுகம் செய்கின்றார்.

1. 2. இப்போராட்டம் பெருமானாருக்கு நபிப்பட்டம் கிடைத்தபின்னரே தொடங்குகிறது. எனவே, சீறாவின் இரண்டாவது காண்டமாகிய நுபுவ்வத்துக் காண்டமே காப்பியக் கருவின் தோற்றுவாய் எனத்தோன்றும். ஆனால், முதல் காண்டத்தில் தமது கதைக் கருவிற்கான பின்னணியை அமைப்பதில் உமறு வெற்றி கண்டுள்ளார். பெருமானாருக்கு நாற்பதாம் வயதில் நபிப்பட்டம் கிடைத்த பின்னர் குபிர் குலத்தோடு போரிடத் தொடங்கினார். முதல் நாற்பதாண்டுக் கால நிகழ்ச்சிகளும் முதல் காண்டத்தில் தரப்படுகின்றன. முதல் காண்டத்தைப் பெரும்பாலும் காப்பியச் சுவை தோன்றும் புனைவுகளைப் படைப்பதற்கு உமறு பயன்படுத்தியுள்ளார். காப்பியத் தலைவரின் தோற்றத்தையும், இளமைப் பருவ நிகழ்ச்சிகளையும், திருமணத்தையும் கூறாது காப்பியத்தை அமைக்க முடியாதாகையால் முதல் காண்டம் காப்பியத்தின் கரு உருவாவதற்குப் பெரிதும் துணை செய்கின்றது.

1. 3. உமறு, நபி பெருமானாரின் முழுவரலாற்றையும் பாடாததை ஒரு குறைபாடாகக் கருதுவாரும் உண்டு. ஆனால், வரலாற்றிற்கும், வரலாற்றுக் காப்பியத்திற்கும் இடையில் அமையும் வேறுபாட்டைப் புரிந்து கொள்பவர் இதை ஒரு குறையாகக் கருதார். பெருமானார் தமக்கு நபிப்பட்டம் கிடைத்த பின்னர் அறியாமையை எதிர்த்து அறப்போர் தொடங்கினார். 'அல் அமீன்' சரியான நம்பிக்கைக்குரியவர் என அவரைப் போற்றிய அவரது நகர மக்கள் - மக்கமா நகரத்தார்—அவரை எதிர்த்தனர். பெருமானார் யதுரிப்''[4] சென்றார்.

---

3. தண்டியலங்காரம் : நூற்பா 91
4: இந்நகர் பிற்காலத்தில் 'மதீனத்துந் நபி'—நபியின் நகரம் எனப்பெற்றுச் சுருக்கமாக 'மதீனா' என அழைக்கப்படுகிறது.

தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வியது போல் தோன்றியது; ஆனால், தருமம் மறுபடியும் வென்றது. அறியாமை புற முதுகிட்டது; மெய்யறிவு மெதுவாக, ஆனால், உறுதியாக வென்றது. காப்பியத்தின் கரு— அறியாமையை எதிர்த்து நடத்திய போரில் அறிவு பெற்ற வெற்றியால்—முழுமை பெற்றது; காப்பியம் முழுமை பெற்றது. அதற்கு மேல் கதை நடத்துவதும், நிறுத்துவதும் புலவனது உரிமை. அவன் எடுத்துக் கொண்ட கருத்தை முழுமையாக விளக்கியுள்ளான்! காப்பியத்தை முழுமை பெறச் செய்துள்ளான். அதற்குமேல் கதை நடத்திக் காப்பியத்தை வரலாருக மாற்ற உமறு விரும்பவில்லை போல் தோன்றுகிறது. தான் பாடிய அளவில் காப்பியத்தை முழுமையாக்குவதில் உமறு வெற்றி கண்டுள்ளார்.

2. 1. உமறு படைத்த காப்பியத்தின் நாயகர் அறத்தின், பொருளின், இன்பத்தின் நாயகர். இறையருள் பெறும் வழிகாட்டி; அவ்வழியில் நடந்து காட்டி மனித குலத்திற்கு முன் மாதிரியாகத் திகழ்நத நாயகர்; அறமும், பொருளும், இன்பமும் அவரது தோற்றத்தால் புதுப் பொலிவு பெற்றன. மனிதன் இறையருளைப் பெறும் எளிய வழியைக் சண்டறிந்தான். சீருக் காப்பியம் முழுவதும் இக்கருத்து பின்னிப் பிணைந்து கிடப்பதைக் காணலாம்.

2. 2. காப்பியத் தலைவர் கதிரவனின் கடுமையான வெப்பத்திலிருந்து காப்பாற்றும் தருநிழல்; கொலை, களவு முதலிய ஈனத்தால் விளையும் பவநோய் தவிர்த்திடும் அருமருந்து; தீனெனும் பயிர்க்குச் செழுமழை; மாநிலந் தனக்கு மணிவிளக்கு;[5] இவ்வுலகம், துறக்கம், இயங்கு பொருள், நிலைப் பொருள் அனைத்தும் அவர் ஒளியால் ஒளிபெறும். அவர் பிறந்ததுமே,

"தரையினிற் பரந்த குபிரிருட் குலமுஞ்
சாற்றிய கலியிருட் குலமும்
வரையிலா தொடுங்கியது"[6]

என்று காப்பியத் தலைவரைத் தன்னேரற்றவராக உமறு காட்டுகிறார்.

---

5 சீறு : 1 : 5 : 92

6 : சீறு : 1 : 5 : 108

2. 3. காப்பியத் தலைவர் இறைவனால் மானிடத் துயர் துடைக்கும் இறுதித் தூதராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். இவ்வகையில், பிற நபிமார்க்கு இல்லாத பெருமை நபிபெருமானுக்குண்டு. அவர் உம்மி—எழுத்தறிவற்றவர். ஆனால், இறைவனருளால் இவருக்குக் குர் ஆன் முதலில் வெளிப்படுத்தப்பட்ட போது,

"இக்றவு வெனும்சூ றத்தி லிருந்துநா லாயத் தின்ப
மெய்க்குற மாலம் யஃல மெனுமட்டும்"[7]

ஓதியவர். உயிருள்ளவை, உயிரற்றவை அனைத்தும் போற்ற வேத வசனங்களை ஓதிச் சிறப்புப் பெற்றவர்.

3. 1. உமறு 'முன்னோர் மொழிப் பொருளைப் பொன்னே போல் போற்றியவர்'. அவருடைய கடவுள் வாழ்த்துப் பாடல்கள் தனிச் சிறப்புடையவை. எல்லா நபிமார்களுடையவும், நான்கு இமாம்களுடையவும் அருளை வேட்டுப் பாடுகின்றார். செஞ்சொல் புலவர்களின் கவிதைகளை இடியொலியாக உருவகித்து, தம் கவிதை கைநொடி ஒலி போன்றது என அவையடக்கம் கூறித் தொடங்குகிறார்.

3 2. அடுத்து தமிழ் மரபுப்படி நாட்டுப்படலமும், நகரப் படலமும் அமைகின்றன. நாட்டுப்படலத்து ஐந்நில வருணனைகளும் நகரப்படலத்துப் பாடல்களும் இலக்கிய நயம் செறிந்தவை மக்க நகரத்துக் கடைத் தெருவைப் புலவர்,

"மான்மதக் குவையுஞ் சந்தனத் தொகையு
மணிக் கருங் காழகிற் றுணியும்
பான்மதிக் குழவிக் குருத்தெனக் கதிர்கள்
பரப்பிய மதகரி மருப்புந்
தேனமர்ந் தொழுகுங் குங்குமத் தொகையுஞ்
செறிதலா லுயர்ச்சியால் வளத்தா
லீனமி லிமயப் பொருப்பெனப் பணைத்தங்
கிருந்து கடைத் தெருத் தலையே"[8] என்கிறார்.

மக்கநகர் முழுமையான இசுலாமிய நகராகத் திகழ்ந்த செய்தியை வேத ஓசையும், முதியவர் திக்ரின் ஓசையும், இறைவனைத் தொழுது

---

7: சீறு : 2 : 1 : 27

8: சீறு : 1 : 3 : 8.

இருகையேந்தி துஆ கேட்பதால் ஏற்படும் ஆமீன் ஓசையும் நிறைந்திருக்கும் என்பதன் மூலம் புலப்படுத்துகிருர்.

3. 3. புனல் விளையாட்டிற்கும் நன்மணம் புணர்தலுக்கும் தனித்தனிப் படலங்கள் உண்டு. இருசுடர்த் தோற்றம் சிறப்புறப் புனைந்துரைக்கப்பட்டுள்ளது. குபிரிருட்குலமும் கலியிருட் குலமும் முகம்மது பிறத்தலால் மாய்ந்தொழியும் என்னும் மகிழ்ச்சியால்,

"கரையிலா வுவகை யானந்த வெள்ளக்
கடலிடை குளித்துறக் களித்து
விரைவினிற் றிமிரக் கடற்பகை துறந்து
வெய்யவன் கதிர்கள் விட் டெழுந்தான்"

என ஞாயிறைப் புனைகிருர்.

3. 4. அறிவின் திருவுருவமாகிய மாநபியின் தோற்றத்தால் அறியாமையின் தலைவன் இபுலீசு மனம் புழுங்கினுன்.

"கரைவ னேங்குவன் மலங்குவன்
கலங்குவன் கதறி
யிரைவன் கன்னத்திற் கையைவைத்
திருந்தெழுந் திருப்பன்
தரையின் மேல்விழுந் தெனக்கிலை
யினிச்சிங்கா சனமென்
றுரைம றந்திடக் கிடந்தனன்
இருகணீ ரொழுக"

இனித் தனக்கு வாழ்வில்லையென இபுலீசு ஏங்கி, "மக்கள் நல்வழியில் செல்வார்களே" என வருந்திஞன். இங்கு காப்பியக் கருத்தையும் மெய்யறிவு பெறவிருக்கின்ற இறுதி வெற்றியையும் உமறு குறிக் கிருர்.

3. 5. போர்க்கள வருணனைகள் சீருக் காப்பியத்தில் கவினுற அமைந்துள்ளன. பதுறுப்படலமும், உகுதுப் படலமும் சீரிய போர்க்கள வருணனைகளுக்கான எடுத்துக் காட்டுக்கள். பதுறுப் போரில் எதிரிப் படைகளுக்குத் தலைமை தாங்கியவன் அபூஜயில் என்பான். அது ஒரு பெரும் போர்.

" மெய்யுழன் றிறந்து கிடந்தவ ரொருபால்
விலாப்புடை திறந்தவ ரொருபால்
கையிழந் தரிதிற் கிடந்தவ ரொருபால்
காற்றுணை யிழந்தவ ரொருபால் "

கடைசி நேரத்திலும் அபூஜயிலுக்குத் திருந்துவதற்கான வாய்ப்புத் தரப்பட்டது.

" மேலுமின் கலிமா வுரைத்துறுந் தீனை
விரும்புவை யெனின் முகம் மதுதம்
பாலினிற் கொடுபோய்ப் பருவர றவிர்த்துப்
பரிவுறுந் தலைமை செய்குவம் "

என அவனுக்கு அறிவுரை கூறப்பட்டது.

" இழிந்த சாதி " யினருடன் சேரேன் எனத் திமிர்வாதம் பேசினான் அவன். இறுதியில்,

" மறத்தினைத் தொடுத்துத் தீவினை விளைத்து
வஞ்சகம் பலபல வியற்றி
அறத்தினை வெறுத்த கொடும்பெரும் பாதகன் "

தலையிழந்து உயிர் துறந்தான்.

3. 6 சுவைகளைப் படம் பிடித்துக் காட்டுவதில் உமறு வல்லவர். வானவர் தூதர் ஜிபுரயில் வாயிலாக இறைமறையின் முதல் பகுதி தனக்கு வெளிப்படுத்தப்பட்டதும், பெருமானுருக்கு ஏற்பட்ட அச்ச உணர்ச்சியை அழகுறப் படம் பிடித்துக் காட்டுகிறுர்.

" நடுக்க முற்றுமெய்ச் சுரத்தொடுங் குளிர்தர நலிந்து
மிடுக்க கன்றிடப் பயத்தோடு அரிவையை விளித்துத்
திடுக்க முற்றது துகில்கொடு பொதிமனந் தெளியா
திடுக்க ணியாதென வறிகில னென்றன ரிறசூல் "

கபுகாபு என்னும் யூத இளைஞன் பெருமானுர்பால் பற்றுதல் கொண்டான் என்பதை அறிந்த அவன் தந்தை கொண்ட வெகுளி உணர்ச்சியை உமறு நயப்படக் கூறுகிறுர்.

" தாக்குவன் வருவன் போவன்
தடக்கைக ளிரண்டுங் கொட்டி
மூக்கினிற் சேர்ப்பன் வெள்ளை
முறுவலி னிதழைத் துண்ட
மாக்கிடக் கறிப்ப னின்ற
ளுவிலைக் கசக்கி வீணிற்
போக்குவ னென்னச் சீறிப்
புழுங்குவ னழுங்கு வானே."

4. 1. காப்பியம் முழுமையும் தீனெனும் பயிர் வளர்க்க பெருமானுர் சத்திய வேதமேந்தி, அறப்போர் நிகழ்த்திய செய்திகள் விளக்கப்படுகின்றன. மதியை அழைப்பித்த படலமும், தசைக்கட்டியைப் பெண்ணுருவமைத்த படலமும் காப்பியச் சுவை நிறைந்தவை.

4. 2. காப்பியங்களில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் இயற்கை. சீருக் காப்பியத்திலோ அவை ஏராளம். பெருமானுர் அச்செயல்களை இறையுதவியால் எளிதில் செய்து காட்டினுர் என்கிருர் உமறு.

4. 3. காப்பியம் முழுமையும் பெருமானுரின் அறிவுப்பணியும் பல தெய்வக் கொள்கையை, உருவ வணக்கத்தை, அறியாமையை எதிர்த்து, அவர்கள் நடத்திய பெரும்போரும் விளக்கப்படுகின்றன. பெருமானுரின் கருணையுள்ளமும் மாற்ருரிடத்தும் அவர்கள் காட்டிய பரிவும், தீன்பயிர் வளர அவர்கள் ஆற்றிய இடையருத் தொண்டும் உமறு அவர்களால் திறம்படப் புலப்படுத்தப்படுகின்றன.

5. 1. சீருக் காப்பியம் சுவை மலிந்த கனியாய், தமிழ் மணக்கும் நறுந்தேன் குடமாய், சமய ஒளிபரப்பும் வைரத் திருமுடியாய், காப்பியப் புகழ் மணக்கும் மலர்ப் பொழிலாய்த் திகழ்கின்றது. உமறு தம் சமயத்திற்குச், மொழிக்கும் செய்த பெருஞ் சேவையை விளக்குகிறது. முழுமை சான்ற அக்காப்பியம், காப்பிய நலன்கள் அனைத்தும் செறிந்தது என்பதும், தமிழின் பெருங் காப்பியங்களோடு ஒருங்குவைத்து எண்ணப்படும் பெருமையுடையது என்பதும் அறிந்து மகிழத்தக்க செய்திகளாகும்.

# " சீருத்திரு "

புலவர் அ. பகதுர்சா
பிறைப்பள்ளி, சென்னை.

செந்தமிழ்த் தீஞ்சுனையாம் சீருவையாக்கித் தந்த உமறுக் கவிஞர், கவிஞர்களுள் தகைமை மிக்கவர். விடுதலை வேட்கையுடன் சிந்தனைச் சிறகடித்துப் பறக்கும் கவிஞனால், எண்ணியதை எண்ணி யவாறெல்லாம் இலக்கியமாக்கி மக்களை மகிழாழியுள் ஆழ்த்த வியலும். இசுலாமிய நெறிக்குள், வழிவகுப்புக்குள் நின்று, ஒரு காவியத்தை பாடித்தருதல் என் பது எல்லார்க்கும் கைவந்த கலையோ? யாப்பு வரம்பு ஒரு புறம், இசுலாமிய வரம்பு மற்றொரு புறம். இரண்டிற்கும் நடுவண் நின்று நெறி பிறழாது, மரபு கெடாது காவியக் சுவையமைந்த பேரிலக்கியத்தை ஆக்கித்தந்துள்ளார், உமறு.

ஒரு பானைச்சோற்றுக்கு ஒரு சோறுபதம். சீருவின் நுழை வாயிலில் நிற்கும் 'திரு', கவிஞரின் அறிவாற்றலையும், ஆழ்ந்த புலமைத்திறத்தையும் காட்டுகிறது.

வாழ்த்து, வணக்கம், வருபொருளுரைத்தல் முதலியவற்றுள் ஒன்று, காவியத்தின் முதலில் வரப்பெறுதல் வேண்டும் என்பது விதி.

'காப்பு'ப் பாடலே 'சீருத' காவியத்திற்குக் காப்பாக அமை கிறது. 'திரு' வென்னுஞ்சொல்லைக் காவியத்தின் தொடக்கமாக எடுத்தாண்டு, எந்தக் கவிஞனும் செய்யாத சாதனையை நிகழ்த்தித் தம் இலாஞ்சனையைப் பொறித்துக் காட்டுகிறார் உமறுப்புலவர். 'சீரு' வென்னுஞ் சொல்லால் காவியத்தின் தலைப்பும், 'திரு' வென்னுஞ்சொல்லால் காவியத்தின் தொடக்கமும் சிறந்து மிளிர் கின்றன.

'' திருவென்பது பொருளுடைமையும் பொருள் கொணர்ந்து துய்த்தலுமன்றி எஞ்ஞான்றும் திருத்தகவிற்று ஆயதோர் உள்ள நிகழ்ச்சி: அது வினையுள் உடமை (தீவினைக் காலத்தும் செல்வர் உடையார் போல இருத்தல்) எனப்படும்'' (தொல், பொருள்—273) என்பது பேராசிரியரின் கருத்து.

அஃதாவது, துன்பம் வந்துழியும் செல்வர், உடையார் போலே நிலை கலங்காதிருக்கும் பெற்றிமை. இன்னலுற்ற போழ்

தெல்லாம் நிலைகலங்கா ஆற்றலைத் தரவல்லவனே திரு. அவ்விறைவனின் காவல் நம்மனைவர்க்கும் தேவையென்பதைத் தெளிவுபடுத்தவே 'திரு' வினை முதலாய்த்தந்தார்.

'திரு' வென்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கமே, என்று திருக்கோவை விளக்கத்தில் பேராசிரியரே கூறுவார்.

இறைவனுக்கு உருவமில்லை என்பது இசுலாம். அவ்விறைவனைப் புறக்கண்களால் காண்டல் இயலுமோ? இயலாது அகக்கண்ணால் பற்றுவோர் விருப்பத்தை நிறைவேற்றல், தோன்றாத் துணையாகிய இறைவனுக்கேயுண்டு என்பதை நிலை நாட்டவே 'திரு' வினைக்காப்புச் செய்யுளிலும், வாழ்த்துச் செய்யுளிலும் வைத்தார்.

'திரு' வென்பது பலபொருள் ஒரு சொல். உயிர்கள் பலப்பல. அவற்றின் மனத்தளவு உறைந்து அருள் பொழியும் இறைவனே ஒருவன் என்பதை வலியுறுத்தவே பலபொருள் ஒரு சொல்லான 'திரு' வினைத் தேர்ந்தெடுத்தார்.

'திரு' விருக்கும் இடமெல்லாம் சிறப்பென்னும் ஒளியிருக்கும் என்பதைக் காணலாம். திருவள்ளுவர், திருஞானசம்பந்தர், திருமாளவன், திரு. வி. க. முதலானோர் திருவினைப் பெற்றனர். திருக்குறள், திருவாசகம், திருப்புகழ், திருவருட்பா முதலான நூல்கள் திருவினைத் தாங்கி நிற்கின்றன. திருக்குற்றாலம், திருப்பரங்குன்றம், திருத்தணி, திருவாரூர் முதலிய ஊர்கள் திருவின் பெருமையைத் தேயத்துக்குத் தெரிவிக்கின்றன. திருநாள் திருவிழா திருமணம், திருவாளர் முதலாக எத்தனையோ 'திருக்கள்' அன்றாட வாழ்க்கையில் அணிசேர்க்கின்றன.

'திரு' எங்கும், எவ்விடத்தும் நிறைந்து நிற்குமாப்போல இறைவனும் எல்லா இடத்தும் நிறைந்து நிற்கிறான். அவன் இல்லாத இடமில்லை. எங்கும் நிறைந்த இறைவனைப் பணிந்துள்ளி வாழ்த்தவே 'திரு'வினை எழுவாயாக்கினார்.

'திரு' வென்பது மங்கலச்சொல். காவியத்தை மங்கலச் சொல்லுடன் தொடங்க வேண்டுமென்பது மரபு. எப்பொழுதும், எதைத் தொடங்கும்பொழுதும் 'அருளாளன் அன்புடையோன் அல்லாவின் திருப்பெயரால்' என்றே இசுலாமியர் தொடங்குவர். இறைவனை மறவாதிருக்கும் தன்மையை உணர்த்தவே, மங்கலச்–சொல்லுள்ளும் 'திரு'வினைத் தெளிந்து தோற்றுவாயாக்கினார்.

காவியத்தின் முதற்சொல்—முதலவனைக் குறிக்கும் சொல்—சிறப்புடனும் செழிப்புடனும் விரிந்து நின்று, சிந்தைக்குச் சுகமளிக்கிறதென்றால், சீறாக்காவியம் முழுவதும் எப்படியமைக்கப் பெற்றிருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

# காப்பிய உலகில் சீரு

ஜே. எம். சாலி, எம். ஏ.
துணை ஆசிரியர்
ஆனந்தவிகடன், சென்னை.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு சமயங்கள் அரும்பணி ஆற்றி இருக்கின்றன. தமிழால் சமயங்கள் வளர்ந்தனவா அல்லது மதங்களால் தமிழ்மொழி வளர்ந்ததா என்ற கேள்விக்குறி ஆராய்ச்சியாளர்களுக்குத் தோன்றினால் அது வியப்பிற்குரிய செய்தியல்ல. அந்த அளவுக்குத் தமிழ்மொழியோடு சமயங்கள் இரண்டறக் கலந்திருக்கின்றன. தமிழ்க் காவியங்களைக் கண்ணோட்டமிடும்போது சமயங்களே முன்னிற்கின்றன. சிலப்பதிகாரத்திலிருந்து சென்ற சில நூற்றாண்டு வரை தமிழில் தோன்றிய காவியங்களை மதிப்பிட முனைந்தால் இந்த நிலை தெளிவாகப் புலப்படும். சமயச் சார்புடையதாகவோ, சமயக் கருத்துக்களை உணர்த்துவதாகவோ தமிழ்க் காவியங்கள் அமைந்திருக்கக் காணலாம்.

சைவம், வைணவம், சமணம், பௌத்தம், இஸ்லாம், கிருஸ்துவம் முதலான சமயங்கள் தமிழ்க் காவியச் சோலையை வளப்படுத்தியிருக்கின்றன எனினும் மற்ற சமயக் காவியங்களிலும் இலக்கியக் காவியங்களும் உணரப்பட்டுள்ள அளவுக்கு இஸ்லாமியத் தமிழ்க் காவியங்களும், சிற்றிலக்கியங்களும் அறிந்து கொள்ளப்படவில்லை. இதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. இஸ்லாம் தமிழ்க்காவிய, இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள அரும்பணியை இலக்கிய வரலாற்று ஆசிரியர்களும் திறனாய்வாளர்களும் எவ்வகையிலும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.

இஸ்லாமியத் தமிழ்க் காவியம் என்ற நிலையில் தமிழ் மக்கள் பெயரளவில் அறிந்தது சீருப்புராணம் ஒன்றுதான். அறியப்படாத காவியங்கள் பெரும் எண்ணிக்கையில் இருக்கின்றன என்பது அவர்களுக்குத் தெரிவதற்கு வாய்ப்பில்லை. சின்னச் சீரு, புதுக்குஷ்ஷாம் இராஜநாயகம், ஆரிபுநாயகம், குத்பு நாயகம், நாகூர்ப் புராணம், முகைதீன் புராணம். மூசாநபி புராணம் போன்ற இருந்தும் உரிய முறையில் அறிமுகப் படுத்தப்படாததால் தமிழ் உலகம் அவற்றை

அடையாளம் கண்டுகொள்ளவில்லை. சீறாப்புராணம் மற்ற செந்தமிழ்க் காப்பியங்களோடு ஒப்பு நோக்கத்தக்க வகையில் காவிய நெறிகளை யும், கூறுபாடுகளையும் நிறைவுறப் பெற்று இருக்கின்றது. எனவே இஸ்லாமியத் தமிழ்க்காவியங்களில் இது தலைக்காவியத் தகுதியைப் பெறுகின்றது. தன்னிகரில்லாத ஒரு தலைமகனைப் பற்றிய காவியமாத லால் இஸ்லாமியத் தமிழ்க் காவியங்களிடையே சீறாப்புராணத்திற்குத் தனிச்சிறப்பு உண்டு. சீறாப்புராணக் காவிய நெறிகளில் ஒன்றிரண்டை இங்குக் கண்டு செல்லலாம்.

## காவிய நெறி

மரபு வழுவாத மாகாவியமான சீறாப்புராணத்தில் காப்பிய இலக்கணங்கள் எல்லா நிலையிலும் பொருந்தி அமைந்து இருக்கின் றன. தமிழ்க்காப்பியம் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு இலக்கணம் வகுக்கப்பட்டிருக்கிறது. தண்டியலங்கார ஆசிரியரும் வச்சணந்திமாலை ஆசிரியரும் நன்கு வரையறுத்து இருக்கின்றனர். வடமொழிக் காவிய மரபே பெரிதும் தமிழ்க்காப்பிய நெறியாகவும் அமைந்திருக்கிறது என்பது பொருந்தும். பன்னிருபாட்டியல், மாறன லங்காரம், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல் ஆகிய இலக்கண நூல்களிலும் காவிய இலக்கணம் பேசப்பட்டிருக்கிறது. இந்த இலக்கண நெறிகளின் அடிப்படையில் சீறாப்புராணத்தை விரிவாக ஆராய்ந்து, சீறாப்புராணம் தமிழ்க் காப்பிய உலகில் பெறும் இடத்தை நிலைநிறுத்தலாம். இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் செய்யத் தக்க இனிய பணியாக அது அமையும்.

பெருங்காப்பியம் எப்படி இருக்கவேண்டும்? தண்டியலங் காரம் கூறும் இலக்கணக் கூறுகள்:

வாழ்த்து, வணக்கம், வருபொருள் இவற்றில் ஒன்றினை முதலில் பேசவேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள்களும் பொருந்தி வரவேண்டும்.

காவியத் தலைவன் தன்னிகரில்லாத் தலைவனாக அமைய வேண்டும். மலை, கடல், நாடு, நகர், பருவங்கள், சூரிய சந்திரத் தோற்றம் ஆகிய வருணனைகள் இடம் பெறவேண்டும்.

காவியத் தலைவனின் திருமணம், முடிசூடுதல், பொழில் விளையாட்டு, புனல் விளையாட்டு, மக்கட்பேறு, ஊடல், கூடல், முதலியவை இணைந்திருக்கவேண்டும்.

இந்த அக வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு புற உலகத் தொடர்பு களாகிய மந்திரம் (மந்திராலோசனை), தூது, இகல், வெற்றி ஆகிய நிகழ்ச்சிகளைக் காவியப்புலவன் பாடவேண்டும்.

இத்தகைய கூறுகளை, அமைப்புகளைக் கொண்ட காவியம் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்றவாறு ஏதேனுமொரு வடிவுடன் சுவையும் பாவமும் (மெய்ப்பொருள்) திகழுமாறு இயற்றப் படவேண்டும்.

"பெருங்காப்பியநிலை பேசுங்காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றின் ஒன்று
ஏற்புடைத்தாகி முன்வர இயன்று,
நாற்பொருள் பயக்கும் நடைநெறித்தாகித்
தன்னிகர் இல்லாத் தலைவனை உடைத்தாய்,
மலை கடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றம் என்றினையன புனைந்து,
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல் விளையாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் கலத்தல் என்று
இன்னனபுனைந்து நன்னடைத் தாகி
மந்திரம் தூது செலவிகல் வென்றி
சந்தியிற் றொடர்ந்து, சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப."

இந்த உறுப்புக்கள் அனைத்தும் பொருந்தி வந்தால் அது பெருங்காப்பியம் என்றும், சில உறுப்புக்கள் குறைந்து வரின் அது சிறுகாப்பியம் என்றும் வகுத்துள்ளனர். சீறாப்புராணம் பெருங் காப்பியமா, சிறு காப்பியமா என்ற வாதம் அண்மைக் காலத்தில் எழுப்பப்பட்டதுண்டு காவியப்புலவர் உமறு, சீறாப்புராணத்தை முற்றுவிக்காமல் உறணிக்கூட்டத்தார் படலத்தோடு நிறுத்திக் கொண்டிருப்பதால், அது முற்ற முடிந்த காப்பியம் ஆகாது என்று சிலர் வாதிடுகின்றனர். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளில் 'வீடு' பற்றி உமறு தமது காவியத்தில் விரித்து

உரைக்கவில்லை என்பது சிலர் சுட்டும் காரணம். முப்பொருட்குள்ளேயே நாற்பொருள் திறமும் அடங்க உமறு காவியம் படைத்திருக்கிருர் என்பது சிலர் கருத்து. இது விரிவான, நுட்பமான ஆராய்ச்சிக்குரிய அடிப்படையாகும். தனிப்பெரும் ஆராய்ச்சி மேற்கொள்ள விரும்புவோர் அந்த அடிப்படையில் அணுகலாம்.

## தலைக்காப்பியம்

காப்பிய உலகில் சீருவின் நிலையை, அது மக்கள் காப்பியமாக அமைந்திருக்கும் நிலையை, பொதுவான கண்ணேட்டத்தில் ஒன்றிரண்டு செய்திகளைக்கொண்டு இங்கு எண்ணிப்பார்க்கலாம்.

இஸ்லாமியத் தமிழ்க் காவியங்களில் சீருப்புராணத்திற்கு தலைக்காப்பியத்திற்கு உரிய தகுதி உண்டு என்பதில் இருவித கருத்துக்களுக்கு இடமிருக்க முடியாது. காவிய மரபுகளை அழுத்தம் திருத்தமாக அவர் கட்டிக் காத்திருப்பதால், காலங்கடந்து நிற்கும் தலைக்காப்பியமாக அது திகழ்கிறது. 'பாட்டிற் சிறந்தது சீருப் புராணம்' என்று பிற்காலப் புலவர் ஒருவர் சீருப்புராணத்தைச் சிறப்பித்துப் பாடியிருப்பது சிந்தனைக்குரியது. அது எப்படி அமைந்து இருக்கிறது? ஒரு புலவரின் கண்ணேட்டம் இது:

“ அருளே பொருளாய் அன்பே சொல்லாய்
ஆர்வமே பண்ணாய் அறிவே பயனாய்
பூவழ குடனே புதுமணம் போலத்
தேனிசை தழைத்த தெய்வக் கவிதை
சிந்தாமணி யெனத் தித்திக் கின்ற
சீர்பெரும் புராணம் சீருப் புராணம். ”

ஏறத்தாழ இன்றைக்கு 340 ஆண்டுகளுக்கு முன்னல் உமறுப்புலவர் சீருக்காவியத்தை இயற்றிய வரலாறு தமிழ் உலகம் அறிந்தவொன்று. விலாதத்து, நுபுவ்வத்து, ஹிஜ்ரத்து எனும் முப்பெருங் காண்டங்களோடு 5027 பாடல்களைக் கொண்டு இலங்கு கின்றது சீருப்புராணம். பெருமானர் நாயகம் அவர்களின் புனித வாழ்க்கையை இவ்வண்ணம் மூன்று காண்டங்களில் பாடவந்த புலவர் உறணிக் கூட்டத்தார் படலம் என்னும் படலத்தோடு காவியத்தை முடித்து விட்டிருக்கிருர். இதற்குக் காரணம் எதுவாக இருக்கும் என்று புலப்படவில்லை.

கடவுள் வாழ்த்து, நாட்டுப் படலம், நகரப் படலம், நபியவதாரப்படலம் என்று துவக்கப் படலங்களில் நுழைந்ததுமே உமறுப் புலவரின் சீர்மிக்க, செம்மாந்த காப்பியத்திறனை, கவிப்புலமையை

எண்ணி யாரும் வியந்து போகலாம். தமிழ்க் காப்பிய மரபை அப்படி யப்படியே ஊடும் பாவுமாக உலவவிட்டு இருக்கிறார். மக்காமா நகரைச் சொர்க்கமாகக் காண்கிறார் கவிச் செம்மல். அரேபியாவை, அண்ணல் நாயகத்தின் பொன்னாட்டைப் புலவர் பாடுகின்றார் என்றாலும் அவர் நெஞ்சில் நிற்பதெல்லாம் தமிழ்நாட்டுச் சூழல்கள்தாம். காவியப் புலவன் ஒவ்வொருவனும் இலட்சிய உலகைச் சமைக்கிறான். கம்பனின் கனவு கோசலமாக உருவெடுக்கிறது. திருத்தக்கத்தேவரின் கருத்தில் ஏமாங்கதம் சொர்க்கமாக விளங்குகின்றது. அவ்வாறே உமறுப் புலவரின் நோக்கில் அரேபிய அழகுலகாக, பொன்னுலகாக இலங்கு கின்றது. நாட்டு நகரப் படலங்களில் இந்தப் பெருநிலையைக் காணலாம்.

## இலட்சிய உலகு

உமறுப் புலவர் படைத்துக் காட்டும் அறவுலகு எப்படி இருக்கிறது? அந்த நாட்டில் நிபந்தனைகள் இல்லை; மதுவும் மயக்க மும் இல்லை; பொய் இல்லை; கொலையும் களவும் இல்லை. அவ்வாறானால் இருப்பவை எவை? மக்களிடம் உயர்ந்த எண்ணம் இருக்கிறது. சிறந்த சிந்தனைகளேயிருப்பதால் நிந்தனைகளுக்கு இடமில்லை. வண்டு களைத் தவிர மற்ற யாரும் மதுவருந்துவதில்லை. பொய்யும் புனைந் துரையும் இல்லை. ஆனால் பொய் சொல்பவர்களும் இருக்கிறார்கள் யார்? காதல் வாழ்வில் ஈடுபட்டுள்ளவர்கள்! ஊடல் கொண்ட காதலி யின் புலவியைத் தீர்ப்பதற்கு ஆடவர்கள் பொய்யுரைக்கிறார்களாம். கொலையும் களவும் இல்லாவிட்டாலும் குலை குலையாகப் பழங்கள் இருக்கின்றன. இப்படி ஒரு காட்சியை அந்த இலட்சியத் திருநாட்டில் காட்டுகிறார் உமறு :

“ நினைக்கும் பொற்பொருளே நிந்தனை
மற்றோர் நிந்தனை நிந்தனையிலையே

இனக்கரும் சுரும்பு மதுத்துளி யருந்தும்
இவையலால் மது பிறிதிலையே

சினக்கரி முளைக்கோட்டு இளமுலைப் புலவி
திருத்தும் பொய்யலது பொய்யிலையே

வனக்கனி கறுத்த குலைக்கள வலது
மறுத்தொரு கொலைக்கள விலையே!”

உமறு படைக்கும் இலட்சிய நாட்டில் நாளெல்லாம் பல்வேறு ஒலிகள் கேட்டுக்கொண்டேயிருக்கின்றன. செந்நெல் செழித்து வளர்ந்திருக் கிறது. வண்டிகளில் நெல்லை ஏற்றிக்கொண்டு திசையெங்கும் மக்கள்

செல்கிருர்கள். அதனுல் ஒலி பரவுகின்றது கரும்பும் நெல்லும் விளைந்திருக்கின்ற கழனியில் அறுவடை நடக்கின்றது பாக்கு மரங்களிலிருந்து காய்கள் உதிர்ந்து ஒலியெழுப்புகின்றன அவற்றைக் குவிப்பதும் மூட்டை கட்டுவதுமாக ஆரவாரத்தோடு மக்கள் வேலையில் ஈடுபட்டிருக்கிருர்கள். அந்த ஒலியெல்லாம் எப்படி இருக்கின்றன? கொடைவள்ளல் அபுல்காசிம் மரைக்காயரின் வீட்டிற்குக் கூட்டம் கூட்டமாக வந்து மக்கள் விருந்துண்ணுதலால் ஓசை எழுந்தவண்ணமாக இருக்கிறதே, அப்படி இருக்கிறது அந்தக் கலவையொலிகள் என்கிருர் புலவர் :

“ செந்நெலின் பெருக்கின் கனைகுரற் சகடம்
திசைதொறு மலிந்தன செருக்கும்

கன்னலம் கழனி புகுந்தறுத் தடைந்த
களமர்கள் ஒலிகுரற் செருக்கும்

துன்னு பூங்கமுகு சிதறுசெம் பழுக்காய்
சுமப்பவர் கம்பலைச் செருக்கும்

மன்னவன் வகுதைத் துரையபுல் காசீம்
வளமனைச் செருக்கு மொத்திருக்கும். ”

## அவதாரம்

காப்பியத் தலைவனின் அவதாரச் சிறப்பை ஏற்றமும் தோற்றமும் துலங்க புலவன் அமைத்துப் பாடவேண்டும். கம்பனின் காவியத்தில் இந்தநிலை எழிலோடு விளங்கக் காணலாம். உமறுப் புலவர் பாடும் நபியவதாரப் படலத்தைப் போன்ற காவியப் பகுதிகள் தமிழிலக்கியத்தில் குறைவு என்று கூறலாம். தூய உள்ளத்தோடு பெருமானுர் நாயகத்தின் புனிதம் குன்ருமல், அவர்களின் பிறப்புச் சிறப்பை 125 அழகிய விருத்தங்களில் பாடிப் போற்றுகின்ருர் உமறுப்புலவர்.

வெளிச்சமில்லாத வீட்டைப்போல அறநெறியழிந்து இருள் சூழ்ந்து கிடந்த உலகுக்கு ஒரு முழுமதி போல் முகம்மது நபி பிறந்தார்கள். மாநிலந் தனக்கோர் மணிவிளக்கென அண்ணலார் அவதாரம் செய்தார்கள் என்றெல்லாம் சொல்லிச் செல்கின்ருர் புலவர்.

கதிரவனின் தோற்றம் முதலான வருணனைகள் காவியத்தில் பாடப்படவேண்டும் என்பது இலக்கணம். நபியவதாரப் படலத்திலேயே அந்த நெறியை உமறு பேணியிருக்கிருர். மற்ற மற்ற துறை வருணனைகளும் ஆங்காங்கே பாடப்பட்டுள்ளதைக் காணலாம்.

நபிகள் நாயகம் அவதரித்ததும் மண்ணுலகைப் பற்றிஇருந்த இருளும் மருளும் மறைந்தன. பெருமானுர் பிறந்துவிட்ட பெருமை யில் இயற்கையும் பங்கு கொள்கிறது கதிரவன் அந்த மகிழ்ச்சியில் தனக்குப் பகைபோல் பம்மிப் படர்ந்து கிடக்கும் இருட்படலத்தை அகறறி வெற்றிகொண்டு கதிர்வீசத் தொடங்கியது. காவிய இலக் கணத்தின் ஒரு கூறு என்ற நிலையிலும், சிறந்த உவமை என்ற நிலையிலும் இந்த அவதாரச் செய்தியைச் சுவைத்து மகிழ்கிரேம்.

“ தரையிற் பரந்த ‘குபிர்’ இருட்குலமும்
சாற்றிய கலியிருட் குலமும்

வரைவிலா தொடுங்க முகம்மது நபியிம்
மானிலத் துதித்தன ரென்றே

கரையிலா வுலகை ஆனந்த வெள்ளக்
கடலிடைக் குளித்துறக் களித்து

விரைவினில் திமிரக் கடற்பகை துறந்து
வெய்யவன் கதிர்கள்விட் டெழுந்தான்.”

## இன்பச்சுவை

அறத்தையும் பொருளையும் மட்டுமே உமறு பாடிச் சென்றிருக்க வில்லை. காவியக் கட்டழகுக்காக அவர் காதல் சுவையை, இன்பச் செய்திகளை எப்படியெல்லாம் தொட்டுத் துலக்கிப் பாடுவது என்று சிந்தித்திருக்கிருர். உண்மையிலேயே அவருக்கு மற்ற தமிழ்க்காப்பியப் புலவர்களுக்கு ஏற்படாத அளவுக்குச் சில சிரமங்கள் தோன்றியும்கூட பின்வாங்கினரில்லை. காதல் சுவைகளை முஸ்லீம் தமிழ்ப் புலவன் பாடுவது கத்தி முனையில் நின்று பாடுவதற்கு ஒப்பானதாகும். அதுவும் தன்னேரிலாத தலைமகனை நபிகள் நாயகத்தின் வாழ்வில் நிகழ்ந்த இன்பச்செய்திகளை எண்ணியபடியெல்லாம் பாட முடியாதல்லவா? கற்பனைக் குவியல்களுக்கு இடமளித்தால் புனிதம் குன்றலாமல்லவா? உமறுப்புலவருக்கு இது பெரியதொரு சிக்கலாக இருந்திருக்கிறது. இன்பச்சுவையில்லாவிட்டால் காவிய நலன் இல்லாமல் போய்விடுமே! எனவே வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இன்பச் செய்திகளை வடித்துக் கொடுத்திருக்கிருர்.

கதீஜா நாயகியை நபிகளார் முதன் முதலில் சந்திக்கிருர்கள். அந்த முதல் சந்திப்பிலேயே அவர்களிடையே தூய்மையான, துலக்க மான அன்பு - காதல் - தோன்றுகிறது என்று புலவர் சொல்ல

வருகிருர். பெருமானுர் நாயகத்தின் அழகாகிய பெரு வெள்ளத்தில் சுதீஜா நாயகியின் கண் என்னும் மீன்கள் ஓடிக்குதித்தன. பார்த்த கண் பார்த்தபடி இருக்க, நாணம் அவரை ஆட்கொண்டது. ஆனுலும் தன்னுடைய ஆவலை வெளிப்படுத்திவிடாமல் 'வேலி' யமைத்துக் கொள்கிருர் நாயகி. தலைவரின் நிலை என்ன? அவர்தம் மனத்திலும் காதல் உணர்ச்சி அரும்புகிறது. அதை அவர்களும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. நாயகியிடம் விடைபெற்று வீதியில் செல்லும்போது கூட அந்த மாதர் திலகத்தின் மனமும் கண்ணும் நாயகரைப் பின் தொடர்ந்து வருகின்றன. 'பாதை போந்த படலம்', உமறுப்புலவர் இன்பச் சுவையை எடுத்துப் பேசுவதற்கு இடம் தந்திருக்கிறது.

" பேரொளி பரப்பிப் பொங்கிப் பெருகிய வழகு வெள்ளச்
சார்பினில் கதிஜா வென்னுந் தையல்தன் கரிய வாட்கண்
கூருடைக் கயல்க ளோடிக் குதித்தன குதித்துத் தேக்கி
வாரிய வதனஞ் சேர்ந்து மறுக்கமுற் றிருந்ததன்றே.
பார்த்தகண் பறித்து வாங்கப் படாமையால் நறவஞ் சிந்தப்
பூத்த கொம்பனைய மெய்யினுணெனும் போர்வை போர்த்துக்
கூர்த்தவா வெளிப்பாடமற் கற்பெனும் வேலி கோலிச்
சேர்த்ததம் உளங்காணுது திருந்திழை வருந்தி நின்ருர் "

இது நாயகியின் நிலை. தலைவரின் நிலைமை வருமாறு:

" காக்குதற் குறித்த வள்ளல் காரிகை வடிவைக் கண்ணல்
நோக்கியும் நோக்கா தும்போல் நொடியினி லெழுந்தம் மாதின்
மாக்கட லனைய கண்ணும் மனமும்பின் தொடர்ந்து செல்லக்
கோக்குல வீதி நீந்தித் கொழுமனை யிடத்திற் சார்ந்தார் "

இவ்வண்ணம் அரும்பிய காதல், நாயகியின் உள்ளத்தில் நாளுக்குநாள் வளர்கின்றது. கனவுகள் காண்கின்ருர். உணவு இல்லை; உறக்கமில்லை; உற்றவர்களிடம் உரையாடுவதில்லை; அப்பாலும் இப்பாலும் உலவுவதில்லை; உள்ளமெல்லாம் பெருமானுர் நாயகமே குடிகொண்டிருக்கிருர்கள். தாபமிக்க ஒரு தலைவியின் நிலையை சுவை சொட்டச் சொட்டப் பாடுகிருர் புலவர். 'கதீஜா கனவு கண்ட படலம்' சுவைக்களஞ்சியமாகத் திகழ்கின்றது.

"பஞ்சணை பொருந்தா ரிருவிழி துயிலார்
பழத்தொடு பாலமு தருந்தார்
கொஞ்சுமென் குதலைக் கிளியொடு மொழியார்
கொழுமடற் செவிக்கிசை கொள்ளார்
கஞ்சமென் மலர்த்தாள் பெயர்ந்திட வுலவார்
கடிமலர் வாச நீராடார்
வஞ்சி நுண்ணிடையார் தம்மிடத் துறையார்
மகம்மது மனத்திடத் துறைந்தார்."

'மணம் பொருந்து படலம்', 'மணம் புரி படலம்' ஆகியவற்றிலும் உமறுப்புலவர் இன்பச்சுவைகளை அள்ளி வழங்கியிருக்கிறார். பாத்திமா திருமணப் படலமும் அவ்வாறே அமைகிறது. இன்பச் செய்திகளை விரித்துரைக்க வேண்டும் என்ற விருப்பம் கருதியே அந்தப் படலத்தை நீளமாக, 220 பாடல்களில் புலவர் அமைத்திருக்கிறார் என்று சொல்லலாம். இந்தப் படலங்களில் தமிழ்க்காவிய மரபு நூற்றுக்கு நூறு போற்றப்பட்டிருப்பதால், சில இடங்களில் இன்பச்சுவை 'அதிகம்' என்று சொல்லவும் தோன்றுகிறது. எனினும் அது காவிய நெறியேயாகும்.

## இறுதிப் பொருள்

நாற்பொருட்களில் இறுதியான 'வீடு' சீறாப்புராணத்தில் பாடப் பட்டிருக்கிறதா என்பது ஆராய்ச்சிக்குரிய ஓர் அம்சம். சீறாவைப் பற்றிக் கூறும் பெரும்புலவர் சேகனா (ஷெய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலிம் புலவர்) 'அறம் பொருள் இன்பம் வீடனைத்தும் அடங்கிய திறம் பெரும் காப்பியம்' என்று குறிப்பிட்டிருக்கிறார். 'வீடு' பற்றிய செய்திகளை ஒரு காண்டம் அமைத்து காவியப்புலவன் பாட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. காவியத்தில் ஆங்காங்கே அவற்றை அமைத்துச் சென்றாலும் அஃது ஏற்கத்தக்கதேயாகும். சீறாக்காவியத்தில் வீடு பேறு பற்றிக் குறிப்பிட்டுப் பேசும் பாடல்கள் விளங்கக் காணலாம். 'தீனிலை கண்ட படலம்', 'புத்து பேசிய படலம்', 'தொழுகை வந்த வரலாற்றுப் படலம்' போன்றவற்றைச் சான்று காட்டலாம்.

"வானமும் புவியும் மற்றும் வகுத்தவன் உண்மைத்தூதர்
ஆனவர் முகம்ம தென்போர் அவர்வழி மருவி நின்றோர்
ஈனமில் சுவன நன்னாடு எய்துவர் எங்கட் குற்ற
தீன் நிலை பொய்மை யென்ற தேவரும் நரகர் சேர்வார்."

என்பது ‘தீன்நிலை கண்ட படலம்’ காட்டும் வீட்டின்ப நெறி. இது பற்றி விரிவாக ஆராய இடமிருக்கிறது. அத்தகைய ஆராய்ச்சி சீருக் காவியத்தை ஓர் அடி நூலாக நிலை நாட்டும் முயற்சியாகவே அமையு மாகையால் இங்கு விரித்துரைக்கத் தேவையில்லை.

காப்பிய உலகில் சீருவின் இடத்தை நிலை நிறுத்த பல்வேறு ஆராய்ச்சி அளவு கோல்கள் இருக்கின்றன. எனினும் முதல் முஸ்லீம் தமிழ்க்காவியம் என்ற முறையில் பின்னர் தோன்றிய பல காவியங்களுக்கு சீரு வழிகாட்டியிருக்கிறது. அதன் செல்வாக்கு மற்ற மற்ற காவியங்களில் பதிந்திருப்பதைக் காணலாம். அவ்வாறே சீருவிலும், சிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற காவியங்களின் செல்வாக்கு இழைந்து வருவதை உணரலாம். ஆழ்ந்த அகலமான ஆராய்ச்சியில் முனைபவர்களுக்கு சீருப்புராணம் சிறப்புமிக்கதொரு காவியச் சுரங்கம். சிறிய இலக்கிய அறிமுகம் அல்லது கண்ணோட்டங் களில் அதன் சிறப்பியல்புகளை முழுமையாக எடுத்துச் சொல்வது இயலாதது.

எவ்வாருயினும், சீருப்புராணம் ஒரு மக்கள் காப்பியம் என்ற அடிப்படை வலியுறுத்தப்பட்டு, மக்களிடையே அது பரப்பப்படும் போதுதான் காப்பிய உலகில் அதற்குரிய இடம் ஏற்றமும் தோற்றமும் பெறும். அறிஞர்களும், ஆராய்ச்சியாளரும் அணுகக்கூடிய ஒரு காவியமாகவே இன்றுவரை சீருப்புராணம் இருந்து வருகின்றது. ‘சீருப்புராணப் பிரசங்கிகள்’ என்று பலர் முன்பு இருந்துள்ளனர். ஊர்தோறும் சீருப்புராண விரிவுரைகளை நாட்கணக்கில் அவர்கள் நிகழ்த்துவர். அவர்களுக்கு இன்று பஞ்சம் ஏற்பட்டு இருக்கிறது. சீருப்புராணம் பற்றிய எளிய, இனிய நூல்கள் பல வருமாளுல் மக்களுக்கு அதில் ஒரு சுவையையும் ஆர்வத்தையும் உண்டு பண்ண முடியும்.

சீருப்புராணம் காப்பிய உலகில் தனக்குரிய இடத்தை எதிர் காலத்தில் பெற்றிருக்க வேண்டுமாளுல், அது சிறப்புமிக்க ஒரு மக்கள் காப்பியம் என்ற நிலை தோற்றுவிக்கப்படவேண்டும். இல்லாதவரை, அறிஞர்கள் மேற்கோள்களுக்கு எப்போதாவது தொட்டுப்பார்ப்பதற் குரிய ஒரு காவியமாகத்தான் சீருப்புராணம் இருக்கமுடியும்.

— நிறைவு —

# வரலாற்று வீக்கம்

நாஞ்சில்
ஆ. ஆரிது எம். ஏ.
தமிழ்த்துறை
இசுலாமியா கல்லூரி
வாணியம்பாடி

இயற்கை இறந்த நிகழ்ச்சி (Supernatural element) பெருங் காவியங்களின் அங்கங்களுள் ஒன்ருகவே கருதப்படுகிறது. மேனுடு களில் இஃதோர் எழுதப்படாத விதியாகப் பேணப்பட்டுப் பெரும் பான்மைக் காவியங்களில் நிறைந்து காணப்படுகிறது. அவர்களின் ஆதிப் பெருங்காவியமான ஓமரில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் பரவலாக இடம் பெற்றதே இதற்குக் காரணமாகலாம்.

நம் தமிழ்க் காவியங்களும் இயற்கை இறந்த நிகழ்ச்சிகளை ஒதுக்காமல் விரும்பி ஏற்றுக்கொள்ளவே செய்தன. ''தன்னேரில்லாத் தலைவனையுடைத்தாய்'' இருக்கவேண்டும் என்று பெருங்காப்பிய இலக்கணஞ் சொல்லத் தொடங்கிய தண்டியலங்காரம்

''நெருங்கிய சுவையும் 'பா'வமும் விரும்பக்
கற்ருேர் புனையும் பெற்றிய தென்ப''

–என்றுதான் முடித்தது. 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்' அகத்திணை பாட அனுமதி தரும் தொல்காப்பியம் உரைநடைகளை வகைப்படுத்தும் போது கூடப் 'பொருள் மரபில்லாப் பொய்மொழி யானும்' தன்னைப் புலப்படுத்திக் கொள்ளலாம் என்று எல்லையை அகலமாக்கிப் புலவனைத் தன் இச்சைப்படிப் பயணம் போக விட்டு விடுகிறது.

இவையும் இன்ன பிற இலக்கண அதிகாரங்களும் (Powers) மட்டுமே தமிழ்ப்புலவர்களை இவ்வழி நடக்க ஊக்கினவோ எனின் இல்லை. நமது பெரும்பான்மை இதிகாசங்களும் காவியங்களும் தெய்வங்களை அல்லது தெய்வ அவதாரங்களை நாயகராகக் கொண்டவை. மானிட நாயகனைக் கொண்ட சிலப்பதிகாரம் போன்ற சிறுபான்மைப் பெருங்காப்பியங்களில் இயற்கை இறந்த நிகழ்ச்சி களுக்காகவே சதுக்கப்பூதம் போன்ற தெய்வாம்சங்கள் படைக்கப் பட்டன. எனவே மேற்சொன்ன அதிகாரங்கள் மற்றும் அனுமதிகள் புலவர்களுக்குத் தேவைப்பட்டிருக்க நியாயமில்லை. மாருக அப் புலவர்கள் இலக்கியங் கண்டவற்றுக்கே இவ்விலக்கணங்கள் தோன்றி யிருத்தல் சாலும்.

எப்படியானாலும் இன்றைய சாதாரணத் தமிழ் மாணவனும் முகஞ்சுளிக்குமளவுக்கு நமது இதிகாசங்களும் காவியங்களும் இயற்கை இறந்த நிகழ்ச்சிகளால் வீங்கிப் போயிருக்கின்றன என்பது மட்டும் உண்மை. இதற்கு, பெரும்புலவன் உமறுவின் சீருப்புராணம் விதி விலக்கல்ல. சீருவை முதல் நூலாகக் கொண்டு 'கோட்டாறென்னும் ஊரில் வசித்த சாகித்ய சமேதரான மகாவித்வான் அபூபக்கர் புலவர் அவர்கள் பாடிய சீருப்பதம் என்று வழங்கக்கூடிய சீருக் கீர்த்தநம்' என்ற நூலின் தலைப்பு இப்படிப் பேசுகிறது. ''நபி முகம்மது (சல்) அவர்களின் இயற்கை, செயற்கைகளாகிய சீருச் சரிதத்தை வித்துவ, உத்தம, தத்துவ சித்தியரான உமறுப் புலவரவர்கள் பாடினார்கள்; அதனைக் கொண்டு யான் சீருக்கீர்த்தநம் பாடினேன்.'' ஆக, உமறுப் புலவராயினும், அபூபக்கர் புலவராயினும் நபிகள் நாயகம் அவர்களின் சரித்திரத்தில் சில செயற்கைகளையும் அறிந்தே கலந்தனர் என்பது தெளிவு.

''எந்த விதமான அற்புதங்களையும் நான் நிகழ்த்தியதில்லை; எனது இறைத்தூதுவ நோக்கமும் அதுவன்று'' என்று திட்டவட்ட மாக அறிவித்துள்ள நபிகள் நாயகம் அவர்களை நாயகராகக் கொண்டுள்ள சீருப்புராணத்தில் காணப்படும் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் பற்றிச் சிறிது பார்ப்போம்.

சமய வாதிகளில் அப்பழுக்கில்லாததும், திட்டவட்டமானது மான வாழ்க்கை வரலாற்றையுடையார் நபிகள் நாயகம் என்பது உலகம் ஒப்புக்கொண்ட ஒன்று. அவர்களது வாழ்க்கை வரலாற்றின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒன்றுக்கும் அதிகமானவரால் உறுதி செய்யப் பட்ட பெருமைக்குரியதாகும். இவ்வளவு திருத்தமான வரலாற்று நிகழ்ச்சிகள்கூடப் பிற்காலத்தில் பாமரமுஸ்லிம்களால் எப்படித் திருத் தப்பட்டுவிட்டன என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு:

> '' ஒருவர் நபி பெருமானாரிடம் வந்து 'என் வீட்டுச் சுவர் ஓரமாக அடுத்த வீட்டில் மரம் ஒன்று நிற்கிறது. அது எனக்குப் பலவகையில் இடையூறாக உள்ளது' என்று முறையிட்டார். பெருமானார் ஒரு தோழர் மூலமாக அந்த மரத்தை விலைக்குக் கேட்டனுப்பினார். உரிமை யாளர் மறுத்துவிட்டார், நன்கொடையாகத் தரும்படி கேட்டனுப்பினார். உரிமையாளர் மீண்டும் மறுத்து விட்டார். சுவர்க்கத்தில் ஒரு மரத்திற்குப் பதிலாக இம் மரத்தைத் தந்துவிடும்படி மூன்றாம் முறையாகக் கேட் டனுப்பினார். அதற்கும் முடியாது என்றே பதில் வந்தது.

'சுவர்க்கத்தின் மரம் ஒன்றுக்குப் பதிலாக இவ்வுலக மரம் ஒன்றைத் தராத இவன் ஒரு கஞ்சன். எதிரே வரும் முஸ்லிம் ஒருவனைப் பார்த்தும் பாராதது போல் 'ஸலாம்' சொல்லாமல் போகிறவன் இவனைவிடப் பெரிய கஞ்சன்,' என்று நபிகள் நாயகம் கூறினார்கள்.''

–யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட அதிகாரபூர்வமான எல்லா ஹதீசு கிரந்தங்களிலும் இச்சம்பவம் காணப்படுகிறது. முஸ்லிம்கள் ஒருவரையொருவர் எதிர் காணும்போது 'ஸலாம்' சொல்லுதல் ஓர் இன்றியமையாக் கடன் என்ற சீரிய மரபினை வலியுறுத்திப் பிரகாசிக்கின்ற இந்த நிகழ்ச்சி எப்படி வளைக்கப்பட்டுவிட்டது என்று பார்ப்போம்.

''மரத்தின் உரிமையாளனிடம் மேற்குறித்தபடி மும்முறை கேட்டனுப்பிய பிறகும் அவன் மறுத்துவிட்டான். நான்காவது முறையாக நபிகள் நாயகம் அவர்கள் மதீனாவிலுள்ள பத்துக்கும் மேற்பட்ட மரங்களைக் கொண்ட ஒரு தோட்டத்துக்குப் பதிலாக இந்த ஒரு மரத்தை மட்டும் கேட்டனுப்பினார்கள். அந்தப் பேராசைக்காரன் ஒப்புக்கொண்டான். மறுநாள் அந்த மரம் நபிகள் நாதரிடம் முறையிட்டவரின் வீட்டுத் தோட்டத்துக்கு வேரோடு குடிபெயர்ந்து வந்து விட்டது.''

–இது நபிகள் நாயகம் நிகழ்த்திய அற்புதங்களில் ஒன்று என்றும் அறிவிக்கப்படுகிறது. பத்தாம்பசலிப் பேச்சாளர்கள் இதை மேடைகளில் ஒலிபரப்புகிறார்கள். பாமர முஸ்லிம்கள் நம்பிக்கிடக்கிறார்கள். மௌலவிகளும் பாக்கவிகளும் இத்தகு சம்பவங்களை அச்சில் தோய்த்து விற்பனைக்கு விடுகிறார்கள். இஃது இன்றளவும் நடைபெறுகிறது. இதில் வேதனையான வேடிக்கை என்னவென்றால் எதை வலியுறுத்த இந்நிகழ்ச்சி நபிகள் நாயகம் அவர்களுக்குப் பயன்பட்டதோ அது–முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் சலாம் சொல்ல வேண்டிய இன்றியமையாமை இத்திருத்திய பதிப்பில் மறைந்தே போய்விட்டது, காணவே காணோம்.

''மக்கள் கிரகிக்கும் சக்தியின் அளவுக்கே அவர்களிடம் பேசுங்கள்'' என்பது புகழ்பெற்ற நாயகவாக்குகளில் ஒன்று. ஆனால் இத்தகு நிகழ்ச்சிக்கொலைகளை இந்த வாக்கினால் பாதுகாக்க முயல்வது உப்புக் கற்களால் பாலங் கட்டும் முயற்சியே அன்றி வேறென்ன?

இஸ்லாமிய வரலாற்றையோ நபிகள் நாயகம் அவர்களின் வரலாற்றையோ எழுதவந்த சரித்திர ஆசிரியரல்லர் உமறுப்புலவர். இத்தகு வரலாற்று வீக்கங்களைக் காவியச் சுவை கருதி அவர் கையாண்டிருப்பது குற்றமென்ருே குறையென்ருே சொல்லுதற்கில்லை. காவியம் பாட வரும் பெரும்புலவன், இத்தகைய இடங்களிலேதான் தன் கவித்துவப் பேராற்றலைக் காட்ட முயல்வான். ஆனுல் இவை சுட்டிக் காட்டப்படும்போது இஸ்லாமிய சமயப் பெரியவர்கள் நெற்றிக்கண் திறக்கும் போக்கு ஆரோக்கியமானதன்று. கம்ப நாட்டாழ்வார் என்று வைணவப் பெருமக்கள் கவிச்சக்கரவர்த்தியை ஆலிங்கனம் செய்து கொண்டதைப்போல உமறுப்புலவரை இஸ்லாமிய சமயாச்சாரியாராக நாம் ஒப்புக்கொள்ளத் தயாரா? இல்லையே! பின்னர் ஏன் சீருவை ஓர் இலக்கியமாக மட்டும் பார்ப்போரை நம்மவர்கள் சீரணிக்க மறுக்கிருர்கள்? முணுமுணுக்கிருர்கள்?

சீருப்புராணத்தில் மட்டுமல்ல எல்லா இஸ்லாமிய இலக்கியங்களிலுமே இலக்கியப் பார்வைகள் தீட்சண்யமாகப் பதியாதவரை, திறனுய்வு செய்ய இலக்கியவாதிகள் அனுமதிக்கப்படாதவரை அல்லது முன்வராத வரை அவை தமிழுலகில் அறிமுகமாகும் பெற்றியை இழந்துவிடுவதுடன், இலக்கியப் பதுக்கல்காரர்கள் என்ற புதிய பட்டத்தை நாம் ஏற்கவேண்டியவர்களாகவும் ஆவோம். பெண் குழந்தைகள் பிறந்துவிட்டால் உயிரோடு புதைத்து விடுகின்ற அநாகரிகம் பண்டைய அராபியாவில் நிலவியதாய் வரலாறு கூறுகிறது. அதனை ஒழிக்கப் புறப்பட்ட நபிகள்நாயகம் அவர்களைப் பின்பற்றும் நாம் நமது இலக்கியங்களைப் பொறுத்தவரை பண்டைய காட்டரபிகளின் அதே கொள்கைகளைக் கடைப்பிடிப்பது வெட்கக் கேடானது. இந்நிலை மாறவேண்டும் அல்லது மாற்றப்படவேண்டும்.

"Super natural elements in Shakespeare" என்ற அற்புதமான திறனுய்வு நூலைப்போல 'சீருவில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள்' என்ற தலைப்பில் ஒரு விரிவான திறனுய்வு நூல் செய்கின்ற வேட்கையினை எழுப்பவேண்டுமென்பதே என்நோக்கம். இக்கட்டுரையின் விரிவஞ்சி, சீருவில் காணப்படும் எண்ணற்ற இயற்கை இறந்த நிகழ்ச்சிகளில் - வரலாற்று வீக்கங்களில்—ஒன்றை மட்டும் தொட்டுக் காட்டுவேன்.

> தன்வீட்டில் விருந்துண்டு இரவில் அங்கேயே மலங் கழித்துச் சென்ற கயவனிடமும் சினங்காட்டாது அருள் காட்டிய அண்ணல் நபிகள் நாயகம் அவர்கள்,

கல்லால் எறிந்து தன்னைக் காயப்படுத்தியவனுக்காகக் கூட இறைவனிடம் 'துஆ' கேட்ட அண்ணல் நபிகள் நாயகம் அவர்கள்,

'அஸ்ஸலாமு அலைக்கும்' உமக்குச் சாவு வருவதாக என்று சபித்த மாற்றானை நோக்கி அதே வேகத்தில் 'வ அலைக்க' 'உமக்கும் அப்படியே வருவதாக' என்று பதிலடி தந்த தன் துணைவியாரைக் கடிந்து கொண்ட அண்ணலெம்பெருமான் நபிகள் நாயகம் அவர்கள்,

தனது இறைவணக்கத்தின் போதெல்லாம் இடையூறு செய்துவந்த ஒருவன் ஒருபொழுது வராமையால் அவனுக்குற்ற இடையூறு யாதென்றறிய அவன் வீடு நோக்கிச் சென்று அவன் உடல் நலக்குறைவறிந்து அவனுக்காகவும் இறைவனிடம் குறையிரந்த அந்த நபிகள் நாயகம் அவர்கள்,

ஒருவனைச் சபித்து விட்டார்களாம். சீறா சொல்கிறது'

யார் அவன் ?

"இசுலாத்தை ஒப்புக்கொள்ளாதவன். ஆசிம் குலத்தவன்."

பெயரென்ன ?

"அக்கன்"

ஏன் சபிக்கப்பட்டான் ?

"நபிகள் நாயகம் அவர்களைக் காணும் போதெல்லாம் அவன் வலித்தும் பழித்தும் காட்டினான். அதனால்."

எப்படி வலித்துக்காட்டினான் ?

"கதிர்விரிந் தொழுகு மெய்யெழில் நபியை
காண்தொறும் காண்தொறும் வலித்திட்(டு)
எதிரெதிர் வருவன் விலக்குதற் கமையான்
இங்ஙனம் சிலபகல் திரிந்தான்"

[தீனிலை கண்ட படலம், பாடல் 101]

"இருவிழி கறுப்பும் ஒருபுறத் தொதுங்க
இதழ்க்கடை வாயிடைப் பிதுங்கத்

திருகுற முகத்தைச் சுரிப்பொடு வளைத்துத்
திகழ்தரு நாசியைச் சிலிர்த்துப்

பெருகிய கழுத்தின் நரம்புகள் புடைப்பப்
பிளந்துவாய் நாநுனி புரட்டி

வரிவர வலித்து முகம்மதை நோக்கி
மனத்துரு திகழ்ச்சிசெய் தனனால்!

[பாடல் 100]

எப்படிச் சபித்தார்கள்?

"புதியவன் தூதர் இவன்றனை நோக்கிப்
பொருவிலாச் செவ்விதழ் திறந்து

பதிபெற வலித்திட்(டு) இதனில்எண் மடங்காய்ப்
பழிப்பொடுந் திரிகுவை யென்றார்"

[பாடல் 101]

சாபம் பலித்ததா?

"பலித்தது நபிதந் திருமொழி அவன்பாற்
பதின்மடங் காயின இதழ்வாய்

வலித்தலுங் கண்கள் சிமிட்டலும் உலகில்
வழங்கிலா வலிப்பெலாம் வலித்துச்

சிலிர்த்ததும் முகங்கண் டடுத்தவர் மனங்கடி
கைத்ததும் பெருங்குல மனைத்துஞ்

சலித்ததுந் தவிரா இடும்பினால் வருநோய்
படர்ந்தது வைகலுந் தழைத்தே!"

[பாடல் 102]

அக்கன் என்றொருவன் இருந்தான். அவன் நபிகள் நாதரின் முன் வலித்தும் பழித்தும் காட்டினான். மற்றவர்கள் விலக்கியும் கேட்டானில்லை. நபிகள் நாதர் சினங்கொண்டு "இதனில் எண் மடங்கு பழிப்பொருந்திரிகுவை" என்று தமது "பொருவிலாச் செவ்விதழ் திறந்து" சபித்தார்கள். சாபம் பலித்தது. இது நபிகள் நாதர் நிகழ்த்திய அற்புதங்களில் ஒன்று.

சரி., இந்த வலித்துக் காட்டுதலும், பழித்துக் காட்டுதலும் தங்கள் எதிர்ப்பைக் காட்டப் பக்குவப்பட்டவர்கள் மேற்கொள்ளும் செயலா ? சமமானவர்கள் கைக்கொள்ளும் போர்க்கருவியா ? நபிகள் நாயகம் அவர்கள் போயும் போயும் பக்குவப்படாத ஒருவனை, தனக்கு நிகரில்லாத ஒருவனையா சபித்திருப்பார்கள் ? அவர்களது புகழ் சுமந்த வரலாற்று நிகழ்ச்சிகளோடு ஒப்பிட்டு மதிப்பிடும் போது இதன் செயற்கை நன்கு புலப்படும்.

வாலி கொலை வழக்கால் இராமாவதாரம் பாதிக்கப்படுவதைவிட நமது வரலாற்று நாயகர், இத்தகு நிகழ்ச்சிகளை நாம் உண்மையெனக் கொண்டோமானால், அதிகமாகப் பாதிக்கப்பட மாட்டாரா ? இதை உணர்ந்துதான் போலும் இதே நிகழ்ச்சியை உமறுப் புலவருக்குப் பிறகு வந்த சதாவதானி கா. ப சேகுதம்பிப் பாவலர் இப்படிப் பாடினார்:

" கண்டவுடன் பல்லிளித்துக் கைவிரித்துக் கண்சிமிட்டிக்
கொண்டபரி காசமுறை கூர்ந்தியற்றுங் கோளினர்க்கும்
மண்டலத்தி லச்செயலே மாற்றமற எப்பொழுதும்
அண்ட, அறிந் துட்கசிந்த அற்புதமும் நட்பேயோ
அண்ணல் நபி நாயகமே, அற்புதமும் நட்பேயோ! "

சீறாப்புராணம் சீறுத நபிகள் நாயகம் சீறியதாகக் கூறி அவர்களது சாபம் பலித்த விதத்தை அற்புதம் என்கிறது. சதாவதானி கா. ப. சேகுதம்பிப் பாவலரின் நாயகமான்மிய மஞ்சரியோ வழக்கம் காரணமாக அவனுக்கு வலிப்பு நிலை பெற்றுவிட அதையறிந்து நபிகள் நாயகம் உட்கசிந்து உருகியதை அற்புதம் என்கிறது. இவ் வேறுபாடு உணர்ந்து மகிழத் தக்கது. ஓரோவடி மிக்குவந்த ஒரு நூற்றிரண்டு கொச்சகக் கலிப்பாவாலான நாயகமான்மிய மஞ்சரி இன்னும் அச்சேறி நூல் வடிவு பெருதது நல்ல தமிழின் பொல்லாத ஊழன்றி வேறென்ன ?

இஸ்லாமிய சமயச் சான்ருேர்களே! சீருப்புராணத்தில் காணப் படும் நபிகள் நாயகத்தின் வரலாற்று வீக்கங்களுக்கு விளக்க ஒத்தடங்கள் கொடுப்பதை நிறுத்துங்கள். சீருவை ஒரு சிறந்த இலக்கிய மாக மட்டும் பார்க்கத் துடிப்போர்க்கு சமயக் கடிவாளம் மாட்ட முயலாதீர்கள். உமறுப்புலவர் தொடுத்த சீரு இலக்கியவாதிகளை அணிசெய்யும் மாலையாகட்டும். அதன் நறுமணத்தை எட்ட இருந்தே நுகருங்கள்!

சீருவின் நாயகர் வரலாற்று நாயகரல்லர்; காவிய நாயகர். சீரு வரலாற்று நூலல்ல; அஃதொரு பெருங்காவியம். அதன்கண் வரலாற்றுக்குப் புறம்பான உயர்வு நவிற்சிகள், இல்பொருள் நவிற்சிகள், இயற்கை இறந்த நிகழ்ச்சி நவிற்சிகள், இன்னபிற இருக்கவே செய்யும். சமயம், இலக்கியம் ஆகிய இரண்டையும் தனித்தனியே அணுகுவோம். இது சமயவிரோதப் போக்குமல்ல; இலக்கிய விரோதப் போக்குமல்ல.

# சீருப் புராணமும் தமிழ்க்கவிதை மரபும்

பேராசிரியர். எம். எம். உவைஸ், M. A., J. P.
முன்னாள் தமிழ்த்துறைத்தலைவர்
வித்தியோதயா பல்கலைக்கழகம், இலங்கை

தமிழிலுள்ள காப்பியங்களை பெருங்காப்பியங்கள் என்றும், சிறுகாப்பியங்கள் என்றும், புராணங்கள் என்றும், வகைப்படுத்துவர். இவை அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றைக் கூறுவன-வாகும். இத்தகைய காப்பியங்களில் பெரும்பாலானவை தண்டியலங்காரம் கூறும் காப்பியத்தின் வரைவிலக்கணத்திற்கு இணங்கவே இயற்றப்பட்டுள்ளன.

இஸ்லாமியத் தமிழ்க்காப்பியங்களில் காலத்தால் முந்தியது சீருப்புராணமாகும். எட்டயபுர அரசகவிஞராகத் திகழ்ந்த உமறுப் புலவர் இயற்றியது சீருப்புராணம். "சீருப்புராணம்" என்பது வாழ்க்கை வரலாறு என்று பொருள்படும். "சீறத்" என்ற அரபுச் சொல்லையும் "புராணம்" என்ற வடசொல் திரிபான தமிழ்ச் சொல்லையும் கொண்டுள்ளது. முகம்மதுநபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் பெரும்பகுதியை வருணிப்பதாக அமைந்துள்ளது. சீருப்புராணத்தில் ஐயாயிரத்து இருபத்தேழு விருத்தப்பாக்கள் இடம் பெற்றுள்ளன.

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் பிறப்பையும், இளமையையும் வருணிக்கும் விலாதத்துக்காண்டம், ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலம்) அவர்கள் மூலம் நபிகள் பெருமானார் அவர்களுக்கு அல்லாஹ்வால் திருக்குர்ஆன் அருளப்பட்ட விவரங்களைக் கொண்ட நுபுவத்துக்காண்டம், மக்காவிலிருந்து மதீனாவிற்கு பெருமானார் சென்ற விபரங்களைக் கூறும் ஹிஜிரத்துக்காண்டம் எனச் சீருப் புராணம் மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மொத்தம் தொண்ணூற்றிரண்டு படலங்கள் சீருப் புராணத்தில் இடம்பெற்றுள்ளன. சீருப்புராணம் நபிகள் பெருமானாரின் முழுவாழ்க்கையையும் குறிப்பிடாது உறணிக்கூட்டத்தார் படலத்துடன் நின்று விடுகிறது.

காப்பியப் பண்புகளுள் முதன்மையானது வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல் இவற்றுள் ஒன்றைக் கொண்டு தொடங்குதலாகும். சிலப்பதிகாரம் "திங்களைப் போற்றுதும்" என்று திங்களையும் பின்னர் ஞாயிறையும் மழையையும், புகாரையும் போற்றித் தொடங்குகிறது. சீவகசிந்தாமணி அருகசரணம், சித்தசரணம், சாது சரணம், தன்மசரணம் என்று முறையே அருகக்கடவுளையும், சித்தரையும், சாதுக்களையும், தருமத்தையும் போற்றித் தொடங்குகிறது. கம்பர் தமது இராமகாதையில்,

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசர ணங்களே" என்று

பெயர் குறிப்பிடாது கடவுளை 'அவர்' என்று குறிப்பிடுகின்றார். 'சிற் குணத்தவர்' என்று ஆரம்பிக்கும் மற்றொரு பாடலில் நேரடியாக திருமாலைக் குறிப்பிடாது குறிப்பால் சுட்டுகின்றார். மூன்றாவது பாடலில் விஷ்ணுவை "அரி" எனக்குறிப்பிடுகின்றார். சேக்கிழார் சுவாமிகளின், "திருத்தொண்டர் புராணம்" என்னும் பெரிய புராணத்தில் கடவுள் வாழ்த்துக்குப் பதிலாகப் பாயிரம் அமைந்துள்ளது. இங்கே சிவபெருமான் "அம்பலத்தாடுவான்" என்றும் "தில்லையூர்மா நடனம்செய் வரதர்" என்றும் வருணிக்கப்பட்டுள்ளார். விநாயகரைப் புகழும் பாடல் அடுத்திடம் பெறுகின்றது. பின்னர் சைவ நாயன் மார் போற்றப்படுகிறார்கள். மதுரையிலே சிவபெருமான் நடாத்திக் காட்டிய 64 திருவிளையாடல்களையும் அமைத்துப் பாடப்பட்ட திருவிளையாடல் புராணத்தில், கடவுள் வாழ்த்து முதலாம் செய்யுளில் சிவபெருமான் சக்தியும் சிவமுமாக பாடப்பட்டுள்ளார். அதன் பின்னர் சைவப் பெரியார்கள் இடம் பெற்றுள்ளனர்.

முஸ்லீம் புலவர்களால் பாடப்பட்ட காப்பியங்களிலுள்ள கடவுள் வாழ்த்தில் அல்லது பாயிரத்தில் ஒரு குறிப்பிட்ட முறையே பின் பற்றப்பட்டுள்ளது. முதலில் அல்லாஹ்வையும் அடுத்து அல்லாஹ்வின் திருத்தூதர் முகம்மது நபி (ஸல்) அவர்களையும் 1,24,000 நபி மார்களையும் 313 முறுசலின் நபிமார்களையும் உலூல் அசுமிகளான நபிமார்களையும் பாடிய பின்னர், நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் பின் ஆட்சி நடாத்திய நான்கு கலீபாக்களையும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பேரர்களான ஹஸரத் ஹஸன் (ரலி) ஹஸரத் ஹுசைன் (ரலி) அவர்களையும் பாடியுள்ளார்கள். அடுத்து இடம் பெறுபவர் ஹஸரத் முகையதீன் அப்துல்காதர் ஜெயிலானி

(ரலி) அவர்கள். பின்னர் முஸ்லீம் பெரியவர்கள் வருணிக்கப்படுகின்றனர். உமறுப்புலவர் தமது சீருப்புராணத்தில் ஏறத்தாழ இந்த முறையையே பின்பற்றுகிருர். கடவுள் வாழ்த்திலுள்ள முதல் மூன்று பாக்களில் அல்லாஹ்வைப்புகழ்கின்ருர். ''திருவினும் திருவாய்.........'' என்று ஆரம்பிக்கும் செய்யுள் முதலில் அமைந்துள்ளது. அடுத்து நபிகள் பெருமானுர் (ஸல்) அவர்களைப் புகழ்ந்ததன் பின்னர் 313 முறுசலின் நபிமார்களையும் 1,24,000 நபிமார்களையும் பாடியுள்ளார். கடவுள் வாழ்த்துப் படலத்தைத் தொடர்ந்து நாட்டுப்படலம் இடம் பெறுகிறது. சீவக சிந்தாமணி இப்பகுதியை 'நாட்டுவளம்' என்று கூறுகிறது. இந்நாட்டுப் படலத்தில் பண்டைய தமிழிலக்கிய மரபுகள் பின்பற்றப்பட்டிருப்பதைக் காணலாம். பண்டையமரபுக் கிணங்க, குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை என்ற நிலப்பகுதிகள் வருணிக்கப்படுகின்றன.

உமறுப்புலவர், தமது நாட்டுப்படலத்தில், குறிஞ்சி நிலத்திலிருந்து ஆரம்பிக்கும் ஆறு, பாலைநிலத்தில் புகுந்து அங்குள்ள ஆறலைப்பவர்களையும், இளைஞர்களையும், குழந்தைகளைக் கையிலேந்திய பெண்களையும் விரட்டி அவர்களை அழச்செயது முல்லையுள் புகுவதாகக் குறிப்பிடுகிருர்.

''இத்தகைக் குறிஞ்சி நிலத்தினைக் கடந்தே
யெரிதழற் பாலையிற் புகுந்து

மைத்தடங் கூந்தற் கருவிழிச் செவ்வாய்
எயிற்றியர் வயிறலைத் தேங்கக்

கைத்தலந் தேந்து குழந்தையுஞ் சிருரும்
வேடர்தங் கணத்தொடும் வெருட்டி

முத்தணி சிறப்ப இருகரை தொழித்து
முல்லையிற் புகுந்தது சடிலம்.''

[நாட்டுப்படலம் 12]

சீவக சிந்தாமணியில் விதைத்தலும் நாற்று நடுதலும் ஒரே செய்யுளில் வருணிக்கப்பட்டுள்ளன.

''சேறமை செறுவினுட் செந்நெல் வான்முளை
வீறுெடு விளைகெனத் தொழுது வித்துவார்
நாறிது பதமெனப் பறித்து நாட்செய்வார்
கூறிய கடைசியர் குழாங் கொண்டேகுவார்.

[நாமகளிலம்பகம் – 45]

திருவிளையாடற் புராணத்தில் உழுதல், நீர் பாய்ச்சுதல், நெல் விதைத்தல், நாற்று நடுதல், களை பிடுங்குதல் முதலிய பல நிகழ்ச்சிகள் ஒரே பாடலிற் குறிப்பிடப்பட்டுள்ளன.

" ஊறுசெய் படைவாய் தேய்வுழுநாறு நீர்கால் யாத்துச்
சேறுசெய் குநரும் தெய்வந்தொழுது தீஞ்செந்நெல்வீசி
நாறு செய்கு நரும் பேர்த்து நடவு செய்கு நருந்தெவ்வின்
மாறு செய்களைகட் டோம்பி வளம் படுக்கு நருமானர். "

[மதுரைக்காண்டம் : திருநாட்டுச் சிறப்பு : 20]

சீருப்புராணத்திலோ, விதை முளைத்தலும் நாற்று நடுதலும் இரண்டு பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

அருமறை நெறியும் வணக்கமுங் கொடையுங்
மன்புமா தரவு நல்லறிவுள்
தருமமும் பொறையு மிரக்கமுங் குணமுந்
தயவுஞ் சீரொழுக்கமு முடையோர்
பெருகிய செல்வக் குடியொடு கிளையும்
பெருந்தினி திருந்து வாழ் வனபோல்
மருமலர்ப் பழனக் காடெலா நெருங்கி
வளர்ந்தது நெட்டிலை நாற்றே

(நாட்டுப்படலம்: (28)

கோதற வெழுந்த நாற்றினைப் பறித்துக்
குவித்திடு முடியிட ...............
..............................................
அணியணி நாற்றினை நடுவார்

(நாட்டுப்படலம்: (29)

பொதுவாகக் காப்பிய ஆசிரியர்கள் நகரப்படலத்தில், அந் நகரத்தில் வாழும் மக்களின் சமயபக்தியையும் சமயத்திலுள்ள ஈடு பாட்டையும் குறிப்பிடுவர். திருவிளையாடற்புராண ஆசிரியர், "மதுரையிலே வாழ்ந்த பக்தர்கள் தினசரி மூன்று முறை சிவ பெருமானைப் பூசிப்பர். அத்தோடு சைவப்பெரியார்கள் சிவபெருமானின் திருவிளையாடல்களின் முக்கியத்துவத்தைப்பற்றிச் சொல்வதைக் காது தாழ்த்திக் கேட்டுக் கொண்டிருப்பர். சைவநாயன்மாரைத் துதித்துக் கொண்டிருப்பர்." என்று குறிப்பிடுகின்றார். இதோ அப்பாடல்:

சந்தித்து மீள நோக்கி தலைவனை மூன்று போதும்
வந்தித்து மீசன் பூசை மரபுள முடித்தும் வேதம்
அந்தித்து மறியான் செய்த திருவிளையாடல் கேட்டுச்
சிந்தித்து மன்பர்பூசை செய்துநாள் கழிப்பர் பல்லோர்

(மதுரைக்காண்டம் திருநகர்ச்சிறப்பு : 106)

உமறுப்புலவரோ மக்கநகர் பக்திவளத்தை ஒலிகளில் ஏற்றிக் காட்டுகிறார். அவ்வோசைகளை நிரல்படுத்துகிறார் கடைசிச்செய்யுளில். "ஒருபக்கத்தில் திருமறையில் கைதேர்ந்தவர்கள் அதனை ஓதும் சத்தம் கேட்கும். இன்னொரு பக்கத்தில் பக்தர்களின் 'திக்கீர்' முழக்கம் கேட்கும். மற்றொரு பக்கத்தில் மக்கள் ஒரு குழுவினராக நின்று, தொழுது, பின்னர் இருகைகளையும் ஏற்றி ஒரே தொனியில் 'ஆமீன்' கூறும் முழக்கம் கேட்கும்."

கலையின் மிக்க வரோதிய வோசையுங் கருவித்
துலையினிற் பவர் திக்கிறி னோசையுஞ் சுருதி
நிலையினிற்பவ ரீருகர நெடியனை யேற்றி
யுலைவிலாதவரர மீனெவி யெங்கணும் முழங்கும்

(நகர்ப்படலம் : 21)

சூரிய உதயம், சூரிய அஸ்தமனம், சந்திர உதயம், சந்திர அஸ்தமனம் பற்றிய வருணனைகள் இல்லாத காப்பியம் இல்லை யென்றே கூறலாம்.

இராமகாதையிலே ஒரு காட்சி:

துன்னருங் கொடுமனக் கூனியின் சொற்படி மன்னனிடம் ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனே ஆளவும், இராமன் கான்புகவும் வரம்பெறுகிறாள் கைகேயி. வரத்தை வழங்கிய வேந்தன் தயரதன் இராமன் கானகம் செல்வதை எண்ணி மயக்கமுறுகிறான். தரையில் விழுந்து கிடக்கிறான்.

வைகறை புலர்கிறது. செஞ்சூட்டுச் சேவல்கள் சிறகடிக்கின்றன; கூவத்தலைப்படுகின்றன. கீழ்வானம் சிவக்கின்றது. சேவலின் கூவலும் கீழ்வானச்சிவப்பும் அன்றாடம் நிகழுறும் சாதாரணக்காட்சிகளே. ஆனால் கவிஞனே புதிய காரணத்தை இந் நிகழ்ச்சிகளுக்குக் கற்பிக்கிறான். இந்நிகழ்ச்சி வருணனைகளில் தன் குறிப்பை ஏற்றுகிறான். அன்று அடிவானம் மிக மிகச்சிவப்பானதாம்.

நாள்தோறும் சிறகடித்துக் கூவும் சேவல் அன்று தயரதன் விம்மி மயங்கியதையும் இராமன் பிரிவினையும் எண்ணி நெஞ்சு கலங்கி, சிறகினால் தன் வயிற்றிலடித்துக் கொண்டு கலங்கிக்கதறிக் கூவித் தன்துயரை வெளிப்படுத்தியதாம். இயற்கை நிகழ்ச்சி தற்குறிப்-பேற்ற அணிபெற்றுப் பாடலாகிறது.

எண்டருங்கடை சென்றயாம மியம்புகின்ற வேழையால்
வண்டு தங்கிய தொங்கன் மார்பன் மயங்கி விம்மிய
வாறெலாம்
கண்டு நெஞ்சு கலங்கி அஞ்சிறை யான காமர் துணைக்கரம்
கொண்டுதம் வயிறெற்றி விளிப்பபோன்ற கோழியே

(கைகேயி சூழ்வினைப்படலம் : 47)

சேக்கிழார் சுவாமிகள் தமது பெரிய புராணத்திலே சூரியோதயத்தை வருணித்துள்ளார். நம்பியோரூரர் என்னும் சுந்தரமூர்த்தி நாயனாரின் திருமணக்கோலத்தைப் பார்க்கவே அன்று சூரியன் உதயமானான் எனப்பாடியுள்ளார்.

தேமரு தொடையல் மார்பன் திருமணக் கோலங் காணக்
காமுறு மனத்தான் போலக் கதிரவ னுதயஞ் செய்தான்
[தருத்தாட் கொண்ட படலம் : 32]

தற்குறிப்பேற்றவணி அமைந்த இத்தகைய வருணனைகளைக் கொண்ட செய்யுட்கள் நைடத்திலும் (387) நளவெண்பாவிலும் (133) இடம் பெற்றுள்ளமையைக் காணலாம்.

சீருப்புராணத்திலும் தற்குறிப்பேற்றவணி அமைந்துள்ள சூரியோதய வருணனைகள் இடம் பெற்றுள்ளன. ஆனால் அத்தகைய வருணனைகள் சற்று வேறு விதமாகவே அமைந்துள்ளன. நபிகள் நாயகம் முகம்மது (ஸல்) அவர்கள் இவ்வுலகிலே பிறந்தார்கள். அதன்பயனாக அறியாமை என்னும் இருள் நீங்கியது. வறுமை என்னும் அந்தகாரம் அழிந்தொழிந்தது. இதனை அறிந்த சூரியன் அளவிலா மகிழ்ச்சி அடைந்தான். ஆனந்த வெள்ளக்கடலிலே மூழ்கினான். கடலிலே குளித்து மகிழ்வெய்தி இருளை அகற்றும் தன் கதிர்களைப் பரப்பிக் கொண்டு சூரியன் உதயமானான்.

தமையினிற் பரந்த குபிருட் குலமுஞ்
சாற்றிய கலியிருட் குலமும்
வரைவிலா தொடுங்க முகம்மது நபியின்
மானிலத் துதித்தன ரென்றே
கரையிலா வுவகை யானந்த வெள்ளக்
கடலிடை குளித்துக் களித்து
விரைவினிற் றிமிரக் கடற்பகை துறந்து
வெய்யவன் கதிர்விட்டெழுந்தான்.

நபியவதாரப்படலம் : (108)

சூரிய அஸ்தமனம் பொதுவாக சூரியன் கடலுக்குள் புகும் நிகழ்ச்சியாகவே கவிஞரால் வருணிக்கப்படுகிறது. கௌதம முனிவரால் சபிக்கப்பட்ட அகலிகை இராமனுடைய பாதம்பட உயிர் பெற்றெழுகிருள். பின்னல் இராமனும் இலக்குமணனும் விசுவாமித்திரரும் மிதிலையை நோக்கிச் செல்கின்றனர். மாலை வேளையில் அவர்கள் ஆற்றங்கரையை அடைகின்றனர். தனது வெப்பத்தால் அம்மூவரும் களைப்படைந்திருப்பர். எனவே அவர்களுடைய களைப்பினை நீக்கும் பொருட்டு, கடலிலே குதித்து மறைந்தான் சூரியன் என சூரிய அஸ்தமனத்தைக் கம்பர் வருணித்துள்ளார்.

நதிக்கு வந்தவ ரெய்தலு மருணன்ற னயனக்
கதிக்கு முந்துறு கலினமான்றேரொடுங் கதிரோன்
உதிக்குங் காலேயிற் றண்மை செய்வான்றன துருவில்
கொதிக்கும் வெம்மையை யாற்றுவான் போற்கடல் குளித்தான்

(அகலிகைப்படலம் : 2)

தமயந்திக்கு காதலினல் அந்திப் பொழுதில் ஏற்பட்ட துயரினைப் புகழேந்திப் புலவர் தமது நளவெண்பாவில் வருணிக்கிருர். ''உலகம் பகலை இழந்தது. வானம் அதன் ஒளியை இழந்தது. பொய்கையும், உப்பங்கழியும் அவற்றின் பறவைகளை இழந்து விட்டன. பிரிக்க முடியாத அதன் துணையையே அன்றில் பறவை இழந்து விட்டது. இவற்றிற்கெல்லாம் காரணம் சூரிய அஸ்தமனமே.'' என்று கூறுமாப்போல சூரியன் மறைவதை இவ்வாறு வருணித்துள்ளார்.

வையம் பகலிழப்ப வான மொளியிழப்ப
பொய்கையும் நீள்களியும் புள்ளிழப்ப—பையவே
செவ்வாய அன்றில் துணையிழப்பச் சென்றடைந்தான்
வெவ்வாய விரிகதிரோன் வெற்பு.

(சுயம்வர காண்டம் : 97 : 104)

உமறுப்புலவரின் சூரிய அஸ்தமன வருணனை வேறுவிதமாக அமைந்துள்ளது. 'அபுஜகில்' என்றால் 'அறியாமையின் தந்தை' என்று பொருள். நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் பரம விரோதி, 'சதியன்' என்று வருணிக்கப்பட்டவன். ஒருநாள் அபுஜகில் தனது தெய்வத்தை வணங்குமுகமாக, அத்தெய்வம் வைக்கப்பட்டுள்ள ஆலயத்தினுள் புகுந்தான். தனது வழிபடு தெய்வத்தின் முன்னிலையில் நின்று கொண்டிருந்தான். துரோகியான அபுஜகிலின் முகத்தைக் கூடப் பார்க்கக்கூடாது என்று எண்ணினான் சூரியன். அடங்காக் கோபம் ஏற்பட்டது. உடனே ஓடி மறைந்துவிட்டான்.

எதிரி னின்றுதன் தேவதை தனைப்புகழ்ந் தேத்திக்
கதிர்கொள் பொன்முடிக் கோயிலின் வாயிலைக் கடந்த
சதியன் நன்முக நோக்குதல் தவறெனச் செவிந்து
கொதிகொ தித்தழன் றருக்கன்மேற் கடலிடை குதித்தான்

(நபீபு ராஜா வரிசைவரவிருந்த படலம் : 29)

இஸ்லாத்தின் எதிர்காலத்தை நிர்ணயித்து பதுறுப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. குறைஷிக் காபிர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக அணிதிரண்டிருந்தனர். ஆயுதபாணிகளாகக் கூடி இருந்தனர். அமரர்களாலும் கண்ணியப்படுத்தப்படும் அண்ணல் அகமது முஸ்தபா ரசூல் (ஸல்) அவர்களை எதிர்த்துப் போரிட அன்று குறைஷிகள் வந்திருந்தனர். இங்ஙனம் ஒன்றுதிரண்டிருக்கும் குறைஷிக் காபிர்களின் முகங்களைப் பார்க்கக்கூடாது என்று எண்ணினான் சூரியன். தன் கண்களையே புதைத்துக் கொண்டு மேற்கே கடலுக்குள் ஓடி மறைந்து விட்டானாம்.

விண்கணி னமர ரியாரு மெல்லடி பரவிப் போற்று
மொண்கதிருகும் வள்ளற் குறுபகை யாகிக் கீண்ட
புண்கதி ரெஃக மேந்தும் புரவலர் முக நோக்காது
கண்களைப் புதைத்து வெய்யோன் மேற்றிசைக் கடலுளானான்.

(பதுறுப்படலம் : 66)

உலகத்தை நானிலம் என்பர் தமிழ் நூலார். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு நிலப்பிரிவுகளை,

"காடுறை உலகம்"

"மைவரை உலகம்"

"தீம்புனல் உலகம்"

"பெருமணல் உலகம்"

எனத் தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் (5) குறிப்பிடுகின்றார்.

முல்லையுங் குறிஞ்சியும் முறைமையின் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்கு துயருறுத்து
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்.

எனச் சிலப்பதிகாரம் (மதுரைக் காண்டம் : காடுகாண் காதை: 64-66) பாலை நிலத்துக்கு வரையறை கூறுகின்றது. குறிஞ்சி, முல்லை போன்ற நிலங்கள் அவற்றின் வளத்தினை இழந்ததன் பயனாகவே பாலைநிலம் ஏற்பட்டது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வளமான நிலங்களுக்கிடையே உள்ள உலர்ந்த நிலப்பகுதியே பாலை என வழங்கப்பட்டது என்பர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நானிலம் ஐந்து வகையான நிலப்பிரிவுகளைக் கொண்டது எனக் கருதப்பட்டது. இலக்கியத்திலும் இவ்வாறே இடம் பெறலானது.

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என வழங்கப்படும். மேகத்தைத் தொடுமளவுக்கு உயர்ந்த மலைகள் குறிஞ்சி நிலத்தில் உள்ளன என சங்ககால இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. (ஐங்குறு நூறு : 209 3-5 : நற்றிணை : 28)

உயர்ந்த மலையினின்று பாய்கின்ற அருவிகள் இனிமையான ஓசையை எழுப்பிக்கொண்டு செல்கின்றன. மலைக்குன்றுகளோ வானத்தைத் தொடுமளவுக்கு உயர்ந்தனவாகக் காட்சி அளிக்கின்றன. இதனையே அகநானூறு

"..................... நெடும் பெருங்குன்றத்துப்
பாடின் அருவி ஆடி
வான்றோய் இமயம் தோன்ற லானே" (378)

என வருணிக்கிறது.

சீருப்புராணத்தின் பாட்டுடைத் தலைவரான நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த பொன்னுடான அரபு நாட்டில் வானத்தைத் தொடும் அளவுக்கு மலைகள் உயர்ந்தோங்கி இருக்கவில்லை. எனினும் அத்தகைய குறிஞ்சிக்காட்சிகளை உமறுப்புலவர் தமது தமிழ்க்காப்பியத்தில் காட்டுகின்றார். திமிஷ்கு நாட்டு அபீபு மன்னனும் அவனுடைய பரிசனங்களும் வரும்பொழுது, குதிரைகளின் குளம்புகளினல் தாக்குண்டு சிதையப் பெற்ற சங்கினங்கள் முத்துக்களை ஈனுகின்றன. இவ்வாறு முத்துக்களைச் சொரியும் வயல்களைக் கடந்து அவர்கள் சென்றனர். உயர்ந்த மலைகளைக் கொண்ட குறிஞ்சி நிலத்தை அடைந்தனர். மலைகளிலிருந்து அருவிகள் வீழ்கின்றன; நெருக்கமுற்று விளங்கும் மலைகளிலுள்ள தேன் அவற்றில் கலப்பதனல் அருவிகள் செந்நிறமாகக் காட்சியளிக்கின்றன. அவை, பொன்னாலாகிய அழகிய மாலைகள் கிடந்து புரள்வதைப் போன்று தோன்றின.

வரிவளைக் குலத்தின் குப்பை வாசியின் குரத்திற் றக்கி
விரிகதிர் தரளஞ் சிந்தும் விளைநிலங் கடந்து செந்தேன்
அருவிகள் வரையிற் செம்பொ னணிவடம் புரள்வ போல
நிரைநிரை செறிந்து தோன்று நெடுமுடிக் குறிஞ்சி சார்ந்தார்

(ஹபீபு மக்கத்துக்கு வந்த படலம் : 62)

குறிஞ்சி நிலத்திலே தினைப்புனங்கள் உள்ளன. தினையின் இலைகள் நீண்டனவாக உள்ளன. அவை பாரமான கதிர் காரணமாக வளைந்திருந்தன. குறிஞ்சிக் குறத்தியர் நறுமணங் கமழும் மலர்களைக் கூந்தலில் சூடியுள்ளனர். தினைப்புனத்துக் கதிர்களை உண்ணச் சிவந்த உதடுகளையுடைய கிளிகள் வந்திருந்தன. அந்தக் கிளிகளை ஓட்டுவதற்காக குறத்தியர் கவண் கல்லேந்தினர். இனிமையாகப் பாடிக் கொண்டிருக்கும் கிளிகளைக் கடியுமோதை மிக்க இனிமையாக இருந்தது. இந்த இனிமையிலே காட்டுப்பசுக்கள் உறங்கிக் கொண்டிருந்தன. இத்தகைய வளம் மிகுந்த மலைச்சாரலை உடைய பதுறுப் போர்க்களத்தினை அடைந்தனர், அண்ணலாரின் போர் வீரர்கள்.

"நீட்டிலை மிடறு சாய்ந்த நெடுங்கதிர்த் தினையின் சார்பிற்
கோட்டவர் கமழுங் கூந்தற் குறத்தியர் கவண்கல் லேந்திப்
பாட்டிசை மிழற்றும் செவ்வாய் பசுங்கிளி கடியுமோதை
கேட்டினி தாமர்த் துஞ்சுங் கிளைவரைச் சாரல் போந்தார்.

(பதுறுப்படலம் : 31)

இது போன்ற ஒரு காட்சி, கலித்தொகையில் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். முறம் போலச் செவியையுடையது யானை. வலிமையுள்ள புலியுடன் அதற்குப் பழைய பகை உண்டு. அத்தகைய யானை தனக்கு முன் நின்ற குளகைத் தின்றது. இனிமையான ஓசையை எழுப்பிக் கொண்டு பாயும் வெண்மையான அருவிநீரைப் பருகியது. இந்த ஓசை 'ஒல்' என்று வருணிக்கப்பட்டுள்ளது. 'ஒல்' என்றால் தாலாட்டொலி என்பது பொருள். இத்தகைய இனிமையான ஓசையிலே யானை துயிலுகின்றது. இக்காட்சிகளைக் கொண்டது மலை நாடு, என்று கலித்தொகையில் வருணிக்கப்பட்டுள்ளது.

மறங்கொள் இரும்புலித் தொல்முரண் தொலைத்த
முறஞ்செவி வாரணம் முன்குள கருந்திக்
கறங்கு வெள்ளருவி யோலின் துஞ்சும்
பிறங்கிருஞ் சோலைக் கன்மலை நாடன்

(குறிஞ்சிக்கலி : 6 (427)

காடும் காடுசார்ந்த நிலமும் முல்லையாகும். முல்லை நிலங்களும் அரபு நாட்டில் மலிந்திருந்தன எனச் சீறாப்புராணம் கூறுகின்றது. ஒரு சமயம் முகம்மது நபி (ஸல்) அவர்களும் அவர்களுடைய தோழர்களும் முல்லை நிலங்களைக் கடந்து சென்றனராம். அவ்வாறு செல்லும் போது முல்லை நிலத்திற்குரிய தாவரங்களைக் கண்டனராம். முல்லை நிலத்துக்கே உரிய ஓர் ஓசையையும் அங்கு கேட்டனராம். அந்நிலத்து இடைச்சி, வெண்தயிர் கடையும் ஓசையே அவ்வோசை. அது 'புலி முழக்கு' என வழங்கப்படுகிறது. சீறாப்புராணத்தில் கதீஜா கனவு கண்ட படலத்தில் அத்தகைய முல்லை நிலக்காட்சி ஒன்று இடம் பெற்றுள்ளது.

தொண்டையங் கனிகள் தோன்றியிற் சிறப்பத்
தோன்றிய தரிய மாணிக்கம்
விண்டனர் விரித்துக் காய்ந்தனர் போலும்
விளங்கிடக் குடுந்தொடு காயா
வண்டுறை பிடவுங் கொன்றையுஞ் செறிய
வளைதருங் குடியிடை பொதுவர்
வெண்டயி ருடைக்கு மொலிமரு முல்லை
வேலியுங் கடந்தயல் போனார் (4)

முல்லை நிலத்துக்கே உரிய இந்த மலர்களின் தொகுப்பை, ஒரு கலித்தொகைப் பாடலில் காண்கிறோம்.

மெல்லிணர்க் கொன்றையும் மென்மலர்க் காயாவும்
புல்லிலை வெட்சியும் பிடவுந் தளவுங்
குல்லையுங் குருந்தும் கோடலும் பாங்கலுங்
கல்லவுங் கடந்தவுங் கமழ்கண்ணி மலைந்தனர்.

(முல்லைக்கலி 3 : 1-4)

தயிர் கடைவதைக் குறிப்பிடும் ஒரு பாடல்:

அச்சத்தால் மாறி அசைவினால் போத்தந்து
நிச்சந் தடுமாறும் மெல்லியல் ஆய்மகள்
மத்தம் பிடித்த கயிறுபோல் நின்னலஞ்
சுற்றிச் சுழலுமென் னெஞ்சு.

(முல்லைக்கலி : 10 : 8-12)

எனவும் கலித்தொகையில் வந்திருப்பதைக் காணலாம். கட்டித் தயிர் மத்தாலே தாக்குண்டு உடைகின்ற ஒலியே பேரோசையாக மிகுந்திருந்தால் அந்நிலம் எவ்வளவு வளமுடையது! "வெண்தயிர் உடைக்கும் ஒலி" என்கிறார் உமறு.

வயலும் வயல்சார்ந்த இடமும் மருதம் எனப்படும். மருதநில வருணனையில் எருமைகளை வருணிக்காத புலவர்களே இல்லை எனலாம். எருமைகள் பருமனானவை. சக்தி வாய்ந்தவை. கருமையானவை. அவை இரும்பினால் வடித்துச் செய்யப்பட்டவை போன்று காட்சியளிக்கும். பெரிய நீலோற்பல மலர்களை, காம்பின் பாரம் மிகுதியால் வளைந்துள்ள முதிர்ந்த நெற்கதிர்களை, கரடுமுரடான குளம்பினால் அவை மிதித்தன. பின்னர் அந்த எருமைகள் கரும்புத் தண்டுகளிலே போய் அமர்ந்தன. அதன் பயனாக அங்கிருந்து கருப்பஞ்சாறு பாய்ந்தோடியது. அபபால் எருமைகள் இரைமீட்டன; உறங்கலாயின. அப்பொழுது அங்கே வண்டுகள் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. அவ் வண்டினம் எருமைகள் கடைவாயிலே எஞ்சியிருந்தவற்றை உட்கொள்ளலாயின. தொடர்ந்து இனிமையான இசையை எழுப்பிக் கொண்டிருந்தன. நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் கண்ட ஒரு காட்சியாக இவ்வருணனை சீறாப்புராணத்தில் இடம் பெற்றுள்ளது.

இரும்பினை வடித்த மோட்டுட லெருமை
யிருங்கருங் குவளையுங் கறித்துக்

கரும்பிண ரெனக்கால் பெயர்த்துக்காய்த் திறைஞ்சுங்
கதிருடைச் சாலியை யுழக்கி

யருங்கரும் புடைந்து சாறெழக் கயலா
யசைத்தசை போட்டுக்கண் குயிலாச்

சுரும்பினங் கடைவாய் தவழ்ந்துபண் ணலம்பிச்
சூழ்ந்திடுங் கழனியுங் கண்டார்

(சல்மாபொருத படலம் : 96)

இடை இடையே நெறித்துவிட்டாற் போன்று வரிவரியாக அமைந்திருக்கும்-அறல் பட்டிருக்கும் – கொம்பினை உடைய எருமைச் சாதியின் நீல நிறமுடைய பெரிய கடாவானது, மணமுடைய மலர் களையுடைய நீர்நிலைக்கண் புகுந்து ஆம்பல் மலரைச் சிதைத்தமை யற்றி,

நெறிமருப் பெருமை நீலவிரும் போத்து
வெறிமலர்ப் பொய்கை யாம்பல் மயக்கும்

(மருதம் : எருமைப்பத்து : 1 : 1-2)

என ஐங்குறு நூறு வருணிக்கிறது.

இரும்பாற் செய்தாலொத்த கரிய கொம்பினை உடைய எரு மைகள் குளத்தைக் கலக்குவதையும், ஆம்பலின் மெல்லிய இலைகள் கிழிய குவளை மலர்களைத் தின்பதையும், ஈரமுடைய உடம்பின்புறத்தே காஞ்சியின் நுண்ணிய தாதுவிழுவதையும், அசைபோடும் வாயினை உடையவாய் தாம் தங்கும் கொட்டிலில் அவை புகுவதையும் மதுரை அறுவை வணிகன் இள வேட்டனர்,

மணிகண் டன்ன துணிகயந் துளங்க
இரும்பியன் றன்ன கருங்கோட் டெருமை
ஆம்பல் மெல்லிடை கிழியக் குவளைக்
கூம்பலிடு பன்மலர் மாந்தி கரைய
காஞ்சி நுண்தா தீர்ம்புறத் துரைப்ப
மென்கிடு கவுள அங்குநிலை புகுதரும்
தண்டுறை ..............

(மருதம் : 56 : 1-8)

என அகநானூற்றினிலே வருணிக்கிறார்.

சீருப்புராணத்திலே கடற்கரையையும் அதனைச் சார்ந்த இடமான நெய்தல் நிலத்தையும் வருணிக்கும் பாடல்களைக்காண்பது பெருஞ்சுவை பயப்பதாகும்.

வறண்ட நிலம், பாலை எனப்பட்டது. இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களில் பாலைநில வருணனைகள் நிறைய உண்டு. பெரும்பகுதி பாலைவனமாகவுள்ள அரபு நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட சீருப்புராணத்திலும் இத்தகைய வருணனைகள் நிறைய இடம் பெறுவது இயல்பே.

முகம்மது நபி (ஸல்) அவர்களும், அவர்களது வணிகத் தோழர்களும் மக்கமா நகருக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தனர். அப்பொழுது அவர்கள் கண்ட பல்வேறு காட்சிகளை உமறுப்புலவர் நயம்பட வருணித்துள்ளார். பாலை நிலத்து மக்களின் தொழில் வழிப்பறியாகும். பாலைநிலத்திலே இத்தகைய தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களான வேட்டுவச் சாதியினரைக் கண்டனராம். அவர்கள் கொலைஞர்களுடைய பார்வையைக் கொண்டவர். அவர்களுடைய கண்களே கொலைஞர்கள் என்பதை எடுத்துக்காட்டினவாம். அவர்களின் உடல்களோ மிக்க கருமை நிறமாக இருந்தன. கால்களிலே செருப்பணிந்திருந்தனர். மயிர்கள் பறிக்கப்பட்ட வழுக்கைத் தலையை உடையவராய் இருந்தனர். அவர்கள் தங்கள் விற்களை வளைத்தனர். அம்புகளையுடைய அம்பருத்தூணி அவர்களுடைய முதுகுகளில் தொங்கிக்கொண்டிருந்தன. இடது கையினுல் வளைத்த வில்லைப் பிடித்து, வலது கையினுல் அம்பருத் தூணியிலிருந்து அம்புகளை எடுத்துச் செலுத்தினர். அவ்வாறு அவர்கள் அம்பு செலுத்தி, அங்குமிங்குமாகப் பரவிஇருந்த மான் கூட்டங்களை விழச் செய்தனராம். அவற்றின் இறைச்சியை வயிறு நிறைய உண்டு அங்கங்கே தங்கினுர்களாம். இத்தகைய சிற்றூர்களையும், வெப்பத்தின் கொடுமையால் பிளவுபட்ட இடங்களையும் கொண்ட பாலை நிலத்தைக் கடந்து பெருமானுர் (ஸல்) அவர்களும் மற்றையோரும் சென்றுர்கள் என்று உமறுப்புலவர் தமது சீருப்புராணத்தில் வருணிக்கிறுர்.

படுகொலைப் பார்வை காருடற் கழற்காற்
பறிதலைப் பங்கிவேட் டுவர்தங்

கொடுமரங் குனித்துத் தூணியுந் தாங்கிக்
கொழுஞ்சரம் வலக்கரந் தூண்டிப்

புடைபுடை பரந்த மானினம் வீழ்த்தி
பொருந்தவுண் டிருந்தசிற் றூரும்
விடர்படர் கானற் பாலையுங் கடந்தார்
விறல்பெறு மரபினின் வேந்தர்

(கதீஜா கனவுகண்ட படலம் : 3)

இப்பாடலிலே வில்லைக் குறிக்க ‘கொடுமரம்’ என்னும் சொற்றொடரைப் பயன்படுத்துகிறார் கவிஞர் உமறு. ‘கொலைவர்-கொடுமரம்’ கொலைத்தொழிலில் ஈடுபடுவோரின் வில்லைப்பற்றிப் பழந்தமிழ் இலக்கியமான கலித்தொகை இவ்வாறு குறிப்பிடுகின்றது.

இடுமுனெடு வேலி போலக் கொலைவர்
கொடுமரந் தேய்ந்தார் பதுக்கை நிரைத்த

(பாலைக்கலி : 12 : 1-2)

உலகம் அனைத்தையும் படைத்தவன் அல்லாஹ். அத்தகைய அல்லாஹ்வை வருணிக்கவும் தமிழ் இலக்கிய மரபுகளை உமறுப் புலவர் பயன் படுத்தியுள்ளார். எறும்பை சின்னஞ்சிறு உயிராகவும், யானையை பென்னம்பெரும் உயிராகவும் குறிப்பிட்டு இவை இரண்டையும் எல்லையாக வைத்து உலகப்படைப்புக்கள் அனைத்தையும் குறிப்பிடுவர். உயிர்வாழும் பிராணிகளைத் தொகுத்துக் கூறும்பொழுது ‘பெரிதாகிய யானை முதல் சிறிதாகிய எறும்பு ஈறாக உள்ளவை’ எனக் குறிப்பது மரபு. ‘அத்தி முதலெறும் பீறன உயிர்’ என்கின்றது தனிப்பாடல் திரட்டு; (நீதி நெறி விளக்கம் : 37). ஒரு முனிவர் சாபத்தால் அரக்க உருவும், தலையற்று வயிற்றிடமே வாய், கண் முதலிய அவயவங்கள் அமையப்பெற்ற உடலும் பெற்று மிக்க கொடியனாய் இருந்த கவந்தன் என்பான் தன் கைகளை நீட்டிச் சேர்த்தணைத்த போது, அங்கு அகப்பட்ட உறுப்புடைப் பிராணிகள் அனைத்தும் அழிந்தன என்பதைக் குறிப்பிட கம்பர் தமது இராமாயணத்தில்,

எறும்பினங் கடையுற யானையே முதல்
உறுப்புடை யுயிரெலா முலைந்து சாய்ந்தன

(கவந்தன் வதைப் படலம் : 3)

என்று பாடியுள்ளார்.

இந்தக் கவி மரபினைப் பின்பற்றியே கவிஞர் உமறு அவர்களும் அனைத்தையும் படைத்தவன் அல்லாஹ் என்பதைக் குறிக்கச் சீறாப் புராணத்தில்

பாரிடத் தெறும் பீருயிப முதலாய்
பகுத்த மைத்த வன்விதிப் படியால் .........

(நபியவதாரப் படலம் : 115)

உமறு ஏற்றுப்போற்றிய இம்மரபினை, பின்வந்த இசுலாமியக் காப்பியவாணர் அப்படியே எடுத்தாண்டது இசுலாமிய புலவர்களிடம் உமறுவின் செல்வாக்கிற்குத் தகுந்த சான்றாகும். இராஜநாயகத்தில்,

............ செகத்திப முதலெறும்பீரு
யனைத்தையு மமைத்த மறைபொருள்

(பல்கீசுக்குப் பத்திரம் அனுப்பிய படலம் : 52)

பாரிடத் தெறும் பீருகப் படைத்தவ
னருள் சேர் வன்மை

(செய்கு சன்ஹாவுக்கு சாபமிட்டுத்தீர்த்த படலம் : 1)

என, அல்லாஹ்வின் ஆற்றலை வருணிக்கப் பதுறுதீன் புலவரும் இக்கவிதை மரபினைப் பயன்படுத்தியுள்ளதைக்காணலாம். யானையைக் குறிக்க எறும்பீ என்ற சொல்லைப் பயன்படுத்தி,

......... எறும்பு முத
லெறும்பீயீருய்ப் படைத்துக்காக்கு
முன்னவனின் திருத்தூதர் முகம்மது றசூல்நபி

(கலியாணம் செய்வித்த படலம் : 90)

என அல்லாஹ்வின் ஆற்றலை பதுறுதீன் புலவர் தமது முகைதீன் புராணத்தில் பாடுவதும் ஈண்டு நோக்கற்பாலது.

இங்ஙனம் தமிழ் இலக்கியச் சிறப்புக்கள் நிறைந்து வழிந்தோடும் இஸ்லாமியத் தமிழ்பெருங்காப்பியமாகத் திகழ்கின்றது, சீறாப் புராணம். ''பல்சுவையும் நனி சொட்டச் சொட்டப்பாடிய கவிவலவர்'' எனப் புகழப்படுதற்குரியவர் சீறாப்புராணத்தை யாத்த கவிஞர் ஏறு உமறு எனின் அது மிகையாகாது.

# 'உரு உருவாய் .......'

'தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்' என்று பட்டம் பெற்ற சதாவதானி மகாமதி ஷைகுத்தம்பிப் பாவலர் சீருவுக்கு உரைதருவதில் தன்னேரில்லாதவர். ஒரு பாடலுக்கு, ஒரு வார்த்தைக்கு, ஏன் ஒரே ஒரு எழுத்துக்குக் கூடப் பல நாட்கள் உரை நிகழ்த்தும் பேராற்றல் உடையவர். சீருவிலுள்ள 'சீ' என்ற எழுத்துக்கு மட்டும் ஓரிடத்தில் பலமணிநேரம் விளக்கம் கொடுத்துப் பேசியிருக்கிருர். சீருவின் கடவுள் வாழ்த்துப்பாடல்கள் ஒவ்வொன்றுக்கும் பல நாட்கள் விளக்கம் தருவார்.

திருநெல்வேலிப் பேட்டையில் பாவலர் சீருவுக்குத் தந்த உரை, இலகுவில் புலவர்களால் ஏமாற்றப்பட முடியாத அவ்வூர் அறிஞர்களைச் சுலபமாக அவர் வசமாக்கிவிட்டது. 'திருவுருவாய்' என்ற காப்புச் செய்யுளுக்கு அவர் உரைநிகழ்த்தி முடித்தபின் ஹிந்து அன்பர் ஒருவர் அவருக்கு மாலைபோட வந்தார். அவர் முஸ்லீம் பிரமுகர் ஒருவருடைய கணக்கர். அந்தப் பிரமுகருடைய ஆஸ்தான வித்துவான் என்று போட்டுக்கொண்டே அவரை எதிர்த்துப் பத்திரிகைகளில் எழுதியவர். விக்கிரஹ ஆராதனை வேண்டும் என்ற கட்சியை நிலைநாட்ட அவர் சீருக்காப்புச் செய்யுளிலிருந்தே 'உரு உருவாய்' என்பது எந்த உருவமாய் கடவுளை வைத்து வணங்கினுலும் அதற்குக் கடவுள் இணங்குகிருர் என்று மேற்கோள் காட்டியவர். மகாமதி பாவலர் இந்த 'உரு உருவாய்' என்ற சொற்றொடருக்கு நாம் இறைவனை எந்த அளவுக்கு உருவேற்றுகிருேமோ அந்த அளவுக்கு — 'திக்று' தியானம் செய்யுமளவுக்கு, அவன் நாமத்தை எத்துணை நாம் ஜபித்துக் கொண்டிருக்கிருேமோ அந்த அளவுக்கு —அவன் கருணை செய்கிருன் என்றுவிளக்கம்சொன்னதும்,இக்கணக்கர் அப்படியே ஆடிப்போய் விட்டார். அவர் பாவலருக்கு மாலை போட்டுத் தமது தவருன கருத்தை நீக்கி வைத்த குருபிரான் என்று பாவலரைப் போற்றினுர்.

— நன்றி : இஸ்லாமிய இலக்கியக் கருவூலம்
ஆசிரியர் : அல்ஹாஜ். ஆர். பி. எம். கனி, பி. ஏ., பி. எல்.

# சீறாப்புராணத்தில் தமிழ்ச் சாயல்

**டாக்டர். இரா. சாரங்கபாணி, எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.**

தமிழ்த் துறைத்தலைவர், அழகப்பா கல்லூரி, காரைக்குடி-3.

தமிழ்மொழியிலே பல்வகைச் சமயங்கட்கும் காப்பியங்கள் உள்ளமை ஒரு தனிச்சிறப்பாகும். பிற மொழிகளுக்கு இத்தகைய சிறப்பு வாய்த்திலது. சீறாப்புராணத்தை, உமறுப்புலவர் காப்பிய இலக்கணங்கள் செறியத் தமிழ் மரபுகள் தழுவிப் பாடியமையின் தமிழ்ப் புலவர்கள் வரிசையில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றார். நபிகள் வரலாறு என்பது புலப்படச் 'சீறா' என்னும் அரபுச் சொல்லை நூற் பெயராக வைத்தாரேனும், அதன்கண் தமிழ்ச் சாயல்கள் நிறைய உள்ளன. காப்பியத் தலைமகனார் அரபு நாட்டினரேனும், தமிழ் நாட்டினர் போலவே காட்சியளிக்கிறார். பல தமிழ்ப்பண்புகள் சான்ற சான்றோராகத் திகழ்கிறார். காப்பியக் காண்டங்கள் அரபுப் பெயர் பெற்றா லும், அவற்றின் உட்பிரிவாகிய படலங்களுட் சில தமிழர் பண்பாடு, பழக்க வழக்கங்கள் முதலியவற்றைப் புலப்படுத்தற்காகவே அமைக்கப்பட்டன போல் தோன்றுகின்றன. நாட்டுப்படலம், நகரப்படலம், புனல் விளையாட்டுப் படலம், விருந்தூட்டுப்படலம், பாத்திமா திருமணப் படலம் முதலிய வற்றில் தமிழ்ச் சாயலின் பதிவைத் தெள்ளிதின் அறியலாம்.

உமறுப்புலவரின் கடவுள்வாழ்த்துப் பாடல் வள்ளுவர், கம்பர் பாடியிருத்தல் போன்று எல்லாச் சமயத்தார்க்கும் ஏற்புடைத்தாய்ப் பொதுவாக அமைந்துள்ளது.

திருவினுந் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
    தெளிவினும் தெளிவதாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக் கணுவாய்
    மதித்திடாப் பேரொளி அனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்
    பூதலந் துறைந்தபல் லுயிரின்
கருவினும் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
    கருத்தனைப் பொருத்துதல் கருத்தே!

இப்பாடல் எத்துணை எளியதாய் இறைவனின் பொது இயல்புகளைத் தொடுத்துக் கூறுகின்றது!

சீறாப்புராணத்திலும், பிற காப்பியங்களில் போல் அவையடக்கம்

காணப்படுகிறது, செந்தமிழ்ப் புலவர்கள் முன்னர்தாம் சிறுமைப் பாடுதல்— பெருங்கடல்களும், உயர்ந்த மலைகளும் நிலைகுலைய வீசும் சண்டமாருதத் திற்கு எதிரே வறுமைப்பட்டு வருந்திய சிற்றெறும்பு மூச்சுவிடுவதுபோன் றது. வானிடை முழங்கும் பேரிடியின் ஆரவாரத்திற் கெதிரே கைந்நொடித்து ஓசைசெய்தல் போன்றது என்கிறார் உமறு. 'பணியுமாம் என்றும் பெருமை' என்று குறள் சுட்டும் பண்பினை இவ்வவையடக்கம் காட்டுகிறது.

முதற்காப்பியங்களான சிலம்பிலும் மேகலையிலும் நாட்டுப்படலம் நகரப் படலம் எனத் தனித்து இல்லையாயினும், நாடு நகரங்களின் புனைவுக் குறிப்புக்கள் உள்ளன. அடுத்துத் தோன்றிய சிந்தாமணியில் முதலாவதாக உள்ள நாமகள் இலம்பகத்தில் ஏமாங்கதநாட்டின் புனைவும் இராசமாபுர நகரின் புனைவும் விரிவாகப் பாடப் பெற்றுள்ளன. பின் எழுந்த இலக்கியங் கள் தனியாகவே நாட்டுப்படலம் நகரப்படலம் என வகுத்து விரிவாய்ப் பாடத் தொடங்கின. சீறாவும் நூலின் தொடக்கத்தே இவ்விரு படலங்களை யும் கொண்டுள்ளது. நபிகள் நாயகம் தோன்றிய அரபு நாடு பாலைவனப் பகுதி நீர் வளமற்றது, பெருமணல் செறிந்தது, ஈச்சமரம் தவிர பிற மரம் இல்லா தது எனினும் உமறுப்புலவர் தம் கற்பனையால் அந்நாடு புனல்நாடு போல வள நாடாகக்காட்சி தருகிறது, அரபுநாடு தமிழ் நாடாகிறது. இசுலாமிய சமயம் தமிழ் சமயமாகிறது. நபிகள் நாயகம் தமிழ்த்தலை மாந்தர் ஆகிறார்.

நாட்டுப் புனைவினைக் குறிஞ்சி முல்லை முதலிய தமிழ் நிலப்பாகுபாடு தழுவிப் பாடியுள்ளார் உமறுப் புலவர். இடி இடித்து, மின்னி, மழை பொழிந்து, வெள்ளப் பெருக்கெடுத்து மலையினின்றும் அருவி விரைந்தோடி வருகிறது. அப்பொழுது அங்குள்ள வேங்கை, சந்தனம், சண்பகம், கோங்கு, தேக்கு முதலிய மரங்களை வேரோடு சாய்த்து விடுகிறது. குறிஞ்சி நிலத்தில் வாழும் குறத்தியரின் தினையை வாரியடித்துக் கொண்டு, யாழ், கொண்டகப் பறை முதலிய இசைக் கருவிகளைச் சிதறும்படி பாறையில் மோதி, முக்கனிகளை வீழ்த்தி வெள்ளம் விரைந்து செல்கிறது. அவ்வருவி மலையென்னும் அரசனின் தோள்களைப் புல்லி, மகிழ்ச்சி நல்கி, அவனிட மிருந்து பொன், மணி முத்துக்கள் போன்ற விலையுயர்ந்த பொருள்களையும், வேறுபல பண்டங்களையும் கவர்ந்து கொண்டு, எல்லை தாண்டிச் செல்கிறது. இத்தன்மைகளால் அது விலைமகளை ஒத்துத் தோன்றுகிறது என்கிறார். கம்பரும் மலையிலுள்ள பொருள்களை மண்டலால் விலையின் மாதரை ஒத்தது அவ்வெள்ளமே என்று பாடியிருத்தலை ஒப்புநோக்கலாம்.

ஆற்றுப் படலத்தில் ஆறு பொன்னையும், மணியையும் மரங்களையும் கொண்டு செல்லுதலால் அது வணிக மாக்களை நிகர்க்கும் என்கிறார் கம்பர். இதனை யொப்பவே,

கிடந்த சந்தனம் காரகில் கிளைமணி கரிக்கோடு
உடைந்த முத்தம்வெண் தந்தமுச் சுடரொளி ஒதுங்கக்
கடந்த செம்மணிப் பையுடன் கொடுகடல் ஏற
நடந்த வாணிகன் ஒத்தது செழுங்கலை நதியே,

என்கிறார் உமறு. இந்த ஆறுகள் குறிஞ்சி, முல்லை, மருத நில வழியே ஓடி அங்குள்ள பொருள்களை அடித்துக் கொண்டு கடலில் விழுகின்றன எனத் தமிழக நிலப் பாகுபாட்டின்படி புனைவு செய்திருக்கிறார்.

கதிசா கனவு காண் படலத்தில் நபிகள் பல இடங்களைக் கடந்து சென்றார் எனும்போதும் தமிழக நிலப் பாகுபாட்டினை நினைந்து பாடியுள்ளார். தாமரையும் நீலமும் குவளையும் மலரும் தடாகத்தில், வாளை மீன்கள் துள்ள அஞ்சி ஓடும் அன்னங்கள் சூழ்ந்த மருதத்தையும்; இடிமுழங்குந் தோறும் களிறு பிடியுடன் ஓடிச் சோலையில் ஒதுங்க, அவற்றை மேகக் கூட்டமாகக் கருதி மயில்கள் மகிழ்வுடன் ஆடும் குறிஞ்சியையும்; கருமையும் கொலைப் பார்வையும் உடைய வேட்டுவர், தூணி தாங்கி, வில்லை வளைத்து அம்பினால் மானினம் வீழ்த்தும் சீறார்களுடைய பாலையையும்; காயா, பிடவு, கொன்றை முதலிய மரங்கள் செறிந்த, மடந்தையரின் தயிர் கடையும் மத்தொலி நீங்கா முல்லை நிலத்தையும் நபிகள் நாயகம் கடந்தார்.

அரபு நாட்டில் நீர்வளமின்மையால் உழவுத் தொழிலில்லை எனினும் அங்குள்ளார் பயிர்த் தொழில் புரிவதாகச் சித்திரித்துள்ளார். உழவர்கள் பல்வகை அணிகள் பூண்டு, கள் பருகி கதிரவனை வணங்கி, குலதெய்வத்தை வழிபட்டு, நிலமகளை வாழ்த்தி, நெல் விதைக்கின்றனர். அருமறை நெறியும், அன்பும், அறிவும், இரக்கமும், கொடையும், ஒழுக்கமும் கொண்ட சான்றோரின் குடி, செல்வம் மல்கித் தழைப்பது போல நாற்றுகள் செழித்து வளர்ந்தன. அவற்றைப்பிடுங்கி, மகளிர் வயலில் நட்டுப் பின் குளங்களில் புனலாட, அவர்கள் கூந்தலில் இருந்து வண்டு எழுந்து ஓடிப்போய் நீலப்பூவில் வீழ்கிறது, புனலாடும் மகளிர் கண்களுக்கு நீலம் ஒப்புமை ஆகாமையால் வண்டு சீற்றமுற்றுக் காலால் உதைப்பதுபோல் புலவர்க்குத் தோன்றுகிறது.

திருமண நிகழ்ச்சிகளையும் மணமுறைப்படியே மணம்புரி படலத்திலும் பாத்திமா திருமணப் படலத்திலும் விரிவாகப் பாடியுள்ளார். கோவலன் கண்ணகியர் திருமணத்தை யானைமீதமர்ந்து முரசறைந்து நகரமக்களுக்கு அறிவித்ததாகச் சிலம்பு கூறும். ஆனால் சீறாப்புராணமோ ஒட்டகத்தின் மீது வள்ளுவர்களை அமரச் செய்கிறது. காவணம் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. வாயிலில் மகரதோரணங்கள் அணி செய்ய, பந்தர்முன் பூங்

கமுகு, குலைத்தெங்கு நிற்க மாடங்களைப் புதுக்கிக் கொடிகளை நாட்டுகின்றனர். மதிலெல்லாம் வெண்சுதை. எங்கும் பூரண பொற்குடங்கள். மக்கள் அணிகலன்களாலும், ஆடைகளாலும் ஒப்பனை செய்து கொள்கின்றனர். சந்தனம், அகிற்புகை மணம் கமழ்கிறது. முகமலர்ந்து இரவலர்க்கு இன்னமுதளிக்கின்றனர். மறையவர்கட்கு இருநிதியை எடுத்து இறைக்கின்றனர். சிலசமயம் இரவலர்களைத் தேடியும் காணாமையால் வருந்துகின்றனர். முத்துக்களைப் பொடிசெய்து சுவரில் பூசி, அதில் மணி கோத்தாற்போல் அழகிய கோல மிடுகின்றனர். ஓவியம் தீட்டுகின்றனர். நாட்டியப் பந்தர்களில் பைங்கொடிகளைப் படரவிடுகின்றனர். பொலம்பூவாடையால் பந்தரை அணிசெய்து பழக்குலைகளையும், மணிமாலைகளையும் தொங்கவிடுகின்றனர். நாம் நினைத்த பொருளெல்லாம் பந்தரில் காணப்படுதலால் அது கற்பக மரத்தை ஒத்திருந்தது என்கிறார் உமறு.

கதீசா திருமணத்தைக் காதலுக்குப் பின் நடந்ததாக அமைக்கிறார். கனவில் நபிகளைக் கண்டு, பின் நேரிற்காணாமைக்கு வருந்துவதாகப்பல பாக்கள் உள்ளன. திருமணத்திற்கு முன்னேயே நபிகளின் பிரிவைத் தாங்காது வருந்திய முறை தமிழின் களவு முறையை ஒட்டியதாகும். கதீசா கனவு காண்படலம் என ஒன்றைப்படைத்து அந்நங்கையின் காதற் சிறப்பைப் பல நிலையில் விளக்கிக் காட்டுவர்.

பஞ்சணை பொருந்தார்; இருவிழி துயிலார்;
    பழத்தொடு பாலமு தருந்தார்;
கொஞ்சுமென் குதலைக் கிளியொடு மொழியார்
    கொழுமடற் செவிக்கிசை கொள்ளார்;
கஞ்சமென் மலர்த்தாள் பெயர்ந்திட உலவார்;
    கடிமலர் வாசநீ ராடார்;
வஞ்சிநுண் ணிடையார் தம்மிடத் துறையார்;
    முகம்மது மனத்திடத் துறைந்தார்

இந்தப் பாடல் தமிழ்க் காதலைத் திறம்படக் காட்டுகிறது.

அரசன் அல்லது கடவுள் உலாசெல்ல அவனைக்கண்டு ஏழு பருவம் வாய்ந்த பெண்கள் காதல் கொண்டு, மயங்கிக் கவல்வதாகப் பாடுகின்ற தமிழ் நெறி பிற்கால உலா இலக்கியத்தில் தோன்றியது. முகம்மது நபியின் மருமகனான அலி என்பார் வீதியில் உலா வருங்காலை, எழுநிலைமகளிரின் காதல் நிலையை அவரவர் பருவத்திற்கேற்ப பாத்திமா திருமணப்படலத்தில் புனைந்துள்ளார் உமறு.

எயிறுகள் நிறையா; மார்பின் இளமுலை முளையா; கண்கள்
அயிலெனா வரிகள்சேரா; அளகமும் முடியிற் கூடா;
தொயில்வரை மெய்யிற் பூழ்தி பூதத்தும் துடையாக் காமம்
பயிரெனத் தோன்றும் பேதை பருவத்தின் ஒருத்தி வந்தாள்

ஏறுபோன்ற அலியை நோக்கித் தன்னையும் பசியின்மீது அவர் பக்கத்தே அமர்த்திக் கொள்ளுமாறு கூறிக் கண்ணைக் கசக்கினாள். பின்னர் பெரும்படை பவனி நோக்கிப் பெதும்பையும், வைத்தொரு கிளியுமேந்தி மங்கையும், பேரணி மடந்தை என்னும் பெண் கொடியும் வாழ்த்தி நின்றவரையெல்லாம் வைதுகொண்டரிவையும் வந்தனர். 'திரும்பலிற் சொல்வேன் என்னச் சினந்தொரு தெரிவை போனாள். ஒலிதர உரைத்துச் செவ்வி ஒழுகுபே ரிளம்பெண் போனாள்.'

இவ்வாறு ஏழுபருவ மகளிரையும் குறிப்பிட்டுள்ளார்.

முகம்மதுநபியின் அழகில் மனம் பறிகொடுத்த ஒரு நங்கை தன் கிளியை நோக்கி, அவர்பால் தூதுவிடுகிறாள். இது தூது என்னும் பகுதியைத் தழுவி எழுந்ததாகும்.

திருத்தகு பவனி நோக்கும் சேயிழை ஒருத்தி காதல்
வருத்தமுற் றிருந்து பஞ்ச வணக்கிளி கையில் ஏந்திக்
காத்தினைப் பொருத்தச் செய்த காளைபால் ஏகி என்றன்
ஊத்தினைப் பொருத்தச் சொல்லென்று ஓதும்வாய் ஒழுகி லாளே.

(மணம்புரிபடலம் 65)

சீறாப்புராணத்தில் வரும் அரபு மகளிர் திலகம் அணிகின்றனர். மகளிர் சிலர் திலகமிட்டுக் கொண்டிருக்கின்றனர். அலியின் உலாவை அறிந்ததும் கையிருந்து கண்ணாடியை வீசிவிட்டு நாணி ஒளிந்து நோக்குவதாக பாத்திமா திருமணப் படலத்தில் அமைத்துள்ளார் உமறு. மேலும் பாத்திமாவை நாரியர் திலதமன்னார்' 'மாதர்கள் திலதமென்ன...' எனப் போற்றுகிறார்.

கோவலன் பிரிவுத் துயரைக் கண்ணகி தன் மாமன் மாமியர்க்குக் காட்டாமல் மறைக்க, குறிப்பாலுணர்ந்து அவர்கள் வருந்தி அவள் துயர் களைய முற்படுகின்றனர். மாமனார் மருமகளின் துயர்துடைக்கும் இச்சமுதாயச் சீர்திருத்தம் உமறுப்புலவரைக் கவர்ந்ததால் ஆமினா, தன் கணவர் கொலைப்பட்டமை யறிந்து வருந்தும்போது, மாமனார் அப்துல் முத்தலீபு வந்து ஆறுதல் கூறுவதாக அமைத்துள்ளார்.

உடுத்த பூமியிற் புதைமணி எனஉடல் ஒடுங்கி
வடித்த கண்ணின்நீர் ஒழுகிட இருந்தபொன் மயிலை
அடுத்து வந்திருந்து அன்புடன் அப்துல் முத்தலீபு
தொடுத்த துன்பங்கள் ஆற்றி நல்வழிபல சொன்னார்.

(நபியவதாரம் 47)

முற்றிய செந்நெல் தலைசாய்த்து நிற்பதற்குத் திருத்தக்க தேவர், கல்விசேர் மாந்தர் பணிவுடன் தலைவணங்குவதை உவமை காட்ட, உமறு கற்புடைப் பெண் நாணித் தலைகுனிந்து நிற்பதனை உவமை (சாம்நகர் புக்க படலம் 11) காட்டுகின்றார்.

நகர்களில் கொடிகள் ஆடுவதைத் தற்குறிப்பேற்றமாக அழைப்பது போலவும் போகச் சொல்வது போலவும் பாடுதல் மரபு. சாம்நகர மாளிகை மீது ஆடுங் கொடிகள், நபிகளைக், கைவிசித்து அழைப்பது போலுள்ளது (சாம்நகர்புக்கபடலம் 19) எனத் தற்குறிப்பேற்றிப் பாடுகிறார் உமறு.

தம்மைக் காத்த சடையப்பரைக் கம்பர், தம் காப்பியத்திடையே பல வாறு புகழ்ந்து கூறுவதுபோல, உமறுப் புலவரும் அபுல் காசீம் மரக்காய ரைப் பல விடத்தும் புகழ்ந்து செய்ந் நன்றி யுணர்வைக் காட்டியுள்ளார். பல் வகை ஒலிகள் நிறைந்த நாட்டு வளத்தைக் காட்டுவதற்கு அபுல் காசீம் வள்ளலின் ஒலிமிக்க மனைவளத்தையும் (நாட்டுப்படலம், 41) தடாகம் நீர் நிறைந்திருத்தற்கு, அபுல் காசீம் மனை செல்வம் நிறைந்திருப்பதையும் (புன்ல் விளையாட்டுப் படலம், 8), நதியின் இருமருங்கும் மரங்கள் செழித் திருந்தமைக்கு வள்ளலின் சுற்றம் தழைத்துச் சூழ்ந்திருத்தலையும் உவமை (சுரத்திற் புனலழைத்தபடலம், 19) காட்டுகிறார்.

திருமங்கை யாழ்வார் 'நாராயணா' என்னும் நாமம் இம்மை மறுமை களில் பல்வகை நலங்களையும் பயக்கும் என்கிறார்.

குலம் தரும்; செல்வம் தந்திடும்; அடியார்
படுதுய ராயின எல்லாம்
நிலம்தரச் செய்யும்; நீள்விசும்பு அருளும்,
அருளொடு பெருநிலம் அளிக்கும்;
வலம்தரும், மற்றும் தந்திடும்; பெற்ற
தாயினும் ஆயின செய்யும்;
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்.
நாரா யணா என்னும் நாமம்.

இப்பாடற் கருத்தினையும் யாப்பு வகையையும் தழுவி உமறுப் புலவர் நபிகள் நாயகத்தை ஒரு முறை நோக்கினுல் என்ன பயன் கள் கிடைக்கும் என்பதனை,

வறுமையும் தீரும்; நோய்விட் டகலும்;
மனத்தினிற் கவலையும் நீங்கும்;
சிறுமையும் அகலும்; புத்தியும் பெருகும்;
தீவினை வந்தட ராது;
தெறுபகை சிதையும்; செல்வமும் வளரும்;
தேகமும் சிறந்து பூரிக்கும்;
உறுபவந் தொலையும்; முகம்மதை எவர்க்கும்
ஒருபகற் காண்கில் என்றுரைப்பார்

(அலிமாமுலையூட்டுப் படலம்: 73)

என்று பாடியுள்ளார்.

இங்ஙனம் பண்டைத் தமிழிலக்கியங்கள் புலப்படுத்தும் பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், இலக்கிய மரபுகள், யாப்புவகை முதலியவற்றைப் பின்பற்றி உமறுப் புலவர் தம் காப்பியத்தை நயஞ்செறியப் படைத்திருத்தலின், தமிழ்மொழி உள்ளளவும் சீருப்புராணம் சிறப்புடன் திகழும் என்பது ஒருதலை.

# சீருவின் கடவுள் வாழ்த்துப் பகுதி ஓர் ஆய்வு

தொ. பரமசிவன், எம். ஏ.
டாக்டர். சாகிர் உசேன் கல்லூரி
இளையான்குடி

"பாரிடை நபிகள் தோன்றிப் பதினொரு நூற்றாண் டின்பின்
சீருயர் பாண்டி நாட்டில் செந்தமிழ் உமறு ஞானி
ஈறிலா இறைவன் தூதர் இனியநற் கதைவ டித்தார்."

வடித்த கதை தமிழுக்குப் புதியது. தமிழ்க் காப்பிய உலகத் தலை மக்களில் பெரும்பான்மையோரைப் போலவே, உமறுவின் காப்பியத் தலைவரும் தமிழ்தவிர் நிலத்தைச் சார்ந்த அறமகனாரே.

உமறு வடித்த கதை தமிழுக்குப் புதியதென்றாலும், உமறு தமிழுக்குப் புதியவரல்லர். 'நரிவிருத்தம்' பாடித் தமிழிலக்கியத் தோடு அறிமுகஞ் செய்து கொண்ட திருத்தக்கரைப் போல, உமறு 'முதுமொழி மாலை' பாடித் தமிழோடு அறிமுகஞ் செய்து கொண் டார். கானில வாழ்வை முகமது நபியை கண்களாற் காணக் கவிஞர் கொண்ட ஏக்கம், 88 கவி மலர்களாகித் தமிழ்ச்சோலையில் மணம் பரப்புகிறது.

உமறுவின் காவியச் சுவடியில் முதல் ஏடாகக் "கடவுள் வாழ்த்து" எனும் பெயரில் காப்புச் செய்யுளோடு அமைந்த 21 செவி நுகர் கனிகளே இக்கட்டுரைக்குப் பொருளாகின்றன. புலவர்மணி நூர்முகமதுவின் விளக்கப் பதிப்பான "உமறு தரும் சீரு" வில் மட்டுமே இப்பாடல்கள் கடவுள் வாழ்த்து, திருநபி வாழ்த்து, முறுசலின்கள் வாழ்த்து என்ற பாடல் தலைப்புகளோடு அச்சேறி உள்ளன. கடைசி 3 பாடல்கள் புலவரின் அவையடக்கச் செய்யுள்களாகும். 21 பாடல்களுமே ஐஞ்சீர், அறுசீர், எழுசீர்களால் இயன்ற ஆசிரிய விருத்தங்கள்.

ஆய்வினைத் தொடங்குமுன் ஒரு சிறிய ஐயம் எழுகிறது. ஒரு பெருங்காவியத்தின் ஒரு பாடலை அல்லது ஒரு படலத்தை மட்டும் கொண்டு நூலினைத் திறனாய்தல் முறையாகுமா? 'முறையன்று' என்கிறார் டாக்டர் வ. சுப. மாணிக்கம்.

"தோள் கண்டோர் தோளே கண்டார்" என்றபடி தனிப் பாடல் கண்டார் தனிப்பாடலையே கண்டார். படலங் கண்டார் படலத்தையே கண்டார் என்ற குறுநிலைக்குக் காப்பியம் குறைந்து விடுகின்றது" என்பது அவர் கருத்தாகும்.

முன்னும் பின்னுமாகப் பாடல்களையும் படலங்களையும் விட்டு விட்டு இடையிலே ஒன்றை அளவுகோலாகக் கொள்வதையே அவர் மறுக்கிறார். ஒரு நூலின் முதற்சுவடி படிப்போர்க்கு கவிஞனையும் கவிதையையும் இனங்காட்டும் பண்பும் பயனும் உடையதாகும். அவன் சமைக்கவுள்ள கவிதைப் பெருமாளிகையின் பரப்பினையும் உயர்ச்சியினையும் கலை நுணுக்கங்களையும் தாங்கி நிற்கும் அடிப்படையாகும். எனவே இந்த ஐயத்தைக் களைந்து விட்டு தலைப் புக்கு வருவோம்.

முதன் முதலாக, நூலின் காப்புச்செய்யுளைப் பற்றி ஒரு சொல் "திருவினும் திருவாய்" எனத் தொடங்கும் இப்பாடல் ஆழ் பொருளும், சுவையும் நிரம்பியதாகும்.

"சீறாவின் ஆரம்பத்திலுள்ள காப்புச் செய்யுளான "திரு உருவாய்" என்ற பாடலே மூலப் பிரதிகளில் இல்லை என்றும், சீறாவைப் பதிப்பித்த புலவர் நாயகம் இதை எழுதியிருக்கலாம் என்றும் அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர்". இது ஆர். பி. எம். கனி அவர்கள் தரும் செய்தி. இனி மேலே செல்வோம்.

தமிழ் இலக்கண இலக்கிய மரபுகளைத் தெளிவுற உணர்ந்தவர், கவிஞர் உமறு. நிறைவிலாது போயினும் குறைவிலாத காப்பிய இலக்கணங்களை அவரது திருநூல் பெற்றுத் திகழ்கிறது. இருப்பினும் உமறுவின் கடவுள் வாழ்த்து அவையடக்கப் பகுதிகள் ஒரு தமிழ் மாணவனின் உள்ளத்தில் பல வினாக்களை எழுப்புகின்றன. ஒரே ஒரு ஊகம் மட்டுமே இவ்வினாக்களுக்குத் தெளிவான விடையினைத் தருகிறது.

கடவுள் வாழ்த்துப் பகுதியிலும் அதைத்தொடர்ந்து அவையடக்கப் பகுதியிலும் ஏனைய தமிழ்க்காப்பிய வல்லார் தரும் செய்திகளை உமறு தரவில்லை.

தண்டியாசிரியர் காப்பிய இலக்கணம் வகுப்பதற்கு முன்னும் பின்னும் தமிழில் காப்பியங்கள் எழுந்ததுண்டு.

"வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றில் ஒன்று
ஏற்புடைத்தாகி முன்வர இயன்று" என்பது

தண்டியாசிரியர் கூறும் இலக்கணம். ஆனால் வாழ்த்து வணக்கம் இவற்றில் ஒன்ரேடு 'வருபொருள்' கூருத காப்பியக் கவிஞர்கள் தமிழில் யாரும் இலர். முன்னேடிக் காப்பியங்களான சிலம்பிலும் மேகலேயிலும் பதிகங்கள் அப்பணியை நிறைவு செய்கின்றன. நூற்பொருளோடு அலலது கதையோடு தொடர்பில்லாத ஆனல் நூற்பிறப்போடு தொடர்புடைய செய்திகள் இப்பகுதியில் வருதல் மரபு. இக்காப்பிய மரபு புலவர் உமறு அறியாததன்று.

"இராமாவதாரப் பேர்க்கதை" என்று நூற்பெயரையும் "வாங்கரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி யென்பான்" எழுதியது என்று முதனூலேயும் "சடையன் வெண்ணே நல் ஊர்வயின் தந்ததே" என்று நூல் பிறந்த இடத்தையும், கம்பர் குறிப்பிடுகின்ருர்.

அலகில் சீர் நம்பி ஆருரர் பாடிய "தெரிவரும் பெருமைத் திருத்தொண்டர் தம், பொருவருஞ்சீர் புகலலுற்றேன்" என்று நூலின் தலேமக்களேயும், "ஈங்கிதன் நாமம் கூறில் திருத்தொண்டர் புராணம்" என்று நூற்பெயரையும் "தூய பொன்னணி சோழன் நீடுழிபார், ஆயசீர் அநபாயன் அரசவை" என்று நூல் அரங்கேறும் களத்தையும், குறிப்பிடுகின்ருர் சேக்கிழார் பெருமான்.

"முழுதுணர் முனிவன் (வியாசன்) தன் சொல்லாகிய மாப் பெரும் காப்பியம்" என்று தனக்கு முதனூலேயும் "ஆக்கியவரையும்" "மன்னு மாதவன் சரிதமும் இடையிடை வழங்கும் என்னு மாசையால் யானும் ஈதியம்புதற் கிசைந்தேன்" என்று தான் இக்கதையை விரித்த காரணத்தையும் குறிப்பிடுகின்ருர் வில்லிபுத்தூரார். பிற செய்திகளே அதே காலத்தில் எழுந்த வரந்தருவாரின் பதிகம் கூறுகின்றது.

நூற்பெயர் "சிந்தாமணி" என்றும் "சீவகசாமியென்பான் வானேறனேய புகழான் சரிதம்" நூலின் பொருள் என்றும் கூறி 24 பாடல்களில் சீவகனின் வரலாற்றைச் சுருங்கக் கூறியும் விடுகின்ருர் திருத்தக்கர்.

"ஆரிய வளன் தன் காதை அறமுதல் விளங்கச் சொல்வாம்" என்று முதல் பாடலிலே நூற்பொருளேயும், தலேவன் பெயரையும், "ஆரியனூரில் தேம்பா அணியெனப் பிணித்தல் செய்வாம்" என்று நூல் பிறந்த ஊரையும், நூற்பெயரையும் 13 பாடல்களில் சொல்லி விடுகின்ருர் வீரமாமுனிவர்.

முதற் பகுதியில் 12 பாடல்களில் கம்பர் தந்த செய்திகளே, 10 பாடல்களில் சேக்கிழார் தந்த செய்திகளே, 8 பாடல்களில் வில்லியார் தந்த செய்திகளே கதைச் சுருக்கமும் சேர்த்து 29 பாடல்களில் திருத் தக்கர் தந்த செய்திகளே, 20 பாடல்களேப் பாடிய புலவர் உமறு தரவில்லேயே! ஏன்?

காப்பியம் இயற்றும் புலவனின் இயல்பை, ஒரு உவமையின் வழி மாறனலங்காரமுடையார் விளக்குகின்ருர். தலேவனேப் பிரிந்த தலேவியின் கண்கள் துயிலமாட்டா! எவை போலத் தெரியுமா? பெருங்காப்பியம் பாடுதற்கு உட்கொண்ட புலவர் கண்போல"

"முற்ற உணர்ந்து முதுகாப் பியம்புணர்ப்பான்
உற்றவர்தங் கண்போன் றுறங்காவாம் — இற்பிரிந்தால்
நல்லியலார் வந்தனேசெய் நாவீறன் மால்வரைமேல்
மெல்லியலார் இன்ப விழி"

என்பது மாறனலங்கார ஆசிரியரின் கருத்தாகும். ஒருசெய்தியை மனங்கொள்ள வேண்டும். இக்காப்பிய மரபுகளே உமறு அறியாதவ ரல்லர்.

நூற்பெயர் சீரு என்பது, இது முதனூலாகிய "சீறத்துந்நபி" என்பதைத் தழுவி வந்தது என்ற செய்தியை, சீருவை முதன் முதலில் பதிப்பித்த புலவர்நாயகம் எழுதிய சிறப்புப் பாயிரத்தால் தான் அறிகிருேம். "சீருவென்ன முதனூல் நாமமே நாட்டி முதுபயன் அறம் பொருளின்பம் வீடனேத்து மடக்கிய திறம் பெருங்காப்பியம் செய்தனர்" என்கிருர் அவர். உமறு ஏன் இதைக் கூடச் சொல்ல வில்லே? நூற்பொருள் அண்ணல் நபி அவர்களின் புனித வரலாறு என்று சொல்லவுமா மறந்து போனுர்.?

உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் சீதக்காதி என்பது பரவ லாக வழங்கிவரும் கதை. அவரைப் பற்றி ஒரு சிறு குறிப்பினே முதற்பகுதியில் கூறவேண்டாம் — நூலின் எந்த இடத்திலுமே தர வில்லேயே ஏன்? புனித வரலாறு பாடும்போது மனித வரலாறு இடைவிரவ வேண்டாம் என்று எண்ணினுரா? அப்படி எண்ண வில்லே என்று மிக உறுதியாகச் சொல்லலாம். தன்னேப் புரந்த உசேன் நயினுர் மகன் அபுல் காசிம் மரக்காயரை நூலின் பல இடங்களில் நன்றியுணர்வோடு பாராட்டுகின்ருர் உமறு.

"காலத்தினுற் செய்த நன்றிக்குக் கைமாருக அபுல்காசிமின் பெயரை, உமறு தமது காப்பியத்தில் இருபத்திரண்டு இடங்களில் அழியாப் புகழ்ழ்யுதுமாறு பொறித்திருக்கின்ருர்" எனக் கணக்கிட்டுச் சொல்கிருர் முகமது ஆரிப்மியான்.

உமறு, சமயஞானி சதக்கத்துல்லா அப்பா அவர்களிடமும் பின்னர் மகமூது பந்தர் (மாமு நயினுர் லெப்பை என்னும்) கண்ணுடி அப்பா அவர்களிடமும் சமய விளக்கம் கற்ருர் என்பதும் வழங்கிவரும் கதையாகும். கண்ணுடி அப்பா அவர்களைப் பற்றி நூலின் எந்த இடத்திலும் செய்தியில்லை.

சதக்கத்துல்லா அப்பா அவர்களை வாழ்த்தி ஒரு பாடல் பாடுகின்ருர் உமறு. ஆனுல் அவர்களிடம் சமயக் கல்வியோ, உரை விளக்கமோ பெற்றதாகக் குறிப்பிடவில்லை.

"உரமுறு தீன் பாரெல்லாம் ஒளிரவே விளக்கம் செய்யும்" என்று முகைதீன் ஆண்டகை அவர்கள், தீன் விளக்கம் செய்ததைக் குறிக்கிருர். அதைப்போலத்தான் சதக்கத்துல்லா அப்பா அவர்கள் "வித்ரிய்யா" என்னும் உரை விளக்கம் தந்ததையும் "வேத நபிதிரு வசனம் தீனேர் சம்மதித்திடப் பாரெல்லாம் தழைக்கவே விளக்கம் செய்தார்" என்று குறிப்பிடுகின்ருர்.

"உமறின் சீரு மகா காவியமானுலும் அதில் சொல்லப்பட்ட விஷயங்கள் விரிவாகவோ சுருக்கமாகவோ அதற்கு முன்பே தமிழ் நாட்டில் பிரபலமானவை. சாதாரணமாக முஸ்லீம்களின் வீடுகளில் ஓதிவரப்பட்ட மௌலுதுக் கிதாபுகளில் இவை போன்ற விபரங்கள் உண்டு. எநத ஒரு சாதாரண ஆலிமிடமிருந்தும் உமறு இவற்றைத் தெரிந்து கொண்டிருப்பது சாத்தியமே" என்று இச்சிக்கலுக்கு விடை காணுகிருர் ஆர். பி. எம். கனி.

அது மட்டுமன்று. உமறுப்புலவரின் முன்னேர்கள் அரபிய நாட்டினர். நறுமணப் பொருள் விற்பனைக்காக இந்தியா வந்த சேக் பரீது அத்தா என்னும் அரபியரின் குலவழியில் வந்தவர் உமறு. எனவே அவர் இச்செய்திகளை யெல்லாம் அறியாதவர் என்பது நம்பமுடியாததாகும்.

இன்னுமொன்று சீருப்புராணத்தைச் சுவைக்கின்ற தமிழிலக்கிய மாணவர்கள் அனைவருக்கும் ஒரு சிறு வருத்தம் துளிர்ப்பதுண்டு. "உமறு ஏன் இந்நூலை நிறைவு செய்யவில்லை?" என்று. அபுல்காசிம்

மரைக்காயர் வீட்டு முன் சீரு அரங்கேறியதாகவும் நாட்டு வழக்கில் செய்தி ஒன்றுண்டு. நிறைவடையாத காப்பியத்தையா உமறு அரங்கேற்றினர்? இவ்வரங்கேற்றம் பற்றி அவையடக்கப் பாடல்களில் உமறு ஏன் குறிப்பிடவில்லை?

இது ஒரு புறமிருக்க, "உமறுப் புலவர், நபிகள் நாயகத்தின் வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகளை மட்டுமே பாடியுள்ளார். எனவே தன்னளவில் சீரு நிறைந்த காப்பியமே" என்று சிலர் வாதிடமுற்படுகின்றனர். ஆர்வத்தைக் காட்டும் இக்கருத்து, இலக்கிய மாணவர்க்கு அமைதி தரவில்லை.

அண்ணலார் வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகளை மட்டும் பாட உமறு நினைத்திருந்தாரென்றால் அவர்களின் பிறப்பு வளர்ப்பு முதலிய நிகழ்ச்சிகளைப் பாடாது, அவர்களை "ஓதுவீராக" எனக் கூறி திருத்தூதுவராக ஆட்கொண்டருளிய புனித நிகழ்ச்சியில் தொடங்கினால் போதும்.

மக்கநகரை அண்ணல் நாயகம் வென்றது அவரது வாழ்வில் எத்துணைப் பெரிய நிகழ்ச்சி! அதைக் கூடப் புலவர் உமறு பாடவில்லையே!

அண்ணலாரின் இறுதி ஹஜ் திருப்பயணத்தின் போது ஒரு வெள்ளிக் கிழமையில் (ஹிஜிரி 10 துல்ஹஜ் 9) அரபாத் திடலில் கசுவா என்னும் ஒட்டகத்தின் மீதேறி கூடியிருந்த இலட்சத்து இருபத்தி நாலாயிரம் முசுலிம்களிடையில் (குத்பா என்னும்) சொற்பொழிவு நிகழ்த்துகையில்,

"இன்றைய தினம் உங்களுக்காக உங்களுடைய தீன் எனும் சன்மார்க்கத்தை முழுமையாக்கினேன். என்னுடைய பேறுகளை உங்கள் மீது பூர்த்தி செய்து விட்டேன் உங்களுக்காக இஸ்லாம் (எனும் சாந்தி) மார்க்கத்தை நான் உவந்தேன்" என்று இறைத்திருமொழி அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுதுதான் அண்ணலாரின் வாழ்வுத் திருப்பணி முழுமையாகிறது. எனவே அதுவரையுள்ள நிகழ்ச்சிகளைப் பேசாத எந்த நூலும் நபிகள் நாயகத்தின் வரலாற்றை முழுமையாகச் சொல்லவில்லை என்றே பொருளாகும். இதை உணர்ந்து தான் காயல்பட்டினம் பனி அகுமது மரைக்காயர் "சின்னச்சீரு" பாடினர். ரவண சமுத்திரம் ஹாஜி மொன்னன் முகமது காதிரி சத்தாரியும், புலவர் நாயகமும் 'ரௌலா ஷரீபில் ஜீவித்திருந்த படலம்" வரை பாடினர்கள்.

சீருப்புராணம் தவிர முதுமொழி மாலை, சீதக்காதி திருமண வாழ்த்து, சீதக்காதி நொண்டி நாடகம், ஒரு கோவை நூல், சில தனிப்பாடல்கள் - இவையும் உமறுப்புலவரின் படைப்புக்கள் என்பர். முதுமொழி மாலை சீருவுக்கு முற்பட்டது. ஏனைய நூல்களிலாவது சீருப்புராணம் பிறந்த கதையாவது உமறுப்புலவரைப் பற்றிய செய்திகளாவது காணப்படுகின்றனவா எனில், இல்லை. "உமறுப் புலவர் அவர்கள் தன்னைப் பற்றிய விபரங்களைத்தாம் பாடிய மற்றக் கவிதை நூல்களிலும் குறிப்பிடவில்லை" என்று தெளிவாக்குகிறார் எஸ். ஏ. செய்யது அசன் மௌலானா அவர்கள்.

"உமறு பற்றி ஆதாரப்பூர்வமான தகவல்கள் மிகவும் குறைவு" என்று வருந்திக் கூறுகிறார் ஆர். பி. எம். கனி அவர்கள்.

எனவே இதுவரை கூறிவந்த செய்திகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் தெளிவான செய்தி இது தான்.

வள்ளல் நாயகத்தின் வரலாற்றைக் கவிப்பொருளாக்க எண்ணங்கொண்ட உமறு அவ்விலக்கியத்திற்குக் காப்பிய வடிவம் தரவேண்டுமென்று முதலில் எண்ணவில்லை. எனவேதான் காப்பிய மரபுகளைக் கடவுள் வாழ்த்துப் பகுதியில் அவர் அடியொற்றிச் சொல்லவில்லை.

நூலின் முதற்பகுதியின் 21 பாடல்களைப் புறத்திறனாய்வு செய்து நாம் காணும் முடிவு இது. ஆனால் சீரு நிறைவடையாத-தற்கான காரணத்தைக் காண இயலவில்லை.

அப்படியாயின் நாயக இலக்கியத்திற்கு முதன் முதலாக என்ன வடிவத்தைத் தேர்ந்தெடுக்க உமறு எண்ணினார் என்ற கேள்வி அடுத்து இயல்பாகவே பிறந்து விடுகிறது.

சீருப்புராணத்தை அகத்திறனாய்வு செய்யும் போது இக்கேள்விக்கு ஊகமாக ஒரு விடை கிடைக்கிறது.

63 ஆண்டுகள் வாழ்ந்திருந்த உமறுப்புலவரின் காலம் கி. பி. 1631 முதல் 1694 முடிய ஆகும். மிஃராஜ் மாலை பாடிய ஆலிப் புலவரைத் தவிர, உமறுவுக்கு முன்னர் இசுலாமிய இலக்கிய மரபுகளைத் தமிழில் உருவாக்க முசுலிம் புலவர்கள் இல்லை. உமறுவின் காலத்தில் கி. பி. 1659 முடிய அரசாண்ட மன்னர் திருமலை நாயக்கராவார். இவர் காலம், தமிழில் சிற்றிலக்கியங்கள் பல்கிப் பெருகிய காலம். தமிழ்ச் சமய இலக்கிய வரலாற்றில் பேரலையாக எழுந்த

குமரகுருபர அடிகள் பிள்ளைத் தமிழும், கலம்பகமும், மாலை நூல் களும் பாடியருளி மக்களிடம் சமயம் பரப்பிய காலம் அது. வள்ளுவர் உள்ளிட்ட எல்லாப் புலவர்களும் காலச் சூழ்நிலைக்குக் கட்டுப்பட்ட வர்களே. எனவே அக்காலப் புலவர் உமறு, நபிநாதரின் சீர்மிகு உயர் வாழ்வு காப்பியமாக்குதற்குரிய உன்னத வாழ்வு என்பதை உணர்ந்த உமறு–பின்னர் வடிவத்தை மாற்றிக்கொண்டார் என்றாலும், சிற்றிலக்கிய வடிவம் ஒன்றையே மனத்தில் முதலில் தேர்ந்திருக்க வேண்டும். அது பிள்ளைத் தமிழ் வடிவம் என்பதே இக்கட்டுரையில் ஊகமாகக் கொள்ளப்பெறும் முடிவாகும்.

இம்முடிவை வலியுறுத்தும் சான்றுகள் நூலுள்ளே விரவிக் கிடக்கின்றன.

இறை வணக்கத்தையும் நபிகள் நாயக வாழ்த்தையும் அடுத்து 11 பாடல்களில் முறுசலீன்கள், முந்தைய நபிமார்கள், நான்கு கலிபாக்கள், அண்ணலாரின் திருப்பேரர்கள் அசன், உசேன், 'உலுல் அஜ்மி'களான சுவனவாசிகள், நான்கு இமாம்கள், முகைதீன் ஆண்டகை, சமயஞானி சதக்கத்துல்லா அப்பா ஆகியோரை வாழ்த்திப் பாடுகிறார்.

இவ்வரிசையும், வாழ்த்தும், இசுலாத்தின் பெருங்கொள்கை யான இறைவனின் ஒன்றான தன்மைக்கு (ஏகத்துவத்திற்கு) முரணாத வகையில் பாடிய பிள்ளைத் தமிழ் நூலொன்றின் காப்புப் பருவம் போல அமைந்துள்ளன.

உமறுவுக்குப் பின்னர் 14 பிள்ளைத் தமிழ் நூல்களை இசுலாம் தமிழுக்குத் தந்ததுண்டு. ஆனால் உமறுவுக்கு முன்னர் இசுலாமியப் பிள்ளைத்தமிழ் நூல் மரபு உருவாகவில்லை என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

மதகை அடைந்த நிலையில், வெள்ளம் கரையை உடைக்க முற்படுவது இயல்பு. எழுந்துவிட்ட கவி உணர்வைப் புலவன் எங் கேனும் வெளியிட்டாக வேண்டும். பின்னர் உமறு பாடும், நபி அவ தாரப் படலத்திலும், அலிமா அமுதூட்டு படலத்திலும் பிள்ளைத் தமிழ் மணமே நிறைந்திருப்பதை உணர்கிறோம்.

உடன் நனி 'கலிமா' விரலினை உயர்த்தி
உதித்தனர் மகமது நபியே!

மாநிலந் தனக்கோர் மணி விளக்கெனலாய்
மகமது நபி பிறந்தனரே!

மும்மை என்றுரைக்கும் புவனமும் புரக்க
மகமது நபி பிறந்தனரே!

மன்னிய எவரும் சொற்படி நடப்ப
மகமது நபி நடந்தனரே!

மலர் தரு சோதி முகமது விளங்க
மகமது சொல் விளங்கினரே!

மண்ணகத்திருந்து கிளை எலாம் வளர
மகமது நபி வளர்ந்தனரே!

என்று அடுக்கிய கவிதைகளில் தோயும் போது படிப்பது காப்பியமா, பிள்ளைத்தமிழா என்ற ஐயம் பயில்வார்க்கு அடிக்கடி தோன்றுகிறது. நாயகப் பிள்ளைத்தமிழ் பாடவேண்டும் என்ற புலவரின் உள்ளக் கிடக்கையைப் புலப்படுத்தும் கவிகளே இவை.

எனவே இந்த ஆய்வின் சாரம் இதுதான். "உமறுவின் நூல் ஒரு பெருங்காப்பியம் என்பதில் துளியும் ஐயமில்லை. இக்காப்பியம் எழுதுமுன் நாயக வரலாற்றைப் பிள்ளைத்தமிழாகப் பாடவேண்டும் என்னும் எண்ணம் உமறுப்புலவருக்கு இருந்தது. எனவேதான் சீறுப்புராணம் என்னும் காப்பியத்தின் கடவுள் வாழ்த்துப் பகுதி காப்பிய மரபுகளைத் தழுவாது அமைந்தது."

இனி, இக்கடவுள் வாழ்த்துப் பகுதியிலமைந்த பாடல்களின் இலக்கியச் சுவையினைத் தொடாமல் இக்கட்டுரை நிறைவுறுது!

உமறுவின் கவிதை வளத்திற்கு இதோ இரண்டடிகள்.

"பிரசத் துளித் திவலை சிதறிக் கிடக்குமிரு
பிணையற் புயத்து நயினர்

அரசுச்கு வைத்த நெறி வரிசைக்கு மிக்க துரை
அபுபக்கரைப் புகலுவாம்"

"பிரசத் ............ புயத்து நயினர்" இதுபோன்ற நீண்ட பண்படைகள், பதினேழாம் நூற்றுண்டுத் தமிழின் சிறப்புக் கூறுகும்.

மற்றுமொரு பாடல், நான்காவது கலீபாவாக அரசு வீற்றிருந்த அசரத் அலீ அவர்களைப் பற்றியதாகும். அண்ணலாரின் மருகரும், அசன் உசனரின் தந்தையுமான அலீ அவர்கள் ஒரு மாவீரர். 'இருளெனும் குபிர் அறுக்க' இசுலாம் கண்ட களங்களில் முன்னின்றவர். அலீ அவர்கள் இசுலாத்தைத் தழுவியபின்னரே

ஏனையோர் துணிவாக வெளிப்படையாகத் தொழுகை நடத்தினர் என்றுகூடச் சொல்வர். இப்பெருமகனைப் பாடுமிடங்களிலெல்லாம் 'புலி' என்று அடைமொழியை மறவாது பெய்கிறார் கவிஞர் உமறு.

அவரை வாழ்த்திப்பாடும் பாடலின் பொருளும், சொல்லும் - ஏன் ஓசை நயமும் கூட - அவ்வீரத்தைப் புலப்படுத்தும் வண்ணமே அமைந்துள்ளன.

படுகிடு கிடென நாக முடிநெறு நெறென வாரி
பொருதிரை அளறு அதாகவே

வடவரை அசைய, வான முகடுடை பட, அருத
மழைமுகில் சிதறி ஓடவே

அடையலர் கொடிகள் கோடி இடிபடு படல தூளி
அலரியின் உடலில் மூழ்கவே

நடமிடு கடினவாசி மிசை வரு சமர சூர
நரர் புலி அலியை ஓதுவாம்!

ஆம்! இசுலாம் தமிழுக்களித்த கொடைகளில் தலையாயது உமறுவின் 'சீறா'வே!

# எட்டையபுரம் கவிஞரும் எட்டாத கடவுளும் . . .

எஸ். எஸ். அப்துல்லா எம். ஏ.
தமிழ்த்துணைப் பேராசிரியர்
ஹாஜி கருத்த ராவுத்தர் ஹௌதியா கல்லூரி,
உத்தமபாளையம்.

மூட்டாச் சிறப்பின் எட்டையபுரத்தில் பிறந்த, இறவாப் புகழ் பெற்ற இருபெரும் புலவருள் முதல்வர் உமறுப்புலவர். பின்னவர் பாரதியார். உமறு தமிழரின் தன்மானங் காத்து மன்னரிடம் சன்மானம் பெற்றவர். வடமொழிப் புலவன் வாலைவாரிதியை முடமொழிப் புலவனாக்கி வாகை சூடியவர். தாய்மொழி தமிழிலும், தந்தை மொழி அரபியிலும் புலமையும் வளமையும் கொண்டவர். முத்தமிழ்த் துறையில் முறை போகிய வித்தகர்.

உமறுப்புலவர் பாடிய நூல்களுள் சிறப்பும் சுவையும் மலிந்தது, சீறாப்புராணம். அரபுநாட்டுக் கலையாறும் தமிழ்நாட்டுக் கலையாறும் ஒன்று கலக்கும் கலைக்கடல், சீறாப்பனுவல். முன்னைக் காப்பியங்களின் நல்ல நல்ல கூறுகளை உமறு ஏற்றுக்கொண்டார். அவற்றைத் தம் காவியத்தில் அமைத்துப் பொலிவு ஏற்றிக்கொண்டார். சமயப்பொறையில் இளங்கோவை, திருமணப் புனைவுகளில் மணநூல் பாடிய திருத்தக்கத் தேவரை, கற்பனை நாடமைப்பதில் காவிரிவள நாட்டுக் கவியரசர் கம்பரை, நாடு நகர வருணனைகளில் நாயனர் சேக்கிழாரை, உமறு பின்பற்றியதில் தவறு ஏதுமில்லை.

ஆனல் கடவுள் வாழ்த்தினைக் கம்பனைப்போல், வள்ளுவன் போல், இளங்கோவைப்போல், பாவடிவம் கொடுத்து உமறுப்புலவரும் பாடலாகுமா? கவியேறு உமறின் நோக்கம் காப்பியம் மட்டும்தானா? ஏகத்துவ அடிப்படையில் அமையும் ஒரு சமுதாய அமைப்பேயன்றோ. ஒளிபெற்ற இனத்தின் தூதராக வந்த முகம்மது நபி (ஸல்) அவர்களின் வளமிகு வரலாற்றை, ஒளி இழந்த தமிழினம் தழைக்கவன்றோ பாடுகிறார். உலகுக்கு ஒரு கடவுட் கொள்கையளித்த இனம், "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" எனும் திருமந்திரத்தை மறந்த போது அதைச் சிறந்த முறையில் நினைப்பூட்டவே பாடுகிறார்.

முஸ்லிம் புலவர்கள் படைப்பதால் மட்டும், ஏகத்துவக் கொள்கையில் முரணும் எவையும் இஸ்லாமிய இலக்கியங்கள் ஆகா. அவை முஸ்லிம்களுக்கு ஆகா இலக்கியங்கள்! மேலும் ஓர் இலக்கியத்தைத் திறனுயும்போது, பிறநூல்களோடு ஒப்புமை காண்டல் ஒன்று மட்டும் தேர்ந்த திறனய்வென்ரே, சிறந்த சுவைக்கும் நெறி என்ரே அறிஞர் ஒப்பார். காப்பியம் ஒவ்வொன்றும் தனிச்சிறப்புடன் விளங்கும். இஸ்லாமியக்காப்பியம் செந்தமிழ்ச் சீருவின் ''கடவுள் வாழ்த்தை''த் தித்திக்கும் திருக்குர்ஆன் ஒளியில் திறனய்தலும் துய்த்தலுமே பொருத்தமுடைத்து.

## கடவுள் வாழ்த்து :

கடவுள் வாழ்த்துப் பாடும் முஸ்லிம் கவிஞர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் சொற்களை உச்சரிக்க வேண்டும். சைவ, வைணவ, சமண, பௌத்த நூலாசிரியர்களைப் போலன்றி ஓரிறைவனையே வாழ்த்தி வணங்கிட வேண்டும். முஸ்லிம் புலவர்கள் காப்பிய மரபுக்காக மட்டும் கடவுள் வாழ்த்துக் கூறவில்லை. உலக வாழ்வில் பிறப்பிலிருந்து இறப்பு வரை எச்செயலைத் துவக்கினுலும், 'பிஸ்மி' (அதாவது அல்லாஹ்வின் திருப்பெயர்) சொல்லியே துவங்குவது முஸ்லிம் மரபு ஆகும்.

பொதுவாக முஸ்லிம் இலக்கியச் செல்வர்களனைவரும் கடவுள் வாழ்த்துப் பாடும்போது ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறையைப் பின்பற்றியே பாடினர் என்பர் ஆய்வாளர். உமறுப்புலவர், முதன்முதலில் அல்லாஹ்வையும், அடுத்து திரு நபி (ஸல்) அவர்களையும், பின்னர் முறையே மூதறிவுடைய 313 பேர்களையும், இறைத்தூதர்கள் 1,24,000 பேர்களையும், கலீபாக்கள் நால்வரையும், திருநபிப் பேரர் இருவரையும், சுவனவாசிகள் பதின்மரையும், இமாம்கள் நால்வரையும், முகியித்தின் அப்துல்காதிரையும், சதக்கத்துல்லா அப்பாவையும், இறுதியில் செந்தமிழ்ப் புலவர்களையும் வாழ்த்திப் பாடியுள்ளார். இவ்வாறு சீருச்செல்வர் கடவுள் வாழ்த்துப்பகுதியில் 20 பாடல்களை அமைத்துள்ளார். இவற்றுள் நான்கு பாடல்கள் கடவுளைக்குறிப்பன. உமறுப்புலவர் பாடல் ஒவ்வொன்றும் ஓர் ஊற்றுக்கண்! ஈண்டு ஓரிரு செய்யுட்களின் ஒட்பமும் திட்பமும், பொலிவும் வலிவும், செறிவும் விரிவும் சுவைத்து இன்புறலாம்.

கடவுள் எனும் சொல் 'உள்' விகுதி பெற்ற தொழிற்பெயர்; இது தொழிலாகு பெயராய் மனம், மொழி, மெய்களைக்கடந்து நிற்கும் பரம்பொருளுக்குக் காரணப் பெயராய் வழங்குகிறது என்பர். ஆனல் ''அல்லாஹ்'' எனும் அறபுச்சொல், இறைவனுக்கே வழங்கப்படும் இடுகுறிப்பெயராக விளங்குகிறது. அச்சொல்லின் முழு நிறைவான

பொருளை உலகில் எம்மொழியிலும் வடிக்கவியலவில்லை. அதற்கொப்பான ஓர் ஆக்கச் சொல்லை எம்மொழியிலும் செப்பவும் முடியவில்லை. 'அல்லாஹ்' எனும் சொல்லுக்குத் திணை, பால், எண், இடம் ஒன்றும் வகுப்பதற்கு வழி இல்லை. 'நபியே! நீங்கள் இறைவனை அல்லாஹ் என்றே அழையுங்கள்' (17:110) என்று கூறுகிறது திருக்குர்ஆன். இதனை அறியாதவரா உமறுப்புலவர்? விந்தைக்குரிய அரபுமொழியில் எத்தனையோ எழிற்சொற்களை எடுத்தாண்ட புலவர் பெருமான் 'அல்லாஹ் வாழ்த்து' என்று ஏன் பெயரிடவில்லை? அல்லாஹ் எனும் சொல்லைக் கடவுள் வாழ்த்துப் பாடல் எதிலும் ஏன் புகுத்திடவில்லை என்பதும் புதிராகத்தான் தோன்றும்! அல்லாஹ் எனும் சொல்லின் நிறைவும் செறிவும் நன்கு உணர்ந்தவரே உமறு. அச் சொல்லின் உயர்வுக்குச் சிறுமையோ, சிதைவோ உண்டாக்க விரும்பாமலே அதனைத் தவிர்க்கிறார். காரணப்பெயரைத் தலைப்பிட்டால்தானே 'வளர்காவல் முதல்வன்' என்றும் "பெருந்தலம் புரந்த கருத்தன்" என்றும் கடவுளைப் போற்றிப் புகழ முடியும். அல்லாஹ் எனும் சொல்லுக்கு எக்காரணங்களையும் கற்பித்துப் புகழமுடியாதன்றோ! எனவே 'கடவுள்' எனும் சொல்லையே வைத்துக்கொண்டார் எனத் துணியலாம்.

கருவிலே திருவுடைக் கவிஞரான உமறு, 'திரு'விலே கருவமைத்துக் கடவுள் வாழ்த்தைத் தொடங்குவதும் அழகாக உள்ளது. தமிழ்ப் பெரும்புலவர் 'உலகம்' எனும் மங்கலச் சொல்லைக் கொண்டு நூலைத் திறப்பதுண்டு. உலகம் எனும் சொல்லைப் போலவே 'திரு' என்பதும் மங்கலச் சொல்லாகும். 'அல்லாஹ்வின்' திருப்பெயரால் தானே தொடங்குகிறார்கள் முஸ்லிம்கள். திரு எனும் சொல்லை எடுத்தாளாத புலவரே இல்லை எனலாம். தக்காரனைவரையும், பெருமைக்குரிய அனைத்தையும் 'திரு' அடை கொடுக்காமல் அழைப்பதுண்டோ? திருக்குர்ஆன், திருக்குறள், திருமந்திரம், திருவாசகம், திருமொழி எனும் பெயர்களும், திருநபி, திருவள்ளுவர், திருமூலர், திருப்பேரர் எனும் பெயர்களும் இவ்வுண்மையை வலியுறுத்தும். தமிழ்த் திருவிற்கு, ஈடு எங்கும் இல்லை. எனவே, தமிழுக்கே உரிய அழகும் செறிவும் மிகுந்த மங்கலச் சொல்லைக் கொண்டு பாடத் தொடங்குகிறார் உமறு.

தமிழ் மொழியைச் செழிக்கச் செய்த தண்டமிழ்ப் பாவாணர் பலர். அவர்தம் திறமைகளை அலகிட்டுப்புகழும் சுவைஞர்கள், குறளுக்கு வள்ளுவன்; குறிஞ்சிக்குக் கபிலன்; பாலைக்குப்பெருந்தேவன்; நெய்தலுக்கு அம்மூவன்; இசைக்கு இளங்கோ; வசைபாடக் காளமேகம்; வெண்பாவிற் புகழேந்தி; விருத்தத்தில் கம்பன்; கோவை, உலா, அந்தாதிக்குக் கூத்தன்; கலம்பகத்திற்கிரட்டையர்; பரணிக்கோர் செயங்கொண்டார்; பாட்டுக்கொரு பாரதி என்று புகழ்வது

போல், சீருப்புலவரை "உவமைக்கு உமறுப்புலவர்" என்று போற்றிப் புகழ்வதுண்டு. உவமை கூறுவதில் வல்லுநரான உமறு, கடவுள் வாழ்த்தில் உவமையொன்றையும் அமைக்கவில்லையே. "அவனைப் (அல்லாஹ்) போன்ற உவமைகளை உண்டாக்காதீர்கள்" (குர்ஆன் 16:74) 'அவனுக்கு ஒப்பானது ஒன்றுமில்லை. எந்தப் பொருளுடனும் நீங்கள் இறைவனை உவமையாக்கிக் கொள்ளமுடியாது' (குர்ஆன் 42:11) எனும் திருக்குர்ஆனின் திருவாசகங்களை மனத்திற் கொண்டல்லவோ, சொற்செல்வர் உமறு, உவமைகளைத் தவிர்க்கிறார்! உவமைகளைத்தான் எவ்வாறு அமைப்பது? 'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை' என்பதன்றே இலக்கண நெறி. கடவுளை ஒப்புநோக்க அவனைவிட உயர்ந்த, சிறந்த ஒரு பொருள் வேண்டுமே. உண்டோ உலகில்? "பொருவு" எனும் ஒரே உவம உருபினையும் இறைவன் உவமிக்க முடியாதவன் என்பதை தெரிவிப்பதற்கன்றே புகுத்துகிறார்!

காப்புச் செய்யுளில் "வளர்காவல் முதலவனை" உடலால் பணிந்து, உள்ளத்தால் உள்ளி, வாயால் வாழ்த்திய புலவர் பெருமான் கடவுளின் அருளை எண்ணிப் பார்க்கிறார். 'ரஹ்ம்' எனும் மூலத்திலிருந்து பிறந்தவை 'ரஹீம், ரஹ்மான்' எனும் சொற்கள். 'அருளாளன் அன்புடையோன் அல்லாஹ்வின் திருப்பெயரால்' என்று தானே தொடங்குகிறோம். அண்டகோளங்களை உண்டாக்கலும், செம்மைப்படுத்தி அழகுப் படுத்தலும் இறைவனுடைய அருளன்புப் பண்பின் விளைவே என்பதை உணருகிறார் உமறு. ரஹ்மத்தின் குறிக்கோள் அழகுபடுத்தலேயாம். ஒழுங்கான பரிமாண நிலையிலிருந்தாலே - அதாவது பொருத்தமும் சமநிலையும் சேர்ந்தாலே - அழகுண்டாகும். "அவன் படைத்த ஒவ்வொரு பொருளையும் (அதன் கோலத்தையும்) மிக்க அழகாகவும், செம்மையாகவும் அமைத்தான்" (குர்ஆன் 32:6, 7) "படைப்போருள் அவனே மேலான அழகுடனும் செம்மையுடனும் படைப்பவன்" (குர்ஆன் 23:14) நமது உடலையும் உருவத்தையும் அழகுடன் அமைத்ததைப் போல், நம் அகத்தையும் அழகுடன் அலங்கரித்துள்ளான் இறைவன். எனவே கடவுள் அழகில் ஈடுபாடு கொண்டவன் என்றுணருகிறார். பிறர் திருவிலே கடவுளைக் கண்டார்கள். ஆனால் உமறுப்புலவரோ "திருவினும் திருவாய்" எனும் தொடரால் கடவுளின் அழகுபடுத்தும் ஆற்றலையே, -திருவருளையே கண்டு வியக்கின்றார். இங்கே அழகே கடவுள் என்பதில்லை. கடவுள் இத்தகைய பண்புகளையும் கடந்தவன்.

அடுத்து இறைவனுடைய அழகான படைப்புக்களை ஆராயும் போது அப்பொருள்களின் அழகமைப்பில் மறைவானதொரு தூண்டுதல், வழிகாட்டும் உள்ளுணர்வு, ஒரு இறை வெளிப்பாடு இருப்பதை அறிகின்றோம். இது இறைவனின் உளதாம் தன்மையை- இறைவன் இருக்கின்றான் எனும் உண்மையை - வலியுறுத்துகிறது. "மேலும்

என்னுடைய அருட்கொடை ஒவ்வொரு பொருளையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது.'' (குர்ஆன் 7:15) எனும் உண்மையினையே ''பொருளினும் பொருளாய்'' எனும் தொடர் எடுத்துக்காட்டுகிறது.

மனிதர் தேடும் கல்வி என்பது வேறு. அறிவு என்பது வேறு. கல்வியின் நோக்கம் அறிவு வளர்ச்சியே. இத்தகைய அறிவுத் தெளிவினைத் தருவோன் இறைவனே. 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' எனும் பழமொழி இதனையே உணர்த்துகிறது. உம்மி நபி (ஸல்) ஓதியது எவ்வாறு? ''இறைவனின் திருப்பெயரால் ஓதுவீராக'' என்பதன்றோ வானவர் ஜிப்ரீல் கொண்டுவந்த அருள்வாக்கு. மேலும் அறிவு மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறது. அறிவுதான் கடவுள் என்று சொல்வது சரியா? இஸ்லாமியக் கடவுள் இந்தவகைக் கட்டுக்கோப்புக்குள் அடங்காதவன். ''உங்கள் சிந்தனை மிக அற்பமானதாயிருக்கிறது.'' (குர் ஆன் 7:3) மனிதனுடைய அற்ப அறிவைக் கொண்டு இறைவனைப் பூரணமாக உணர்ந்து கொள்ளமுடியாது எனும் உண்மையைப் புரிந்து கொள்வதையே ''தெளிவினும் தெளிவதாய்'' எனும் தொடர் தெளிய வைக்கிறது.

உமறுப்புலவர் பரிமள வாணிகர் குலத்திலே பிறந்தவர். பரிமளத்தின் நினைவு வராமல் இருக்குமா? நறுமணத்தை விரும்பாதவரும் நானிலத்திலுண்டோ? வகை வகையான வாசனைப் பொருள்களின் நிலையும் விலையும் அறிந்த உமறுப்புலவர், அவற்றுக்கு நறுமணம் அளிப்பவனும் இறைவனே என்பதை உணருகிறார். எல்லாவகை மான்களும் சாணத்தையே இடுகின்றன. ஒருவகை மான் உடலில் மட்டும் கஸ்தூரி பிறக்கிறது என்றால், இது இறைவனின் அருட்கொடையின்றி வேறு என்ன? இதனையே ''மருவினும் மருவாய்'' என்பதன் மூலம் உணரவைக்கிறார்.

பிளக்க முடியாத, பிரிக்கப்பட முடியாத, நுண்ணிய (பொருளின்) துகளே ''அணு'' என்றனர் விஞ்ஞானிகள். ஆனால் உமறுப்புலவர் ''அணுவினுக்கு அணு''வைக் காட்டுகிறார். கற்பனையும் ஒரு வகை விஞ்ஞானம்தான் போலும். அணுவினுக்கணுவில் (Electron, Proton, Neutron) உள்ள ஆற்றலைக்கண்டு இன்று வியனுலகு வியக்கிறது. விஞ்ஞானிகள் அதனைப் பயன்படுத்தி புதிய விந்தைகளைச் செய்து காட்டுகிறார்கள். இத்தகைய அளப்பரும் உயிராற்றலை ''அணுவிலே'' புகுத்தி வைத்தவன் யார்? இறைவன் அன்றோ! இதனையே அணுவிலும் உயிராற்றல் அமைத்தவனே எனும் பொருளில் ''அணுவினுக்கு அணுவாய்'' என்று பாடுகிறார்.

அண்டங்களில் காணப்படும் கதிர், மதி, உடுக்குலம் ஆகிய எண்ணற்ற ஒளிக்கோளங்களின் சுடரனைத்தையும், இன்னும் மானிடக் கண்ணிற்கும் அறிவுக்கும் புலப்படாது விண்ணில் விரிகதிர் பரப்பி நிற்கும் கணக்கற்ற ஒளிக்கோளங்களின் சுடரனைத்தையும் ஒன்று கூட்டி ஒப்பு நோக்கினாலும், ஈடாகாத அருட்பெரும் சோதியை— தோற்ற அழகிற்கெல்லாம் விஞ்சிய சுடரழகினைக்கொண்ட இறைவனை- "மதித்திடாப் பேரொளி அனைத்தும் பொருவினும் பொருவா வடி-வினும் வடிவாய்" என்று சொல்லில் வடித்துக் காட்டுகிறார்.

நீர், நெருப்பு, மண், விண், காற்று என்னும் மூலங்களால் ஆகிய தலமனைத்திலும் தங்கியுள்ள எல்லா உயிர்களின் கருவினுக்கும் பிறப்பினை அளிப்பவன் கடவுள் என்பதைக் "கருவினும் கருவாய்" எனும் கவினுர் தொடரால் கூறுகிறார். அழகிய பண்புகளை ஆண்ட-வனிடத்தில் ஏற்றிக் கூறுமிடத்தில் எல்லாம் "வஹ்தஹுலா ஷரீ-கலஹு"- "இறைவன் ஒருவனே, இறைவனைப் போன்றது வேறொன்று மில்லை" எனும் "தவ்ஹீதை" — ஏகத்துவத்தை — மனத்திற் கொண்டே பாடுகிறார் என்பதை, அவர் மற்றோர் இடத்தில் பாடி யுள்ள "திருவோ நீ, செயலோ நீ, உன் வடிவம் என்கொல், எனத் தெருள்வனே" எனும் செய்யுளடிகள் தெளிவாகப் புலப்படுத்து கின்றன.

இவ்வாறு அகிலங்களை எல்லாம் அழகுறப் படைத்து, அவற்-றின் மூலம் தன் உண்மையை உய்த்துணருமாறு விளக்கி, மனித அறிவினால் தன்னை முழுநிறைவாக உணர முடியாதெனத் துலக்கி, மலர்களுக்கு மணமளிப்பவனும், அணுக்களை இயக்குவிப்பவனும், உயிர்களின் கருக்களுக்குப் பிறப்பினை உண்டாக்குபவனும், எல்லா உலகங்கள், உயிர்கள் அனைத்தையும் புரக்கின்ற பொறுப்பினைக் கொண்டவனும் கடவுள் ஒருவனே என்பதை எடுத்துக்காட்டி, அத் தகைய கடவுளை நெஞ்சில் வேரூன்றி நிலைத்திருக்குமாறு உறுதி (ஈமான்) கொள்ளுவதே—காப்பியம் படிக்கும் சுவைஞர்களின் உள்ளத்தில் இவ்வுண்மையைப் பொருத்துவதே — குறிக்கோளாகும் என்று உள்ளத்தூய்மையுடன் பாடி மகிழுகிறார் உமறுப்புலவர்! இதோ அந்தத் தேனினுமினிய தீந்தமிழ்ப் பாடல்!

" திருவினுந் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினுந் தெளிவதாய் சிறந்த

மருவினு மருவா யணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி அனைத்தும்

பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்தபல் லுயிரின்

கருவினுங் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே!"

உமறுப்புலவர் பாடிய ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு நூலாகும் தகுதியுடையது. செந்தமிழ்ச் சீருவின் கடவுள் வாழ்த்துப் பாடல்களில் ஊற்றெனப் பெருக்கெடுக்கும் சுவைகளும் சிந்தனையலைகளும் இதனை நிறுவுகின்றன.

§§

# THE OPENING SCENE

***வெ. மு. ஷாஜகான் கனி***, எம். ஏ.,

## 'சீறா நாடகம்...!'

இப்படிச் சீறாக்காப்பியத்தைச் சொல்லலாமோ என்னவோ, சீறாவின் தொடக்கம் ஒரு நல்ல நாடகத் தொடக்கமாகும்.

மேலைநாட்டுத் திறனாய்வாளர், ஒரு நல்ல நாடகத்தின் தொடக்கத்திற்கு இவை முக்கியம் என்பர்.

முதற்களத்திலே நாடக முக்கிய மாந்தர்கள் நேரடியாகவோ, உரையாடல் வழியாகவோ அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்; நாடகப் போக்கு இன்னது எனப் பார்வையாளர் ஊகிக்கும் அளவில் கதைக்கரு குறிப்பாகக் காட்டப்படலாம்; அடுத்து என்ன நிகழும் எனும் ஆவலைத் தூண்டும் 'சஸ்பென்ஸ்' உருவாதல் வெற்றியைத் தரும். இவை முதற்களத்தின் பொதுப்பண்புகள்.

சீறாப்புராணத்தில் கடவுள் வாழ்த்துப்பகுதிக்குப் பின்னர் காப்பியம் தொடங்கும் களம் நாட்டுப்படலம் ஆகும். இதிலிருந்து தான் நாம் கதையை எதிர்பார்க்கிறோம். எனவே, சீறா நாடகமானால், நாட்டுப் படலம் தான் முதல் களம்!

சீறா 'ஸீன்' மழையோடு திறக்கிறது! இந்த திறப்பிலேயே ஒரு குறிப்புமொழி உண்டு. அதைப் புரிந்துகொள்வதற்கு முன்னால் நாம் உமறின் தனித்தன்மைகள் பற்றித் தெரிந்துகொள்ளுதல் அவசியம்.

எதையும் சுருக்கமாய்ச் சொல்லி முடிக்கும் துடிப்புள்ளவர் உமறு. தம் காப்பியப் புராணத்தைக் காண்டங்களின் தலைப்பிலேயே உணர்த்தி விடுவார் அவர். மனிதன் உலகில் பிறக்கிறான்; பிறந்தவன் இறைவனின் அருளைச் சம்பாதித்துக்கொள்வது அவன் லட்சியம்; அதன் பின் அறவழியில் நின்று, இம்மை நீக்கி, இறையில்லம் நோக்கிப் புனிதப் பயணம் மேற்கொள்ள வேண்டும். இதுவே இம்மைப் பிறவிப் பயன் எனச் சொல்வார் போல விலாதத் (பிறப்பு)—நுபுவத் (தீர்க்க தரிசனம்)—ஹிஜுறாத் (புனிதப் பயணம்) என வளர்ச்சிப் பரிணாமத்தின் முக்கியப் புள்ளிகளைத் தொட்டுக்காட்டுவார்.

சீருவின் தொடக்கத்திலும் அவரது இந்தப் பண்பு ஒளிந்து பளிச்சிடுகிறது. முதல் களத்திலேயே கதையின் கரு இது எனச் சுருங்கச் சொல்லிவிடுகிறார். நாடகக் கருவைக் கையாளும்போது சுருக்கமாய் உணர்த்தும் கலை அவசியம் என்பார், அறிஞர் ஹட்ஸன். (An Introduction to the Study of Literature., P. 187.) இங்கே, உமறு தரும் கரு எது? சீரு நாடகத்தின் உச்சக்கட்டம் (climax) குறைஷிகள் எதிர்ப்பை இஸ்லாம் (முற்றிலும்) வென்ற நிலையாகும். இதற்கிடையில் இழைந்து கிடக்கும் கரு, உருக்குலைந்து கிடந்த உலகு உத்தமர் ஒருவரால் விமோச்சனம் பெறுவது என்பது.

இதனை உமறு முதல் காட்சியிலேயே கூறிவிடத் துடிக்கிறார். ஆனால், வெளிப்படையாகச் சொல்லிவிட்டால் நாடக விறுவிறுப்பு குன்றிவிடும். எனவே, அதற்குப் பிறிதோர் உத்தியைக் கையாளுகிறார். அதுவே சூட்சும உத்தி (symbolism).

மழையைக் காட்டி, அதன் திருவிளையாடல்கள் இன்னின்ன என்று வருணித்துச் சொல்லும் வளர்ப்பு முறையிலேயே கவிஞர் தாம் கூறவந்ததைக் குறிப்பாக உணர்த்தி விடுகிறார். இவ்வாறு, கவிஞர்கள் தம் உள்ளக்கிடக்கையை ஆற்றலுடன் வெளிப்படுத்த இப்படி ஏதாவதொரு சங்கேதக் காட்சியைக் கற்பித்துக் கொள்வார்கள் என்று பிரெஞ்சு திறனாய்வாளர் மார்செல் ரேமாண்ட் என்பாரும் கூறுகிறார். (Documents of Modern Art, Vol, 10, P. 18)

இங்கே உமறு காட்டும் 'மழை' எனும் குறியீடு, அகிலத்தைச் செழிக்க வந்த அண்ணலாரைக் குறித்தே நிற்கிறது! இதை நாம் உய்த்துணரச் சிரமப்படுவோமோ என்று நினைத்தே கவிஞர் எடுத்த எடுப்பிலேயே இப்படித் தொடங்குகிறார்.

> "தருங்கொடை நயினார் கீர்த்தி சகமெலாம் பரந்துவிஞ்சி
> நெருங்கியே விசும்பி லண்ட முகடுற நிறைந்தவேபோல்
> இருங்கண வெள்ளை மேகம் இரைபசுங் கடல்வீழ்ந்துண்டோர்
> கருங்கட லெழுந்த தென்னக் ககனிடை செறிந்து மீண்ட!!

இந்த உவமையில் குறிப்புக் காட்டியதோடு விட்டுவிடுகிறார் உமறு. பிறகு வரும் தொடர் நிகழ்ச்சிகளில் எல்லாம் நாமே ஊகித்து அறிந்துகொள்ள வேண்டும் என்பது அவர் எதிர்பார்ப்பு.

நாட்டுப்படலத்திலுள்ள 56 செய்யுட்களுள் 41 இந்த மழை பற்றியன; எஞ்சியவையும் இம் மழைவளத்தால் நாட்டுயிர்கள்

களிப்படைதல் பற்றியனவே. ஆக, மழையின் செயல்கள் மட்டுமே நாட்டுப்படல வருணனை என்றால், அது மரபு கருதிய வெற்று வருணனை யாக இருக்கமுடியாது; குறிப்புமொழி நிச்சயம் இருந்தாதல் வேண்டும்.

மழை பெய்கிறது! கதிர்செய் முத்தமும் மாணிக்க ராசியும் கலந்து உதிரும் வண்ணம் மழை பெய்கிறது! பெய்ததும் அது நிகழ்த்திய அற்புதம் ...... பகையை ஒழிக்கிறதாம் அது! மதயானைகளும் சிங்கக் கூட்டமும் தம் பாரம்பரியப் பகை மறந்து ஓரிடத்தில் தங்கினவாம்.

ஒருவருக்கொருவர் முரண்பட்டு மாக்களாய் வாழ்ந்து வரும் மக்க நகரத்தார் தம்முள் சமரச நிலையடையப் போகின்றனர் என்பதைத்தான் இதில் குறிப்பாய் வைக்கிறாரோ கவிஞர்?

மழை பெய்தது என்றாரே, அது தரையில் பெய்தது என்றாரா? இல்லை. வரைமீது பிறந்து அருவியாய் இறங்குகிறதாம். உயர்ந்த மலையில் பெய்த மழைவெள்ளம் மழையிலேயே கிடந்து மலைக்கு மட்டுமா பயன் தரும்? அருவியாய் விழுந்து, ஆறாய் ஓடி, ஏரி குளங்களில் தேங்கி, உலகளாவிய பயனைத் தரும். ''குறைஷி'' எனும் உயர்குலத்தில் பிறந்த கோமான் நபி அக்குலத்துக்கு மட்டுமா பயன் தருவார்? குவலயம் முழுமையுமே அவர் பயன் துய்க்கும்! இதுதான் இங்கே குறிப்புமொழி.

குறிஞ்சியில் பிறந்த மழையாறு முதலில் பாலையில் பாய்கிறதாம்! குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை-இதல்லவா தமிழ் வைப்பு முறை! புலவர் குறிஞ்சியை அடுத்துப் பாலையில் நதி பாய்வதாகக் கூறுவது ஏன்! '' முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து ..'' என்ற சிலம்புக் கொள்கையைச் சிந்தையில் கொண்டார் என்றால், அது அன்று; சமுதாயத்தில் எல்லா மக்களுமே உதவி பெறக்கூடியவர்கள் தான் என்றாலும். மிக வறுமையில் உழக்கும் பக்கிரிகளே முதலில் உதவப்படும் உரிமை பெற்றவர்கள். இது இஸ்லாமிய நீதி! இதனை உணர்த்தவே, குறிஞ்சி ஆறு பாலையில் பாய்ந்து வளம் கொழிக்கிறது.

இப்படியே, முல்லையில் தாவி, மருதத்தில் பரந்து, நெய்தலில் நெளிகிறது. இடைப்பட்ட நிலத்து மள்ளர்கள் அந்த வெள்ளத்தைக் குளங்களில் ஆங்காங்கே தேக்கிக் கொள்கிறார்கள். ஆறு கடலுக்குச் சென்று கலந்த பின்பும் அந்தத் தேக்கிய நீர் நாட்டுக்குப் பயன்படும். அண்ணலார் ஆண்டவனைச் சென்றடைந்தாலும் அவர்கள் இயக்கம் வற்றாவளம் தந்து நிலைக்கக் கூடியது அல்லவா?

இதோ, உலக ஏரி குளம் எல்லாம் பரந்து நிற்பது அந்த ஒரே மழை நீர்தான்! அது எப்படி இருக்கிறது என்றால், பல நூறு கோடி

வேறுபாடான தோற்றங்களில் இருக்கும் உடம்புகளில் எல்லாம், ஒரே உயிர் உறைந்திருப்பது போல் தோற்றுகிறது. (நாட்டுப்படலம் 17)

கம்பன், "உயிரெல்லாம் உறைவதோர் உடம்பும் ஆயினன்" என்றும், "வைய மன்னுயி ராகவும், மன்னுயிர் உய்யத் தாங்கும் உடலன்ன மன்னனுக்கு" என்றும் காப்பிய உயர் மாந்தரை வருணிப்பதை இங்கே ஒப்புநோக்கினேமென்றால், மழைநீர் காப்பியத் தலைவர்க்குச் சொல்லப்பட்ட குறிப்புமொழிதானு என்ற ஐயமும் இங்கு தெளிவு. மேலும், உயர்ந்த சான்றோரை நீர்க்குறியீட்டால் சுட்டுவதும் மரபே! "உண்ணும் சோறும் பருகுநீரும் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்" என்பது ஆழ்வார் பாசுரம்.

"உண்ணு நீரினும் உயிரினும் அவனையே உவப்பர்" என்று இராமனைக் கம்பர் உண்ணும் நீருக்கே உவமையாய்ச் சொல்லுவார். பேரறிவாளனைப் புகழும்போது வள்ளுவனும், "ஊருணி நீர் நிறைந் தற்றே" என்று தான் சொல்லுகிறான்.

இந்த "Symbolism" இத்துடன் நின்றுவிடவில்லை. தொடர்கிறது.

ஆற்றில் வெள்ளப் பெருக்கால் அழிவும் ஏற்பட்டிருக்க வேண்டுமே! இதோ அஞ்சிறைஅறுகால் வண்டுகள் உறையும் கமலமும் குமுதமும் அடியோடு அழிந்தன! இனி அவ்வண்டுகளுக்குப் போக்கிடம் ஆகாயம்தான். அவை ரீங்காரித்து அழுகின்றன! உழவர்களோ ஆனந்த பைரவி பாடுகிறார்கள்! இதன் உட்பொருள்...?

குறைஷிக் காபிர் வண்டுகளின் விக்கிரக மலர்கள் அழியப் போகின்றன! அந்தரத்தில் விடப்பட்ட நிலையில் அவர்கள் நிலத்துக்கு இறங்கித்தான் தீரவேண்டும். தீன் நெறியில் திறம் உணர்ந்தவர்கள் ஆனந்தித்து அதன் பயன் துய்க்கிறார்கள். கழனியில் விதைக்கிறார்களாம். நடவு, பயிர், கதிர், அறுவடை என அதை வளர்க்கிறார் கவிஞர். அவர்கள் விளைந்த வளத்தை அறுவடைசெய்யும் அரிவாள் "பிள்ளை வெண்பிறை" போல் இருக்கிறது. ஆம்! தீன் கொடிச் சின்னமான இளம்பிறையே இங்கு அரிவாள்! இப்படிக் கூறுகின்ற கவிஞரை வெற்று வருணனைக் காரர் என்று மட்டுமே ஒதுக்கிவிட முடியுமா? அவர் சூட்சமக்காரரே!

விளைந்த விளைச்சல் வண்டிகளில் ஏற்றப்பட்டு வீடு சேரும் வரையிலும் சொல்லிமுடிக்கும் தொடர் வரலாறு போன்ற வைப்பு முறையும், கவிஞர் உள்ளிட்ட கருத்தொன்று உண்டு என்பதையே

உணர்த்தும். மக்கா நகரின் முந்திய நிலையின் இழிவு கூற வேண்டிய இடத்தில்,

> "வனக்கிளி கறுத்த குலைக் களவலது
> மறுத்தொரு கொலைக்களவு இலையே"

என்று கொலை, களவு ஒழிந்ததாய் உயர்வு கூறி நாட்டுப் படலத்தை முடிக்கும் நிறைவும் நம்மைச் சிந்திக்க வைக்கிறது. இங்கே இறுதிப் பாடலில் கூறும் இலட்சிய வாழ்வை உருவாக்கவந்த கருணை மழையே, முகம்மது நபி அவர்கள்! மள்ளர்கள் நதிவெள்ளத்தைப் பயன்படுத்து-வது, மன்பதை இனம் தீன்மார்க்கத்தைப் பயன்படுத்துவதாகும். விளைச்சல், தீன்நெறியின் நல்விளைச்சல்! அவர்கள் அதை வண்டியில் ஏற்றி அரண்மனை அடைவது, உலக மக்கள் இம்மையில் நன்மைகளைச் சேகரித்து சொர்க்கத்தை அடைவதாகும். நதி கடலைச் சேர்வது நபிகளார் நாயகனைச் சேர்வதாகும். (இடையில், பொருந்தாத வருணனை ஒரு சில இருப்பது கவிமரபு எனக் கொள்க.)

சீறு ஒரு நுட்பமான நாடகம். கடலில் கருக்கொண்ட மழை மலையில் பிறந்தது முதல் அதன் பயனுய் விளைந்து மக்கள் துய்த்தது வரை நிகழும் நிகழ்ச்சிகள் முதல் காட்சியில் காட்டப்படுகின்றன. இக் களத்தில் காவியக்கரு குறிப்பாக உணர்த்தப்பட்டுவிடுகிறது. சீறுக் கதையே இங்கு உருவக வடிவில் சுருக்கமாய்ச் சொல்லி முடிக்கப் படுகிறது. நுணுகி அணுகுவோர் மட்டுமே அறிந்துகொள்ளும் அளவில் குறிப்பு மொழிகள் (Symbolic representations) அமைந்திருப்பதால் 'சஸ்பென்ஸ்' கெட்டுவிடவில்லை. எடுத்த எடுப்பிலேயே காவிய நாயகரும் உவமையாக அறிமுகப்படுத்தப்படுகிருர்.

மொத்தத்தில்,

சீறு ஒரு நாடகமோ இல்லையோ, நாட்டுப்படலம் ஒரு நல்ல "Opening Scene".

# சீறாவில் உமறின் சொல்லாட்சி

டாக்டர் தா. வே. வீராசாமி
எம். ஏ., பிஎச். டி.,

தமிழ்த்துறை
மதுரைப் பல்கலைக்கழகம்

மனிதன் புறவுலகில் அமைதி காணுதபோது அகவுலகில் அமைதி காண முயல்கிருன். பல்வேறு மதங்களைச் சார்ந்த பெரியோர்கள் பேராற்றலாக மாறி, மக்களின் உள்ளத்தில் அமைதியை நிலைநாட்டி இன்பம் பெறச் செய்தனர். போரிலே வெற்றி பெற்ற மன்னர்களும் மதத்தின் ஆற்றலை உணர்ந்து அதன்முன் மண்டியிட்டனர். தமிழகத்தில் ஆழ்வார் நாயன்மார் நெறிகளில் ஊறிய பக்தி இயக்கத்தின் மடியிலே வளர்ந்த தமிழுக்கு, சமய மெய்ப்பொருள் என்ற உரம், கருத்து வளம் ஊட்டியது.

முகம்மதியர்களும் கிருத்துவர்களும் தத்தம் சமய நெறியால் மக்களிடையே அமைதியையும், இன்பத்தையும் பரப்பப் பற்பல காவியங்கள் இயற்றினர். குறிப்பாக முகம்மதியர்களின் பெருமையைப் பறை சாற்றும் வண்ணம் உமறுப்புலவரின் சீறுப்புராணம் எழுந்தது. நபிகள்பெருமானின் வாழ்க்கை வரலாறு தமிழக மக்களின் அறிவுலகில் புதிய கொள்கைக்கு வழிகாட்டியது. அரபுப் பண்பாட்டின் கதிர்களைத் தமிழ் மண்ணில் பரப்பியது.

## தமிழ் — மாளிகையிலும் மண் குடிசையிலும் :

குறிப்பாக புலவரின் சொல்லாட்சி சீருப்புராணத்தின் வாயிலாக அவர் மேற்கொண்ட நெறிக்கு எங்ஙனம் பயன்பட்டது என்பதே நம் முன்னுள்ள கேள்வி. இன்றைய நெல்லை மாவட்டத்து நாகலாபுரத்தில் புலவரின் பெற்ருேர் வாழ்ந்தனர். பின்னர் எட்டையபுர மன்னரின் விருப்பிற்கிணங்க அங்கும் சென்று வாழ்ந்தமையால், புலவருக்கு நாகலாபுரத்து மக்கள் வாழ்வில் தவழ்ந்த தமிழின் எளிமையையும், எட்டையபுர மன்னரின் சூழலில் வளர்ந்த தமிழின் வளமையையும் உணர வாய்ப்புக் கிடைத்தது. அரண்மனைப் புலவர் கடிகை முத்துப் புலவரிடம் முறையாகப் பெற்ற தமிழறிவு புலவரின் சொல்லுக்கு, மரபின் நெறியைச் சுட்டிக் காட்டியது. தம் ஆசிரியருக்காக வாலை வாருதி என்ற புலவருடன் வாதிட்டு அவர் செருக்கை

அடக்கியபோது, புலவரின் கல்விவெற்றி புலப்படுகிறது. அதன் விளைவாக உமறு எட்டையபுர அரண்மனையிலே அவைப்புலவராகவே, அவர் கல்வியும், அறிவும் மன்னர்கள், அவைப்புலவர்கள் ஆகியோர்க்கு ஏற்ப வளரவே "அறிவின் செறிவு நெறி" வளர்ந்தது. அந்நிலையில் அவர் சொற்களில் கலையின் செறிவும், கல்வியின் மிடுக்கும், புலமையின் உயர்வும் தவழ்ந்தன.

## புதிய செல்வம்

உமறுப்புலவரின் சொல்லாட்சியில், நபிகள் நாயகத்தின் வரலாற்றைக் காண்கிறோம். எளிய மக்கள் அப்புதிய நெறியினை உணர்ந்து அதன் வழி நடக்கவேண்டும் என்பதே புலவரின் பெரு நோக்கம். அதற்கேற்ப பழைய மரபுக் கல்வியையும், புதிய அரபுச் செல்வத்தையும் கலந்து சீறாவை இயற்றித் தந்துள்ளார். அவர் படைத்த இலக்கியம் தமிழ்ச்சொல்லால் கட்டப் பெற்றதுதான். அவற்றையெல்லாம் 'செங்கல்'லாகத்தான் அவர் கற்றார். ஆயினும் அவரது புலமை அவற்றைப் 'பளிங்குக் கற்க'ளாக மாற்றியது அம் மாற்றம் சொல்லின் வடிவில் இல்லை. அதனைப் பயன்படுத்திய பாங்கினில் அவ்வழகை உணரலாம். ஒளிவீசும் வைரம் பொன்னின் நடுவே அமைந்தால் அதன் ஒளி மேலும் பெருகுவதைப்போல, சொல் தானமைந்த சூழலுக்கேற்பப் பொருளில் புத்தொளி பாய்ச்சுகிறது. சீறா, இதற்குத் தக்க சான்றாகும்.

## தொடக்கத்தில்

சீறாப்புராணத்தில் அமைந்துள்ள காண்டங்கள் மூன்று. அவற்றிலமைந்த 92 படலங்களில் மொத்தம் 5027 திருவிருத்தங்கள், சிந்தாமணி, கம்ப ராமாயணம், பெரிய புராணம் சென்ற நெறியில்தான் புற அமைப்புப் பூண்டுள்ளது. 'சீறத்' என்ற அரபுச்சொல் 'வரலாறு' என்ற பொருள் கொண்டது. தமிழின் மரபுக்கேற்ப அச்சொல்லைச் "சீறா" எனப் புலவர் வழங்கியுள்ளார். இப்புராணத்தின் முதற் காண்டமாக விளங்குவது விலாதத்துக் காண்டம் ஆகும். 'விலாதத்' என்ற அரபுச் சொல்லுக்குப் 'பிறப்பு' என்பது பொருள். நபிகள் நாயகத்தின் திருப்பிறப்பைக் குறிக்கும் வகையில் அச்சொல்லைக் காண்கிறோம். இரண்டாம் காண்டமாக விளங்குவது நுபுவ்வத்துக் காண்டம் ஆகும். 'நுபுவ்வத்தின்' பொருள் 'தீர்க்கதரிசனம்' என்பதாம். இறுதியாகவுள்ள காண்டம் ஹிஜ்றத்துக் காண்டம் ஆகும். 'ஹிஜ்றா' என்ற அரபுச்சொல், மக்காவிலிருந்து மதினாவுக்கு நபிகள் நாயகம் இடம் பெயர்ந்த வரலாற்றைப் புலப்படுத்தும். இங்ஙனம் இம்மூன்று காண்டங்களுக்கும், நூலுக்கும் தலைப்பாக அரபுச் சொற்களையே அமைத்ததற்கு அடிப்படைக் காரணம், அரபு நாட்டில் பிறந்த

பெருமானின் வரலாற்றைக் கூறும்போது, அராபியச் சூழலை அம்மண்ணில் வழங்கிய சொற்களையும் வரலாற்றுப் பொருண்மையையும் கலந்து உருவாக்க வேண்டும் என்ற எண்ணமேயாகும்.

## அரபும் தமிழும்

அரபுச் சொற்களைக் கையாள்வதால் படித்த பெருமக்கட்கே விளக்கமும் பொருளின் பெருமையும் புலப்படும். ஆனால் தொடக்கத்தில் அப்புதுச் சொற்கள் படிப்போரிடையே மயக்கத்தை உண்டு பண்ணும். இதனை உணர்ந்த உமறுப்புலவர் சமயச் சார்பினை முதலில் மதித்து அதற்குரிய சொல்லைப் பயன்படுத்துகிறார். உடனே அதற்குத் தக்க தமிழ்ச் சொல்லை அடுத்துப் பயன்படுத்தும்போது, அரபுச் சொல்லின் பொருளும் அமைதியும் எளிதில் விளங்குகின்றன. சான்றாக 'சுஜூது' என்ற சொல்லைப் புலவர் பயன்படுத்துவதைக் காண்போம்.

" ஆதத்துக்கே
இடமுறும் அமரர் யாரும் சுஜூது செய்திடுக என்றான் "
(1—4—14) *

இச்சொல்லை ஆண்ட புலவர், இச்சொல்லின் பொருளைத் தமிழ் மக்கள் நன்கு விளங்கிக்கொள்ள அடுத்த பாட்டிலேயே மிகத் தெளிவாகக் காட்டுகின்றார்.

" தூயவன் உரைப்பக்கேட்ட சொல்மரு தெழுந்து தங்கள்
காயமும் மனமும் வாக்கும் கனிந்தொன்றாய் மகிழ்வு பொங்கி
நேயமுற் றிடப் பணிந்து நிரைநிரை கைகளேந்தி
வாயினிற் புகழ்ந்துபோற்றி மலக்குகள் வணக்கம் செய்தார்"
(1—4—15)

இதனால் சுஜூது என்ற சொல்லுக்கு 'வணக்கம்' என்ற பொருளும் அது செய்யும் வகையும் நம் மனத்தில் படிகின்றன. வரன் முறையாகப் பணிதலும் 'கைகளேந்தலும்' வாயிற் புகழ்த'லும் வணக்கம் செய்யும் முறைகள் எனக் காட்டுகின்றார். இதனிடையே 'மலக்கு'கள் என்ற சொல்லையும் இடையே பெய்துள்ளார். தெரிந்த சொற்களிடையே தெரியாத இச்சொல்லையும் கலக்கிறார். உடனே அதனையும் விளக்கும் வண்ணம் அடுத்த அடியிலேயே,

"வானவர் செய்யும் அந்த வணக்கத்தின் முறை" (1—4—16) எனக் கூறுவார். இதில் மலக்குகள் என்ற சொல்லுக்கு வானவர் என்ற தமிழ்ப் பொருளையும், முன்னரே கண்ட சுஜூது என்ற சொல்லுக்குரிய வணக்கம் என்ற பொருளுடைய சொல்லையும்

---

* முதல் எண் காண்டத்தையும், இரண்டாம் எண் படலத்தையும், மூன்றாம் எண் பாடலையும் குறிக்கும்.

அடுத்தடுத்து அமைத்துப் பொருள்விளக்கம் தருகின்றார். இங்ஙனம் புதிய அரபுச்சொற்களைப் பெய்வதால் இசுலாமிய மணத்தைப் பரப்புவதுடன் உடனுக்குடன் அதற்குரிய தமிழ்ச் சொற்களையும் அமைத்துத் தமிழ் மணத்தையும் கலந்து, தெளிவுபெற வழிகாட்டுகிறார்.

புதுமையைப் புகுத்துவது மட்டும் உமறுப் புலவரின் நெறியாக இருந்திருப்பின் தமிழ்ச் சொல்லைக் காட்டாமலேயே சென்றிருத்தல் கூடும். ஆனால் பழமை நலனும் வாழவேண்டும், புதிய பண்பாட்டுச் செல்வமும் சேர வேண்டும் என்ற புதிய கண்ணோட்டத்தில் நூல் படைத்ததால் அரபியின் புதுமைச் சொல்லும் அதற்குரிய தமிழின் பழமைச் சொல்லும் அடுத்தடுத்தமையக் காட்டித் தம் சொல்லாட்சி நலனை நிலை நாட்டுகிறார். விளைவாக புதிய காற்றும் வீசுகிறது; பழமை நீரும் பாய்கிறது.

## தமிழ் மரபு

அரபு நாட்டைப்பற்றிப் பாடினாலும் அந்நிலத்தையும் தமிழ் நிலப் பின்னணியில் உமறுப்புலவர் பார்க்கத் தவறவில்லை என்பதை நாட்டுப்படலமும், நகரப்படலமும் காட்டும். ஆயின், பாலைவனம் பற்றிப்பாடும் போது, புலவர் தமிழ்ப் பரணிஇலக்கிய மரபையே முற்றிலும் பின்பற்றுகிறார். பாலைவனக் கடவுளாகக் காளியையும் அவள் படைகளாகப் பேய்களையும் பாடுவது பழைய பாலை மரபு. இதை மறவாத-கடிகைமுத்துப்புலவரின் மாணவராம்—உமறுப்புலவர் சுரத்திற் புனலமைத்த படலத்தைப் பாடும்போது,

மூவிலை நெடுவேற் காளிவீற் றிருப்ப
முறைமுறை நெட்டுடற் கரும்பேய்

ஏவல்செய்து உறைவது அலது மானிடர்கால்
இடுவதற்கு அரிது. ......... (1-11-18) எனப்பாடுகிறார்.

'காளியின் வேல் மூவிலை உடையது' 'பேயுடல் நீண்டது' 'கருநிறம் கொண்டது' என்று பழைய மரபை மறவாது, சிறு சொற்களில் சித்திரமாக்குகிறார். சொற்களை ஆளும்போது எப்பொருளுக்கு ஆள்கிறோம் என்ற நனவு நிலையோடு ஆளும் ஆற்றல் பெற்றிருப்பதால்தான், உமறு மற்ற மதத்தினரும் ஏற்கும் வகையில் தம் காப்பியத்தை அழகுறப் படைக்கிறார்.

## ஒலியின் வடிவம்

பாலைவனத்தை எண்ணும்போதே மனம் வெம்மையால் துடி துடிக்கும். வானில் பறக்கும் பருந்தும் கரிந்த மரமும் உடையதாய், குடிக்க ஒரு சொட்டு நீரும் கிடைக்காத பாலையை எண்ணும் மனத்திலே வன்மை உணர்வைத் தவிர மற்றெவ்வுணர்வு தலை எடுத்தாலும் கருகிவிடும். அதற்கேற்ப உமறுப்புலவர் பாலையின் கொடுமையைப் பாட எண்ணியதும், அவர் சொற்களிலே இடையொலிகள் பருந்து போல் பறக்கின்றன. மெல்லொலிகள் பொரிந்து கருகுகின்றன. மாறாக, வல்லொலிகளே பாலையின் வெம்மையெனப் பரந்து விளங்கு கின்றன.

பருந்திருந் தெழுந்து பறந்தசின் னிழலும்
பற்றறாக் கானலிற் றேய்ந்த
கரிந்திலை தோன்றா தொவ்வொரு விருக்கங்
கணங்களின் குலமெனத் தோன்று
மெரிந்தெரி மேய்ந்து கரிந்துவிண் ணிடங்காந்
திடுந்தரை யொருதுளி நீரு
மருந்திடக் கிடையா தலகை கள்திந்தங்
காள்வழக் கற்றவெங் கானம் (1-11-5)

முதலடியில் வல்லெழுத்து மிகுந்துள்ளன. இடையடிகளில் அவற்றை விடக் குறைந்து, பின்னர் ஈற்றடியில் அவை மிகுகின்றன. இவ்வலை வீச்சின் ஏற்றமும் தாழ்வும் மற்ற மெல்லொலியையும் இடை ஒலியை யும்விட எங்கும், தாழ்ந்து நிற்கவில்லை. எனவே உயர் மட்டத்தில் எழுந்த வல்லொலி, பாட்டின் இறுதியில் மறுபடியும் அதன் உச்சத் தையே எட்டுகிறது. அதனால் பாலையின் கொடுமைக்கேற்ப, வன்மை ஒலிகள் பாடலில் பரவுமாறு உமறுப்புலவர் சொற்களை ஆள்வதை எண்ணி மகிழ்கிறோம்.

## எளிமையின் வலிமை

ஒரு சொல்லை நாம் அன்றாடம் வழக்கில் வழங்கும்போது அதன் சிறப்பு நமக்குப் புலப்படுவதில்லை. அச்சொல்லை, கவிஞரின் கையில் கிடைக்கும் 'புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கும்' மந்திரக்கோல், பொன்னென மிளிரச் செய்கின்றது. 'நட' என்ற வினை வடிவம், மிகமிக எளிமையான சொல்தான். ஆனால் அதுவே மீண்டும் மீண்டும் கவிஞன் வாயில் பயன்படும் போது,

பட்டை தீட்டப்பெற்ற வைரம் போல் நொடிக்கு நொடி புத்தொளி பெற்று நம் கருத்தைக் கவர்கின்றது. நபிகள் நாயகம் பிறந்து வளர்ந்து நடைபயிலத் தொடங்குகின்ருர். அவர் மட்டுமா நடக்கத் தொடங்கினுர்? அவருடன் நடந்தவற்றைப் புலவர் அணி திரட்டிக் காட்டுகின்ருர். உலகம் முழுவதும் இசுலாம் மார்க்கம் (தீன்) வளரத் தொடங்குகிறது. உலகிலே நெறியல்லாநெறி மாறி, நீதிமுறை தலையெடுக்கிறது. பல துறைகளிலும் அறம் தளிர்க்கின்றது. துன்பம் மாறி இன்பம் எழுகின்றது. கொடுங்கோல் மடிய செங்கோலாட்சி நடைபெறுகின்றது. மக்கள்குலம் முறையோடு எழுகின்றது. ஆம், மானில மக்கள் கூட்டமே நபியவர்களின் சொற்படி நடக்கின்றது. இவற்றையெல்லாம் எண்ணி எண்ணி மகிழ்ந்த புலவர் ஒரே ஒரு சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கையாள்கிருர். இனிப் பாட்டைப் பார்ப்போம்.

எந்நிலை மனைத்துந் தீனெறி நடப்ப வியல் பெறு மனுமுறை நடப்பத்
துன்னிய வறத்தின் றுறைவழி நடப்பத் துன்பமற்றின்பமே நடப்பப்
பன்னருஞ் செங்கோ லுலகலா நடப்பப் பாரினிற்குலமுறை நடப்ப
மன்னிய ரெவருஞ் சொற்படி நடப்ப முகமதுநபி நடந்தனரே
(1—6—86)

எந்தத் தூதுவரின் மொழிப்படி இவ்வுலகம் நடக்க வேண்டுமெனக் கவிஞர் கருதுகின்ருரோ, அவ்வெண்ணம் வெளிப்படும் வண்ணம் அச்சொல்லே, நான்கு வரிகளில் எட்டு முறை வெளிப்பட்டு ஒளிர்கிறது.

## சொல்லோவியம்

பாலை வழியில் ஓரோடையும், அதன் பக்கம் சொல்லற்கரிய காடும் இருந்தன. அங்கு வாழ்ந்த புலியின் வாயிற்பட்டிறந்த ஒட்டகங்களுக்குக் கணக்கில்லை. எனவே அப்புலியைப் பற்றி எண்ணிய உடனேயே, புலியின் தோற்றம் சொல்லோவியமாகப் புலவர் நாவில் எழுகிறது.

நீண்ட வால்நிலம் புடைத்திடக் கிடந்துட னிமிர்ந்து
கீண்ட கால்மடித் திருவிழி கனல்கள் கொப்பளிப்பப்
பூண்ட வெள்ளெயி றிலங்கிட வாய்புலால் கமழ
வீண்டு முள்செறி வனத்திடை சினத்தொடு மிருக்கும்
(1—14—3)

இப்பாடலில் புலியின் வால் நிலத்தைப் புடைப்பதில் தொடங்கி, கால் மடித்து, உடல் நிமிர்ந்து எழுந்து, கண்களில் கோபத் தீயைக் கக்கித்

தன் வாயைத் திறக்கும்போது அதன் வெண் பற்கள் ஒளி வீசுவது வரை செயல்களை ஒன்றன் பின் ஒன்ருக முறைப்படி அடுக்கிக் காட்டு கிருர், புலவர். காப்பியத் தலைமக்களுக்குத் தான் அடிமுதல் முடி வரை வருணனை என்பதில்லை. புலிக்குக்கூட 'நீண்ட' வாலில் தொடங்கி அதன் 'வெண்' பல்லில் வருணனை முடிகிறது. மேலும் காட்சிப் புலனைக் காட்டும் புலவரின் சொற்கள், அதன் வாயில் வீசிய புலால் நாற்றத்தை நம் மூக்கிற்கு விருந்தாக்குவதுடன், அதன் மனத்தில் எழுகின்ற கோபத்தையும் நம்முள்ளம் உணருமாறு காட்டுகின்றன. இங்ஙனம் ஒரே பாடலில் புலியின் புறத்தோற்றம், புலனுக்குப் புலப்படும் நாற்றம், மனவெளிக்கு மட்டுமே காணும் உணர்ச்சி வெளிப்பாடு ஆகியவற்றைக் கண், மூக்கு, மனம் எனப் படி முறை வளர்ச்சியில் காட்டிச் செல்வதை எண்ணி வியக்கின்ருேம். கட்புலன் கொள்ளுமாறு புடைத்தல், கிடத்தல், நிமிர்தல், மடித்தல், கொப்பளித்தல், இலங்கல் போன்ற பலவகைத் தொழில்களாக எழுகின்றன. மூக்கிற்கேற்பக் கமழ்தலும், மனத்திற்கேற்பச் சினத்தொடு இருத்தலும் ஆகியவை தக்க சொல்லின் வடிவந் தாங்குகின்றன.

## பொருள்பொதி தொடர்

முகம்மது நபியின் வரலாற்றைப் பாடவந்த உமறுப்புலவர், சொல்லின் துணைகொண்டு தன் காப்பியத் தலைமகனின் பெருமையை முறையாகப் பாடுகிருர். சமய மரபிற்கேற்ப முகம்மது வள்ளலைத் திருநபி (1—5—1) என அழைப்பார். உலகுக்கெல்லாம் காரணமாக விளங்கிய அப்பெருமான், மக்கள் உய்வதற்கு நல்வேதந்தந்த அருளையும் புலப்படுத்தும் வகையில் 'கலை மறை முகம்மது என்னும் காரணம்' (1—4—12) என்பார். 'எல்லா விளக்கும் விளக்கல்ல' என்ற வள்ளுவர் நெறிக்கு ஒப்ப 'மாநிலந் தனக்கோர் மணி விளக்கு' (1—5—92) எனப் புகழ்வார். அவ்விளக்காக நின்று உலகின் பாவ இருளை நீக்குதற்கு அவர் வேத ஒளி வீசி விளக்கம் செய்வதை, 'மலர்தலை உலகிற் சுருதியை விளக்கும் முகம்மது நபி' (1—5—116) எனக் குறிப்பார்.

'பிறப்புக் காண்ட' த்திலிருந்து 'தீர்க்க தரிசனம் கண்ட காண்ட' த்திற்குச் சென்றதும், நபிகள் நாயகத்தை 'மாற்றலர்க்கு அரி' (2—2—31) எனக் காண்பார். உயிர்கள் தீநரகடையாமல் பொன்னுலகு புகுதற்குத் துணைபுரிய 'உயிரினுக்குயிராய் வந்த முகம்மது' (2—1—31) என ஓதுவார். இடம் பெயர்ந்து உலகமானிடத்துக்குயர்நிலை ஊட்டும் மூன்ரும் காண்டத்திலே 'மண்ணினுக்கழகு வாய்ந்த முகம்ம' தாகக் (3—8—84) காண்பார். அவ்வழகுத் திருவுருவம்' 'புதுமறை வளர்க்கும்' (3—3-48) நிலை கண்டு

மகிழ்ந்தார். இங்ஙனம் தாம் புகழும் நபிகளை எண்ணுந்தோறும் சொற்களின் பொருளுணர்ந்து, அவர் பெருமை புலப்படும் வகையில்–காலத்தின் வளர்ச்சிக்கேற்ப நபிகள் மாண்பை நாம் உணரும் வகையில், சொல்லை ஆள்கின்ற புலவரின் புலமை போற்றற்குரியது.

## சொல் விளக்கம்

சொல்லை ஆளும் திறம் படைத்த புலவர் பெருமான், முகம்மது நபி சொல் விளங்கும் பேற்றைக் கூறும்போது கேட்போர் மனம் சிலிர்க்கப் பாடுகின்றார். சொல்லென்றால் ஆரவாரமூட்டி அச்சுறுத்திக் காட்டு வெள்ளம்போல் பெருக்கெடுத்தோடுவதன்று; சொல்லின் பொருள் கேட்போர்க்கு விளங்க வேண்டும்; உயர்ந்த சொல்லாக இருத்தல் வேண்டும்; அதன்கண் அமைந்துள்ள புதுமைக் காரணம் புலப்பட வேண்டும்; நிறை, பொறை போன்ற பண்புகளை வளர்க்கவும், அதனால் பொன்றாப் புகழ் பெறவும் துணை செய்ய வேண்டும். இவ்–வளவும் பெறுதற்கு வழியின் நேர்மையைக் காட்டவும் பெற்ற குடியைப் போற்றவும் வேண்டும். 'இவையெல்லாம் நபிகள் நாயகத்–தின் சொல் விளங்க விளங்கிற்று', எனப் பாடுவார் உமறுப்புலவர்.

நிலமிசை ஹாஷீம் குலம் பெயர் விளங்க
நிகரில்லா நேர்வழி விளங்கக்
குலவிய நிறையும் பொறையும் விளங்கக்
கோதிலாப் பெரும் புகழ் விளங்க
உலகுயர் புதுமைக் காரணம் விளங்க
உயர்தரு வேதமும் விளங்க
மலர்தரு சோதி முகமதி விளங்க
முகம்மது சொல் விளங்கினரே. (1—6—87)

## முடிவுரை :

இங்ஙனம் தமிழிலக்கியத்தில் காப்பியநெறி தழைக்க, புதிய பண்பாட்டின் தூதுவராக உமறுப்புலவர் சீறாவை இயற்றினார். இலக்கிய வளத்தில் பல நற்காட்சிகளைப் புலவர் பெருமான் காட்டும் வகை, காப்பிய அழகைப் பெருக்க உதவியது. புதிய சமயத்தின் நறும் பொருள் கலக்கும் வண்ணம் அரபுச் சொற்களைக் கையாண்டு சமய நன்பொருள் கனியச் செய்தார். தமிழ் மரபுக்குரியவற்றையும் கையாளத் தவறவில்லை. எல்லா மக்களும் நபிகள் பெருமையை உணரும் வகையில், அன்றாடம் வாழ்வில் பயன்படுத்தும் எளிய சொற்களை ஏற்ற இடத்தில் பதித்து, எல்லையற்ற ஆற்றல் பெறும் வகையில் கையாண்டார். பல நிலையில் அமைந்த மக்கள் தத்தம்

நிலைக்கேற்பப் பேசும்போது, அவர்களின் மனநிலை வெளிப்படத் தகுந்த சொல்லும் தொடரும் அமையுமாறு வகைப்படுத்தியுள்ளார். பொருள் பொதிந்த தொடர்களின் பொருள் விளக்கம் நூலின் வளர்ச்சிக்கேற்ப வளருமாறு பயன்படுத்தியுள்ளார். இங்ஙனம் முகம்மது நபியின் வரலாற்றை உள்ளபடி உணர்ந்து போற்றவும், இசுலாம் நெறியை அறிந்து மகிழவும் துணை புரிவது உமறுப் புலவரின் சொல்லாட்சியேயாகும்.

# சீறாப்புராணத்தில் அரபுச் சொற்கள்

அ. முகம்மது சயீத், பி. ஏ., பி. எல்.
வழக்கறிஞர், தஞ்சை.

உலகின், எத்தனையோ மனிதப் புனிதர்களின் வாழ்க்கை வரலாறுகளை நாம் கண்டிருக்கிறோம். ஆனால் வரலாற்றுச் சான்றுகளோடு இறுதித் தூதராகிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு ஒன்றுதான், தீர்க்கதரிசிகளின் வரிசையிலே உயர்ந்து நிற்கிறது. அவர்களின் வாழ்க்கை முறையைக் காட்டிலும் வியக்கத் தக்க அளவுக்கு வரலாற்றிலே வேறொன்றும் இல்லை.

“ எழுநூறு மொழிகளிலே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கைச் சரிதை தயாரிக்கப்பட்டுள்ளது ” என்று அமெரிக்க பைபிள் கழகத்தின் அறிக்கை கூறுகிறது.

பெருமானார் அவர்களுடைய வாழ்க்கை பாடல்களாகவும், உரை நடையாகவும் இலக்கியவாணர்களால் எழுதப்பட்டுள்ளது. உலகத்தின் மூத்த மொழிகளில் ஒன்று ன தேனினும் இனிய தமிழ் மொழியில், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை வடித்துத் தரவேண்டும் என்ற பேரார்வம் கவிஞர் பெருமான் உமறுப்புலவர் அவர்களின் நெஞ்சில் வேரூன்றியது.

சீறாப்புராணம் என்னும் காப்பியம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வரலாறு முழுமையும் கூறவில்லையாயினும், முஸ்லீம்கள் தமிழ் இலக்கியத்திற்கு தந்திருக்கும் பரிசுகளில் இது ஓர் பெருமைமிகு இடத்தைப் பெற்றுயர்ந்திருக்கிறது.

சீறாப்புராணத்தில் அரபுச்சொற்கள் பரவலாக பயன்பட்டிருப்பதால், தமிழ்ப் பெருங்குடி மக்களில் முசுலீம்கள் அல்லாத அன்பர்களுக்கு இக்காப்பியத்தை படிக்கின்றபோது சில இடர்கள் ஏற்படலாம். தமிழில் சிறந்த அறிஞரான உமறுப்புலவர் அவர்கள், அரபுச் சொற்களை தவிர்த்து இந்தக் காப்பியத்தை உருவாக்கியிருக்கக் கூடாதா என்று சிலர் நினைக்கலாம்.

உலகத்தில் எத்தனையோ மொழிகளில் நாம் பல காவியங்களைப் படித்துப் பார்க்கிறோம். வேறுமொழி பேசும் நாட்டில் நிகழ்ந்த வரலாற்றை தன்நாட்டு மொழியில் ஒரு புலவன் காப்பியமாக வடிக்கின்றபோது, மூலக்கருத்தின் தன்மை மாறக்கூடாது என்பதற்காக சில சொற்களை அப்படியே பயன்படுத்துதலை நாம் எல்லா மொழி இலக்கியங்களிலும் பார்க்கிறோம். பழம் பெரும் ஆங்கிலக் காப்பியங்கள் பலவற்றில் லத்தீன் மொழிச் சொற்களைப் பரவலாகக் காணமுடிகிறது. தமிழ்க் காப்பியங்களில்கூட எத்தனையோ வட மொழிச் சொற்களைக் காண்கிறோம். இந்த அடிப்படையில் பார்க்கின்றபோது சீறாப் புராணத்தில் அரபுச் சொற்கள் கிடப்பது நமக்கு வியப்பைத் தரவில்லை.

ஆங்கிலக் காப்பியங்களில் லத்தீன் மொழிச் சொற்களைக் காணுகின்றபோது அதற்குப் பொருள் காணவேண்டும் என்று காண்பித்த ஆர்வத்தைப் போல, சீறாப்புராணத்தில் கையாளப்பட்டிருக்கிற அரபுச் சொற்களுக்கு தமிழாக்கம் செய்யும் அவாவை தமிழ்ப் பண்டிதர்கள் பெற்றிருந்தார்களேயானால், சீறாப்புராணம், கம்ப இராமாயணம் போன்று இலக்கியக் கதை நிகழ்ச்சிகளில் (உபன்யாசங்களில்) எப்போதோ பயன்படுத்தப்பட்டிருக்கும்.

சில சொற்களை எந்த நாட்டுச் சூழ்நிலையை நாம் வருணிக்கிறோமோ அந்த நாட்டு மொழியில் பயன்படுத்தினால் தான் அவை சிறப்புடன் இருக்கும். அந்த அடிப்படையில்தான் சீறாப்புராணத்தில் பல அரபுச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் உமறுப் புலவர் அவர்களின் பரம்பரை, அரபிகள் வழிவந்ததாக இருந்தது. அதன் காரணமாக அரபு மொழிச் செல்வாக்கு அவர் நூலில் ஒன்றிரண்டு இடங்களில் படிந்திருப்பது இயல்பே.

உமறு தவிர்க்க முடியாததாகத் தாம் கருதும் இடங்களிலே தான் அரபுச் சொற்களைப் பயன்படுத்துகின்றார். தேவையற்றும், வலிந்தும் பெய்யப்பெறும் பிறமொழிச் சொற்களே ஒரு மொழியின் இயல்பையும், சிறப்பையும் சிதைக்கும். அவை கால வெள்ளத்தில் எதிர்நிற்க இயலாது, கரைசேர்ந்து விடுவதும் இயல்பே. தமிழ் நாட்டில் உருவாக்கப்பட்ட — இன்றைக்கு வழக்கிழந்துபோன — மணிப்பிரவாள நடையே இக்கருத்துக்கு தக்க சான்றாகும்.

இனி, உமறு அரபுச் சொற்களை எவ்வெவ்வாறு பயன்படுத்துகிறார் என்பதைக் கூர்ந்து நோக்குவோம்.

ஒரு மொழியின் பெயர்ச்சொற்கள் எம்மொழிக்குச் சென்ருலும் அவை பெரும்பாலும் அப்படியேதான் வழங்க இயலும். வேண்டுமாயின், ஏற்கும் மொழியின் ஒலி மரபுக்கேற்ப மாறி ஒலிக்கும். "மேலெழுந்த வாரியாக பார்ப்போருக்கு நூல் தலைப்பினையும், காண்டங்கள், படலங்கள் ஆகியவற்றின் பெயர்களையும், இசுலாமியக் கொள்கை சாற்றும் முதற் படலத்தையும் படிக்கும்போதே, ஏராளமான அரபு மொழிச் சொற்கள் புராணத்தில் கலந்திருப்பதுபோல் தோன்றி மலைப்பூட்டும். ஆழ்ந்து நோக்குவோமாளுல் உறுப்பினர்களின் பெயர்கள், பிற பெயர்ச் சொற்களை நீக்கிப் பார்த்தால் இரண்டு விழுக்காடுகூட வேற்றுமொழிச் சொற்கள் இல்லை என்பதை அறியலாம்'' என்று தனது வானெலிப் பேச்சொன்றில் குறிப்பிடுகின்ருர், திரு. என். ஏ. அமீர் அலி அவர்கள்.

அவ்வகையில் அக்காம், அலிமா, ஆதம், ஆமினு, உமறு, பாத்திமா முதலிய மனிதப் பெயர்களும்,

கிரு, குபல், புத்துகான், பதுறு முதலிய பொருட்பெயர்களும் இடப்பெயர்களும் அப்படியே சீருப்புராணத்தில் இடம் பெறுகின்றன.

ஏற்கும் மொழியின் ஒலியியலுக்கேற்பச் சில சொற்கள் திரிந்து வழங்குவதும் மரபென்று கண்டோம். தூத்துக்குடி, தரங்கம்பாடி முதலிய ஊர்ப் பெயர்களை Tuticorin, Tranquebar என்றே தம் மொழியின் ஒலிமுறைக்கேற்ப ஆங்கிலேயர் திரித்து வழங்கினர். தமிழ்க் காப்பியவுலகின் பேரரசர் கம்பர், தம் காப்பியத்தில் ஜானகி, ராமன், லக்ஷ்மணன், விபீக்ஷணன் முதலிய பெயர்களைச் சானகி, இராமன், இலக்குவன், அக்கன், வீடணன் என்று தமிழ் ஒலிமுறைக்கேற்ப யாற்றியமைத்து வழிகாட்டியுள்ளார்.

இம்மரபினை உணர்ந்த உமறுவும், ஹரம், இத்ரீஸ், கைஸ், ஷரஉ, ஹஜருல், அஸ்வத் முதலிய சொற்களை அறம், இதுரீசு, கயிசு, சரகு, கசுறில், அசுவது என்றே எடுத்தாண்டுள்ளார். அவரது மொழிப்பற்றிற்கு இதைவிடச் சான்று வேண்டுமா?

மத மரபுகளும், மதத்துறையில் ஆழ்பொருளதாய் அமையும் சொற்களும் சில இடங்களில் கவிஞனது கையைக் கட்டி விடுதல் இயல்பு.

சான்ருக, 'தீன்' என்னுஞ்சொல் சன்மார்க்கம் அல்லது இஸ்லாம் எனப் பொருள்படும். இசுலாம் என்பது தமிழ்ச் சொல்லுமன்று. தமிழ்மொழி மரபுக்கு உடன்படுவதுமன்று. சன்மார்க்கம்

என்னும் தமிழுக்கு அறிமுகமான சொல், ஏற்கெனவே வள்ளலாரின் சமரச சன்மார்க்க நெறியையும் குறிக்கும் சொல்லாக இலங்குகிறது. 'தீன்' எனுஞ்சொல் தமிழ் ஒலி மரபுக்கு உடன்படுவது மட்டுமன்று. இனிமை எனும் பொருள் குறிக்கும் 'தீம்' எனுந் தமிழ்ச் சொல்லோடு ஒலி ஒப்புமையும் கொண்டிலங்குகிறது. எனவே புலவர் உமறு 'தீன்' எனுஞ்சொல்லை, மிக எளிதாகவே பயன்படுத்தி விடுகிறார்.

கலிமா என்ற சொல், அரபுச்சொல். அதைத் தமிழில் 'இஸ்லாமிய மூல மந்திரம்' என்று சொன்னால் 'கலிமா' என்ற வார்த்தையின் அளவுக்குச் சரியான பொருளைத் தந்ததாகாது என்று இஸ்லாமியப் பெருங்குடி மக்கள் உணர்வர். எனவே,

"உடன்நனி 'கலிமா' விரலினை உயர்த்தி
உதித்தனர் முகமது நபியே"

என்று அச்சொல்லையும் அப்படியே பயன்படுத்தி விடுகிறார் உமறு.

இன்னுஞ்சில சொற்கள் தமிழ் மக்களிடையே – தமிழ் முசுலீம்களிடையே – பெருக வழங்கி, தமிழ் சொற்கள்போலவே ஆகிவிட்டதுமுண்டு. தாசில்தார், டபேதார், வசூல், ஜமாபந்தி, பாக்கி, கிஸ்தி முதலிய சொற்களைத் தமிழ்மக்கள் தமிழாகவே பயன்படுத்திவிடுகின்றனர். சலாம் என்னும் அரபுச்சொல்லை "குறமகட்குச் சலாமிட ஏக்கறும் முத்துக்குமரனை" என்று பெரும்புலவர் குமரகுருபர அடிகளே, 17 ஆம் நூற்றாண்டில் தாம் படைத்த பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் பயன்படுத்துகிறார். 'சபாஷ்' என்ற சொல்லையும் அடிகள் பயன்படுத்தி இருப்பதாகக் கூறுவர்.

அது போலவே நபி, காஃபிர், நிக்காஹ், மகர் முதலிய சொற்களைத் தமிழ்முசுலீம்கள் தமிழ்ச் சொற்களைப் போலவே பயன்படுத்தி விடுகின்றனர். இச்சொற்களையும் புலவர் உமறு தமது காவியத்தில் அப்படியே எடுத்தாண்டுள்ளார்.

இன்னுமொன்று! உமறுப்புலவர் அரபுச்சொற்களை எடுத்தாளும்போது கைக்கொள்ளும் 'உத்தி' ஒன்றை, நயம்பட எடுத்துரைக்கின்றார் டாக்டர். தா. வே. வீராச்சாமி. முதற்பாடலில் அரபுச் சொல் ஒன்றைத் தவிர்க்க முடியாது பயன்படுத்தும் உமறு, அடுத்த பாடலில் அதன் தமிழ்ப் பொருளைப் படிப்பவர் விளங்கும் வண்ணம்

சொல்லிவிடுவது அவர் கைக் கொண்ட ஒரு உத்தியாகும். மலக்குகள், ஜீப்ரீல் முதலிய சொற்கள் முதற் பாடலில் வந்தால் அடுத்த பாடலில் வானவர், வானவர் தலைவர் முதலிய சொற்களைப் பயன்படுத்துகிறார். 'உமறின் சொல்லாட்சி' என்ற தம் கட்டுரையில் இக்கருத்தை மிக விரிவாக விளக்குகிறார், டாக்டர். வீராச்சாமி அவர்கள்.

மேற்குறித்த காரணங்களும், விளக்கங்களும் இலக்கியச் சுவைஞர்க்கு அமைதியூட்டும் என்பதில் ஐயமில்லை. அண்மையில் கவிஞர் நாச்சிகுளத்தார் பதிப்பித்து, திரீயெம் பதிப்பகத்தார் வெளியிட்டுள்ள சீறாப்புராணப் பதிப்பில் அரபுச் சொற்களுக்கு தமிழாக்கம் தனியாக குறிப்பிட்டுள்ளதோடு, பழைய பிரதிகளில் இருந்த பிழைகளை நீக்கி சிறப்பாக வெளியிட்டுள்ளனர். அந்த சீறாப்புராணப் பதிப்பை அனைவரும், குறிப்பாக தமிழ்மாணவர்கள், படித்துப் பயனடைய வேண்டும்.

★

# சீருவில் அரபுச்சொற்களை உமறு கையாளும் வாகு

கே. முகம்மது நாசர்

'எல்லையறு பரம் பொருள் முன்னிருந்தபடி இருப்பது போல்' இருக்கின்ற தொன்மொழி தமிழ்மொழி என்பார், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை. தமிழோடொப்பப்பழமை கொண்ட மொழிகள் பல காலத்தின் 'பரிணாம வளர்ச்சி'க் கொள்கையின் தர்க்கத்தால் அழிந்தன. தமிழின் அழியா வாழ்வுக்குக் காரணம் யாது? தன்னை அணுகிய மொழிக் குடும்பங்களைத் தமிழ், என்றும் பகைத்ததில்லை. அவற்றை அரவணைத்து தன் வளர்ச்சிக்கு ஆதரவாக்கிக் கொண்டது. 'தனித்தமிழ்' என்று திரிவோரின் சிறைச் சட்டங்களை உடைத்தெறியும் ஆற்றலுடைய தமிழ் உயிர் மொழி. உயர் மொழி. இதன் உயிருக்கும் உயர்வுக்கும் பிற மொழிக் கலப்பு, உரமாகவே அமைந்த வரலாற்றினைத் தொல்காப்பியம் முதல் அறிகிறோம்.

தமிழ் தோன்றிக் கிளைத்த காலத்தில் வடநாட்டில் செல்வாக்குச் செலுத்திய மொழி சமஸ்கிருதம். அம்மொழிக் கலப்பால் தமிழின் தோற்றம் ஏற்றமே கொண்டது. அதனால் தான் தொல்காப்பியர்.

'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே' என்றும்

'சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்' என்றும் அக்கலப்பினை வரம்புகட்டி வரவேற்கிறார்.

இவ்வரவேற்பினை கிரேக்கம், லத்தீன், அரேபியம், பிரஞ்சு, பாரசீகம், ஆங்கிலம், போர்ச்சுகீசியம், இந்தி போன்ற பல மொழிக் குடும்பங்களுக்கும் தமிழ் வழங்கியது.

அரேபியத்தோடு தமிழ் கொண்டிருந்த உறவு பல நூறு ஆண்டு காலப்பழமையை உரிமை செய்கின்றது. அரேபியக் குதிரைகள் கடல் வழியாகத் தமிழகம் வந்த செய்தியை ஈராயிரம் வயதான பட்டினப்பாலை தெரிவிக்கிறது. அரபு மொழி தமிழே போல் இனிதாய செமிட்டிக் மொழிக் குடும்பத்தைச் சார்ந்த, உலகில் பல்வேறு பகுதியின ரால் பேசி, பயிலப்பட்டும் வரும் உயர் மொழி; தென் அமெரிக்கா, பிரேசில், அர்ஜென்டினா போன்ற நாடுகளில் கூட 25 அரபு நாளிதழ்கள் அச்சேறுகின்றன. பல கோடி மக்களை ஈர்த்துப் பிணித்திருக்கும் இஸ்லாத்தின் திருக்குர்ஆன் எழுதப்பட்ட தெய்வத் திருமொழி; தொழுகைக்குரிய தூயமொழி; முஸ்லீம் உலகின் மூச்சாய்த்

திகழும் முதன் மொழி. தீனுல் இஸ்லாம் நெறியை உலகிற்கு வழங்கிய காரணப் பெரும் பொருளாம் காத்தமுன் நபி (ஸல்)யின் வரலாறு கூறும் 'சீரு', இவ்வரவு மொழிப் பிற்புலத்தில் அமைந்திலங்குவது இயல்பே.

சீருவைத் தமிழில் வடித்தவர் உமறுப்புலவர். இவர் யார் ? பழைய தமிழ்ப்புலவர்க்குரிய மிடுக்கும், செருக்கும், பாரம்பரியப் பாவனையும் கொண்ட பக்காத் தமிழ்ப் புலவர். (Typical Tamil Poet) இடையில் பொன்னூர் இழையோடிய தார்ப் பாய்ச்சுக் கட்டு; தமிழ்ச் செருக்கு அலையடிக்கும் மேலாடை; கைகளில் கடகங்கள்; முண்டாவில் தங்கத்தாலான கண்டாமணி; நகத்தில் மருதோன்றி; முகத்தில் நீண்டு அடர்ந்து துடுக்குத் தெறிக்கும் கிருதா மீசை; மழித்த தாடை; முறுக்குத் தலைப்பாகை.

இவரா சீருப் புராணம் பாடியவர்? இல்லை-பாடப் போகிறவர். தென்தமிழ்நாட்டில் ஒரு சின்னஞ் சிறு பகுதியைத் தவிர வேறு எல்லை தாண்டி அறியாத, தமிழ் மட்டுமே அறிந்த-கடிகைமுத்துப் புலவரின் சீடர், சர்வலோக ரட்சகர் பெருமானார் அவர்களின் வரலாற்றை-அரபு மொழியில் மட்டுமே ஆதாரங்கள் தேடக் கிடக்கும் அற்புத சரிதத்தை-பாடத் துணிவதா ? இதன் பின்னணி சுவையானது.

வள்ளல் சீதக்காதியின் வேண்டுதலாலும். தூண்டுதலாலும் நாயகத் திருமேனியின் வாழ்க்கையைப்பாட ஒப்புக்கொண்ட உமறு, அதற்கான விஷய ஞானத்திற்கும் விபரத் தொகுப்பிற்கும் காமில் ஒலி ஷெய்கு ஸதக்கத்துல்லா சாகிப் அவர்களிடம் அழைத்துச் செல்லப் படுகிறார். இந்தியாவிலும் ஹிஜாஸிலிருந்த உலமாக்களிடையேயும் தலைசிறந்து விளங்கிய அவர், புனித ஹஜ் செய்து ஆண்டுறையும் மக்களிடையே பல அரிய சொற்பொழிவுகள் ஆற்றியவர்; புனித கஅபாவிலே நல்லறிவைக்கற்பித்தபெருந்தகை;பேரரசர் ஔரங்கசீபின் பெருமதிப்புக்குரியவர். 'திருத் தூதரின் திருப்புகழைப் பாடிய 'மாதி ஹுர்ரசூல்'. அந்த ஞானதீபத்தின் முன் கிராமியத் தோற்றத்துத் தமிழ்க் கவிஞர் உமறு-தாஹா நபி (ஸல்)யின் திருவரலாற்றைத் தீட்டப்போவதாக வேறு சொல்கிறார். ஞான வாரிதி சீறி எழுகிறார். 'இஸ்லாமிய ஷரீஅத்திற்கு முரணான தோற்றத்திலுள்ள இவரா பெருமானார் வரலாறு வடிக்க வல்லார் ?' என்று இகழ்ந்து விரட்டுகிறார்.

அறியாமை இருள் நீங்கத் 'தீன்' எனும் செழுஞ்சுடர் ஏற்றிய வள்ளல் நபி (ஸல்) அவர்கள், இருவர் கனவிலும் அன்றே தோன்றி அவர்தம் இதயங்கள் ஒன்றை ஒன்று புரிந்து கொள்ளுமாறு செய்து விட்டார்கள்.

அரபுமொழிக் கடலின் நிலை கண்டுணர்ந்த அறிஞர் பெருந் தகையின் ஆதரவும், அவர்தந்த ஆதாரங்களும் கவிஞரை விசாலப் படுத்தி அரபு மொழியில் ஒரு லாவகத்தை அவருள் தோற்றுவித்து விடுகின்றன. இதனை,

'பேரிலங்கிய ஸதக்கத்துல்லா செம்மலரடி யிரண்டும் சிந்தையுள் ளிருத்தினேனே' என்று நன்றியுடன் பாடுகிறார் உமறு.

ஸதக்கத்துல்லா அப்பா அரபிப் பிற்புலத்தில், சொல்லேருழவர் உமறு, உழுது விதைத்துச் 'சீறாப் புராணம்' என்னும் செழும் பயிர் விளைக்கிறார். இக் காப்பியத்துள் தமிழ்ச் சொற்களின் எழிலோடும், இசையோடும் போட்டியிட்டுக்கொண்டு அரபுச்சொற்கள் இடை மிடைந்து பொலிகின்ற அற்புதம் பேரதிசயமாகும்.

சிலம்பின் முப்பெருங்காண்டங்களை ஒப்ப, சீறாவின் மூன்று விலாதத்து, நுபுவ்வத்து ஹிஜுறத்துக் காண்டங்கள் அரபுப்பெயர்களே பெறுகின்றன. இவற்றுள் எழுந்த 92 படலங்களில் 57 படலத் தலைப்புக்கள் அரேபியப் பின்னணியில் திகழ்கின்றன. 5027 பாடல் களைக் கொண்ட பெருங்காப்பியப் போக்கில் பல்வேறு இடங்களில் அரபுச்சொற்களை உமறு கையாளும் லாவகம் நம்மைத்திகைப்பிலாழ்த்தி 'அப்பா'வின் தொடர்பால் அரபு ஞானம் முழுக்கவே கைவரப் பெற்று விட்டாரோ என்று வியக்கிறோம். அரபுப் பெயர் தாங்கியவர்கள் தமிழ்ச்சாயல் பெற்று விடுகின்றனர்.

அஹமதுவும், முஹம்மதுவும் அகுமதுவாய் முகம்மதுவாய் வலம் வருகின்றனர். இப்ராஹீம் இபுறாகிமாகிறார்; இஸ்மாயில் இசுமா யிலாகிறார்; (4:52) அப்துல்லா ஹ்ஹுசும் அபுலஹப்பும் அப்துல்லா வாகவும் (4:67) அபுலகபுவாகவும் (5:125) மாறி விடுகின்றனர்; ஹுஸைன் 'புகழுசைனயினர்' (6:100) ஆனார். ஜுபைரும் ஹாரிதும் அப்பாஸும் முறையே சுபைறாகவும், ஆரிதாகவும், அப்பாசாகவும் (10:74) தோழமை கொள்கின்றனர். ஹலிமா நங்கை (6:49) அலிமா வானார்; ஹவ்வா மங்கை 'மாது அவ்வா' வானார் (24:5) ஸெயினபு நல்லார், செயினபு நாச்சியாராகிறார் (85)

'ஹுதா' எனும் இறைவன் 'குதா' வெனத் (25:21) தமிழ்ப் பெயர் பூணுகிறான். ரஸுலை இறசூல் (25:33) என்றும், ஜைதை, சைது (26:2) எனவும், ஹஸரல் ஸஅதுவை சஃது (27:17) என்றும், ஆஸரை ஆசிறாகவும் (27:23) குறித்துச் செல்கிறார்; உஃபான் என்னும் ஆடு மேய்ப்பார் உகுபானாகி விடுகிறார்; ஷஃபான் சகுபானாகிறார்; ஹஷனை அசன் என்றும், ஹபுஷாவை அபுசா என்றும் லுமாமை உலூமான் என்றும் வழங்குகிறார்.

தமிழகக் கம்பனின் பண்பாட்டுக் களத்தில் வடபுல வான்மீகி வார்த்த லக்ஷ்மணன் இலக்குவனாகவும், விபீஷணன் வீடணனாகவும், ருமை உருமையாகவும் பொலிவதைப் போல், உமறுவின் நெஞ்சம் சமய மரபுக்கு ஊறு நேராவண்ணம் ஒல்லும் வகையெல்லாம் இலக்கண நெறி காத்து, அரபுச் சொற்களைத் தமிழ்ப்படுத்துகிறது.

இவ்விடத்தில் மற்றொரு கேள்வி எழலாம். கதிஜா, ஹபி புல்லா, ஹாஷிம், ஹமுசா, ஸஹிது, ஜிபுறயல் என்றெல்லாம் அரபுப் பெயர்களை அப்படியே ஏற்றுக் கொண்டு விட்டாரே, அது ஏன்?

காலம் பூணும் கோலத்திற்கேற்ப மொழியின் இலக்கணச் சட்டங்கள் புதுக்கப் பெறுதல், மொழிக்குள்ள உயிர்ப் பண்புகளில் ஒன்று. தொல்காப்பியமும்,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல; கால வகையி னானே" என்கிறது.

குலோத்துங்கன் காலத்து வாழ்ந்த கம்பன், தன் காப்பியப் படைப்பில் தொல்காப்பிய நெறி நின்று பெயராக்கம் செய்தற்கு மேற் கொண்ட முயற்சிகளில் ஏற்பட்ட சிக்கல்களை, ஏறத்தாழ அதே கால கட்டத்தில் வாழ்ந்த பவணந்தியார் அறிந்திருக்க வேண்டும்; வளர்ச்சியை முடமாக்கும் கட்டுத்திட்டங்களை உடைத்தெறிந்து, பதவியல் மூலம் புதிய நெறி வகுக்கிறார். கவிஏறு உமறுவும் இவர் நெறியையே ஒட்டிச் சென்றாலும், சர்வ சுதந்திரமுள்ள கவிஞன் முன் சட்டங்கள் வாய்புதைத்து வணங்கி நின்று வழிவிடுவது இயல்புதானே! அடலேறென நிமிர்ந்து புறப்படுகிறது, உமறு காவியம்.

இஸ்லாத்தோடு தொடர்புடைய பிற ஞானியர்களாய முறு சலின்கள், இமாம்கள், அவுலியாக்கள், புகைரு, இபுரு போன்ற அரபுப் பெயர்களைத் தம் நூலில் உமறு அறிமுகப்படுத்தும் நேர்த்தியானதாகும்.

கருபத்துல்லா, ஜெமுறத்திலுஸ்தா, குனையின் (ஹுனைன்) ஷாம், கிருமலை (ஹிருமலை), திமஷுக்கு, பதுறு, உகுது போன்ற அரபு இடப்பெயர்களையும் வெகு லாவகமாகக் குறித்துச் செல்கிறார்.

குறைஷு, ஹாஷுமுஸ் போன்ற இனப்பெயர்களும் இடம் பெறுகின்றன. மக்கா நகரவாசிகளை மக்கிகள் என்பதாயும், மதீனமக்களை மதீனத்தார் என்பதாயும் தமிழ் தழீஇய போக்கில் புலவர் குறிக்கிறார்.

இனி, தீனுல் இஸ்லாமின் ஆலாய் விழுதோடி, அருகாய் வேரோடிக் கிடக்கும் அரபு மூலங்களை அடையாளம் கண்டு கையாளும் புலவரின் வாகு, நம்மைக் கிளர்ச்சியுறச் செய்கிறது.

'தீன் பயிர் வளர்த்து' என்றும்
'இரவியெனும் கலிமா' என்றும்
'ஈமானில் வழிபடுத்தி' என்றும்

பலபட உரைத்து வந்த உமறுப் புலவர், இம்மூன்றினையும் தமக்கே உரிய நயத்தோடு பல பாடல்களில் ஒருசேர இணைத்துப் பேசும் திறம் நோக்கத்தக்கது. எடுத்துக் காட்டாக ஓரிடம் :

'இருநிலத் துறைந்த வேரீ மானிலே யெழுந்து நின்ற
தருமுகம் மதுநல் வாசந் தழைத்தல்தீன் விளக்க மின்பம்
வருகனி கலிமா வாழ்த்து வானவர் செயல் பூமாரி
தெரிதரச் சொரித லும்மைத் திருமணம் முடித்த லென்றான்'
(மணம் பொருத்து படலம் : 25)

மற்றொரிடத்தில் 'சுருங்கச்சொல்லி விளங்க வைத்தல்' என்னும் உத்திக்கேற்ப ஒப்பற்ற இஸ்லாத்தை, அதன் கொள்கையை, நடைமுறை இயல்புகளை, நம்பிக்கை நெறிகளை நான்கே அடிகளில் நயம்பட உரைக்கிறார்.

'ஒருத்தனா யகனவற் குரிய தூதெனு
மருத்தமே யுரைகலி மாவந் நிண்ணயப்
பொருத்தமீ மானடை புனைதலா மமல்
திருத்தமே யிவையிசு லாமிற் சேர்தலே'
(தொழுகை வந்த வரலாற்றுப் படலம் : 2)

இதில் 4 அரபுச் சொற்கள் (கலிமா, ஈமான், அமல், இஸ்லாம்) இடை பயின்று வந்தாலும் பாடலின் ஆற்றொழுக்கு நடைக்கு ஊறு ஏதும் நேர வில்லை. மாறாகத் தமிழும் அரேபியமும் ஒன்றோடொன்று அன்வயப் பட்டு, எழில்நடை பயில்வதைப் பார்க்கிறோம்.

மேலும் சரகு, சுஜூது, இக்றவு, சூறத்து, மாலம், யஃலம், உலு, றக்அத்து, குத்துபா, சலவாத் போன்ற சமயத் தொடர்பான அரபுச் சொற்களை மரியாதையுடன் கையாளுகிறார் உமறு.

சொற்கள் அரபுவாயினும் கையாளும் வாகினாலேயே அதற்குத் தமிழ் விளக்கம் தந்துவிடும் நேர்த்தி, உமறின் தனித்திறன்.

'விழைவால் திக்குபீறுரைத்தார்' என்னும் போது 'அல்லாஹு அக்பர்' என நம் செவியில் மோதுவதை உணர்கிறோம்.

'ஊறிய பொருள் புறுக்கான் என்றோதிய' என்று அவர் எழுதும் நயத்தில், நம் நெஞ்சங்கள் 'புறுக்கானுல் அலீம்' என்னும் திருக்குர் ஆனில் தோய்ந்துவிடுகின்றன.

'இரவியெனுங் கலிமாவிற் குபிர்த்திமிர மடர்ந்தெரியுமிற சூலுல்லா' என்ற கவிதை எழுச்சியில் நம்மிதயக் கரங்கள் 'பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்' எனத் தொழுது நிற்கின்றன.

உமறு, அரபுச் சொற்களைத் தமிழ் மரபில் தோய்த்தெடுத்து அற்புதம் நிகழ்த்த வல்லவர். சான்றுக்கு ஒன்றிரண்டு.

தீனுல் இஸ்லாம் மார்க்கத்தாரைத் தீனவர் என்கிறார். 'வானவர்', 'கானவர்', மீனவர் என்னும் தமிழ்ச் சொற்களை இதன் அருகுவைத்துப் பார்க்கும் நமக்கு, இது அரபு மூலந்தானா என்ற மயக்கம் ஏற்படுகிறது.

நபிமணி அவர்களைக் கண்டு மனம் களித்த பாந்தள் தன் வாய் திறந்து சலாமுரைத்ததை உமறு,

'நாவிரண்டினா லொரு சலாஞ் சாற்றி' என்னும் போது,
'சுராதிப திமாலய னுமாலொடு சலாமிடும் சுவாமிமலை'

என்னும் அருணகிரியின் சுவாமிமலைத் திருப்புகழும்.

'குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு குமரன்' என்னும் குமரகுருபரரின் முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழும் நம் நினைவில் நிழலாடி, 'சலாம்' என்னும் சொல் தமிழேதான் என்பதற்கு ஆதாரம் தேடவைத்து விடுகின்றன.

இதே லாவகத்தோடுதான் மகர், நிக்காகு, ஆகிறத்து, ஷறுத்து, கந்தக்கு, ஹறும், கவுல் போன்ற பிற சொற்களையும் கையாள்கிறார்.

சரியான சொற்கள் மிகச் சரியான இடத்தில் இடம் பிடித்துக் கொள்வதே கவிதை என்பர். சொல்வன்மைக்கு வள்ளுவரின் குறளான

'சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து'

என்பது, உமறு போன்ற பெரும் புலவர்க்குச் சாலவும் பொருந்தும் இவர்தம் காப்பிய நோக்கிலும் போக்கிலும் கம்பனும், தேவரும் பல இடங்களில் பின்தங்கிப் போய்விடுகின்றனர். இந்த வெற்றியின் குறுக்கே அரபு போன்ற பிறமொழிச் சொற்கள் தடையாய் நிற்கவில்லை.

காரணம் என்ன? அரபு போன்ற பிறமொழிச் சொற்களை நபி நாயக வரலாற்றுக் காப்பியத்தில் கையாளுவதில் கவிநாயக உமறு காட்டும் வாகுவே அது.

# உமறின் தனித்தன்மை

மௌலவி. அப்துல் வகாப். எம். ஏ., பி. டிஎச்.,

இசுலாமிய இலக்கியப் பாரம்பரியத்தில், தமிழ்நாட்டின் தலை சிறந்த காணிக்கையாய் விளங்குகிறது உமறுப்புலவர் அப்பா அவர்களின் சீருப்புராணம். Orthodox எனப்படும் சமய மரபுக்காரர்கள் அதில் குற்றங்காணலாம். உலக இலக்கிய வாதிகளில் சிறந்தவரான ஷேக்ஸ்பியரிடத்திலேயே குற்றம் கண்டவர்கள் நாம். ஜுலியஸ் ஸீசர் நாடகத்தில், ஒரு காட்சியில், சுவரிலே கடிகாரத்தின் பெண்டுலம் ஆடிக்கொண்டிருந்தது என வருகிறது. ஜுலியஸ் ஸீசர் காலத்தில் சுவர்க்கடிகாரம் ஏது, பெண்டுலம் ஏது?'' என்று கேட்கிறோம்.

இதுபோன்று வரக்கூடிய தவறுகள்தானேயொழிய, அதற்காக உமறுப்புலவர் மீது நாம் பகைமை பாராட்டவில்லை. ஆனால், ஓரளவு அவரைப் புறக்கணித்துத்தான் விட்டோம்.புறக்கணித்தே இருந்தோம். அதற்குச்சான்று, ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளாக—இந்த இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய விழிப்புக் காலத்திலும்கூட—சீருவிற்குப் புதிய பதிப்பே நேற்றுவரை வெளிவராமையைச் சொல்லலாம்.

சீருப்புராணத்தின் சிறப்பாக எவ்வளவோ சொல்லமுடியும். காப்பியத்திற்கு உள்ளே போவதற்கு முன்னர், 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம்' என்பது போல் அவையடக்கத்தை முதலில் காண்போம்.

அவையடக்கத்திலேதான் தம்முடைய தனித்தன்மை, ((Personality) தம்முடைய ஆற்றல், இலக்கியப் பாரம்பரிய முன்னோர்களுக்குத் தாம் பட்டிருக்கின்ற நன்றிக்கடன்—இவற்றைப் புலவர்கள் காட்டுவர். உமறப்பா அவர்களின் அவையடக்கத்திலும் இப்பண்புகள் பளிச்சிடுகின்றன.

அவர்தம் காப்பியத்தின் பாட்டுடைத்தலைவர் உலகத்திலே இறைவனால் முன்னரும் பின்னரும் தோற்றுவிக்கப்படாத மாமனிதர்; படைக்கபப்ட்டவருள் எல்லாம் சிறப்பு மிக்கவர்.

> "முகம்மதே! உம்மை மனிதர்கள் புகழ வேண்டியதில்லை; உம்முடைய புகழை நானே வானத்திற்கும் அதற்கு அப்பாலும் உயர்த்தியிருக்கிறேன்."

என்று அல்லாஹ்வே சொல்லும் அளவில் உயர்ந்து நிற்பவர். அத்தகைய சீரும் சிறப்பும் பேரும் பெருமையும் உடையவரைக் காவிய நாயகராக எழுதும் திருப்பணிக்குத் தாம் தகுதியுடைய வர்தானு என்று உமறப்பா அவர்கள் தம்மைத்தாமே சீர்தூக்கிச் சிந்தித்துப்பார்க்கின்ருர்கள்.

அப்போது, தம் இயலாமையைப்பற்றிக் குறிப்பிடும்போது, '' திக்கனைத்தும் செங்கோல் புக்க திகிரி மன்னவர் முன் அன்ருடங் காய்ச்சி ஒருவன் சமஉரிமை கொண்டாட முயன்றது போல், நான் இதுபாட முயன்றேன் '' என்கிருர்கள். இன்னும் இரண்டு அழகிய உவமைகளால் தம் மன உணர்ச்சியை வடிக்கிருர்கள், உமறுப்புலவர் அவர்கள். திடீரென்று சூறைக்காற்று வீசுகின்றது; மலைகள் எல்லாம் நிலை பதறுகின்றன; எழுகடல்களும் கொந்தளிக்கின்றன; எங்கும் ஒரே பேரிரைச்சல்! இவ்வாறு '' வெடித்து வீசிய சண்ட மாருதத்திற்கு எதிரே, மிடித்து நொந்த சிற்றெறும்பு பெருமூச்சு விட்டதுபோல் '' என்று தன்னைக் குறிப்பிடுகின்ருர்.

'மிடிமை' என்ற சொல் தமிழிலக்கியத்தில் பழக்கப்பட்டசொல். 'வறுமைப்பட்ட' என்று பொருளாகும். உலகப் படைப்புக்களில் எல்லாம் மிகவும் சிறிய படைப்பு எறும்பு. அதிலும் இது சிற்றெறும்பு. அந்தச் சிற்றெறும்பும் மிடிமைப்பட்டு, வறுமையிலே வாடிப் போயிருக்கிறது; வாடியதோடு மட்டுமல்லாமல் இல்லாமையால் நொந்தும் போயிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் அது விடும் பெருமூச்சு எப்படி இருக்கும்? அந்தச் சூறைக்காற்றின் ஆரவாரம் எங்கே? இந்தச் சிற்றெறும்பின் பெருமூச்சு எங்கே?

ஆக அவையடக்கத்தையே இத்துணைச் சிறப்பாக அமைத்துத் தருகிருர் உமறுப்புலவர் அவர்கள்.

★ ★

இங்கே வந்துள்ள அறிஞர் பெருமக்கள் சீருக்காப்பியத்தைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ச்சி செய்ய இருக்கிருர்கள். நான் ஒன்று கேட்டுக்கொள்வேன்.

சீருவின் இலக்கிய நயத்தை — காவியப் பண்பை — நுகர வேண்டியது நமது கடமைதான். ஆனால், அதே நேரத்தில், அவருடைய கருத்தாழமிக்க கவிதைகளிலே அடங்கியிருக்கும் தத்துவங்கள், கொள்கைகள், கோட்பாடுகள், வழிமுறைகள், விதி முறைகள் — இவற்றை நாம் மறந்துவிடக் கூடாது.

TAMIL NADU ARCHIVES LIBRARY No. 106828

வெறும் இலக்கிய நயத்துக்காக மட்டுமே உமறப்பா அவர்கள் சீருப்புராணத்தை யாத்திருக்க வேண்டியதில்லை. மிகவும் எச்சரிக்கையாக—மிகவும் கட்டுப்பாடாக—இதனை அவர் இயற்றியிருக்கிறார் எனத் தெரிகிறது. வேறு எந்தத் தலைவரைப் பற்றிப்பாடியிருந்தாலும், அதில் புலவர் எவ்வளவு வேண்டுமானாலும் சுதந்திரம் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் பெருமானாரைப்பற்றி எழுதுகிறோம் என்ற அந்த எண்ணம் பிடரியிலே உந்தி உந்தித் தள்ள, அவருடைய எழுத்தாணி மிகவும் எச்சரிக்கையாகப் போயிருக்கிறது.

எனவே, அத்தகைய கட்டுப்பாட்டுக்குள் நின்று அவர் எழுதத் துணிந்தார் என்றால், வெற்று இலக்கிய நயத்துக்காக மட்டுமல்ல; பெருமானார் அவர்களின் வாழ்க்கையிலே என்னென்ன கொள்கைகளைப் போற்றினார்களோ, வழிமுறைகளை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்களோ, அந்தக்கொள்கைகளும், வழிமுறைகளும் நம் நெஞ்சிலே பதியவேண்டும், நம் வாழ்விலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றே அவர் எண்ணினார் என்பது தெளிவு.

அவற்றுள், முக்கியமானது தொழுகை. தொழுகை வந்த வரலாற்றை ஒரு தனிப்படலமாகவே கூறுகின்றார். அதை மட்டும் இங்கே சுருக்கமாகக் காண்போம்.

முதன் முதலிலே, தொழுகையை ஏற்றுக் கொண்டு தொழுதவர் யார்?

இதற்கு விடையை அழகுற அமைக்கிறார் உமறுப்புலவர்.

“வடுவைப் பகிர்ந்த கரியவிழி
மயிலும் வரிசை நபினாரும்............”

எனத்தொடங்கி அபுபக்கர், உதுமான் என அடுக்கிப் பதின்மரைக் குறிப்பிடுகின்றார். இந்தப் பத்துப்பேர்களில் ஒவ்வொருவருக்குமே தனித்தனியே ஒரு வரலாற்றுக் காப்பியம் பாடலாம். அத்தகைய சிறப்புப்பெற்றவர்கள் அவர்கள். அவர்களை வரிசைப்படுத்தும் போது முதன் முதலிலே யாரைச் சொல்கிறார் பாருங்கள்.

கதிஜா நாச்சியார் அவர்களைத்தான்! பெருமானாரைப் பின்பற்றித் தொழுத பெரியோர்களின் பட்டியலை வகுக்கப் புகுந்த உமறுப்புலவர் அப்பா அவர்கள், முதலிலே அண்ணலாரின் அருமைத் துணைவியாரைக் குறிப்பிடுவதிலும் பெயரைச் சுட்டாமல், ‘மயில்’ என்ற சொல்லால் பெருமைப்படுத்துகிறார்.

அவர்கள் எல்லோரும் எப்படித் தொழுதார்கள் என்று காட்டுவதிலே காவிய ரசனையைச் சேர்க்கிருர் உமறுப்புலவர்.

"புடைவிட்டு அகலா செழுந்தேனைப்
பொருந்தும் சிறைவண்டெனத் தொழுதார்"

என்ற வரிகளில், மிகப்பொருந்தும் உவமையணியை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

மலருக்கு மலர் தாவக்கூடிய வண்டினைப் புலவர்கள் காமுகர்க்கு உவமிப்பது மரபு அந்த வழக்கமான இழிந்த பொருள் வராமலேயே அதே வண்டினை வேறு விதமாக்கிக் காட்டுகிருர் உமறுப்புலவர். மலரில் தேனைக்கண்ட வண்டு அதைச் சுவைத்து, அந்த இன்பத் திலேயே திளைத்து, அந்த இடத்தை விட்டு வேறிடம் பெயராமல், பெயர்ந்து செல்லும் மனமே இல்லாததாய்ச் சிறைப்பட்டதுபோல் நின்ருல் எப்படியோ அப்படித் தொழுதார்களாம். அந்தச்சிறையிலும் ஒருமை மனத்தோடு தொழுதார்களாம்.

இந்தச் சுருக்கமான உவமையிலேயே பல அரிய உண்மைகளைச் சுட்டிவிடுகிருர் உமறுப்புலவர். "இந்த உலகமெல்லாம் எனக்குப் பள்ளிவாயில். இன்ன இடத்தில் மட்டும்தான் தொழவேண்டும் என்பதில்லை" என்று சொன்ன பெருமாஞர் அவர்கள் சிறைப்பட்ட வண்டாகத் தொழுதார்கள் என்ருல், அன்றைய நிலை அப்படி இருந்தது. அதை விட்டு வேற்றிடத்தில் தொழுதால் கல்லெறி படக்கூடிய பயங்கரம் இருந்தது 'ஒலுவுக்கும் கூட'க்குந்தகம் விளையக் கூடிய பகைமைநிலை ஏற்பட்டிருந்தது. எனவேதான் அவர்கள் பதுங்கித் தொழுதார்கள். அந்த அவலத்தைத்தான் இவ்வளவு மங்கலமான உவமையால் விளக்கிக் காட்டுகிருர் புலவர்.

இன்று மக்கள் காணவேண்டும் என்பதற்காகத் தொழுகிருர்கள். ஆனல், அன்று அவர்களோ தேனிருக்கும் மலருள் சிறைப்பட்ட வண்டாக மறைந்து தொழுதார்கள்; வெம்புலிவாழும் காட்டிலும் தொழுதார்கள்; மனிதவிலங்குகள் வராதமறைவிடத்திலும், சிங்கங்கள் பதுங்கும் முழையிலும், அருவிச்சாரல் மறைவிலும்கூட நின்று தொழுதார்கள்.

பொதுவாக. புலவர்களுக்கெல்லாம், தூரநோக்கு prophetic-in sight என்பார்களே—அந்த தூரதிருஷ்டி உண்டு என்று சொல் வார்கள். அவர்கள் எதிர்காலத்தைத் தமது ஞானக் கண்களால் கண்டு கவிதை வடிப்பார்கள். அதனுல்தான் அரபியிலே 'ஷெகிரு' 'ஷிகுரு'—என்ற இருவார்த்தைக்கும் இப்படி ஒற்றுமை காட்டிச் சொல்லுவார்கள். அதாவது, ஷெகிரு என்ருல் அரபியிலே கவிதை.

ஷிகுரு என்ருல் மந்திரம். 'கவிதை' எழுதுபவன் ஒரு 'மந்திரவாதி'. தூரநோக்கு உடையவன். இதற்கு எடுத்துக் காட்டாகச் சீருவிலே ஒன்றைக் காட்டலாம்.

"வந்த குறைஷி குலத்திலுறு
மடங்கலனைய முதியோர்தம்
சிந்தை குளிர வானவர் கோன்
திருத்தி உரைத்த வணக்க முறை."

எந்தக் காலத்திலும் முதியோர்கள்தான் பெரும்பாலும் தொழுவார்கள். தொழுகை நடத்துவார்கள். எனவே, அதைக் குறிப்பிட்டு இங்கே தூர நோக்காக இப்படிக் கூறுகிருர்.

அடுத்து, இறைவனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்ருன 'அவ்வல் என்பதன் கருத்தை வைத்து 'அந்தமிலி' என்று வருணிப்பது மிகப் பொருத்தமாக உள்ளது. உலகப்படைப்பு யாவும் அழியக்கூடியது. "நெருநல் உளனெருவன் இன்றில்லை என்னும் பெருமை" உடையது தானே இந்த உலகு. ஆனால், எந்தக் காலத்திலேயும் இறுதி இல்லா தவன்–அந்தமில்லாதவன்–யார்? அல்லாஹ்சுபுஹானஹுத்தாலாவே!

"அந்தமிலி தன் தூதரெடுத்
தறைய நெறிநேர் வழுவாமல்
பந்திபெற நின்று உறுந்தொழுகை
படித்தார் பாவம் துடைத்தாரே"

இங்கே, ஒரு அழகிய சொல்லாட்சியைப் பார்க்கிறோம்.

நாம் தமிழில், தொழுதோம் என்று சொல்லுவோம்; தொழுகை நடத்தினேம் என்போம். உருதுவிலேதான் 'நமாஸ்' படித்தார்கள், 'நமாஸ் படா' என்பார்கள். இங்கே தமிழ் மணத்தையும் சேர்த்துத் தரவேண்டும் என்று உமறுப்புலவர் கருதினரோ என்னவோ, "தொழுகை படித்தார்" என்று கூறியுள்ளார். "தொழுகை படித்தார்" என்பது எனக்கு ஒரு அபூர்வமான சொல்லாட்சியாகப் படுகிறது, இதைப் பேராசிரியர்கள் ஆராய்ந்து தமிழுலகுக்கு அறிவித்தால் நலமாக இருக்கும்.

சீருப்புராணத்தின் இனிய நயத்தை எத்தனை கோணங்களில் பார்த்தாலும், இந்தத் தொழுகை வந்த படலத்தில் அதிகக் கவனம் செலுத்தினல் இன்னும் அரிய உண்மைகளை அறியலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(23—2—1975 அன்று இளையான்குடி, டாக்டர். சாகிர் உசேன் கல்லூரியில் நடைபெற்ற சீருப்புராணப் பெருவிழாவில், மௌல்வி. அப்துல் வகாப், எம். ஏ., பி. டிஎச். அவர்கள் வழங்கிய வாழ்த்துரையின் ஒரு பகுதி.)

# சீருப் புராணத்தின் கவிதை வளம்

டாக்டர் நா. செயராமன், எம். ஏ., எம், லிட்,, பி.எச். டி.,
தமிழ் விரிவுரையாளர், தியாகராசர் கல்லூரி
மதுரை.

உலகச் சமயங்கள் பலவற்றின் மூல இலக்கியங்களைப் பெற்றிருப்பது தமிழ் மொழியின் தனிச்சிறப்பாகும். சமணச் சிந்தாமணி, பௌத்த மணிமேகலை, சைவசமயப் பெரிய புராணம், கிறித்துவர் தேம்பாவணி இசுலாமிய சீருப்புராணம் தமிழன்னையின் பொன்மேனியைப் பொலிவுறச் செய்யும் அணிகலன்கள்.

தமிழ்க்காப்பியங்களில் தோய்ந்த உமறுப்புலவர் தாம் படித்தும் பார்த்தும் பழகிய தமிழ் நாட்டையே தமது வருணனைகளில் காட்டுகிறார்.

காவியத்தைத் தொடங்கும் போதே காவியத்தலைவர் புகழை உவமை மூலம் நினைவூட்டுகிறார் கவிஞர். வெண்மேகங்கள் கடலிடைப் படிந்து விண்ணோக்கிச் செல்வதற்கு நபியின் புகழ் உலகெலாம் பாவி மிஞ்சிவதற்கு விசும்பில் பரவிய தன்மையை உவமை சொல்கிறார்.

மது மலர்த் தேனை உண்டிருந்த வண்டினம் புது மனச் சுரும் பெரடு கலந்து இசைபாடும் முகமது புகழைப் பாடுதல் போன்றுளதாகப் பாடும் புலவர்

"சதுமறை முகம்மது தழைத்து வாழ்க வென்று
அதிவிதப் புகழெடுத் தறைதல் அன்னதே"

(புனல் விளையாட்டு 19)

என்று இயற்கை வருணனையோடு காப்பியத் தலைவனை இணைத்துக் கூறுகிறார் பறவைகள் ஒலிப்பது அகுமது நொடிக்குள் மதியமைத்திடுவர் ஐயுறல் எனும் சொல்மானிடர்க் குரைப்பன போன்'றிருந்ததாகப் பாடுவர்.

ஆற்றினைத் தமிழ்ப் புலவர்கள் பெண்ணாகவே உருவகிப்பர். வையை என்னும் பொய்யாக் குலக் கொடியை இளங்கோ அழகிய பெண்ணாகச் சித்தரிக்கிறார். சரயு நதியைத் தாயாகக் கூறுவார் கம்பர். வெந்நுரையாகிய துகில் உடுத்து அறலாகிய கூந்தல் பரப்பிக் கயலாகிய விழியைப் பாய்ச்சி, திரையாகிய கரம் வீசி, நீர்க் குமிழியாகிய மார்பு பெற்றுச், சுழியாகிய உந்தியுடன் பொலியும் பெண்ணாக ஆறு விளங்குவதாக உமறு பாடுகிறார்.

மலையெனும் அரசன் தோள்களைத் தழுவி, மகிழச் செய்து அவனிடம் பொன்னும் மணியும் கவர்ந்து வரும் விலைமகளாக அருவியை வருணிப்பார்.

சந்தனம், அகில், மணி, தந்தம், முத்து முதலான செல்வங்களை அடித்துச் செல்லும் ஆறுகடல் கடந்து வணிகம் செய்யப் புறப்பட்ட வணிகன் விலையுயர்ந்த பொருள்களைப் பையிலிட்டு நிரப்பிச் செல்வது போல் காணப்படுகிறது. விலை மகளாக மலையில் புறப்பட்ட ஆறு வணிகனுக்க் கடலை நோக்கிச் செல்கிறது.

மருத நில நாற்று வளர்ந்து முதிரும் செய்தியைச் சான்றோர் நிலையோடு உவமிப்பார் திருத்தக்கர். பண்பட்ட நிலத்தில் நெருங்கி வளர்ந்திருக்கும் நாற்றிற்கு பண்பட்ட குடும்பத்தினை உவமித்து அடுக்குவார் உமறு.

இயற்கை வளமுரைக்கும் போதும் ஏற்றம் தரும் கருத்துக்களை எடுத்துரைக்கும் சிறப்பு குறிக்கத்தக்கது. செந்நெல்லின் பெருக்கை ஏற்றிச் செல்லும் சகடங்கள், கரும்புத் தோட்டங்கள், கமுகு சுமந்து செல்வோர் நிலை ஆகியவற்றைப் பறங்கிப் பேட்டை நகரில் செழிப்புடன் இருந்த அபுல் காசிம் மரைக்காயரது இல்லச் செல்வச் செழிப்புடன் உவமித்து வள்ளலைத் தனது பாடலில் வாழவைக்கிறார் உமறு. செந்நெல் சாயத்திருப்பதைக் கல்வி சேர்மாந்தரின் இறைஞ்சிக் காய்த்து இருப்பதாகத் திருத்தக்கரும் அடியார் ஒருவரை ஒருவர் வணங்கும் நிலையோடு உவமித்துச் சேக்கிழாரும், பெண்ணின் நல்லாளோடு உமறும்உவமிக்கிறார்கள். கருவுற்றபெண் மகப் பெறும் வேளையில் கணவனை வெறுத்திகழவும் தோன்றும் நிலையைப் பிரசவவைராக்கியம் என்பர். அவ்வேளையிலும் கணவனை இகழாதிருக்கும் நற்பண்புடைய பெண்போல செந்நெல் திகழ்ந்த தெனப் புலவர் பாடுகிறார். (ஷாம் நகர்...11)

ஆணின் வீரத்தை உரைக்கும் கம்பர், "வணங்குதல் மகளிர் ஊடல் நாயினும் உளதோ" என்று இரணியனைக் கூறவைப்பார். அதுபோல் ஈன்றபோதும் இகழாப் பெண்மை இங்கு உரைக்கப்படுகிறது.

தசைக்கட்டியைப் பெண்ணுரு வமைத்த படலத்துள் பெண் வருணனை சிறப்புடன் விளங்குகிறது.

"முல்லையும் முருந்தும் நிரைத்தன போன்று
 முத்தெனத் திகழ்ந்தற நெருங்கி
மெல்லனச் சிவந்த மணியினில் பிரித்து
 விளக்கி யொப்பித்து வைத்தனபோல்

வில்லிடக் கவின் கொண்டிரு புறத் தொழுங்கும்
விரிந்த பூங்கா விகள்படர்ந்து
சொல்லரு மனத்தாடவர் மயல் இருளைத்
துணித்திட நகைக்குமென் னகையாள்."

இவ்வருணனை பாதாதிகேசம் எனும் பைந்தமிழ் மரபையும் ஆற்றுப் படைப் பாடல்களில் விறலி வருணனையும் நினைவூட்டுகின்றது.

முதியவர் வருணனையைப் புறநானூற்றுப் புலவன் பாடித் 'தொடித் தலை விழுத்தண்டினார்' என்று பெயர் பெற்றான். திருவிளையாடற் புராணத்தில் விறகாளாய் வரும் சிவனது தோற்றத்தைப் பரஞ்சோதியும் பெரிய புராணத்தில் தடுத்தாட் கொள்ள வரும் முதியவர் தோற்றத்தைச் சேக்கிழாரும் சிறப்புறப் பாடுவர். இங்கு உமறுப் புலவர்,

"நரையொளி பிறங்க உடம்பெலாம் திரைந்து
நடம்புகள் தெரிந்திட வறந்து
தெரிதரும் கட்பா வையினொளி மழுங்கித்
திரள் படர்ப் பீழையும் சாடித்
தரிபடா நாசித் துளையினீர் ததும்பத்
தைத்தறக் கிழிந்தோர் துணியும்
அரையிடைக் கிடந்து சரிந்தடிக் கடிவீழ்ந்
தவிழ்ந்திட ஒருகரந் தாங்க"

என்று கண்ணெதிரே முதியவர் வடிவத்தைக் காட்டும் வண்ணம் அவரின் திறனைப் புலப்படுத்தும்,

மணம்புரி படலத்துள் செம்மல் நபி வீதிவாய்ப் பவனியை 'எழுவகைப் பேதை பேரிளம் பெண் ஈறதாய்க் குழுவுடன் திசைதிசை நிறைந்து கூடினார்' என்று தொடங்கி உலாப்பாடத் தொடங்குகிறார். முடி சூட இராமன் புறப்பட்டு வரும்போது கம்பரும் உலாவியல் படலம் பாடக் காண்கிறோம்.

இளநீரும், மூங்கிலும், வாழையும், கமுகும், ஆம்பலும், தாமரையும், குவளையும் நிறைந்த தோட்டம் போலிருந்தன மகளிர் இருந்த மாடங்கள் என்று உவமையழகு படப் பாடும் உமறு, வள்ளல் பவனிக்கேற்ற மாணிக்க விளக்கம் போன்று மகளிர் இருந்ததாகப் பாடுவார்.

குதிரையை விளக்கும் போது ஓரிடத்தே, "தாவிடின் மனத்தை

ஒக்கும், தாக்கிடின் இடியேறு ஒக்கும், மேவிடில் திகிரி ஒக்கும், எதிர்ந்தவர் செரியை ஒக்கும்''

என்று பாடுவது பொருத்தமான வருணனையாகப் பொலிகிறது. தமிழ்க் காப்பியங்களுள் வருணனை கொடிகட்டிப் பறக்கக் காணலாம்.

சிலப்பதிகாரம், கம்பராமயணம், வில்லி பாரதம் ஆகியவற்றில் கொடியின் வருணனை இடத்திற்கு ஏற்றகுறிப்புடன் இலங்கக் காணலாம். கோவலன் கண்ணகியை வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்டியதாகவும் இராமனை 'ஒல்லைவா' என்று மிதிலைக் கொடி அழைப்பதாகவும் துரியோதனனை பாண்டவர் தங்கட் கல்லால் படைத்துணை ஆகமாட்டான் மீண்டும் போக' என்பன போல ஆடியதாகவும் பாடுவர்.

நபியை வரவேற்கச் சொல்லும்படி அரசர்களை வேண்டுவதாகச் (ஷாம் நகர் புக்கபடலம்) கொடியை வருணிக்கிறார் உமறு.

முகம்மது நபியின் பிள்ளைப் பருவ நிகழ்ச்சியினை பிள்ளைத் தமிழ் போலவே பாடியுள்ளார்.

''எந்நில மனைத்தும் தீன்நெறி நடப்ப
இயல்பெறு மனுமுறை நடப்பத்
துன்னிய அறத்தின் துறைவழி நடப்பத்
துன்பமற் றின்பமே நடப்பப்
பன்னரும் செங்கோல் உலகலாம் நடப்பப்
பாரினிள் குலமுறை நடப்ப
மன்னியர் எவரும் சொற்படி நடப்ப
முகம்மது நபி நடந்தனரே'' (அலிமா......86)

என்று குழந்தை நடப்பதைக் காட்டுகிறார்

பஞ்சத்தை அரசனாக உருவகிக்கிறார். பசி யானையாக, வறுமை சேனையாக, பாவம் பரிகளாகப் பழிதெங்களாக, கலி அமைச்சராக கோபம் கணக்காராகக் கொலையரசன் கொடுங்கோல் நடத்தியதாகப் பாடுகிறார்.

(அலிமா.......9)

பாலைநிலத்தில் நீர்பெறாது தேடிக் கானல் நீரை நோக்கி ஓடி ஏமாற்றம் அடைந்து துயருறும் மானினங்களைக் கூறும் புலவர், கலைஞரைப் போற்றா நிலையை உவமிக்கிறார்.

கடலிடைப் படிந்த மேகம் கருக்கொண்டு விண்ணில் ஏறி மழை பொழிதல் போலத் தமிழ்க் காப்பியங்கள் எனும் கடலில் படிந்து எழுந்து கவிமழை பொழிகிறார் உமறு.

# சீறாவின் உவமை நலன்கள்

**பேரா. மு. அப்துல் கறீம்**
தமிழ்ப் பேராசிரியர்
காதிர் முகைதீன் கல்லூரி
அதிராம்பட்டினம்

### உவமைச் சிறப்பும், உமறுவின் சிறப்பும்

உவமை தருமின்பம் உவமையிலா இன்பம். உவமை என்னும் தவலருங் கூத்தி, இலக்கியம் என்னும் ஏற்றமிகு மேடையில், பல்லுருப் புனைந்து, பல்வேறு பண்புகளைப் பாங்குறக் காட்டும் இயல் பால், உவமையை அணிகளின் தாயெனக் கருதி 'உவமவியல்' எனத் தனியியல்—அணியியலுக்கு ஓரியல்—கண்டார் ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியனுர். "இருபொருள்களை ஒப்பு நோக்கி நலங்காணும்- நலங்காட்டும்—அடிப்படைத் தன்மையே அனைத்துப் பொருளணி களுக்கும் ஆணிவேர்" என்பதை நுணுகி ஆய்ந்தால் உணரலாம்.

கவிஞனின் விரிந்த பேரறிவு, கற்பனைத் திறம், உணர்வாற்றல், கருத்தின் தெளிவு உறுதி ஆக அனைத்தையும் ஒருங்கு உணர்த்தும் களம், கவிஞனின் உவமைக் களமே. புலவன் பெருமையளக்கும் கருவி களுள் பெருங்கருவி உவமைக் கருவி என்ருல் உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை. தமிழ்ப்புலவர் அனைவரும்—தனிப்பாடலாயினும், காப்பியமாயினும்—உவமையை மதித்துப் போற்றியுள்ள திறம்காணின் உவமையின் சிறப்பு உவமையிலாச் சிறப்பென்பது உணரப்படும். எனினும் புலவனுக்கு இடமும், வாய்ப்பும் கிடைக்குமளவுக்கு உவமை மிகுதியும் ஆளப்படுமாதலால், வள்ளுவர், கம்பர் போன்று உமறுப்புலவர் உவமைப் புலவராகத் தோன்றுவதில் வியப்பில்லை.

விண்ணில் பரவிக் கிடக்கும் உடுக்களெனக் காப்பிய முழுதும் பரந்து கிடக்கும் உமறுவின் உவமைகளை, மனத்தால் எண்ணி இன் புறலன்றி எண்ணிக்கையால் எண்ணி இன்புறல் இயலாதென்பது என் அனுபவம்; கருத்தன்று. ஒரு சிறு தொடரளவிலாயினும் உவமை இடம் பெருப் பாடல் சீருவில் இல்லை என்பதைச் சீருவைக் கற்றவர் தெளிவர். பூகமென் கழுத்து, நாகமென்முலை, கடுவார் விழி, கொடி யாரிடை, பொன் மலர்க்கரம், கமலச்செங்கண், வேற்கண், தேன்மொழி, சிலையென வளைந்த சிறுநுதல், புதுமதி வதனச் செழுங்கொடி,

உருசிக்குங் கனிவாய், வெண்ணுரைத் துகில், அறற்குழல், பாய்கயல் விழி, திரைக்கரம், மின்னிடை, வரைதிரண்டனைய பொற்றோள் என நூல்முழுதும், பாடல்தோறும் அடுக்கி வரும் சிறுதொடர்களாலான, பெரும்பாலும் உவமைத் தொகைகளாக வருபவற்றை நோக்கினால்- உடலுறுப்புக்களுக்கு அமைத்துள்ள உவமைகளை நோக்கினால்— பாடல்தோறும் உவமை துள்ளித்திரியும் திறம் காணலாம்.

'மலை திறந்தன்ன மதகின்வாய்', 'முட்குடக்கனி', 'தீதறுங் கருங்கண் செய்யவாய் வெண்பல் சிற்றிடைக் கடைசியர்', 'கோதறப் பழுத்து மதுரமே கனிந்த கொவ்வை வாய் அரம்பையர்' என அடுக்கி வரும் பெருந்தொடர் உவமைகள் முழுக்காட்சியினை ஓவியம் தீட்டிக்காட்டி, உமறுப்புலவரை உவமைப் புலவராக ஐயமின்றி உயர்த்துகின்றன.

## முதற்பாடலுவமை

'வாழ்த்தும், தன்னடக்கமும் கடந்து நாட்டுப்படலத்துள் காப்பியம் தொடங்குகிறது. நாட்டுப்படல முதற்பாடலில், நபிகளுக்கரசர் முகம்மது நபியின் நற்புகழ் இசைக்கப்படுகிறது. முதற்பாட்டில் நூலின் நோக்கத்தை இனிய வகையில் எழில்பெற விளக்கிவிடுகிறார் கவிஞர்.

"தருங்கொடை நயினார் சீர்த்தி சகமெலாம் பரந்து மிஞ்சி
நெருங்கியே விசும்பி லண்ட முகடுற நிறைந்த வேபோல்
இருங்கண வெள்ளைமேக மிரைபசுங் கடல்வீழ்ந் துண்டோர்
கருங்கட லெழுந்த தென்னக் ககனிடைச் செறிந்து மீண்ட"

விண்ணிலும் மண்ணிலும் மண்டுபுகழ் பெற்றவர் பெருமானார். இறைவனும் புகழ்ந்தான்; உலகோரும் புகழ்ந்தனர். 'முகம்மது' 'அஹம்மது' எனப் பெயர் தாங்கி, இறைவனைப் புகழ்வதிலும், இறைவனால் புகழப்படுவதிலும், இணையற்று விளங்குபவர் பெருமானார். நிறை புகழை, நிறைவாகப் பாடிமகிழப் பேருதவி செய்வது உவமையே. பெருமானார் புகழ்பாடி வினைதொடங்கும் இஸ்லாமிய மரபும் இங்கே நாட்டப்படுகிறது. வள்ளுவர் முதற்குறளுவமை போன்று, உமறுவின் முதற்பாடலுவமை எல்லாச்சிறப்பும்இனிது பெற்றிலங்குகிறது. கடவுள் வணக்கத்துக்கு அடுத்த திருக்குறள் அதிகாரம் வான்சிறப்பு. இறையருட் கொடைகளுள் தலையாய பெருமானாருக்கு, (தருங்கொடை நயினார்க்கு) மனிதவாழ்வுக்கு வல்லவன் தந்த கொடைகளுள் தலையாய மழையை உவமை செய்து கருத்து விளக்கம் செய்வதும் மிகப் பொருந்தும். 'நீரின்றி அமையா உலகம்' போலப் பெருமானார் இன்றிப் பெருமை ஏது? நபிவழி இன்றி நல்வழி ஏது?

நாட்டுப் படலத்தின் முதற்பாடலில், நாட்டைத் தாயினும் சாலப்பரிந்தூட்டும் மழை பொழிந்ததைப் பாடியதும், அம்மழை பொழிந்த பான்மைக்குப் பெருமானார் புகழ் மண்டிக் கிடப்பதை உவமையாகப் பெய்ததும் எவ்வளவு பொருத்தம்! விண்ணகத்து வெள்ளைமேகம், மண்ணகத்துக் கடலில் வீழ்ந்துண்டு, கருவுற்றுக் கருமேகமாகி மீண்டும் விண்ணகம் சென்று செழுமழையாகப் பொழியும் செய்தி பேசியது, இறையருளால் மண்ணகம் போந்து, நல்வழி காட்டும் நற்பயன் ஈந்து, மீண்டும் விண்ணகம் போந்து தீனோர்க்கு மன்ருடும் திருத்தூதரின் பெருமையைக் குறிப்பின் உணர்த்துவது காணவேண்டும். பெருமானார் பெரும்புகழ், மண்ணகத்துப் பரந்து விஞ்சி விசும்பிலும் நிறைந்ததென்ருர்.

## பெருமானார் பற்றிய பெருமைமிகு உவமைகள்

பெருமானார் புகழ்பாடும் இப்பெருங்காப்பியத்தில் உமறுவின் உவமைத்திறம், ஈடும் எடுப்புமற்றுக் குன்றென நிமிர்ந்து நிற்பது, பெருமானருக்கு உவமை செய்யும் போதுதான். கவிஞர் உவமைத் திறம் இங்கெல்லாம் உச்சத்தில் இருக்கிறது. உமறுவின் கவித் திறத்திற்கும், உவமையாற்றலுக்கும் பெருவாய்ப்பளித்த பகுதி 'நபியவதாரப் படல'மாகும். முதற்கண், பெருமானரைப் பெற்றெடுத்த அன்னை ஆமினவை அழகுறப் பேசுவது, 'தாயின் காலடியில் சொர்க்கதைக் கண்ட வள்ளல் நாயகத்தின் உள்ளக் கருத்துணர்ந்தவர் உமறு' என்பதை உணர்த்தும்.

"அறத்தினுக் கில்லிடம் அருட்கோர் தாயகம்
பொறுத்திடும் பொறுமையில் பூமிக்கெண் மடங்கு
உறைப்பெருங் குலத்தினுக் கொப்பி லாமணி
சிறப்பினுக் குவமையில் லாத செல்வியே"

அறச்சிறப்பு, அருட்சிறப்பு, பொறைச்சிறப்பு, குலச்சிறப்பு என நான்கு சிறப்புகள் நாயகத் தாயார்க்கு நவிலப்படுகின்றன. 'உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்' என்ற தொல்காப்பியர் கருத்தடிப்படையில், பெண்ணொடு பெருந்தொடர்பு கொண்ட, பெண்ணின் பெருமைக்குப் பெருங்காரணமாக அமையும் இல், தாய், நிலம், மணி என்ற நான்கும் உவமைகளாக அமைந்துள்ளன. பெண்ணின் பெருமைக்கு இல்லத்தொடும், தாய்மையொடும், பொறுமையின் எல்லைக்கு வள்ளுவர் உவமை காட்டிய நிலத்தொடும், மாசற்ற மாணிக்கத்தொடும் அன்றி வேறு எவற்ரெடு உவமை காட்ட இயலும்? தம்மை அகழ்வாரைப் பொறுக்கும் நிலத்தின் பொறையே தலைப் பொறை என்ருர் வள்ளுவர். உமறுப்புலவரோ

அன்னை ஆமினுவின் பொறுமைக்கு பூமிக்கு எண்மடங்கு என்கின்றார். இந்நான்கு அருமையான உவமைகட்குமேல், பாடலின் இறுதி அடியில், 'சிறப்பினுக்குவமை யில்லாத செல்வி' என்று தாம் பெய்த உவமைகளில் நிறைவு காணாது, உவமை இல்லை எனக்கூறி 'உவமைப் போலி' எனத் தொல்காப்பியர் குறித்த உத்தியைக் கையாளுவர்.

பெருமானார் பிறப்பைப் பாடும்போது கவிஞர்க்கு ஆர்வம் மட்டு மின்றி ஆற்றலும் உடன் பிறக்கிறது.

'பானுவின் கதிரால் இடருறுங் காலம் படர்தரு தருநிழ லெனலாய்
ஈனமுங் கொலையும் விளைத்திடும் பவநோ யிடர்தவிர்த் திடுமரு
மருந்தாய்
தீனெனும் பயிர்க்கோர் செழுமழை எனலாய்க் குறைஷியர்
திலதமே எனலாய்
மாநிலந் தனக்கோர் மணிவிளக் கெனலாய் முஹம்மது நபி
பிறந்தனரே''

தருநிழல், அருமருந்து, செழுமழை, மணிவிளக்கு — உவமைகள் போதுமா? கவிஞர் தாகம் தீரவில்லை. பெருமானார் வருகை வெய்யிலில் காய்ந்தவனுக்கு நிழல் போலவும், நோய்களுற்று இளைத்தவனுக்கு மருந்து போலவும், வாடிய பயிருக்கு மழை போலவும், இருளை விரட்டும் விளக்குப் போலவும் இருந்ததென்றார். கவிஞர் நிறைவு பெறவில்லை. ''இருளெனுங் குபிரின் குலமறுத் தறநெறி விளக்க, மறுவிலா தெழுந்த முழு மதிபோல முஹம்மது நபி பிறந்தனரே'' எனக் கூறும் போது, பாட்டும், உவமையும் புலவர்க்கு ஏவல் கேட்கின்றன. பெருமானார் பணிக்கு முன்பு அரபுநாடு இருந்த நிலையைச் 'சுடரிலா மனையது போல, எனச் சுருக்கமாக உரைக்கும் உவமை பொருத்தம் அனைத்தும் பெற்று விளங்குவது காணலாம். 'சுடரிலா மனையென' -இருளடைந்த வீடெனக் கிடந்த அரபு நாட்டில், பெருமானார் தோற்றம் முழுமதியின் விளக்கத்தைத் தந்ததென்றது, மறுவின்றி எழுந்த முழுமதியின் ஒளியெல்லாம் தந்தது, என்பார்.

இவ்வுவமை, உமறுவின் உள்ளங்கவர்ந்த உவமை போலும். 'மதிக்கண் மறுப்போல் உயர்ந்து' என வள்ளுவர் ஆண்டு அரும் புகழ் ஈட்டினர். பத்துக்கு மேலான இடங்களில், உமறுப் புலவர்க்கு உவட்டாது இனிக்கும் இவ்வுவமை காப்பியத்தில் இடம் பெறுகிறது. வானத்து முழுமதியிலும் பெருமானார் முகம் மிகுதியும் ஒளியுடைய தெனப் பெருமானார் தோழர்களே கூறிப் புலவர்க்கு வழிகாட்டி

விட்டனர். ஆதலால், பெருமானாரை நினைக்கும் போதெல்லாம் புலவர்க்கு மறு நீங்கிய முழுமதி நினைவுக்கு வருகிறது. அன்றியும்,

'கறையிலா முழுமதி யெனும் கஃபதுல்லா'
'மறுப்படா தெழுந்த செம்மணி'
'பசுங்கொடி மதிமறுத் துடைக்கும்'
'வையகம் சிறப்ப வருமுழு மதியும்
மறுவுமொத் திருந்தன மாதோ'

எனவாங்குப் பலவிடங்களில் மறுவிலா மதியும், மறுவுடை மதியும் உவமையாக்கப்பட்டாலும், இணையற்ற இறைத்தூதருக்கும், இணையற்ற இறையாலயத்துக்கும் மட்டுமே மறுவிலா தெழுந்த முழுமதியினை உவமைப் படுத்துகிறார். பிறவிடங்களில் மறுவுடன் கூடிய மதியையே பேசினார். பெருமானார் தொடர்புடைய செய்திகட்கு மட்டும், இல் பொருள் உவமை, கூடா உவமை எனக்கூறப்பட்ட உத்தியினை மேற் கொண்டு பெருமானார்க்குப் பெருமை சேர்ப்பார்.

மறுவிலா முழுமதி பெருக்கிய பேரொளி எத்தகைத்து என்று விளக்க உவமை கூறத் தொடங்கி, ஞாயிறு, திங்கள், உடுக்குலம், பிற பொங்கொளி அனைத்தும், சுவன நாடு, மண்ணகம், விண்ணகம், மற்றன. இவற்றின் ஒளியெல்லாம் ஒருங்கு திரண்டால் உவமை யாகுமா எனச்சிந்தித்து, மயங்கிப் பின் ஆகாது எனத் தெளிகின்றார். மேற்குறித்த எல்லா ஒளியும்,

"இங்கெழில் முஹம்மது ஒளியினில் என்றால்
இவர்க்கெவை உவமைசொல் லுதற்கே"

எனத் திகைக்கின்றார் கவிஞர்.

'பல்பொருளினு முளதாகிய கவின் ஓரிடத்துவரின் இதற்கு உவமையாம்" எனக் கூறல், உவமைப்போலி வகை ஐந்தனுள் ஒன்றாகும். இவ்வகையினைச் சங்கப் புலவரும், கம்பன் முதலாய கவிஞர் பிறரும் கவினுறக் காட்டியுள்ளர். இவ்வகையை ஆளும்போது மிக நுட்பமாக ஒரு மாற்றஞ் செய்கிறார் உமறு. நெஞ்சையள்ளும் இளங்கோவும் "கண்ணகி கற்பு அருந்ததி கற்பனையது", என்று கூறாது, "அருந்ததி கற்பின் திறம் கண்ணகி கற்பு அனையது", எனக் கூறுவார். அதுபோலப் புலவர் உமறு, பெருமானார் என்னும் பெருஞ் சுடர் ஞாயிறு, திங்கள் முதலான ஒளியுடைய பொருள்கள் எல்லாம் ஒருங்கு திரண்ட உறைவிடம் எனக்கூறாது, "இவையெல்லாம் ஒளி பெறும் ஊற்றிடம்" என்று கூறினார்.

பெருமானார் பேரொளிக்குப் பலவிடங்களில் திங்களைத் தண்ணொளி என்ற காரணத்தால் உவமை செய்த உமறு, வெய்யொளியாம் ஞாயிற்றின் ஒளியையும் ஒரு அருமையான இடத்தில் உவமை செய்கிறார்.

"அருவரை முழையிற் புக்கு
அருக்கன் ஒத்திருக்கும் வள்ளல்"

இவ்வுவமை இடம் பெற்றுள்ள இடம் நோக்கின் இதன் அருமை புலப்படும். தௌர் மலைக்குகையில், அருமைத் தோழர் அபூபக்கர் அவர்கள், 'பகைவர் பலர்; நாம் இருவரே' எனக் கூறியபோது பெருமானார், "இறைவனொடு நாம் இருவருமாக மூவர் உளோம்" எனக் கூறிய மிகச் சிறந்த காப்பியக்களம் இது. இவ்விடத்துப் பெருமானார் பேச்சின் அறிவொளியும், அவர் உள்ளத்துப் பொருந்திய இறை நம்பிக்கை ஒளியும் நினைந்தால், ஞாயிற்றொளிக்கு உவமை சொன்ன பொருத்தம் தோன்றும். அன்றியும் பெருமானார் அதுபோது வீற்றிருந்த இடம் தௌர் மலையின் குகையன்றோ? அங்கிருந்து உரைத்த வள்ளல், 'மலை முகட்டிலிருந்து ஒளி பொழியும் ஞாயிறு போன்றனர்' என இடம் நோக்கி உவமை கொண்டாலும் உவமை இனிக்கிறது.

சிலவிடங்களில் ஞாயிற்றினொளிக்கு உவமை சொன்னவர், ஓரிடத்து இரண்டினொளியையும் இணைத்துக் கூறும் திறத்தினைக் காப்பியத் தொடர்பழகு நோக்கிக் கண்டு மகிழவேண்டும்.

"படியினிற் சசியுஞ் செங்கேழ்ப் பருதியும் நிகரொவ்வாத
வடிவெடுத் தனைய வள்ளல் முஹம்மது" என ஞாயிறு திங்கள் இரண்டொடும் ஒப்பிட்டு அதனினும் உயர்ந்ததாக – நிகர் ஒவ்வாத–பெருமானார் பீடுயர்த்தும் இடம் நம் உள்ளம் பிணிப்பதாகும்'

மற்றோரிடத்தில், பெருமானார் மாமனார் குவைலித் கூற்றாகக் கூறும் இடத்தில்,

"வடிவாலும் குணத்தாலும் குலத்தாலும்
முஹம்மது நேர் மற்றோ ரில்லை." என்கின்றார். உவமை இல்லை என உரைக்கும் உத்தியாகிய உவமப் போலியின் முதல் விகற்பத்தையே, பெருமானார்பற்றிய உவமையில் உமறு மேற்கொள்கிறார் என்பது நினைவில் நிறுத்தத் தக்கது. 'முஹம்மது நேர் மற்றோரில்லை' என நிகரற்ற நிலையை வரையறுக்கும்போது, எவற்றில்

எல்லாம் நிகர் இல்லை என நிகரற்ற நிலையை வரையறுக்கும்போது, எவற்றில் நிகர் இல்லை என விளக்குவாராக, வடிவு, குணம், குலம் மூன்றைக் குறிக்கிறார் கவிஞர்.

"வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்

பிறப்பினும் வரூஉந் திறத்த வென்ப" எனத் தொல்காப்பியர் கூற்றுக்கு, இளம்பூரணர் "நினக்குவமை இல்லை என்னும்வழி செயல், பயன், உறுப்பு, உரு, பிறப்பு என்ற ஐந்து அடிப்படையில் ஒப்பாரில்லை எனல் வேண்டும்" என விளக்கம் செய்வர். இதனை வழுவாது போற்றிய உமறுப்புலவர் உறுப்பு, உரு இரண்டையும் வடிவில் அடக்கி, செயல் பயன் இரண்டையும் குணத்துள் அடக்கி, பிறப்பினைக் 'குலத்தாலும்' எனக்கூறுவர். உவமைப் போலிக்குத் தொல்காப்பியர் குறித்த ஐந்து நிலைக்களங்களையும் மூன்றுக்குள் அடக்கிக் காட்டியிருக்கின்றார்.

## உள்ளம் பிணிக்கும் கருத்துநிறை உவமைகள்

எண்ண எண்ண இனிக்கும் கருத்தாழமிக்க உவமைகள் பல வாயினும் ஒன்றிரண்டு சுட்டல் சாலும். புலவர் தமிழ்த்திறமும், கற்பனை ஆழமும் காட்டுவன அவை. ஷாம் நகர் புக்க படலத்துள் இடம்பெறும் ஒப்பற்ற உவமை.

"ஒரும னைப்பிறந் தொருமனை யிடத்தினி லுறைந்து
கருவ ரத்தரித் தீன்றுதன் கணவனை யிகழாப்
பெருவ ரம்புறும் பெண்கொடி யெனத்தலை சாய்த்துத்
திருவுஞ் செல்வமுந் திகழ்தரக் காண்பன செந்நெல்"

இங்கு நெற்கதிர்களைப் பெண் கொடிகளாகக் காண்கிறார் கவிஞர், மக்களை ஊட்டி வளர்க்கும் நெல்லுக்கு, மகவை ஊட்டி வளர்க்கும் பெண் உவமையான ஒரு புடைப்பொருத்தம் காட்டினால் போதுமா? வினை, பயன், மெய், உரு என்ற உவமைத் தோற்றம் நான்கனுள்ளும், சிறப்பு நலன், காதல், வலி என்ற உவமை நிலைக்களங்கள் நான்க னுள்ளும் ஒன்றும் பலவும் ஒத்துவரவேண்டும் என்று தொல்காப்பியர் குறித்தனரேயன்றி, ஓருவகையில் இவ்வெல்லாம் ஒன்றிவரவேண்டும் என்று குறித்தார் இல்லை. ஒருவமையில் இவையெல்லாம் ஒருங்கு வைத்து அழகு பார்க்கிறார், உவமைக் கவிஞர் உமறு.

திருவும் செல்வமும் திகழ்தரும் அடிப்படையில் உவமை, பொருள் இரண்டையும் பொருத்தும் போது, ஒருமனையில் பிறந்து வேறொரு மனையில் சிறந்துறைதல், கருவுறுதல், ஈனல், கணவனை

இகழாப் பெருவரப்புறுதல், கொடி எனத் துவண்டு நாணத்தால் தலைசாய்தல் இவ்வனைத்திலும் பொருத்தம் உண்டு. பெண்ணுக்கும், நெல்லுக்கும். உவமையின் தோற்றங்கள், நிலைக்களங்கள் அனைத்திலும் ஒப்புக்காட்டல் காண்க. நெல் பொருளாகவும், பெண் உவமையாகவும் இங்கு இடம் பெறும் என்றாலும் கவிஞர் கருத்து நெல்வளம் காட்டுவது மட்டுமா? இல்லை. இல்லை. இஸ்லாமிய நெறியில் பெண்ணின் பெருமை பேசுவதாகும், நெல்வளம் காட்டும் போக்கில், பெண் பெயத்தகும் உயர்பண்புகள் காட்டப்படும்.

உவமையில் பொருத்த அழகு மட்டுமா பொருள்? 'புலன் அல்லாதன புலனாதலும், கேட்டோர்க்கின்பம் பயத்தலும்'' உவமையின் பயன் என்பர் இளம்பூரணர். அது மட்டும் அன்று. இயற்கை வருணனையாயினும் உவமைச் செய்திகளாயினும், அழகு நோக்குடன் மட்டும் பார்ப்பது இஸ்லாமிய மரபும் அன்று; தமிழ் வழக்கும் அன்று. உவமையிலும், உயர்ந்த செய்திகளை — உறுதிப்பொருள்களை — வாழ்க்கை வழிகளைக் காட்டுவதே கவிஞர் நோக்கம். ஷாம்நகர் வளம் பேசும்போது, எவ்வளவு பொருத்தமாகப் பெண்ணின் பெருநலம் பேசுகிறார் கவிஞர் என்று கண்டும், வியப்பூட்டும் வகையில் நெல்லுக்கும் பெண்ணுக்கும் ஒப்புமை பல காட்டும் விதத்தைக் கண்டும், தமிழ்ப்புலவர் வரிசையுள் உமறு பெறும் உயர் பேரிடத்தைக் கணித்தல் வேண்டும்.

பொருள் நிறைந்த உவமைகளை எண்ணும்போது, ''நெல் முளை சிதறிய தோற்றம் பொன்மழை பொழிவது போலும்'' என உரைப்பதும் எண்ணத்தக்கது. உழவர் நெல் மணியா விதைக்கிறார்கள்? பொன்மழையல்லவா பொழிகிறது என்ற கவிஞர் கூற்றில், நெல் நெல் விதைத்தால் ஒன்றுக்கு நூறாய்ப் பயன் தருவதால் வந்த பயனுவமையாக எண்ணி மகிழ்வது மட்டும் அன்று, உழவர் கையிலிருந்து சிதறி வீழும் நெல்மணிகளின் தோற்றம், பொன்னாலான செம்மழைத் துளிகள் சிதறி வீழ்வதுபோல் இருக்கிறது என்ற வடிவ உவமையும் இன்பம் விளைவிக்கிறது. அடுத்து இன்றியமையாது குறிக்கத் தகுந்த மற்றொருவமை,

பழுத்தபண் ணொலியால் தீய்ந்த
பயிருயிர் பெறுவதாக'' என்பதாகும். நுபுவத்துக் காண்டத்துள், ஜிபுறயீல் அவர்கள் மறையோதப் பெருமானாரை வேண்ட, தொடக்கத்தில் மறுத்துப்பின் ஓதியது கேட்ட ஜிபுறயீல். தம் செவியகங் குளிர்ந்தது எனக் கூறவருகிறார் கவிஞர். ஜிபுறயீல் செவியகங் குளிர்ந்த தன்மை, வாடிய பயிர், பண்ணொலி கேட்டு உயிர்பெற்றது என்கிறார். பண்ணின் ஒலியால் வாடிய பயிர் உயிர்பெறும் என்ற

அறிவியல் உண்மை, இன்று செயல் முறையில் உணர்த்திக காட்டப் பட்டுள்ளது. இதனை அன்று தெளிவாகப் புலவர் கண்டு கூறுவது வியப்பூட்டுவதாகும்.

அடுத்து தீன் நிலை கண்ட படலத்துள் இஸ்லாத்துக்காக இன்னுயிர் விடுத்தோரைப் பாராட்டும் போது, ஆஸிறு மனைவி சுரையாவின் பெருமையினை "மாசறத் தீன் பயிர் வளர்க்கும் வேலியார்" எனக் குறிப்பது கருதத்தக்கதாகும்.

பதுறுப் படலத்தில், சக்பு என்னும் பெருமானார் தம் குதிரையின் ஆற்றல் கூறும்போது,

"தாவிடின் மனத்தை யொக்கும்; தாக்கிடின் இடியே ரெக்கும்;
மேவிடின் திகிரி யொக்கும்; எதிர்த்தவர்க் கெரியை யொக்கும்;"

என உவமைப் படுத்துவர். குதிரையின் விரைந்த செலவுக்கு மன வேகத்தையும், பகைவர்க்கு விளைக்கும் தீங்குக்கு இடியையும், எரி யையும் உவமை கூறுவதில் மரபுநிலையே மிகுதியாகத் தெரிகின்றது. எனினும், பொருத்தமும் கருத்து விளக்கமும் இவ்வுவமையின் பெரும் பயனை உள்ளத்தில் சேர்க்கின்றன என்பதனை மறக்க முடியாது.

## உருவகப் பெயர் பூண்ட உவமைகள்

மதியை அழைப்பித்த படலத்துள், முழுநிலவு மொழிந்ததாகப் பெருமானார் பெருமையினைக் கற்பனை ஊற்றெடுக்கக் கவிதையாக்கும் போது, பேரின்ப விளக்கு, 'அமர் உலகினுக்கு நல்லரசு,' 'பவக்கடல் கடக்கவரும் திருமரக்கலம்,' 'கருத்துறும் அறிவு', 'முழுமணிச்சுடர்' என ஊனுருக்கும் உவமைகளை அடுக்குகிறார் கவிஞர் உமறு. அதுபோன்றே பெருமானார் திருமகளார் அன்னை பாத்திமாவின் அருமை பேசும் போதும், பாத்திமாவின் திருமணப்படலத்தில், 'இருவிழி மணி சோதி மறைபடா விளக்கு', 'வானிடத் துறையாமின்', 'கறைபடா மதி', 'கவின் குடியிருந்த கொம்பு', 'பொறை என வளர்ந்த கற்பு' எனவெல்லாம் கட்டிப் பொன்னொளியென மின்னும் கவின்மிகு உவமை களால் உளங்கவர்கிறார் கவிஞர். இத்தகு இடங்கள் பலப்பல. இவை யெல்லாம், இக்கால இலக்கண ஆசிரியர் குறிக்கும் பெயரால் உருவக மாகாவோ என ஐயுறலாம்.

இவை போலவே, பெருமானார் பெருமைமிகு உள்ளத்தில் அன்னை கதீஜா இடம் பெற்ற அழகுக் காதலை அருமையாக உரைக்கும் இடத்தும்,

"முகம்மது நெஞ்ச மென்னும்
கடிகமழ் வாவி யூடு கருத்தெனுங் கமல நாப்பண்
பிடிநடைக் கதீஜா வென்னும் பெடையனம் உறைந்த தன்றே

எனக் கண்கொளா ஓவியக் காட்சியை உவமை அடிப்படையில்

உருவாக்குகிறார் கவிஞர். நெஞ்சமென்னும் வாவி, கருத்தெனும் கமலம், கதீஜாவெனும் பெடையனம் எனவரும் திருமிகு தொடர்களை, உருவகமன்றோ இவை? உவமை ஆமாறு எங்ஙனம் என ஐயுறலாம். இவையெல்லாம், ''மருளறு சிறப்பினஃ துவம மாகும்'' என, மயங்காது உவமையெனக் கொள்ளவேண்டும் எனத் தொல்காப்பியர் உரைக்கின்றார். ஒப்புமை அடிப்படையில் பல்வேறு அமைப்புக்களால் உத்திகளால் கவிஞன் உவமையை ஆளுகின்றான். அப்பல்வேறு உத்திகளையும் பல்வேறு அணிகளாக வேறு பிரித்துக் காண்பதில் முறையும் அறமும் இல்லை. இலக்கணம் வேண்டுமானால் விரிந்து பெருகி வளரலாம். முகமொத்த தாமரை எனும்போது உவமையெனக் கூறி, முகத்தாமரை எனும்போது உருவகம் என்றால், இங்கு இரண்டு தொடர்களுள்ளும் உள்ள வேறுபாடு என்ன ? குறித்த முறையிலேயே வேறுபாடு உண்டு; பொருளில் இல்லை. ஆகவேதான் உருவகஅணி யெனப்பிரித்துப்பேசும் தண்டியாரும், உவமை, உருவகம் இரண்டையும் வேறு பிரிக்கும் வரம்புகள் இல்லை என வெளிப்படையாகவே புறனடை உரைப்பர். இளம்பூரணரும், '' ஒரு சாராசிரியர், ரூபகம் சொல்லப் பட்டது, உவமைபற்றி வருதலின், இஃது உவமையின் பாகுபாடு என்பது இந்நூலாசிரியர் கருத்து '' என இது உவமையே என்ற தொல்காப்பியர் கருத்தை ஏற்று வற்புறுத்துவர். ஆகவே மேற்குறித்த உமறுவின் ஓவியத் தொடர்கள் எல்லாம் அவர் உவமைத் திறம் காட்டும் உயிரான தொடர்கள் எனக்கொண்டு, அவற்றின் அழகில் ஈடுபடவேண்டும்.

# சீறாவில் கனவுகள்

## (விலாதத்துக் காண்டம்)

தக்கலை எம். எஸ். பஷீர்,
நூலகர், மசுஹறுல் கல்லூரி, ஆம்பூர்.

"காப்பியங்களில் கனவுகள் பல நிலைகளில் ஆளப்படுகின்றன. பெரும்பாலான கனவுகள் பின்வரக்கூடிய நிகழ்வுகளை முன்கூட்டியே உணர்த்தப் பயன்படுகின்றன."

"The simplest kind of dream is that which gives a more or less literal of the coming events" (*C. M. Bowra-Heroic Poetry* forecost *P. 291.*) சில காப்பிய தொடக்கத்திற்கே காரணமாக அமைந்து காப்பியச்செய்தியைத் தருகின்றன. "Dream plays a large part in starting a heroic poem" — *Heroic poetry*. வேறு சில ஊழை வலிறுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இன்னும் சில பாத்திரப் பண்பை உணரத் துணைபுரிகின்றன. சில பாத்திரங்கள் செயற்படத் தூண்டுகின்றன. நிமித்தக்கனவுகளாக மட்டுமே அமைவனவும் உள. இலக்கியங்களில் ஆடவர் கனவைவிட பெண்டிர் கனவே மிகுதியாக அமைந்துள்ளன. உலக இலக்கியங்கள் எல்லாம் கனவுக்காட்சிகளைக் கொண்டதாகவே இயங்குகின்றன. தொடர்நிலைச் செய்யுளில்- காப்பியங்களில்- கனவுகள் வகிக்கும் பங்கு முக்கியமானது. நினைந்தின் புறத்தக்கது.

விந்தையர் உமறுவின் செந்தமிழ்ச் சீறாக்காப்பியத்தில்— விலாதத்துக் காண்டத்தின் கண் அமைவுறு கனவுகளை இக்கட்டுரை யின்வழி காண்போம். நபிபெருமானாரும் அவர்தம் வாழ்க்கையில் பெரிதும் பங்கெடுத்துக் கொண்ட தனிப்பெருமை வாய்ந்த தவத் திருச்செல்வியர்களான-பெண் பாத்திரங்களான (அ) நபிபெருமானாரை ஈன்ற ஆமீனா அம்மையார் (1) (ஆ) அன்னையருக்கு ஈடாக அமு தூட்டி வளர்த்த அலிமா அம்மையார் (2) (இ) அருமை மனைவி கதிஜா நாயகியார் (3) காணும் கனவுகளும், (ஈ) பெருமானார் கண்ட கனவுகளும் (2) ஆக ஏழு கனவுக்காட்சிகள் இடம் பெறு கின்றன. அவைகள் இலக்கிய நயம் பயப்பன. காப்பியச் சிறப்புக் குரியன. இக்கனவுகள் எல்லாம் நற்கனவுகளாக அமைகின்றன.

### அ. ஆமினா கண்ட கனவு :

பெருமானார் முகம்மது நபி (ஸல்) அவர்களின் அன்னையார் ஆமீனா அவர்கள் கண்ட கனவினை - பெருகிய கோடி சந்திர பிரகாச

மாய் வரும் ஒரு பெருங்கதிர் மதியம் போலவே கருணை வீற்று இருந்த செங்கமலக்கண் இணை திருநபியின் திருஅவதாரப்படலத்தில் காணலாம்.

"உயிர் என இருந்து அசைந்து, ஒசிந்த பூங்கொடி மயில் எனும் ஆமீனு", "பொற்புஎலாம் பொதிந்த பொற்கொடி, நற்பூவையர் கற்பு எலாம் திரண்டு உருக்கொண்ட கன்னி." "அறத்தினுக்கு இல்லிடம்..............சிறப்பினுக்கு உவமையில்லாத செல்வி" ஆமீனு அம்மையார் பெருமானுரின் கர்ப்பம் தரித்த தருணத்தில் கண்ட கனவாம் அது.

> திங்கள் இறஜபு முதல் தெய்தி வெள்ளி இராத்
> துங்க ஆர்குழல் முகம்மது பேர் ஒளி துலங்கி
> எங்கள் நாயகர் அப்துல்லா நுதல் இடத்து இருந்து
> மங்கை ஆமீனு வயிற்றினில் தரித்தது அன்றே!

தரித்திடும் முதல் திங்களில், ஆமீனு கனவில்-சூரியன் தோன்றி, "உன் உதிரத்து இருக்கும் சந்ததி வறுமையை உடையது. இவ் வுலகத்து ஒப்பில்லா நாமம் முகம்மது" எனக்கூறியகன்றது. இங்ஙனமே இரண்டாம் திங்கள் முதல் ஒன்பதாம் திங்கள் வரை கனவினில் முறையே இதுரீசு, நூரு, இபுராகீம், இசுமாயில், மூசா, தாவூது, சுலைமான், ஈசா ஆகிய நபிமார்கள் தோன்றி பலவாருக ஏத்தி, வாழ்த்தி தக்கபெயர் 'முகம்மது' என இடும் என ஒன்பது திங்களிலும் கூறிப் போந்தனர். அவர்களுள் தாவூது நபி கனவினில், முகம்மதுவே கியாமத்நாள் எனும் இறுதி நாளின் மன்ருட்டத்திற்கு உரியவர் என ஏத்தினுர். ஈசா நபி பெருமானுரை "நான்கு வேதப் பொருளுக்குரிய விளக்கமானவர்" எனப் புகழ்ந்தார். வானவரும் கனவினில், "முகம்மது அல்லாஹுவின் திருத்தூதர் · முகம்மது' எனப்பெயரிடுக" என வாழ்த்திச் சென்றனர். இக்கனவின் மூலம் முகம்மதுவின் திருப்பெயரும் அவர் பெற்ற, பெறவிருக்கும் பெறலரு பெற்றியும் வெளிப்படுத்தப்பட்டன. வாழ்க்கை வரலாற்றுக்காப்பியம் நாயகரின் மாண்பு முதற்கண் விரித்துரைக்கப்பட்டது. எனவே ஆமீனு கண்ட கனவுப் பெருமானுருக்கு பெயர்சூட்டும் நற்கனவாகவும், பெருமானுரின் விண்புகழை மாநிலத்தின் மீது அறிவிக்கவும் செய்ய வல்ல நற்கனவாகவும் அமைந்தது. இக்கனவின் பெருமையினை அஷறத்துல் முபஷீரின்களில் ஒருவரான அப்துற்றகுமானிபுனு அப்புடைய முதிர்ந்த மூதாட்டியானதாயார் 'சபா' வெனும் பெருமாட்டி விளக்கம் தந்து தெளிவுபடுத்தினுர்கள்.

### ஆ. அலிமா கண்ட கனவு :

அரபு வளநாட்டில் அதனுள் "குனேயின்" என்ற பதியில் அலிமா குடியிருந்தார். குனேயின் ஊரில் பஞ்சம் தலைவிரித்தாடியது. மக்கள் வாடி வதங்கினர். அவ்வூரார் பாரினில் சிறந்த மக்கமாநகரை நாடிச் செல்ல முடிவெடுத்தனர். அலிமா குடும்பத்தினரும் அவ்வாறே பயணம் செல்ல முடிவெடுத்தனர். அலிமா கண் துஞ்சிடலானுள். அன்று இரவினில் கனவொன்று கண்டனள்.

நறுமணமும் அழகும் நிறை பசுமைமிகு மரகத நிறமும் பொருந்தியவோர் மரமானது, மடியின் மீது உண்டாகியது. அம்மரத்தின் தூர், இலை, பணர் முதலாகிய இடங்களில் எல்லாம் அளவிற்கு அதிகமான கனிகள் பழுத்துத் தொங்கின. அந்தச் சிறப்புற்ற நறுமணக் கனிகளினின்றுந் தேனெழுகி ஒளி சொரிந்தது. அந்த ஒளியுமிழ்கனிகளை எல்லாம் தான் தின்னக் கனவு கண்டார். இதனை அலிமா முலையூட்டுப்படலம்,

"வேரிய மடிமிசை விருக்கம் ஒன்று அதில்
தூர் இலை பணர் எலாம் கனிகள் தூங்கிடச்

சீர் பெறும் நறைக்கனி அமுதம் சிந்தவே
மரகத நிறமரம் மடியில் தோன்றியே

சொரி கதிர்க்கனி எலாம் துய்பக் கண்டாள்"
செங்கயல் வரிவிழிமயில் அலிமா. என்கிறது.

இந்நற்கனவினைக் கேட்ட அலீமாவின் தந்தை அறிவுறு 'துவைபு நஜ்ஜுமு' கலைவல்லார் தெளிந்து, ஊடறுத்துச் சொன்ன கனவின் பலன் ஆவது: மக்கமா நகர் வந்த அலிமா "நெறிதிகழ் மக்கமாநகரில் நீவிர்செலின், பெரும்பயன் உறுதி உண்டு." அம்மையார் "முகம்மது" குழவியினுக்கு அமுதூட்டும் நற்பேறு பெற்ருர். குனேயினில் கண்ட கனவும் நனவானது. ஆமீனு விடமிருந்து நபிகள் நாயகத்தைப் பெற்று குனேயின் மீண்டனர். வறுமையும் சிறுமையும் நீங்கினர். மக்கமாநகர் பிரயாண அன்றிரவு கண்ட கனவினை ஊராருக்குத் தெரிவித்தனள். "என் மடியின் மீது ஓர் அழகு மரம் எழுந்து, அம்மரம் நிலத்திலே தனது கனிகளை வாரிச்சிந்த, அக்கனிகளை வாரி வாரி நான் தின்று வறுமையும், பசியும் தீர்ந்து மனமகிழ்வுற்றேன்" என்றனள்.

முகம்மது குழவியின் வரவால் குனேயின் புதுப்புனைவு பெற்றது. வளமும் வலிவும் ஓங்கி வளர்ந்தது. அலிமா ஆரிது இல்லமும்

அழகுற்று செல்வச் சிறப்பெய்தியது. இங்ஙனமாக அலிமா கண்ட கனவும் நன்மைக் கனவாக அமைந்தது.

## இ. கதிஜா நாயகியார் கனவு :

பாதை போந்த படலத்தில் கதிஜா நாயகியாரின் முதற் கனவினைக் காணலாம்.

முகம்மதின் புகழ் மணம்தான் மக்கத்தை வளைத்ததைப்போல் தகவுடை கதிஜாவின்பால் தாவிச்சென்றது. கதிஜா நாயகியார் அழைப்பின் பேரில் பெருமானார் கதீஜா மனைக்குச் சென்றார்கள். எரிமணித்தவிசின்மேல் வந்து இருந்த இலக்கணமும், பொற்பும், திருஉறைமுகமும், அன்புதிகழ்தரும் அகமும், கண்ணும், விரிகதிர் பரந்த மெய்யும், விறல்குடி இருந்த கையும், மருமலர் வேய்ந்த தோளும், மணிதிரண்டு அனையதாளும், பேர்ஒளிபரப்பிப் பொங்கிப் பெருகிய அழகு வெள்ளம்தனில் மூழ்கினர் கதீஜா. பெருமானார், நாண் எனும் போர்வை போர்த்துக் கூர்த்த அவா வெளிப்படாமல் கற்பு எனும் வேலி கோலி நின்றார். பின்பு அம்மாதின் மாக்கடல் அனைய கண்ணும் மனமும் பின்தொடர்ந்து செல்ல கொழுமனை சென்றார். கதீஜா நாயகியார் பெருமானாரைக் கருத்தினில் இருத்தி நினைத்த வண்ணமானார். கண்துஞ்சிடலானார். கனவொன்றினைக் கண்டார்.

வான லோகத்தில் நிறைந்து விரிந்திருக்கும் விண்மீன்களின் கூட்டத்தின் நடுவில் சிறந்திருக்கும், குற்றமில்லாத அமுதகிரணம் பொருந்திய பூரணச்சந்திரன், அந்த விண்மீன் கூட்டங்களை நீங்கி இலேசாக இறங்கிவந்து, தமது மடிமீது மறைவில்லாமல் அழகாக விளையாடவும், அது கண்டு தாம் அணிந்திருக்கும் ஆடையின் முந்தானை கொண்டு அதனை ஒப்பற்ற மகிழ்வோடு பொதிந்து குறைவில்லாது நெஞ்சோடணைக்கவும் அதனால் மனம் மிகவும் குளிரவும் கதிஜா நாயகியார் விடியற்காலைதனில் கனவொன்று கண்டார்.

இதனைக் கவியரசு உமறு,

" நிறையும் வாகனம் மலர்தரும் உடுஇனம்
நரை விடுத்து எளிதாகக்

கறை இலாக் கலை முழுமதி மடிமிசைக்
கவினெடு விளையாட

மறைவு இலாது கண்டு அணிதுகில் கொடுதனி
மகிழ்வொடு பொதிவாகக்

குறைவு இலாது உரத்துடன் அணைக்கவும்
அகம் குளிரவும் மிகத்தானே

எனப்பாடுகிறார். கனவின் நேரமும் பொழுதும் கணக்கிடுவர். இக் கனாக்கண்ட பொழுதினை ''எல்லையில் எல்லவன் புகுந்து இரவு இருள் பரந்திடு காலைக்கருக்கும் மைவிழி துயில் தருபொழுது'' என உமறு குறிப்பிடுகின்றார். ''விடியற்காலை கனவு பலிக்கும்'' என்பது இன்றும் தமிழகத்தில் நம்பப்பட்டு வரும் கருத்தாகும். இந்நம்பிக்கை இக் கனவோடு இணைந்தமை, ஒப்பிட்டுணர்வதற்குரியது. இக்கனாவின் பொருளை மாதுலன் என்பவன், ''வண்டு உலாம்புயநபி உமை இதம் உற மணம் முடித்திட நாடிக்கொண்டதாம் இது'' என்று ஓதிட உடல், அகம் குளிர்ந்தார் கதிஜா நாயகி. அந்நேரம் அபித்தாலிபும் பெருமானாரும் வியாபார நிமித்தம் உதவிபெற கதிஜா நாயகியார் இல்லம் வந்தனர். கதிஜா, வாணிபத்தின் ஏற்றஞ்சேர் பொறுப்பனைத்தும் பெற்றார். மேற்கண்ட கனவின் பலன், இதன்பின் ஊசா மூலம் தெளிவுபடக் கூறப்படுவது காணலாம். ஊசா இந்தப் படலத்தில் திரிகாலமுணர்ந்த அறிஞன், ஊசா இல்லத்தில், மைசரு கதிஜாநாயகியின் ஆணைப்படி கனவின் வரலாற்றைச் சொன்னான். கதிஜாவின் கனவைக்கேட்ட ஊசா, ''முஹம்மது தீன் மறை நபி இவரே'' என்றார்.

'' கலைநிறை மதிலாய் மடிமிசை இருப்பக் கனவு கண்டு அகம்மகிழ்
கதிஜா

நிலமிசை இவர்க்கே மனைவியாய் இருந்து இந்நீள் நிலம்
புரப்பது தவறு இல்

குலம் மிகப்பெருகும் செல்வமும் வளரும் குறைவு இலாப்
பதவியும் பேறும்

அலகு இலாது அடைந்தது என்னவும் உரைத்தேன் என
அரிவையர்க்குரை என்றான்! ''

இங்ஙனமாக பாதைபோந்த படலத்தில் கதிஜா நாயகி கண்ட கனவின் பயனை மாதுலன் விளக்கிக்கூயறிபின், கதிஜா ஷாம் நோக்கிச் செல்லும் மைசருவிடம் மேலும் கனவிற்கு விளக்கம் பெறக்கூறி அனுப்புகிறார். ஊசா அறிஞனால் இவ்வாறு, எட்டுப்படலங்களுக்குப் பின்வரும் ஊசாவைக் கண்ட படலத்தில் மேற்கூறியவாறு விளக்கந் தரப்படுகிறது. இதன் மூலம் உமறுவின் காப்பியக்கோவைத் தொடர்பின் மாட்சியும் நன்கு புலப்படும்.

## இ. கதீஜா நாயகின் கனவு - 2

மணம் பொருத்து படலத்தில், காதல் துயர்மிகையால் கதிஜா நாயகியார் துன்புற்றார். மண்ணினுக்கு அரசாய் வந்த, முகம்மதின் வடிவு கூர்ந்து, கண்ணினும் கருத்தும் மாருது, அடிக்கடி தோற்ற நாணிப் பண்எனச்சிவந்த வாயார் பஞ்சணை பாயல்புக்கி எண்ணிலாது எண்ணம் உற்று துயிலுங்காலை கனவொன்று கண்டார்.

ஒரு மரம் வயிரத்தினல் வேரூன்றிச் சிவந்த மணிக்கிளைவிட்டு ஓங்கி வளர்ந்து, ஒழுங்கான பச்சை மரகதத்திறை் ஒளிமயமான இளந்தளிர் தளிர்த்து வெளியிட்டு, நன்மை பொருந்திய திரு மக்கமா நகரை முழுமையும் மூடி, நல்ல கனிகளையுகுத்து வெற்றி மலர்களை இடைவிடாமற் தங்கள் சிரசின் மேற்சொரிந்தன. மேலும் வானமீதோங்கி நீண்டு தோன்றி, மரகத மாணிக்க மரத்தி லுள்ள அழகிய பூக்கள் ஆகாய முழுமையும் மணம் கமழ்கின்ற தாயிருந்தன. அதைக்கண்டு தேன் பொருந்தும் பூமாலையைச் சூடி யிருக்குங் கூந்தலையுடைய பெண்டிரும் ஆடவரும் பெருமையுடன் போற்றுவதாகவும் கருங்குவளை புட்பத்தையுங் கடந்திகழ்ச்சி செய்யும் அழகான கண்களையுடைய கதிஜா நாயகி கனவு கண்டார்.

> "வயிரவேர் ஊன்றிச் சேந்த மாணிக்கப் பணர்விட்டு ஒட்டி
> இயன் மரகதத்தின்சோதி இளந்தளிர் குழைப்ப ஈன்று
> நயன் உறும் நகரை மூடி நற்கனி உகுத்து வாசச்
> செயின் மலர் இடைவிடாது சிரமிசைச் சொரியமாதோ?
> வானமட்டு ஓங்கி நீண்ட மாணிக்கத் தருவின் பொற்பூ
> நானிலம் முழுதும் விண்ணும் நறை கமழ்ந் திடுவ நோக்கித்
> தேன்அமர்குழலினரும் செல்வரும் பெரிதும் போற்றப்
> பானலம் கடந்த கண்ணர் பயன் உறும் கனவு கண்டார்.

'ஹக்கத்து' என்னும் மறைவல்லான் தன்னைக்கூவி அல்லினில் தெரியக்கண்ட காட்சியைக் கூறினர். ஹக்கத்துகனவைக் கேட்டு, மனத்தின் உள்படுத்தித் தேர்ந்து, கடந்த நூல் முறையினலும், கல்வி கேள்வியாலும், படர்ந்ததன் அறிவாலும் பகுத்துச் சீர்தூக்கிப் பார்த்து, "பெருமாட்டியே! முகம்மதை நீர் மணம் செய்து கொள்ளப் போகிறீர்", என்று கூறினர். மேலும் அக்கனவின் விளக்கத்தினை,

"வயிரவேர் — ஈமான், மாணிக்கத்தரு — முகம்மது நபி, நறுமணந் தழைத்தல்— தீன்விளக்கம், வானவர் செயல் பூமாரியாகத் தெரியும் படி சொரிந்தது — தங்களை முகம்மது திருமணம் முடித்தல்" என

விளக்கமும் தந்தார். இவ்வாறு ஹக்கத்து என்பவர் புதிய கனவினுடைய பொருளைத் தேர்ந்து, ஒளிபொருந்திய மூன்றும் பிறைபோல் வளைந்த நெற்றியையுடைய கதிஜாவிற்குச் சொல்லி அவர்களைப் போற்றிப் புகழ்ந்தார். கனவுகளை விளக்குவதற்கு சிக்மண்டு பிராய்டு (Sigmund Frued) இரண்டு நிலைகளை பழங்காலத்திலிருந்து கொண்டுள்ளதாகக் கூறுகிறார். ஒன்று முழுநிலை விளக்கமாகவும், மற்றொன்று துண்டுநிலை விளக்கமாகவும் (Decoding interpretation) அமைகின்றன. (சீவக சிந்தாமணி விசையை கனவு, பெருங்கதை 5:1 76-114- முழுநிலை விளக்கக் கனவு; நிமித்தக் கனவுகளை முழுநிலை விளக்கமாகக் கொள்ளலாம். புறம் 41; 4-12யும் எடு) இவண் கதீஜா பிராட்டியாரின் கனவுகளை முழுநிலை விளக்கமாகக் கொள்ளலாம். (Symbolic interpretation — Interpretation of Dreams — Sigmund Frued — Ed. by James Starchey 1968.)

கதிஜா நாயகியின் கனவுகள், "உடல் உள்ளத்தைக் கூடிக் கனக் காட்சி உண்டாகும். உள்விருப்பமே கனவின் அடிப்படை" என்ற கனவுக் கோட்பாட்டினை அறிவுறுத்துவனவாகவும் விளங்குகின்றன. இக்கனவுகள் பின் நிகழவிருப்பவைகளை முன்பே உணர்த்துவதாக அமைந்துள்ளன. அத்தோடு மையமான பகுதியில் அமைந்து காப்பியத்திற்கு மெருகூட்டுகின்றன. காப்பிய நாயகரின்-வரலாற்று வள்ளலின்-மாண்பும், காப்பிய நாயகி கதீஜாவே அவர்தம் மனைவி என்பதும் தெளிவுபட அமைந்து விளங்குகின்றன. இக்கனவின் நல்முடிவினைக் காப்பியத்தின்-விலாதத்துக்காண்ட இறுதி, மணம்புரி படலத்தில் உண்மையாக்கி விடுகிறது. முகம்மதின் செழுமணிக் கரத்தில் புதுமதிவதனச் செழுங்கொடி கதிஜா பொன்மலர்க் கரத்தினைச் சேர்ந்திடக் காண்கிறோம். கனவில் அமைந்த பவனிக் காட்சிகள் எல்லாம் செம்மையுற இப்படலத்தில் உண்மை நிலை பெற்று நிறைவுறுவதனைக் காண்கிறோம். இனிய இக்கனவுகள் இலக்கிய உத்தியாகவும் அமைந்து இன்பம் பயக்கின்றன.

## பெருமானார் கனவு :

(1) விலாதத்துக் காண்டத்தில் பெருமானார் கண்ட கனவாக இரண்டினைக் காணலாம். கதீஜா நாயகியின் வாணிபப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டு சரக்குகள், ஒட்டகங்கள், ஆட்கள், ஆயுதங்கள் ஏவலாள் மைசருவுடன் பெருமானார் வியாபாரத்திற்கு, ஷாம்நோக்கிப் பயணமாயினர். எழிலது ஆட்சி செய்யும் எண்ணிலாக் காட்சிகள் தம் வழியினில் கண்டனர். சுரத்தினில் புனல் அழைத்தல், பாந்தள் வதைத்தல் எனப்பல அற்புதங்கள் பெருமானரால் வழிநெடுக நடைபெறுகின்றன. பின்பு நதிகடந்த படலத்தில் பெருமானரின் முதற்கனவினைக் காண்போம்.

இருளென்ற போர்வையை இராவென்ற பெண் போர்த்திக் கொள்ள ஆற்றங்கரையோர பெரிய மரத்தடி நிழலில் நபிபெருமானும் அவர்தம் உடன் வந்த வியாபாரிகளும் தங்கியிருந்தனர். அப்பொழுது நபிபெருமான் நித்திரையில் ஆழ்ந்தார்கள். வானவர் கோன் ஜிபுரயில் கனவிலே தோன்றினர்.

"இந்தக் காட்டாற்றில் நீர்பெருகி, வெள்ளப் பிரவாகமாகி அலையெடுத்தெறிந்து மேகமண்டலந் தொடவளர்ந்த மலையை அமிழ்த்திப் போகும்படியாய் வருகிறது. ஆதலால் நீவிர் விரைவில் உம்மைச் சேர்ந்தாருடன் எழுந்து வேறிடம் செல்க" எனக்கூறிச் சென்றூர். பெருமானும் தாம்கண்ட கனவைக்கூறி, அவர்தம் குழுவுடன் சோலை நீங்கி அண்மையில் அமைந்த மலை உச்சியில் தங்கினர்.

(ii). மூன்று நாளாகியும் ஆற்று வெள்ளப் பெருக்கு குறைந்த பாடில்லை. அனைவர்களும் வருத்தமுற்றனர். நதிப்பெருக்கு ஓங்கு வதால் யாவரும் வாடியிருந்தனர். பெருமானர் கொஞ்சமேனும் நெஞ்சம் அயராது, 'நாளை தினம் பிரயாணம் ஆகலாம்' எனக்கூறி கண் அயர்ந்தார். ஜிபுரயில் அன்றிரவு கனவில் தோன்றி மானைத் தொடர பெருமானுருக்கு அறிவிக்கின்றூர். அதனை, "கண் துயில் செவ்வி நேர் முகம்மது கனவில் செப்பினர். இவ்விருள் விடிந்தபின எழுந்து முன்னர் ஓர் நவ்வி தோன்றிடும் வழி நடத்தீர்" என்கிருர் உமறுப்புலவர். ஜீபுரயில் வந்து சொல்லிய கனவினைக் கண்டு, அகம் களித்து கண்விழித்தார். வியாபாரிகள் அனைவர்களையும் தம்மைத் தொடர்ந்து வரக்கூறி, நதிக்கரையை நெருங்கினர். அங்கு அழகிய மான் ஒன்று தோன்றியது. அதனின் வர்ணனை வண்ணத் தினை செந்தமிழில் குழைத்து உமறப்பா.

"அள்ளிய பொன் எடுத்து அமைத்து வெள்ளியால்
புள்ளிகள் அணி அணி பொறித்து வைத்தன
ஒள்ளிய மெய் அழகு ஒழுக ஒல்லையில்
துள்ளிய உழை உழை இடத்தில் தோன்றிற்றே"

எனப்பாடியுள்ளார். அப்புள்ளிமானைத் தொடர்ந்தும் யாவரும் பெருமானரைத் தொடர்ந்து நல்வழி பெற்றனர். இக்கவிகாட்டும் புள்ளி மானின் ஒயில், மீண்டும் மீண்டும் கற்று அனுபவிப்பதற்குரிய தாம். இங்ஙனமாக இவ்விரண்டு கனவுகளும் நன்மைக் கனவுகளாக அமைந்துள்ளன. கனுப் பயனுய் பெருமானரின் வியாபாரக் குழுவினர் நன்மையடைந்தனர். பெருமானரின் உயர்வினையும், அக்குழுவினர் ஓர்ந்துணர்ந்தனர்.

உயர்நபி வாழ்வுதன்னை ஓவியமாக்கிக் காண நயமுடன் பாடிய காப்பியமாம் சீருப்புராண விலாதத்துக் காண்டத்தில் அமைந்த ஏழு கனவுக் காட்சிகளைக் கண்டோம். திக்கெட்டும் புகழ் படைத்த திருநபி மாண்பனைத்தும் இக்கனாக் காட்சிகளில் இனிது இலங்கும், துலங்கும். உமறுவின் செவ்விய சொல்லாட்சியின்–பா நலத்தின் மாட்சியும் அறிந்தோம். ஆமீனா, அலிமா, கதிஜா நாயகியார் பெருமானாரின் கனவுகள் நன்மைக்கனவுகளாக அமைந்தன என்பதும் பெற்றோம். கதீஜா நாயகியின் கனவுகளை வேட்கையின் கனவு என்பதும் அறிந்தோம். பின் நிகழவிருப்பவைகளை முன்கூட்டியே உணர்த்தப் பயன்படும் உத்தியாகவும் கண்டோம். இலக்கிய உத்திகளில் கனவுகளின் சிறப்பும், அவை இலக்கிய விருந்தாகவும் இலங்குகின்ற இனிய தன்மையும் அறிந்துணர்ந்தோம். சபா, துவைபு, ஊசா, ஹக்கத்து போன்ற பாத்திரங்கள் கனவுகளை விளக்கவந்த பாத்திரங்களாக விளங்குகின்றனர். இவர்களுள், சபா ஒருவரே பெண்பாலர். இக்காண்டத்துக் கனவுகள் காப்பிய நாயகரைச் சுற்றியே எழும் கனவுக் காட்சிகளாக விளங்கும் மாண்பும் கற்று இன்புறத்தக்கது. இவ்வேழு கனவுக் காட்சிகளிலும் ஒருமைப் பண்பு நலனாக — பெருமானாரின் மாண்பு—இழையோடி இணைந்துள்ள தன்மை கூர்ந்தறியத்தக்கது. காப்பியத்தில் முதற்காண்டத்தில் முகம்மதுவின் மாண்பு விளக்க வந்த கனவுக் காட்சிகள், உமறுவின் நற்றிறத்தால் பட்டை தீட்டப் பட்டு ஒளிருகின்றன.

# சீறாவில் கனவுகள் (விலாதத்துக் காண்டம்)

| எண். | கனவு காண்பவர்கள் | கனவுக்காட்சிகள் : சுருக்கம் | படலங்கள் | கனவுகளை விளக்குபவர் |
|---|---|---|---|---|
| அ. | ஆமினா (1) | நபிமார்கள் வாழ்த்தல் 'முகம்மது' பெயர்சூடக் கூறல் | திருநபியவதாரப் படலம் | மூதாட்டி சபா |
| ஆ. | அலிமா (2) | மரத்தின் கனிகளைத் தின்னல் | அலிமா முலையூட்டுப் படலம் | துவைபு |
| இ. | கதிஜா (3) | (i) சந்திரன் மடிமீது விளையாடல் | பாதை போந்த படலம் | ஊசா |
| | (4) | (ii) திருமணப் பவனி | கதிஜா நாயகியார் கனவு கண்ட படலம் | |
| | (5) | (iii) வயிர மரம் | மணம் பொருத்து படலம் | ஹக்கத்து |
| ஈ. | பெருமானார் முகம்மது (6) | (i) காட்டாற்றுப்பெருவெள்ளம் | நதிகடந்த படலம் | |
| | (7) | (ii) மான் | நதிகடந்த படலம் | |

# காப்பிய நாயகரின் தோற்றப்பொலிவு

**பேராசிரியர். கா. முகமது பாருக்**, எம். ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர்,
சதக்கத்துல்லா அப்பா கல்லூரி,
பாளையங்கோட்டை.

தாஹா நபிகள் (ஸல்) அவர்கள் தந்த நெறியில் மாகாதல் கொண்டு மூவாத் தமிழ் பாடிய முஸ்லீம் புலவர் பெருமக்களுள் உமறுப் புலவர் பெறும் இடம் உயர்ந்தது. அண்ணலெம் பெருமானுர் (ஸல்) அவர்களின் அறநெறி வாழ்வை தமிழ் நாட்டுக்கு அறிமுகம் செய்து பெருமை பெற்ற பெரும் புலவராக உமறுப் புலவர் ஒளிவீசிக் கொண்டிருக்கிருர். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் ஏகத்துவ முழக்கைத் தாகத்தோடு கண்டு வந்த தமிழ் நிலம் வாழ்க்கை யிலும் அதை நிறைவாகப் பெய்தல் வேண்டும் என்னும் உண்மையை வள்ளல் நபிகளின் வாழ்க்கைப் பாதையிலிருந்து பெற்றுக் கொண்டது. வள்ளலார் வாழ்வைத் தெள்ளுதமிழில் உமறுப்புலவர் திரட்டித் தந்தபோது தமிழகம் அத்திரட்டினை ஊனுருக, உள்ளுருக உட் கொண்டது.

தேசுறையும் தென்பாண்டி நாட்டுத் தென்றலில் அரபுநாட்டின் அற்புத அத்தரைப் பரப்ப முற்பட்டார் அருந்தமிழ்ப் புலவர் உமறு. அரபு நாட்டு ஆண்மீக மணம் உலக இலக்கிய வாணர்களின் அடி மணத்தை ஆரம்பநாள்முதலே ஆட்சி செய்து வந்தது. அம் மணத்தை தமிழகம் தொடக்கமுதலே தொட்டுக் கொண்டிருந்த தெனினும் அதனை அத்தரிலே அடக்கிக் கவிதைச் சீசாவிலே பரிமாறிய பெருமை உமறுப் புலவருக்கே வாய்ந்தது.

உமறு உவந்தேத்தும் உத்தமர், காப்பியங்கள் பொதுவாகக் காட்டும் கற்பனைப் பாத்திரமல்லர். வாழ்வுக்கு வழி காட்டிச் சென்ற வாழ்வின் வார்ப்பு! சொல்லால் மட்டும் வாழும் சோதி உருவன்று; செயலாலும் வாழும் சிந்தனைச் செயற்கூடம்.! மக்கள் மனத்தில் நிலையாக வாழ்பவர்; வரலாறு காட்டும் தலைவரல்லர்; வரலாற்றையே காட்டும் தலைவர். மனிதக் கரங்களால் மட்டும் இலக்கிய வாழ்வு பெற்றவரல்லர். மாபெரியோன் இலக்கியத்திலும் நிலையாக வாழ்பவர்.

வள்ளல் நபிகளை இலக்கியத் தலைவராகப் போற்ற வந்த உமறுப் புலவர் முன்னால் மரபுத்திரைகள் மயக்கம் தந்தன. கட்டுப்பாடு வேலிக்குள் வாழ்ந்த அவருக்கு இறையருள் சுரந்தது. குறிக்கோள் தலைவராகப் பெருமானார் அவர்களைக் கொண்டேத்தும் முயற்சியில் அவர் குறிப்பிடத்தகுந்த வெற்றியினைப் பெறுகிறார். அத்தலைவரின் – சீறாக்காப்பிய நாயகரின் - தோற்றப் பொலிவைத் தொட்டுக் காட்டுவது எனது பணி. ஒளிமயமான தோற்றப் பொலிவினைப் பெற்ற உத்தமர் நபிகளை இளமைத் தோற்றத்தோடும், நற்குண நபிகள் தோற்றத்தோடும் காட்டுவதே எனது கட்டுரையின் நோக்கமாகும்.

## ஒளிமயமான தோற்றம்

அண்ணலார்தம் ஒளிமயமான தோற்றத்தின் முன்னர் வானத்துச் சந்திரனும் ஈடு கொடுக்க முடியவில்லை,

> 'வரத்தினில் உயர்ந்த வண்மை முகம்மது புவியில் தோன்றத்
> தரித்தபே ரொளிவுக் கந்தச் சசிகதிர் மழுங்கு மன்றே' –
>
> 13, தலைமுறைப்படலம்.

'ஆதரம் பெருக நல்வழிப் பொருளாய்' அகமது நபிகள் தோன்றிய சிறப்பை (86, நபியவதாரப் படலம்) நன்கெடுத்துக் காட்டுவது நபியவதாரப் படலமாகும். அப்படலத்தின் தொடக்கப் பாடலில் பெருமானார் அவர்களின் பேரொளித் தோற்றம் கோடிக் கணக்கான சந்திரன்களின் ஒளிப்பெருக்கைக் கூட்டிக் குவித்துக் காட்டுவதற்கு உவமையாக்கப் படுகின்றது.

> 'பெருகிய கோடிசந் திரப்பிர காசமாய்
> வருமொரு பெருங்கதிர் மதியம் போலவே
> கருணைவீற் றிருந்தசெங் கமலக் கண்ணினைத்
> திருநபி வருமவ தாரம் செப்புவாம்'
>
> (1, நபியவதாரப் படலம்)

பேருலகின் பேரொளியாக-அனைத்துலகின் அருட் கொடையாகத் — தோன்றிய அண்ணலார் அவர்கள் பிறக்கும் போதே ஒளியோடு பிறந்தார்களென உமறுப் புலவர் உணர்த்தக் காணலாம்.

> 'கிடந்தொளி பரப்பி வாசங் கொப்பளித்துக்
> கிளர்கிபு லாவை முன் னோக்கி
> யிடங்கள் அந்தர நேர் சிரசினை உயர்த்தி
> எழில்பெற சுஜூது செய்து இணைத்தாள்

திடம் பெற மடித்துக் குறியிடக் கையாற்
சேர்த் தொளிர் வலக்கைகால் மேல்வைத்து

உடனனி கலிமா விரலினை உயர்த்தி
உதித்தனர் முகம்மது நபியே'
(87, நபியவதாரப் படலம்)

அப்போது திருமேனி வெளிப்படுத்திய கஸ்தூரி மணம் மனை முழுவதும் கமகமவெனப் பரவப் 'பெருகிய ஒளிவு வான மட்டுலவப்' (86, ந. அ) பிறந்தனர் பெருமானார் நபிகள் எனப் பேசப்படுகிறது. பெருமானார் தோற்றத்தில் பேரொளி பெருக்கெடுத்திருப்பதை அடுத் தடுத்துப் பாடியும் உமறப்பாவின் உள்ளம் அமைதியடையவில்லை. இன்னும் முத்திரைப் பாடல்களை நபியவதாரப் பாடத்திற் பதித்து ஒப்பில்லா ஒளிச்சிறப்பைப் புலமைச் சிறப்போடு பொருத்துகிறார்.

'நெறிநிலை திரியா மருண்மத மிகுந்து
நெடுநில மெங்கணும் பரந்து

துறவறந் தவறி இல்லறமடிந்து
சுடரிலாமனையது போலக்

குறைபடுங் காலம் இருளெனும் குபிரின்
குலமறுத் தறநெறி விளக்க

மறுவிலா தெழுந்த முழுமதிபோல
முகம்மதுநபி பிறந்தனரே
(91- ந. அ-படலம்)

இவ்வுலகம் இல்லறமும் துறவறமும் தவறி, இருண்ட வீட்டைப் போல இன்னல்படும் காலத்தில் இருட்குலத்தை விரட்டி யோட்டும் இதயச் சுடராக-களங்கமிலாக் கவின்மதியாக — கருணை நபிகள் தோன்றிய செய்தியைப் பாட்டுத்துறையில் காட்டிச் சிறக்கும் கவிஞரின் புகழுக்கு எல்லையே இல்லை. மறுவிலா தெழுந்த முழுமதி யெனக் குறையற்ற கோமானை-நிறைவுபெற்ற நெஞ்சத்தின் ஒளி மணியைப் - பாடிப் போற்றும் உமறப்பாவின் உள்ளம் மாநிலந் தனக்கோர் மணிவிளக்காக அத்தோற்றத்திற்கு ஏற்றம் தருகிறது. அடுத்த பாடலில்!

'பானுவின் கதிரால் இடருறும் காலம்
படர்தரு தருநிழ லெனலா

ஈனமும் கொலையும் விளைத்திடும் பவநோய்
இடந்தவிர்த்திடு மரு மருந்தாய்த்

தீனெனும் பயிர்க்கோர் செழுமழை யெனலாய்க்
குறைஷியர் திலதமே யெனலாய்
மாநிலந் தனக்கோர் மணிவிளக் கெனலாய்
முகம்மதுநபி பிறந்தனரே!

செங்கதிர்பரப்பி வையத்தை விளக்கம் செய்யும் கதிரவனும், வெண்ணிலவை வெளிப்படுத்தும் தண்ணிய மதியமும், வானத்தில் தவழ்ந்து வரும் உடுக் குலமும் இன்னும் ஒளிபொங்கும் எவையும், சுவனமும், மண்ணகமும், வானகமும், பிறவும் வள்ளல் நபிகளாரின் ஒளியின்கண் உள்ளவையென்றால் முகம்மது (ஸல்) அவர்களின் முத்தொளிவுக்கு உவமைகூற வேறு வழியில்லையே எனக் கவிஞர் கோமான் கலங்குகின்றார். உத்தம நபிகள் சிந்திய ஒளிக்கீற்றால் ஏக இறையுணர்வினை மறுக்கும் குபிரென்னும் இருட்டுலமும் வறுமை யெனும் இருட்குவியலும் இல்லாமல் ஓடினவாம்.

'தரையினிற் பரந்த குபிரிருட் குலமும் சாற்றிய கலியிருட் குலமும்
வரைவிலாதொடுங்க முஹம்மதுநபி யிம்மாநிலத் துதித்தன
றென்றே'
(108-ந. அ. படலம்)

கடற்பகை துறந்து வெய்யவன் கதிர்கள் விட்டெழுந்ததாகக் கூறப்படுகிறது. இறையோனின் கருணைக் கொழுந்தை-வானுலகத் தலைவராகச் சீராட்டுகின்றார் செந்தமிழ்ப் புலவர் உமறு. திசைதோறும் இசை பரப்பும் இஸ்லாமிய விளக்காகிய நாயகத்தை மாமறைக் கொழுந்தாக மட்டுமன்றி 'மறுப்படா தெழுந்த செம்மணி' யென மணமேடையில் ஏற்றி வைக்கின்றார்.

'தேமலர்ப் பொழில்சூழ் சுவனநாட் டரசை திசைதொறும் விளக்கு
நாயகத்தை
மாமறைக் கொழுந்தை முகம்மதுநபியை மறுப்படா தெழந்த
செம்மணியை'
எனச் செல்கின்றது நபியவதாரப் படலப் பாடலொன்று (124)

உத்தமர் நபிகளாரின் ஒளிமயமான தோற்றத்தின் காரணத்தை-அற்புதத்தை-தலைமுறைப் படலம் தகுதியாக எடுத்துரைக்கின்றது. 'திருநபியிறசூலுல்லா தலைமுறைத் தோற்றம் சொல்வாம், (1) எனத் தொடங்கும் அப்படலத்தில்,

"கலைமறை முகம்ம தென்னும் காரண மில்லை யாகில்
உலகுவிண் ணிரவி திங்கள் ஒளிருடுக்கணம் சுவர்க்கம்
மலைகடல் நதிபா தாளம் வானவர் முதலா யும்மை
நிலையுறப் படைப்பதில்லை யெனவிறை நிகழ்த்தி னனே'
(12, த. மு. ப.)

என்னும் உண்மை மொழியப்பட்டுள்ளது. எனவே தான் கருணை நபிகள், கவிஞரால் 'காரணக் குரிசில்' எனப் புகழ்த் தோரணம் சூட்டப்படுகிறார்.

காரணக் குரிசில் முகம்மது நபி - 232 பதுறுப்படலம்
காரணக் குரிசில்—40 மானுக்குவினை நின்றபடலம்
காரணக்கடல்—37 கரம் பொருத்தும் படலம்

அறநெறி வழுவா தவத்துறை வேந்தாக அவனியில் தோன்றிய அண்ணலார் தோற்றம் உமறுப்புலவரால் ஒளிமயமாகவே காட்டப்படுகின்றது. இத்தோற்றப் பொலிவுகாட்டும் பாவடிகள் சீறா வானில் எங்கெங்கு நோக்கினும் சீராகப் பளிச்சிடுகின்றன. தலை முறைப்படல மூன்றாம் பாடல், 'கதிர்வடி வொழுகிநின்ற ஹபீபு மெய் வகுக்க' எனச் சொல்கின்றது. அப்படலத்தில் ஐந்தாம் பாடல், 'வரிசையும் பேறும் வாய்த்த முகம்மது நயினார் தோற்றம்
............................... பேரொளி இலங்கிற் றன்றே'

என ஒளிபரப்பிச் செல்கின்றது. இவ்வொளி மயமான தோற்றத் திற்கு இன்னும் எத்தனையோ சான்றுகள்;

'மருள் கடிந்தறிவு பொங்கும் முகம்மதி னொளி',
என்று தலைமுறைப்படலத்திலும் (27)

அலிமா முலையூட்டுப் படலத்தில்,

அம்பரத்தெழு முழுமதி நிகர குமது—(56)
வான் கிடந்தொளிர் மதியினு மொளிர் முகம்மது (57)
மதியினும் தெளிந்த வடிவெடுத் தனைய முகம்மது (71)
மதியினு மொளிரு முகம்மது நபி .................. (90)

என்ற பாடல்களிலும், பிற படலங்களில்

மாதவ முகம்மதே நல் வரிசையின் மணியே —
(40-இலாஞ்சனை திரித்தபடலம்)

மதிநிகர் முகம்மது (25, நதி கடந்தபடலம்)

முதிர்ந்த பேரொளி முகம்மது - 17 ஷாம் நகர் புக்கபடலம்)

ஒளிமா முகம்மது - (13, ஊசாவைக் கண்ட படலம்)

மறைமலர் வதனச் சோதி முகம்மது (20, நபி பட்டம் பெற்ற படலம்)

மதியினும் இலங்கும் சோதி முகம்மது (24, நபிப் பட்டம்)

மெய்க்கதிர் முகம்மது (42, நபிப்பட்டம்)

கதிர்விரிந் தொழுகு மெய்யெழில் நபி (101, தீனிலை கண்ட படலம்)

தண்டரளக் கதிர்வடிவின் முகம்மது (3, உத்துபா வந்த (படலம்)

ஒளிரும் பூணர் (16, உத்துபா)

தரளவொளி தனிலுருவா யுதித்த முகம்மது (17, உத்துபா)

பான்மதிக் கதிரொளி பரப்ப வந்தநல்

நான் மறைக் குரிசில் (80, மதியை அழைப்பித்த படலம்)

மதியினுஞ் செழுங்கதிர் தருமுக முகம்மது (105, மதீனம்)

நெடியவன் படைப்பெம் பொருட்கு முன்னொளியாய்
நின்றுபினப் துல்லா வயிற்றில்
வடிவுறு மரசா யுதித்த நன் னபியே
முகம்மதே தனியவன் தூதே (172, மதீனம்)

வெண்ணிலவு துளித் தொழுகு மதிவதன முகம்மது
(10, புத்து பேசிய படலம்)

சோதி நாயகன் தூதெனும் வள்ளல் (18, விருந்தூட்டு படலம்)

முத்த வெண்கதிர் முகம்மது-(52, மதீனத்தார் ஈமான் கொண்ட படலம்)

மதியின் மிக்கநன் முகம்மது-(52, மதீனத்தார் ஈமான் கொண்ட படலம்)

அவிரொளி முகம்மது - (30, மதீனம் புக்க படலம்)

ஆதிதன் னொளி வினில் தரித்து அனுதிதன்
தூதென வுலகினில் தோன்றி நின்றனர்
(12, ஓநாய் பேசிய படலம்)

மணியொளி முகம்மது - (203; பாத்திமா திருமணம் படலம்)
என்றும் ஒளி வெள்ளத்தைக் காணுகிறோம்.

## இளமைத் தோற்றம்:

நபியவதாரப் படலத்தின் குழந்தை முகம்மதின் தோற்றப் பொலிவைக் கண்டு வல்லான் இறைவனுக்கு வாழ்த்துக் கூறுகின்றோம். கிபுலா வென்னும் இடத்தை எதிர்பார்த்த வண்ணம், வானுக்கு நேரே தலையுயர்த்தி அழகாக 'சுஜூது' செய்துகொண்டு இரு கால்களையும் மடித்த நிலையில், வலது கரத்தை, வலது காலின் மீது வைத்தவாறே 'கலிமா' விரலினை உயர்த்திப் பிறப்பெடுக்கும் பெருமானர் தோற்றத்தைத் தேனொழுகும் பாடல்களில் தீட்டியுள்ளார் உமறு.

குழந்தையின் சிரசில் நறுநெய் நனைக்கப்பெற்றிருந்தது. கண்களில் கரிய சுறுமா காட்சி தந்தது. உடலிலிருந்து வெளிப்பட்ட கஸ்தூரி மணம் மனையகத்தைச் சிறைப்படுத்தியது. மாதவர் அபுத்தாலிபு மனையினில் பிறந்த மாணிக்கநபியின் குழந்தைத் தோற்றத்தைக் காட்டிச் செல்லும் கவிச்செல்வர், அலிமா பாலூட்டும் காட்சியைப் பாடும் படலத்தில் மீண்டும் அத் தோற்றப் பொலிவை அகக் கண்களுக்கு அற்புத விருந்தாக்கித் தருகின்றார்.

'பரிமளந்திகழ் மதலையைக் கொணர்ந்தனர் பார்த்தார்
வரிபரந்தசெவ் விழிதிறந் தனர்முகம் மதுவே'
(42, அ. மு படலம்)

குழந்தை பரிமளமணம்பரப்பும் பான்மையோடு காட்சி தருகின்றது. கருணை செறிந்த குழந்தை கண் திறந்தபோது அழகிய ஒளி எட்டுத்திக்கிலும் பரந்து இலங்கியது. அற்புதக் காட்சியைக் கண்ட அலிமா குழந்தையை ஆர்வத்தோடு எடுத்தணைத்தனர். மகவை மார்போடணைத்தபோது சோர்ந்த உடலும் நெஞ்சும் திரண்டு செழித்தல் கண்டு பெருமகிழ்வுற்றனர். அன்னை ஆமினு அருமைக் குழந்தையிடம் விடை பெறுகிறார்.

'அமரர் நாயகமேபுவி யரசருக் கரசே
தமரினுக் கொரு திலகமே யார்க்கும் தாயகமே
நமது யிர்க்குயி ராகிய முகம்மது நபியே
கமைதருங்கடலேயெனப் போற்றினர் கனிந்தே'!

தேன்கிடந்த செங்கனியிதழ் பவளவாய் திறந்த திருவாட்டி ஆமினு, உத்தம நபிகளாரை உச்சிமோந்து முத்தமிட்டு, உடல் களிக்கக் கண்களால் நத்தி, வானவர் தலைவரெனவும் வையக அரசருக் கரசர் எனவும் குறைஷிக்குலத் திலகமெனவும் குவலயத்தார்க்குத் தாயகமெனவும் உயிருக்கு உயிரெனவும் பொறுமைக் கடலெனவும் பாராட்டி விடைபெறுகின்ருர். எதிர்காலத் தோற்றப் பொலிவினை அன்னை ஆமினு இளைய குழந்தைப் பருவத்திலேயே இதயக் கண் களால் காணுகின்ருர். கொழுங்கனி முகம்மது குறையிலாது. வளர்கிருர். குழந்தை நபிகள் குனேன்பதி சென்றபோது காரிகையர் கண்டுரைத்த செய்தியைக் கவியரசு உமறு கனிவோடு காட்டுகின்ருர்.

" வறுமையும் தீரும், நோயும்விட்ட கலும் மனத்தினில்
கவலையும் நீங்கும்,
சிறுமையும் அகலும், புத்தியும் பெருகும், தீவினை
வந்தட ராது,
தெறுபகை சிதையும், செல்வமும் வளரும், தேகமும்
சிறந்து பூரிக்கும்,
உறுபவம் தொலையும், முகம்மதை ஒருபகல் காண்கில்
என்று ரைப்பார்."
(73, அ. மு. ப.)

உரித்து வைத்த பலாச் சுளையை உமறப்பா உண்ணத் தருகிருர்; நாம் எண்ணத் தருகிருர். பண்பாடும் நபியாரை ஒருபகல் பார்த்தாலே ஒரு கோடி நன்மைகள்! எனவே கவிக் கோமான் உமறு 'மறைபுகழ்ந் தேத்தும் ஞான வாருதியை என்று காண்குவனே'! என முதுமொழி மாலையில் ஏங்குகிருர். இன்னிசைப் பாமாலை இசைக்கும் 'திருப்புகழ்' காசிம் புலவரோ,

" வெற்பூரு மற்புயமும் வெண்ண கையும் முத்திரையும்
பொற்பூர் முகாம்புயமும் பொன்னடியும் காணேனே!
அற்பூரும் இன்சொல் மறை யரமிர்தச் செவ்வாயிற்
கற்பூர வாடைகமழ் காசிமுஸ்த பாநபியே!"

என அக்காட்சிக்குக் காலமெலாம் காத்திருக்கின்ருர். குனேன் ஊரினர்க்குக் கிட்டிய காட்சி தமிழ்க் கவிஞரால் தாராளமாக தரணிக்கு வாய்க்கின்றது. முகம்மது நபி' யார் நடக்கத் தொடங்குகிருர்.

'எந்நில மனைத்தும் தீநெறி நடப்ப இயல்பெறு மனுமுறை
நடப்ப,

துன்னிய அறத்தின் துறைவழி நடப்பத்,
துன்பமற் றின்பமே நடப்பப்

பன்னருஞ் செங்கோல் உலகெலா நடப்பப்
பாரினிற் குலமுறை நடப்ப

மன்னிய ரெவரும் சொற்படி நடப்ப
முகம்மது நபி நடந்தனரே.

வையமெலாம் தீன்நெறி நடைபெறவும் மனித குலம் மகத்தான ஒழுங்கு படித் தரங்களை உற்றிடவும், உலகமெலாம் துன்பம் விலகி இன்பம் பரக்கவும் நல்லாட்சி மலரவும், ஒருவர் சொல்லை அடுத்தவர் தட்டாமல் தகுதியோடு நடக்கவும் நபிகளாரின் நடை இன்றியமையாத தேவையாகி விட்டது.

சிறுவராகத் தோன்றிய செம்மலரை இலாஞ்சனை தரித்த படலத்திற் சந்திக்கலாம். சிறுவர் கூட்டத்தில் நின்ற செல்வர் முகம்மதிடம் வந்த இருவர், '' இறைவன் தூதே! எங்கட்கின்னுயிர்க் குயிரே! '' என்றனர். அவ்வாறு வந்தவர்கள் (ஜிப்ரயீலும், மீக்காயிலும்) அவரை நிழலிற் படுக்க வைத்தனர்.

வண்மைசேர் முகம்மதின்றன் மணிப்பிடர்த் தணிவ தாகத்
திண்மை கொள் புயமி ரண்டிற் றெரிதர நடுவில் தூய
ஒண்ணிறப் புறவின் அண்டத் தோதிய அளவதாக
முத்திரை யென்னும் இலாஞ்சனையைத் தரித்தனர். அது
'நபியெனும் பெரு முத்திரைக்குறி' (50) எனப் பேசப்படுவது.

வள்ளலார் நபிகளார் தம் வரலாற்றை வரைய வந்த பெருமக்கள் இம்முத்திரைக் குறியை இறுதி நபிகளின் இருபுயங்களுக்கு மத்தியில் அமைந்திருந்த மச்சமென்னும் தெய்வீக முத்திரை யென்று குறித் துள்ளனர். எம்பெருமானார் இறுதி நபிகளே என்பதற்குரிய அடையா ளமாக அதனைக் கொண்டனர், நபித்துவத்தின் நல்லடையாளமாகிய இம் முத்திரைக் குறியைப் பார்த்த செய்தியைப் பெருமானார்காலப் பெருமக்கள் குறிப்பிட்டுள்ளனர். ஸாயிப் (ரலி) என்னும் பெரியார் 'அது ஒரு கவுதாரியின் முட்டையின் அளவிலிருந்ததாக' அறிவித் துள்ளார். ஜாபிர் (ரலி) அவர்கள் ''பெருமானாரவர்களின் இரு புயங் களுக்கு மத்தியில் நான் முத்திரையிருக்கக் கண்டேன். அது ஒரு புருவின் முட்டைப் பருமனில் சிவந்த மச்சம் போலிருந்தது.'' என

அறிவித்துள்ளார்கள். அபூஸயீது குத்ரீ (ரலி) எனும் பெரியார் "அது அண்ணலாரின் முதுகில் தடித்துத் துருத்திக் கொண்டிருந்த ஒரு தசைக்கட்டி" என மொழிந்தார்கள்.

பூமான் நபியவர்களின் புய வருணனைகளும் சீறாக் காப்பியத்தில் செழுமையாகக் காட்சி தருகின்றன.

மல்லுறு புய முகம்மது -(43, புனல் விளையாட்டுப் படலம்)
தடம்புய முகம்மது - (56 புனல்)
மந்தரம் பொருவா தெழுந்த பொற் புயத்து முகம்மது -
17 (சுரத்திற் புனலழைத்த படலம்)
மல்லுடைப் புயத்திறன் முகம்மது - 15 (கரம் பொருத்து படலம்)
கோலமார் பொருப்பு திண்தோள் குரிசில் - 24 (கரம் பொருத்து படலம்)
மருமலர்ப் புய முகம்மது - 20 (கதிஜா கனவு கண்ட படலம்)
மலைநிகர் புய முகம்மது - 21 (கதிஜா கனவு கண்ட படலம்)
வடவரை யனைய திண்டோள் வள்ளல் - 1 (மணம் பொருத்து படலம்)
வண்ணவார் புய மன்னர் முகம்மது - 80 (மணம்புரி படலம்)
தேனிமி ரலங்கற் செழும்புயக் குரிசில் - 101 (மணம்புரி படலம்)
முருகவிழ் புயவள்ளல் - 9 (நபிப்பட்டம் பெற்ற படலம்)
யற்றடப்புய முகம்மது - 43 (நபிப்பட்டம் ,, ,, )
மென்மலர்ப் புயநபி - 53 ( ,, ,, ,, )
வன்மலர்த் தொடைப்புய முகம்மது - 14 (தொழுகை வந்த வரலாற்றுப் படலம்)
மணவலி புயத்தார் வள்ளல் முகம்மது - 80 (உமறு கத்தாப் ஈமான் கொண்ட படலம்)
வரைத் தடப் புயத்து வீர முகம்மது - 7 (மதியை அழைப்பித்த படலம்)
முருகலர் தொடைப் புய முகம்மது - 51 (மதியை அழைப்பித்த படலம்)
மருமலர் சுமந்து தேன்வழிந் தொழுக
மணிப்புய முகம்மது நபி - 1 (தசைக்கட்டியை பெண்ணுருவாக்கிய படலம்)
முருகலர் புயத்தார் - 63 (மானுக்குப்பிணை நின்ற படலம்)
வச்சிரப்புய முகம்மது - 4 (ஈத்தல் இலை வரவழைத்த படலம்)
சித்திரத்தடப் புயவரை முகம்மது - 27 (பருப்பத ராஜனைக் கண்ணுற்ற படலம்)

மற்புய வரிசை முகம்மது - 2 (விருந்திட்டு ஈமான் கொண்ட படலம்)
ஓங்கலின் சிறந்த திண்டோள் முகம்மது - 41 (கந்தக்குப் படலம்)
விரைந்தடத் திண்டோள் முகம்மது - 10 (வறனிக் கூட்டத்தார் படலம்)

புயவலி பெற்ற பூமான் நபிகள், புகைரு கண்ட படலத்தில் 'புகையுருத செம் மலர்முக முகம்மது' (16) எனப் புகழாரம் சூட்டப் படுகிருர்கள். நல்லடையளாங்களை நபிகள் கோமானிடம் கண்ட பண்டிதன் புகைரு 'நபியாரிவர்' என நம்பிக்கை கொள்வதை அப் படலத்தில் காணலாம்.

'வாய்ந்த முத்திரைக் குறியும்செங் கரங்களின் வனப்பும்
தோய்ந்து சீரடி படியுருப் புதுமையும் சுடரால்
வேய்ந்த மெய்யிலின் மாசணு காததும்'

விறலோன் ஆய்ந்தான். இலாஞ்சனை யென்னும் தெய்வீக முத்திரையும் வடிந்த கரங்களின் சிறப்பான வனப்பும் திருமேனியில் குற்றமணுகா நற்றவ நிலையும் கற்றவன் கருத்தைக் கவ்விப் பிடித்தன. பெருமானுர் தோற்றப் பொலிவிற்கு, அறிஞருலகே தன்னை அர்ப் பணித்து விட்டது.

பாதை போந்த படலத்தில் பாட்டுடைத் தலைவரை இருபத் தைந்து வயதுடைய இனிய இளைஞராகச் சந்திக்கின்ருேம். அவ் விளைஞரின் தோற்றப் பொலிவினை உமறப்பா பாடலில் உணர்வு பொங்கப் பார்க்கிருேம்.

பேரறி வெவையும் சொர்மை பெருத்தொளிர் வனப்பும் வெற்றி
வீரமும் திறலும் உண்மை விளக்கும்வா சகமுங் கல்விச்
சாரமும் பொறையும் மிக்க தருமநற் குணமும் யார்க்கும்
வாரமும் முகம்மதின் பால் வந்தடைந் திருந்த தன்றே (2)

கூரறிவும், பேரெழிலும், வெற்றியும், வீரச்செயலும், உண்மை உரையும், திண்மைக் கல்வியும், பூக்கும் பொறுமையும், ஆக்கும் தருமமும், அன்பும் கருணை நபிகளிடத்துக் களிநடம் புரிந்து கொண்டி ருந்தன. அப்துல்லா செல்வமான ஆமினு மணி வயிற்றில் பிறந்து பிறப்பதற்கு முன் தந்தையை இழந்து, பிறந்து சில்லாண்டுகளில் தாயையும் இழந்து, பாட்டனரின் பான்மொழியைக் கேட்டுவந்து, பெரிய தந்தை காவலிலே பேணி வளர்க்கப்பட்ட பெருமானுர் அவர்கள்

இளைஞர்க்கு வழிகாட்டும் உயர்வடைந்து உன்னதமான காட்சி நல்கினார்கள். மனம் பூணும் மாமணியாகவும் மக்கத்து நபிகள் மலர்ச்சியடைந்தார்கள். குவைலிது தவத்தின் பேருய் - குரைகடல் மணியாய் புவியிடை அமுதாய் — பொன்னுய் — பூவையர்க்கரசய் புகழ் சிந்திய அன்னை கதிஜா நாயகியார் இல்லத்திற்கு வள்ளல் நபிகள் வருகை தந்தார்கள். அப்போதைய அவர்களின் தோற்றம்,

“ திருவுறை முகமு மன்பு திகழ்தரு மகமுங் கண்ணும்
விரிகதிர் பரந்த மெய்யும் விறல்குடி யிருந்த கையு
மருமலர் வேய்ந்த தோளு மணி திரண்டனைய தாளும் ’

எனச்சிறப்பிக்கப்படுகிறது.

வணிகத்தின் பொருட்டு வள்ளல் நபிகள் ஷாம்நகர விடுதியொன்றில் வீற்றிருந்த போது, அவர்களின் தோற்றப் பொலிவில் தோய்கின்ற மக்களை அப்பகுதியிற் காணலாம்.

“ மேனியிற் கதிர்விரி வியம்பும் மெய்யினில்
மான்மதங் கமழ்தலும் வடிந்த கைகளும்
தூநிறை மதியென முகமுந் தோள்களும்
கானிலந் தோய்தராக் கார ணீகமும்
பன்னருஞ் சிறப்புடைய யருட்கட் பார்வையும்
மன்னிய அவயவயத் தழகு மாசிலா
நன்னிலை மொழிபல நவிற்றுஞ் செய்கையும் ”

கண்டவர்கள், அற்புதங்களால் அக்காரணீகர் வேதங்கள் வெளிப்படுத்திய வேந்தர் நபிகளாயிருக்க வேண்டும் உணர்கின்றனர். ஒளியும் மணியும் சிந்தும் உடலும், தடக்கைகளும், தூயமதிமுகமும் தோள்களும் கால்களும், அருள் சிந்தும் கண்களும், அழகிய அங்கங்களும், நல்லொழுக்க மொழிபேசும் செய்கையும் கண்டுநின்றோர் உள்ளங்களையெல்லாம் காந்தம்போல் கவர்ந்திழுத்தன. தூயநபியின் தோற்றப்பொலிவு சிற்றிளமைப் பருவத்திலிருந்தே சீராக, நேராக அமைந்திருந்தது. அவர்களின் அகப்பண்புகளோ அவனியிலுள்ளோரை ஆளும் பண்புகளாக அணிசேர்த்தன.

“ அருளினில் அறத்தினில் தேர்ந்த அறிவினில் எவரும் ஒவ்வாக்
குரிசினுன் மறைக்கும் வாய்த்த கொண்டலங் கவிதை வள்ளலாக ”

அப்பெருமா மணியார் பேரொளி வீசினார்கள். உண்மையாளர் (அஸ்ஸாதிக்) ‘நம்பிக்கைக்குரியவர்’ (அல்அமீன்) எனும் நன்மொழிகட்கு நாயகராக விளங்கிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

" வடிவாலும் குணத்தாலும் முகம்மதுநேர் மற்ருேரில்லை "
(52 மணம் பொருத்துபடலம்.)

எனும் நன்மொழிக்கிலக்காகி நாடெலாம் ஏத்தும் நற்றவக் கொழுந் தாஞர்கள்.

**நபிகள் தோற்றம் :-**

" அழகிய முன்மாதிரியாக " அவணி கண்ட அண்ணல் நபிகள் (ஸல்) நபிப்பட்டம் பெற்ற நற்செய்தியை பிற்பகுதியில் காண்கிருேம். " மாதவத்துறும் பொருளெனு முகம்மது நபி " (55 - நபிபட்டம்) பெற்ற படலம்)

" வேதப் பொருளாய் பொருளொளியாய்
விளங்கு முதலோன் திருக்காட்சி
தூதன் றுதித்த முகம்மதாய்த் தூயகாட்சி நல்குவதைத்"
(44) தொழுகை வந்த வரலாற்றுப் படலத்தில் காணலாம்.

" வானமும் புவியு மற்றும் வகுத்தவன் உண்மைத்தூதர் " (15) தீனிலைகண்ட படலத்தில் தனது மனத்திடத்தை வடித்துக்கூறும் நேய நபியவர்கள், மேற்கொண்ட இஸ்லாமிய ஒழுக்கத்தால் பகைவரின் ஒறுத்தலுக்கும் உள்ளாக வேண்டிவந்தது. ஆயினும் நிலைகுலையா நெஞ்சத்தோடு இஸ்லாமியப் பிரச்சாரத்தில் ஈடுபட்ட இறுதி நபிகள் தங்களின் உள்ள உறுதியை பெரிய தந்தை அபுதாலிப் அவர்களிடம் அறிவிக்கின்ருர்கள் :

பரிதியைக் கொணர்ந் தணிவலக் கரத்திடை பதித்து
மரிதி னிற்சசி கொணர்ந்திடக் கரத்தினி லமைத்தும்
ஒருமொழிப்பட வினத்தவ ரொருங்குற நெருங்கிப்
பொருத டக்கினு நும்மனம் பொருந்திலா திருந்தும் (44)
ஈதலாற்சில இடரெனை யடுக்கினு மிறையோன்
தூதன் யானெனச் சுருதியை விளக்குவ தலது
பேதியாதென தகமென முகமது பிரியாத
தாதையோடுரைத் தனதிரு விழிமழை தயங்க (45)

"செங்கதிரவனை ஒருகையிலும், தண்மதியத்தை இன்னொரு கரத்திலும் தந்து என்னை மோதிஅடக்க முற்பட்டாலும் எங் கொள்கையினை விடப்போவதில்லை. தடைகள் ஏற்படுத்தப்பட்டாலும், அவை தளர்ச்சியை தரமாட்டா" எனக்கூறுகிறார்கள். புகழ் சிந்தும் புறத்தோற்றத்தைப் பெற்றிருந்த பூமான் நபிகள் அருள்சிந்தும் அகவுணர்வுகளையும் பெற்றிருந்தார்கள். "அகத்தில் ஒளி சிந்திய ஆன்ம பலத்தை அசைக்கும் ஆற்றல் எந்தப்பொருளுக்கும் இல்லை" என ஏந்தல் நபிகள் எண்ணிச் செயல்பட்டார்கள்.

'அறிவாயினும் பண்பாயினும், அன்பு பாராட்டுதலாயினும், பொறுமையைக் கடைப்பிடிப்பதாயினும், நன்மொழி பேசுவதாயினும், நற்பணியாற்றுவதாயினும் தீன்நெறி பரப்பிய திருநபிகளோடு உவமை கூற உலகினில் வேறெவரும் தோன்றவில்லை' என்பது தீன் நெறியை தீந்தமிழிற் காட்டும் உமறுப்புலவரின் உறுதியான முடிவாகும்.

"அறிவினில் குணத்தினில் எவர்க்கும் அன்பினில்
பொறுமையில் நன்னெறிப் புகலில் செய்கையில்
திறன்முகம் மதினொ டுவமை செப்புதற்
குறுபவ ரெவருமிவ் வுலகி லில்லையால்."

(73-மதியை அழைப்பித்த படலம்)

உத்தமத் திருநபிகளுக்குக்கெதிராய் எழுந்த பகைவன் அபுஜஹில், பத்திரம் அனுப்பி பக்கத்து நாட்டவர் நபியை எதிர்த்து வருமாறு செய்கிறான். எதிர்த்து வந்தவர்கள் ஏந்தலார் தோற்றப் பொலிவில் இதயத்தை இழந்தனர்.

"கண்ப டைத்தவ ரிவரெழிற் காண்பவர், முகத்திற்
புண்ப டைத்தவ ரிவர்தமைக் காண்கிலார், புதியோன்
பண்ப டைத்த சொன் மறைநபி பதம்பணி யாதார்
பண்ப டைத்ததிற் படைப்பல ரெனச்சிலர் வகுப்பார்'.

( 90 - மதியை அழைத்தபடலம்)

கருணை நபிகளாரைக் காணும் கண்களே கண்கள்; பிறபுண்கள் என்ற உவமையை தூய நபிகளாரிடம் முன்னர்த் தொடர்பின்றி புதிதாகக்காண்போரே புரிந்து கொள்வர் என்ற உண்மையை இப் பாடல் அறிவிக்கின்றது. புண்ணியம் பூத்துக்குலுங்கிய பொற்பார்

நபியைக்கண்ணுரைக்கண்ட திமிஷ்க் அரசன் பணியெயிறு இலங்கச் செவ்விதழ் திறந்து சொல்லிய சொற்கள் சொல்லுலகில் சுவை சேர்ப்பவை.

"ஆதிதன் தூதே! பேரின்ப விளக்கே!
அமருல கருக்கும் நல் அரசே!
மாதலத் தெவர்க்கும் பவக்கடல் கடப்ப
வருமொரு திருமரக் கலமே!
தீதறவெனது கருத்துறு மறிவே!
தீனிலை நிறுத்து நாயகமே!
பூதலத் துறைந்த முழுமணிச் சுடரே!
புண்ணியந் திரண்டமெய்ப் பொருளே!

(180, ம. அ. ப.)

பாவக்கடல்கடக்கும் மரக்கலமாக, மனங்கவரும் மணிச்சுடராக, மேலுலகப் பேறளிக்கும் மெய்ப்பொருளாக மேலோன் தூதைக்கண்ட அரசன் மேலான புகழுக்கு ஆளானன். வலைப்பட்ட மான்போன்று தீவழிப்பட்ட மாந்தர்க்கு, நேர்வழி காட்டிய நெஞ்சச் சுடராம் நேரியர் நபிகளாரை, வலைப்பட்ட மானென்று கண்டு நபிகளெனத் தேறியதைப் பாடலொன்று பகர்கின்றது.

"அருளடை கிடந்த கண்ணும் அழகொளிர் முகமும் சோதி
சொரிநறை கமழ்ந்த மெய்யும் சூன்முகிற் கவிதையோடும்
வருவது தூயோன் தூதர் முகம்மது என்னத் தேறி"

(8, மானுக்குப் பிணைநின்ற படலம்)

தெளிந்த மான் தேசுறையும் திருநபிகளைப் பார்த்து,

"வல்லவன் உண்மைத் தூதே! மண்ணுமா நிலத்தின் மாந்தர்
அல்லலை அகற்று வேதத் தறநெறி பயிற்றிச் சொர்க்கத்
தில்லிடைப் புகுந்தப் பூவினிடத்தினி லுதித்த கோவே."

(17, மானுக்கு பிணைநின்ற படலம்)

எனக்கோமான் நபிகளாரின் கொள்கைப் பிடிப்பைக் கூறுகின்றது.

மதீனுப் பெருநகரில் மக்கத்துப் பெருநபிகள் இருந்த தோற்றதை அமுருப் படலப் பாடலொன்று அழகுற அறிவிக்கின்றது:

" செங்கோ லென்னும் கொழுங் கொம்பிற்
செழுந்தீ னென்னும் பயிரேற்றி

எங்கோன் முகம்ம தெனுநயினுர்
எழில்சேர் மதினத் தினிதிருப்ப "

பெருமானுர் நபிகள் நாயகத்தின் ஆட்சி நீதியின் அடிப்படையில் நிமிர்ந்து நின்றதை வரலாற்ருசிரியர்கள் சிறப்போடு குறிப்பிட்டுள்ளனர். பாடற்கருத்து நீதியின் நெடிய தோற்றத்தை ஆதியின் தூதரிடத்து அழகுடன் காட்டுகின்றது.

வையத்து மக்களுக்கெல்லாம் வளப்பளித்த வள்ளலார் தோற்றம் அவர்கள் தம் வாழ்க்கைத் துணைவியர்க்கு எவ்வளவு மகிழ்ச்சி தரும் என்று தனித்துச் சொல்லத் தேவையில்லை. செம்மலர் நபிகளாரைச் செயினபு நாயகியார் கண்ட செய்தியைச் சிறப்பிக்கும் செய்தியொன்று சிந்தையில் சிரிக்கின்றது.

கந்தரக் குடையும் செய்ய கமலவாண் முகமும் மிக்க
சுந்தர விழியும் நீண்டு துலங்கிய கரமும் வாசக்
கொந்தலர் மரவமாலை குலவிய புயமும் வாடாச்
செந்தளி ரடியும் பொற்பார் செயினபு நங்கை கண்டார் "
(14, செயினபுநாச்சியார் கலியாணப்படலம்)

மாநபியின் மலர்முகமும், நினைவில் அழகு கூட்டிய விழியும், நீண்டு விளங்கிய கரமும், தோளும், அடியும் நாளும் எண்ணி நலங்காணத் தகுந்தவை. செயினபு நாயகியார்,

" அரியவன் தூதரான அகுமதின் வடிவை நீண்ட
இருவிழியார நோக்கி இதயத்தின் மகிழ்ச்சி கூர்ந்து "

நின்றதாக அறிகின்ருேம்.

அண்ணலார் தோற்றத்தில் தருமமும் அறிவும், ஒழுக்கமும், பொறையும், தயவும் கூடிக்குலவி யிருந்ததைப்பாடிப் பரவசமடைகிருர் உமறுப் புலவர்.

மாறிலா தெழின் மான்மதங் காவத
நாறு மேனி முகம்மதை — 69 ( தீனிலைகண்டபடலம்)
மாசிலா வரிசை முகம்மது — 84 ( ,, ,, ,, )

பதியிரண் டினுக்கு மேலோர் படைப்புள வெவைக்கும் முன்னோர்
கதிதரும் காட்சி பெற்றோர் ஹபீபெனும் முகம்ம தென்போர்
(58, தீனிலைகண்ட படலம்)

நீதிச் செவ்வியன் முகம்மது — (66 ,, ,, ,, )
எழில் முற்றும் கரந்தங் கியநல் அருள்பெருகும்
ஹபீப்முகம்மது — (89, ,, ,, ,, )

'வரிசை நபியே! முகம்மதுவே! வானோர்க் கரசே! புவிக்கரசே!

உரிய தனியோன் முதற்றூதே—98 (தீனிலை கண்ட படலம்)

'நான்மறைக் கரிசில்' — 80 (மதியை அழைப்பித்த படலம்)

கனமுகிற் கவிகை முகம்மது — 155 ( ,, )

'வரிசை நாயகன் தூதெனு முகம்மது நபியே' — 37 (தசைக் கட்டியை பெண்ணுருவாக்கிய படலம்)

சதுமறைப் பொருள் முகம்மது — 24 (ஈமான் கொண்டவள் ஹபஷா ராச்சியத்துக்குப் போன படலம்)

மருந்தெனு மமுத தீஞ்சொல் முகம்மது — 49 (மானுக்குப் பிணை நின்ற படலம்)

வானவர் பரவுங் கோமான் முகம்மது — 70 (மானுக்குப் பிணை நின்ற படலம்

வரிசைநந் நபி முகம்மது — 10 (புத்து பேசிய படலம்)

மறைகலை புகழ்ந்த செவ்வி முகம்மது — (1-அத்தாசு ஈமான் கொண்ட படலம்)

நபிகளுக்கரசராய் வந்த நாயகம் — (10 ,, ,, ,, ,, )

மெய்ப் பொருள் மறைக்கு நாயகப் பொருளே!

விண்ணவ நயினுக் குயிரே — (27-ஜின்கள் ஈமான் கொண்ட படலம்)

காவல் முகம்மது — (29-ஜின்கள் ஈமான் கொண்ட படலம்)

தூய தூதவர் — (2-விருந்தூட்டு)

வரிசை வள்ளல் முகம்மது — (7 ,, )

உயர் புகழ் முகம்மது — (1- ஹிஜறத்துக் காண்டம்)
தங்கிய மறைமுகம்மது — (7- ,, )
பெரும்புகழ் முகம்மது — (12- ,, )
நரபதி முகம்மது — (18- ,, )
மாநிலத்தரசென — (49- ,, )
சொன்னயம் பெறுமுகம்மது — (3-மதீனம் புக்க படலம் )
தூயவன் தூதர் — (39- ,, )
வித்தக முகம்மது — (44- ,, )
முத்திரை முகம்மது — (61- ,, )
மாநிலம் புகழ் முகம்மது — (61- சல்மான் பாரீசுப்படலம்)
மறந் ததும்பிய முகம்மது — (உகுதுப்படலம்)
ஓங்கலின்சிறந்த திண்டோள்முகம்மது — (41-கந்தக்குப் படலம்)
நீதி தெரிதரு மிற சூலுல்லா — (1-செய்னபு நாச் க. ப.)
தீனவர் போற்றும் வேதத் திருநபி — (13-செய்னபு)
பூரணக் கிருபைக் கடலெனு நபி — (1-அந்தகன் படலம்)
நறுமலர்த் தெரியல்செம்மல் செம்மறைதவழ் வாயால்
(13-ஹனிக் கூட்டத்தார் படலம்)

பெருமான் நபிகள் ஈருலக் காவலர்; இறையோனின் தூதுவர்; வேதப் பொருளாக விளைந்தவர்; மணங்கமழும் திருமேனியர்; ஒளி பரப்ப வந்த ஒளிர் உருவினர்.

இவை அத்தனைப் பண்புகளையும், முனைமுரியாச் சொல்மல ரெடுத்துக் கவிமாலைகளாக்கி பெருமானுர்க்குச் சூட்டுகின்ற உமறு, பின்வந்த முசுலிம் புலவர்களுக்கு வழிகாட்டியாகவும் அமைகின்றுர்.

# சீறாவில் கலீபா உமறு

பெரும்புலவர், பேராசிரியர். **சி. நயினார் முகம்மது**, எம். ஏ.,
ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சி.

சிந்தையள்ளும் செந்தமிழ்ச் 'சீறா'க்காப்பியம் ஓர் இலக்கியச் சோலை. இன்பப் பேழை; கருத்துக் கருவூலம்; கலையின் நிலையம்; சொற்சுவை மலிந்து, பொருட்சுவை நிரம்பி, கற்பனைவளம் நிறைந்து, அணிநலம் கனியும் பேரிலக்கியமாகப் பிறங்குகின்றது. பாத்திரப் படைப்பிலும் சிறந்து பொலியும் காப்பியம் ''சீறா'' வாகும்.

## சீறாவில் பாத்திரப் படைப்பு

பல்வேறு வகைப்பட்ட பண்புடைய மனிதர்களை இவ்வுலகில் சந்திக்கிறோம். புறத்தோற்றம் கொண்டு கணித்து விரும்புவதும், வெறுப்பதும் பெரும்பாலும் தவறாகவே முடிகிறது. அகமும் புறமும் முரணாக அமைந்த தன்மையரும் இவ்வுலகில் உளர். இரண்டும் ஒருசேர இணைந்த மாந்தர்களையும் காண்கிறோம்.

காப்பியப் பேருலகில் அனைத்து வகைப்பட்ட மனிதர்களையும் சந்திக்க வாய்ப்புண்டு. இனிய தோற்றமும் அரிய குணச் செயல்களும் கொண்ட அண்ணல் நபிநாயகம் (ஸல்) அவர்களைச் சீறா முழுவதும் மாறாது கண்டின்புறுகிறோம். ஹஸ்ரத் அபூபக்கர், ஹஸ்ரத் உதுமான் முதலியோர் அமைதியின் நிலையங்களாகக் காட்சி தரு-கின்றனர். அன்னை கதீஜா, ஆயிஷா நாயகியார், பாத்திமா நாயகியார் முதலிய தாய்க்குலத் திலகங்களைக் காணுகின்றோம் தியாக சீலர் ஹஸ்ரத் பிலால் கறுப்பு நிறமும், தடித்த உதடும், சப்பை மூக்கும், சுருட்டை முடியும் கொண்ட அழகற்ற தோற்றமுடையவர். ஆனால் அழிம்பன் அபுஜகிலோ அழகிய தோற்றம் கொண்டவன். ஹஸ்ரத் உமறோ கடுமையும், இனிமையும், அழகும் இழையும் அற்புதப் படைப்பாகும். அவரைச் சந்திக்கும்போதெல்லாம் பயமும் பக்தியும் தோன்றுகின்றன.

## ஹஸ்ரத் உமறு

செந்தமிழ்ச் சீறாவில் 'உமறு' ஒரு துணைப்பாத்திரமாவார். இஸ்லாமிய வரலாற்றில் அகிலத்திற்கோர் அருட்கொடையாக அண்ணல் நபி நாயகம் (ஸல்) அவர்களுக்கடுத்துப் பெருமையுடன்

போற்றப்படுவோர் ஹஸ்ரத் அபூபக்கர், ஹஸ்ரத் உமர், ஹஸ்ரத் உமான், ஹஸ்ரத் அலி ஆகிய நால்வரும் ஆவர். இவர்களுள் ஏனையோர் காப்பியத்தில் ஆங்காங்கே பலவிடங்களில் குறிப்பிடப் படுகின்றனர். எனினும் தனிப்படலத்தையே தன்பெயரில் கொண்ட தனிச்சிறப்பு ஹஸ்ரத் உமறு கத்தாபுக்கே உரியது.

'நுபுலத்து'க் காண்டத்தில் நான்காம் படலம் 'உமறு கத்தாபு ஈமான் கொண்ட படலம்' ஆகும். இதிலிருந்தே இவர் இஸ்லாமிய நெறியை ஏற்றுக்கொண்டது மிகவும் முக்கியமானது என்பது புலப் படுகின்றது. இப்படலத்திலுள்ள 95 பாடல்களில் மட்டுமல்லாமல் கடவுள் வாழ்த்துப்படலம், உடும்பு வசனித்த படலம், பதுறுப்படலம், உகதுப்படலம், உம்ருவுக்குப் போன படலம் முதலிய படலங்களில் பல பாடல்களில் இவர் பேசப்படுகின்றார்.

அண்ணலார்க்குப் பின்னர் இவ்வுலகில் தீன்சுடரைக் காத்த காவலர்களில் கலீபாக்கள் நால்வரும் பேரிடம் பெறுவர். உமறுவும் அவர்களில் ஒருவர். சீறாவிலோ அண்ணலார் இவ்வுலகில் வாழும் நாளில் அவர்களுக்குத் துணையிருந்து உமறு ஆற்றிய பணிகளே இடம் பெறுகின்றன. இருப்பினும் கலீபா உமறுவின் பண்புகளையும் அறிந்தவர் கவிஞர் உமறு, காலத்தால் பிற்பட்டவராதலால். எனவே பின்னைய உயர்வினை மனத்தில் கொண்டு அதற்குத்தகும் பெற்றி யாளராகவே இளைஞர் உமறுவைச் சொற்சித்திரம் செய்கிறார், கவிஞர் உமறு.

சீறாவில் அவர் கலிபாவாக வருமுன்னர் உள்ள பகுதியே தரப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, கடவுள் வாழ்த்துப் படலத்தில் வரும் ஒரு பாடல் உமறுவைக் கலீபாவாகத் தீட்டிக் காட்டுகின்றது. பிறபகுதிகளில் பயின்றுவரும் சொற்களும், பொதிந்துள்ள பொருளும், ஓடிவரும் உணர்ச்சியும் அவரைக் கலீபாவாகப் புலப்படுத்தத் தவற வில்லை. இஸ்லாமிய வரலாறு அறிந்தோர் கவிஞர் உமறு தரும் பாடல்களில் கலீபா உமறைக் கண்டு மகிழ்வர்.

இஸ்லாமிய அரசியல் வரலாற்றில் ஏந்தல் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கடுத்து மிகவும் புகழ் பெற்ற பெருந்தலைவர் ஹஸ்ரத் உமறு ஆவார்.

உமறு கத்தாப் இஸ்லாத்தைத் தழுவியதே ஒரு ரசமான கதை. இறைவன் அண்ணல் பெருமானுக்கு அருளொளி காட்டி நான்கு ஆண்டுகள் நிறைந்திருந்தன. ஆனால் அன்று வரை இசு லாத்தைத் தழுவியவர்களின் எண்ணிக்கை முப்பத்தொன்பதுமட்டுமே.

தீமையின் உருவமான அபூஜகிலோ, அண்ணலாரின் இன்னுயிரைப் பறிப்பதற்கு எண்ணம் கொண்டிருந்தான். ஆனால் அளவற்ற அருளாளனுன இறைவனின் எண்ணமோ வேறுவகையாக இருந்தது. அண்ணல் பெருமானார் இறைவன் அளித்த பணியை நிறைவுறச் செய்வதற்குத் துணைவேண்டும் என்று எண்ணி இறைவனை வேண்டுகிறார்.

"உலகினில் கருதலர்க்கு அடலரி உமறினைக் கொடு
அலது அபூஜகிவினைக் கொடு" என்பது அவர்களின் 'துஆ'.

இதற்கிடையில் அண்ணலாரின் இன்னுயிரைப் பறிக்க உமறினையே தேர்ந்தெடுக்கின்றான் அபூஜகில். கையில் ஏந்திய வாளொடும் தன்னுடைய சகோதரி பாத்திமாவின் இல்லத்திற்குச் செல்கிறார். அங்கு எழும் திருமறையின் ஒலி அவர்தம் சினத்தை அதிகமாக்கு கின்றது. தம் சகோதரியையே தாக்குகிறார். சகோதரியின் ஆன்ம வீரத்தின் முன் அவர்தம் உடல் வீரம் இறுதியில் மண்டியிடுகின்றது. திருமறை வசனங்களை ஓதி உணர, சகோதரியின் ஆணைப்படி உடற் சுத்தமாக வாவியில் நீராடச் செல்கிறார். எப்படிப்பட்ட வாவியாம் தெரியுமா ? கவிஞர் உமறு சொல்கிறார்!

"மன்னவன் அபுல்காசிம் தன், மனத்தெளிவதனின் மிக்க
பன்னருஞ் சிறப்பு வாய்ந்த பங்கய வாவி" யாம் அது.

அந்தமில் ஆதி சொன்ன ஆயத்தும் பொருளும் கொண்ட ஏட்டினைக் கையிலெடுக்கிறார். நெஞ்சத்துக் 'குபிர்' நடுக்கம் கொள்கிறது. நில்லாது ஓடுகிறது. மறைமொழிப் பொருளைத் தேர்கிறார். "மானுடர் மொழி யீதன்று" என்ற எண்ணம் பிறக்கிறது.

"இறையவன் மொழியே யன்ன
இதயத்தில் இருத்தி வேத

நிறைநிலை மனத்த ராகி
நினைத்தவஞ் சகத்தைப் போக்கி

குறைபடும் குபிரைச் சூழ்ந்த
குலத்தொடும் வெறுத்து நின்றார்."

"ஈமான்" நெஞ்சிலே பிறக்கிறது; இருட்குலத்தின் மேல் வெறுப்பும் உடன்பிறக்கிறது. இனியென்ன ? அவர் நெஞ்சிற் பிறந்தஒளி, நிறைமுகத்தும் தெரிகிறதாம். கவிஞர் உமறுகாட்டும் உமறு, இதோ நிற்கிறார்!

"அழிதருங் குபிரை நீக்கி
அகுமது தீனை நோக்கிப்
பொழிகதிர் வதனச் செவ்விப்
புரவலர் உமறு நின்றார்"

## கடவுள்வாழ்த்துப் படலப் பாடல்

கடவுள்வாழ்த்துப் படலத்தில் கலீபா உமறு குறித்துக் கவிஞர் உமறு நெஞ்சையள்ளும் செஞ்சொல்லோவியம் ஒன்றைத் தீட்டிக் காட்டுகின்றார்.

அமரில் எதிர்த் தோர்கள்ஆவி எமதிசையைத் தேடியோட
அடரும் அடல் சூரவீர வேள்
மமதைகெடச் சாதிநீதி முறைமை தனக்காக வோது
மகனைவதைத் தோரொ ருமலே
திமிரப் பகைப் பானுமேனி கருகிவிடப் பார்வையேவு
தெரிம றையிற் கார ணீகனார்
உமறு திருத்தாளை நாளும் மனதினினைத் தோதுவார்தம்
உரிய தவப் பேறு மீறுமே

இப்பாடலின்கண் கலீபா உமறின் அறிய இயல்புகள் நான்கு வெளிப்படுகின்றன.

(1) கலீபா உமறின் வீரம்
(2) மாட்சி மிகு ஆட்சி
(3) நிகரற்ற நீதி
(4) திருமறை போற்றும் முறை.

இவ்வாறே சேகனாப்புலவர், வண்ணக்களஞ்சியப்புலவர், குலாம் காதிறு நாவலர், பதுருதீன்புலவர் முதலியோரும் ஹஸ்ரத் உமறு மீது கடவுள் வாழ்த்துப் பாடல்கள் பாடியுள்ளனர்.

## வீரம்

நல்ல உயரம். உறுதியான உடல்; அடர்த்தியான தாடிமீசை. பெரியதலை; ஒளிதிகழும்முகம்; தடந்தோள்; விரிந்தமார்பு; அழகான தோற்றம்; உணர்ச்சித் துடிப்பு; பொங்கி எழும் மனம்,- இதுவே

கலீபா உமறின் தோற்றம். பண்புநெறியாம் இஸ்லாத்தைப் படையெடுத்து அழிக்க வந்த பகைவரைத் தடுக்கும் பொருட்டு பெருமானரின் பதுறு, உதுப், அகழ் முதலிய போர்களில் ஈடுபட்டு வெற்றிவீரராக விளங்கினர். இவர் கலீபாவாகப் பதவியேற்றதும் ஈரானியப் பேரரசுடன் தொடர்ந்து பெரும்போர் செய்ய வேண்டியிருந்தது. உரோமப் பேரரசுடனும் அடுத்தடுத்துப் போர்புரிய நேர்ந்தது. பல்லாண்டுகளாகப் பரந்து விரிந்திருந்த இருபெரும் வல்லரசுகளையும் வென்றார். எகிப்துடனும் போரிட்டு வெற்றிபெற்றார். எனவே ஈரான், சிரியா, எகிப்து முதலிய நாடுகளை இஸ்லாமிய ஆட்சியின் கீழ் கொண்டுவந்தார். 22.5 இலட்சம் சதுரமைல் பரப்புள்ள பேரரசை நிறுவினர். மேற்கில் ஆப்பிரிக்காவின் வடபகுதியிலிருந்து கிழக்கில் இந்தியா வரையும் வடக்கில் குராசானிலிருந்து தெற்கில் அபிசினியா வரையிலும் இவரின் ஆட்சி பரவியிருந்தது. இத்தனையும் பத்தரை யாண்டுக் காலத்தில்தான். வரலாற்றில் ஈதோர் அற்புதமாகும். எனவேதான் கடவுள் வாழ்த்துப் படலப்பாடலில் கவிஞர் இவரை,

அமரில் எதிர்த்தோர்கள் ஆவி எமதிரையைத் தேடியோட
அடருமடல் சூர வீர வேள்" எனக் குறிப்பிடுகின்றார்.

இவரை எதிர்த்துப் போரிடுவோரின் ஆவி எமலோகத்தைத் தேடிச் செல்லும்படி செய்யும், வெற்றிச் செருக்கைக் கொண்ட வீரவேந்தர் எனக் குறிப்பிடும்போது மனத்திரையில் வீரர் காட்சி வழங்குகின்றார். உமறு கத்தாப் ஈமான் கொண்ட படலத்தில்,

| | |
|---|---|
| 'கருதலர்க்கு (பகைவர்க்கு) அடல் அலி உமறு' | — 3 |
| 'அடல் அமறு' | — 53 |
| 'உமறெனும் வீரர்' | — 22 |
| 'தீட்டிய கதிர்வேல் செங்கைத்திறல் உமறு' | — 56 |
| 'எறுழ்வலித் தடக்கை வெற்றி எழிலுமறு' | — ,, |
| தென்னுறு கதிர்வேற் சிங்கம்' | — 72 |
| 'இணையடல்தவிர் வெள் வேலாய்' | — 80 |

போன்ற தொடர்கள் பயின்று இவருடைய சீற்றம், வலிமை, வீரம் குறித்து விளக்கிக் காட்டுகின்றன. உகுதுப்படலத்தில் ''அடலுமறு'' என இவர்தம் பேராற்றலைக் குறிப்பிடுகின்றனர்.

## ஆட்சித் தலைவர்

ஹஸ்ரத் உமறு பரந்த பேரரசிற்குச் சிறந்த தலைவராக மட்டும் விளங்கினர் என்று கூறிவிடுவதற்கில்லை. முறை செய்து காப்பாற்றும் மாட்சிமிகு ஆட்சித் தலைவராகவும் காட்சி தருகிறார். குடிதழுவிக் கோலோச்சினர். மக்களாட்சி முறை மலர்ந்து மணம் பரப்பும்படி செய்தார். திருமறையினையும் அண்ணலாரின் வாழ்வினையும் அப்படியே பின்பற்றிய ஜனநாயகவாதி உமறு. பள்ளி

வாசலின் படிக்கட்டுகளில் அமர்ந்தவர். மண்தரையிலும் படுத்தவர். ஒட்டுப் போட்ட உடைகளை உடுத்தியவர். கலீபா உமறுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் சீறாவில் இடம் பெறவில்லையாயினும் அப்பண்பு களைக் குறிப்பால் உணர்த்துகிறார் கவிஞர் உமறு. அரசாங்க ஒட்டகம் காணாமல் போக அதனைக் கலீபா உமறு தேடி வந்தார்.

உதவிக்கு ஆளில்லாமல் பிரசவ வேதனையால் பேதையொருத்தி அவதிப்பட்டபோது தம் மனைவியை அழைத்துவந்து பிரசவம் பார்க்கச் செய்தார்.

மனைவிக்கு வந்த அன்பளிப்பு அணிகலத்தை அரசாங்க உடமையாக்கி விட்டார்.

அரசாங்கப்பணத்தை ஆளுநர் கொடுத்தனுப்ப, வழியில் அதனை முதலாக வைத்து வாணிபம் நடத்தி ஊதியம் பெற்ற தம்முடைய புதல்வரிடமிருந்து, இலாபத்தையும் சேர்த்துப்பெற்று அரசாங்க நிதியில் அப்படியே சேர்த்து விட்டார்.

இவ்வாறு பிற்காலத்தில் மக்களைக் காக்கும் மாபெருந்தலைவ ராகத் திகழ்ந்த கலிபா உமறு குறித்து கட்டியங் கூறுகின்றார் கவிஞர்.

'அடரும் அடல் சூர வீரவேள்'

எனக்கடவுள் வாழ்த்துப் படலத்திலும்,

'நரபதி யுமறு' 26 (67)
'மணவலி தடக்கை வேந்தே' —
'பார்த்திவர் உமறு கத்தாப்' (74)

என உமறுகத்தாப் ஈமான் கொண்ட படலத்திலும் ஆட்சித் தலைவராகக் குறிப்பிடும் கவிஞர்,

'கறை கெழுங்குருதி வைவேல் காவலர் உமறு கத்தாப் (76)
பொழிகதிர் வதனச் செவ்வி புரவலர் உமறு' (77)

எனவும் வரும் தொடர்களில் மக்களைப் பாதுகாப்பவர் என்பது பாராட்டத்தக்கது. பகைவர், பரிசனம், வலிய விலங்குகள், வறுமை முதலியவற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பது ஆட்சித்தலைவரின் பொறுப்பாகும்.

## கொடை

இவ்வாறு எளிமையும் கடமையும் பெரிதெனக் கொண்டு கலீபா உமறு செயற்கரிய செய்து வந்தார். நாட்டு மக்கள் நலமும் வளமும் பெற்று, வலிவும் பொலிவும் கொண்டு வாழ வழிவகை செய்தார். அள்ளிக் கொடுத்து அகமகிழச் செய்தார். எனவேதான் கவிஞர்

அவரைத்
“ தருங் கரதலத்தோய் ....................’ (79) என்று விளக்கிறுர்.

இம்மட்டோ!

“ இரப்போர்க் கொன்று
கொடுத்ததின் சிவந்த செங்கை கோளரிஉமறுகத்தாபு ” (81) என்று சுவை படச்சொல்கின்ருர். தற்காலத்தில் சிவந்த கைகள் பலவற்றைப் பார்க்கின்ரேம். இவைகளுள் பல, பிறர் பொருள்களே எடுத்துச் சிவந்தவை. ஆனல், உமறின் கைகளோ கேட்போர்க்குக் கொடுத்ததால் சிவந்து விட்டனவாம்.

மக்கள் குறையறிந்து நிறை செய்யும் பொருட்டு நகர்வலம் வரும்போது “ உமறு ஆட்சியில், நான் ஏழையாக இருக்கின்றேன். அவருக்கு கேடு சூழட்டும் ” என்று தம்மையறியாமல் தம்மிடமே கூறிய ஏழைக்கிழவிக்கு வேண்டும்பொருள் வழங்கினர்.

இன்னெரு நாள், இரவு நகர் வலம் வரும்போது ஒரு குடிசையின் அருகில் வந்து கவனித்தார். வீட்டினுள் குழந்தைகள் பசியால் அழுது கொண்டிருந்தனர். சமைப்பதுபோல் முயற்சி நடந்தது. தாய் சமைத்து முடிந்ததும் உணவளிப்பதாகச் சமாதானப் படுத்திக் கொணடிருந்தாள். நெடுநேரமாகியும் குழந்தைகளின் அழுகுரல் நின்றபாடில்லே. வேதனேயால் உந்தப்பட்ட கலீபா வீட்டினுள் சென்று விசாரித்தார். அடுப்பில் இருப்பது ஆகாரமில்லே யென்றும் வறுமையின் கொடுமை குறித்தும் கூறிவருந்தினள். உத்தபர் உமறு உள்ளம் பதைத்தார். விரைந்து வீடு வந்தார். மாவு மூட்டையும் நெய்யும் எடுத்துச் சுமந்து கொண்டு குடிசைக்குத் திரும்பினர். உணவு சமைத்துக் குழந்தைகளுக்கு உண்ணக் கொடுத்த பின்னரே வீடு சென்ருர். இவ்வாறு மூட்டைகளேச் சுமந்து சென்று கொடுத்ததால் கைகள் சிவக்கத்தானே செய்யும். மேலும் “செல்லேர் கரத்தார் உமறு கத்தாப்” (92) என்றும் அவரது கொடைக் கரத்திற்கு மேகத்தை உருவகிக்கின்ருர். மேகம் இன்னர் இனியர் என்ரு பார்க்கின்றது? அல்லது கைமாறுதான் கருதுகின்றதா? எங்கும் பொழிந்து வளம் பொங்கும்படி செய்து விடுகின்றது. ஹஸ்ரத் உமறும் அப்படியே கைமாறு கருதாமல் கொடை செய்கின்ருர்.

## நீதி

ஹஸ்ரத் உமறு நீதியில் புகழோங்கி விளங்கினர். ‘பாருக்’ என்பது நபிகள் நாயகம் (ஸல்) இவரின் தகுதியறிந்து தந்த சிறப்புப் பெயராகும். பாருக் என்ருல் “ மெய்மையையும் பொய்மையையும் பிரித்தறிகிறவர்,” என்பது பொருளாகும்.

இசுலாத்தைத் தழுவிய ‘ ஜப்லா ’ மன்னர் ஒரு காட்டரபியின் கன்னத்தில் அறைந்தபோது, “ மன்னர் காட்டரபியிடம் மன்னிப்புக்

கேட்கவேண்டும். இன்றேல் அவரிடம் கன்னத்தில் ஓரடிவாங்கிக் கொள்ளவேண்டும்.'' என்று தீர்ப்புரைத்தார் கலீபாஉமறு. தான் நீதிமன்றத்துள் நுழைந்தபோது மரியாதை காட்ட எழுந்த நீதிபதியைச் சினந்து, ''சட்டத்தின் முன் அனைவரும் சமம்'' என்று முழங்கியவர்.

தகாதமுறையில் விபச்சாரம் செய்வோர் கசையால் அடிக்கப் படுவது, இஸ்லாமியச் சட்டமாகும். ஒரு சமயம் கலீபாவின் மகன் அபுஷஹ்மா என்பார் தீயோர் சூழ்ச்சியால் மதுவருந்தலானர். மது போதையால் மாதொருத்தியைக் கூடினர். இது வெளியாயிற்று. சமயச்சட்டப்படி, மகனுக்கு 25 கசையடிகள் கொடுக்கும்படி, கட்டளை யிட்டார். அடியால் தாக்குண்ட இளைஞர் மயக்கமுற்றார். மரண மடைந்தார். தண்டனையில் இன்னும் ஒரு குறையிருந்தது. இறந்த மைந்தர் அடக்கப்பட்ட 'கப்ரில்' எஞ்சிய அடிகளை அடித்துத் தண்டனையை நிறைவேற்றும்படி செய்து விட்டார். இது கலீபா உமறின் நீதியாகும். இன்று உலகில் நடக்கும் முறையற்ற செயல் களைக்கண்டு வருந்தும் நமக்கு இது எவ்வளவு வியப்பைத்தருகிறது. இச்செய்தி செய்தக்காதி புலவரியற்றிய 'அபுஷஹ்மா மாலை'யில் விரி வாகக் காணப்படுகின்றது. ஆனல் கவிஞர் உமறு கலிபா உமறின் நீதித்திறத்தை ரத்தினச்சுருக்கமாக.

''மமதைகெடச் சாதிநீதி முறைமை தனக்காக வோது
மகனைவதைத் தோரொருலே''

என்று வியந்து பாடுகின்றார். செருக்கு அறும்படியாக தமது சமய ஒழுங்குகருதி தன் மகனையே குறையாமல் தண்டித்தார் என்பதில் எத்தனை நேர்மை இழையோடுகிறது.

''நடுவுறு மனத்தார் நீதி நான்மறை தெரிந்தநாவார்
படிறுரை பகராச் செவ்வி யறபிகள்''

எனும் தொடர் குறிக்கும் அறபிகள் கூட்டத்தில் ஹஸரத்உமறும் இருக்கக் காண்கிறோம். இவற்றில் மன்னராயிருந்தாலும் குடிமகனு-யிருந்தாலும் சமயநீதிக்கு முன் சரிநிகர் எனக்கொண்டு ஆட்சி செய்த உமறுவின் மாட்சி கண்டு வியக்கின்றோம்.

## முடிவுரை

ஆட்சித்தலைவராகவும், அரசியல் அறிஞராகவும், நீதியின் நிலைய மாகவும், தானையின் தலைவராகவும் நிருவாக மேதையாகவும் மக்களின் காவலராகவும், நேர்மையின் சிகரமாகவும் கலிபா உமறு திகழ்ந்தார். எனவேதான் காந்தியடிகள் நாடாள வந்த நல்லமைச்சர்க்கு 'அபூ பக்கர், உமறு போன்ற கலிபாக்களை பின்பற்றி நடக்கும்படி' நல்லுரை நவின்றார். இவ்வருமையான ஆட்சித்தலைவரை ஆங்காங்கு குறிப் பாகவும் விளக்கமாகவும் கவிஞர் உமறு சுவைபடத் தீட்டிக்காட்டி யுள்ளார்.

# உமறு காட்டும் அலீ

—: அதிரை அஹ்மத் :—

**அ**ன்று அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் வீட்டில் அருமையான ஒரு விருந்து நடந்துகொண்டிருந்தது. அங்கு, பெருமானாரின் குடும்பத்தினர் அனைவரும் குழுமியிருந்தனர். இன்சுவை விருந்தும் இனிதே என்னும், நபியவர்கள் எழுந்துநின்று, வணங்குதற்குரியோன் அல்லாஹ்வே முடிந்தது தாம் அவன் தூதரென்றும். தாம் காட்டும் நேர்வழியில் தம் குடும்பத்தினரும் ஒழுகவேண்டுமென்றும் அறிவித்தார்கள். இதனைக்கேட்ட வுடன் விருந்தினர்கள் சினங்கொண்டனர்; சீறியெழுந்தனர்; சிதைத்து விடுவோம்' என்றுநபியாரை எச்சரித்தனர்.

இந்நிலையில் பெருமானார் (ஸல்) அவர்கள், "எனக்கு உதவி புரிவோர் எவரும் உளரா?" என்று அக்கூட்டத்தைப் பார்த்துக் கேட்டனர். மாற்றுக் கொள்கையுடன் கூடியிருந்த மக்கள் கூட்டத்தின் நடுவிலிருந்து ,'நான் உதவி புரிவேன்'' என்ற இளங்குரல் ஒன்று ஒலித்தது.

யாருடைய குரல் அது?

அண்ணல் பெருமானாரின் அருமைத் தந்தையும் பாட்டனாரும் இறந்த பின்னர், தந்தையின் தகுயில் இருந்து அன்னாரை வளர்த்துவந்த பெரியதந்தை அபூ தாலிப் அவர்களின் அருமை மைந்தர் அலீதான் அக்குரலுக்குரியவர்.

பெருமானார் (ஸல்) அவர்கள் 'இஸ்லாம்' என்ற ஒளிச் சுடரை இவ்வுலகில் ஏற்றிவைக்கத் தொடுத்த காலம்அது. அன்னாரின்குடும்பத்தினர் சிலரும் மழ்றும் ஓரிருவரும் இஸ்லாத்தைத் தழுவியிருத்தனர். அவர்களுன் ஹலரத்அலீ (ரலி) அவர்களும் ஒருவர். இளைஞராக முதலில் இஸ்லாத்தைப் தழுவிய பெரும்பேறு இவருக்கே கிட்டியது.

சிந்தைக்கினிய சீருப்புராணத்தை யாத்துத் தந்த கவியேறு உமறுப்புலவர், அலியார் இஸ்லாத்தைத் தழுவியதை இவ்வாறு பாடுகிறார்.

" அந்தமில் நாயகன் தூதர்க் கன்புறும்
சிந்தையர் புகழபுத் தாலிப் சேய்களில்
சுந்தரப் புலியலி யென்னு தோன்றலும்
வந்தனை செய்துதீன் வழியி லாயினர் ''.

(தொழுகைவந்த வரலாற்றுப் படலம்-16).

ஓரிறைக்கொள்கையே ஒப்பற்ற மார்க்கமென்று தேர்த்து, இளமையிலேயே இஸ்லாத்தைத் தழுவி, பெருமானருக்குப் பல பேருதவிகள் புரிந்து, அன்னரின் அன்புக்குரியரான அலீயவர்களைப்பற்றிப்பாடும்போது, 'தூதர்க்கு அன்புறும் சிந்தையர்' என்கிறர் புலவர் உமறு. அபுத்தாலிபின் மக்களுள் அழகானவரும் வீரத்தில் புலிபோன்றவருமான அலீ, வழிதவறிச்செல்ல இருந்தபோது இஸ்லாமென்னும் நேர்வழி தெளிவானவுடன், இறைவனுக்கு நன்றிகூறி இஸ்லாத்தைத் தழுவினராம்.

சீருவின் தொடக்கத்தில் புலவர் உமறு நமக்கு அலியாரை அறிமுகம் செய்யும் பாங்கு அருமையானது. இஸ்லாத்திற்கு ஓர் அரிய வீர வரலாற்றைச் சமைத்ததில் அலீயவர்களுக்குப் பெரும் பங்குண்டு என்ருல் மிகையாகாது. அத்தகைய அலீயவர்களைத் தம் காப்பியத்தின் கடவுள் வாழ்த்துப்பகுதியில் நினைவுகூர்கிருர் உமறு, அதுபோழ்து, அலியாரின் புரவியைப்பற்றி வருணனை செய்கிருர். அக்குதிரை ஓடினல் இப்புவி கிடுகிடுக்குமாம். அகிலத்தைத் தாங்கி நிற்கும் ஆதிசேடன் எனும் பாம்பின் தலை நெறுநெறுவென்று நசுங்குமாம். (புராணக் கதை) கடலலைகள் அலறி ஆர்ப்பரிக்குமாம். அச்சத்தில் அசைந்து நடுங்குமாம் இமயம். வான முகடு உடைபடுமாம். சூல்கொண்டு தேங்கி நிற்கும் மழைமேகம் சிதறி ஓடுமாம். பகைவர்களின் பல ஊர்கள் இடிபட்டு, அதனல் ஏற்படும் புழுதிப் புயல் சூரியனில் போய்ப் பதிந்து ஒளியை மறைக்குமாம்.

"படிகிடு கிடெனநாக முடிநெறு நெறெனவாரி
படுதிரை யளற தாகவே
வடவரை யசைவான முகடுடை படவருத
மழைமுகில் சிதறி யோடவே
அடையலர் கெடிகள்கோடி யிடிபடு படலதூளி
அலரியி னுடலின் ! மூழ்கவே
நடமிடு கடினவாசி மிசைவரு சமரசூர
நரர்புலி யலியை யோதுவாம்".

அலியாரை நினைவுகூர விழைந்தபுலவர், அன்னரின் குதிரையைப் பற்றிக் குறிப்பிடுவானேன்? குதிரையே இத்தனை வீரமும் தீரமும் உடையதெனில் அதனைக் கட்டுப்படுத்தி ஓட்டும் அலியாரின் வீரம்பற்றிக் கூறத் தான் வேண்டுமோ? பொதுவாக அறியாரை நமக்குப் புலவர் ஓர் அடலேறுவாகவே சித்தரித்துக் காட்டுகிருர்.

'வரைத்தடப் புயவலி' என்று உமறுப்புலவரால் வருணனைசெய்யப் பெற்ற அலியார் இயற்றிய வீரதீரச் செயலகள் ஏராளம். அன்னரின் வீரத்

தன்மைக்கும் அண்ணல் பெருமானுர் (ஸல்) இவர்கள்மீது அன்னுருக்கிருந்த அன்பிற்கும் சான்றுபகரும் வகையில் ஓர் அரிய நிகழ்ச்சி வரலாற்றில் இடம் பெறுகிறது பெருமானுருக்கு இறைவன் புறத்திலிருந்து நபிப் பட்டம் அருளப்பெற்றபின் பதின் மூன்று ஆண்டுகள் மக்காவில் இருந்து இஸ்லாத்தைப் பரப்பும் பணி நடந்துவந்தது. எனினும், அம் மக்கத்து மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளாமல் எதிர்ப்புத்தான் தெரிவித்தனர். இது மட்டுமன்றி, இஸ்லாத்தை ஏற்றோரை ஈவிரக்கமின்றி வதைசெய்துவந்தனர். இந்நிலையில்தான் இறைவன் புறத்திலிருந்து, மக்காவைத் துறந்து மதினு வுக்குச் சென்றுவிடுமாறு நபியவர்களுக்குக் கட்டளை வந்தது.

இதனை ஏற்று, அன்னூர் மதினு செல்ல ஆயத்தமானுர்கள். இத திட்டம் மக்காவிலிருந்த எதிரிகளுக்குத் தெரிந்தது. உடனே நபியவர்கள் வீட்டைச் சூழ்ந்து முற்றுகையிட்டனர். ஆனுல், அவர்கள் எத்துணை தான் தடைவிதித்திருந்தாலும், எல்லாம்வல்ல இறைவன் விதிப்பதன்றோ நடக்கும்? அதன்படியே, இரவோடிரவாக தப்பிச் சென்றுவிடுமாறு நபியவர்களுக்கு இறைவன்புறத்திலிருந்து ஏவல்வந்தது- அத்தருணத்தில் நம் அலியார் தாம் நபியவர்களுக்கு உறுதுணையாக இருந்தார்கள். அருமை மகளார் பாத்திமாவிடமும் அன்னைபோன்று காத்துவளர்த்துவந்த தம் பெரிய தந்தை யாரின் மனைவியார் பாத்திமாவிடமும் தெரிவித்துவிட்டு, தம் படுக்கையில் அலியாரைப் படுக்கவைத்துப் போர்வையைப் போர்த்திப் பெருமானுர் புறப்பட்டுவிட்டார்கள்.

"அமரருக் கரசர் மொழிப்படி திருந்த
அலிதமை அணைமிசைப் படுத்தித்
தமரொடு மிருந்து மூன்றுநாள் கடந்தென்
தன்வயின் சாருமென் றுரைத்துக்
கமைதரு டிருகண் மணியினுஞ் சிறந்த
புதல்வியர் தமக்குங்கட் டுரைத்துத்
தமைவளர்த் துவந்த பாத்திமா வெனுமத்
தாயர்க்கு முரைத்தெழுந் தனரால்".

(யாத்திரைப் படலம் - 77)

அரக்கர்களால் சூழப்பட்ட அவ்வீட்டின் உள்ளே தன்னந்தனிய ராகப் படுத்திருந்து தம் உயிரைப் பணயம் வைக்கும் வீர - தியாக உணர்வு அலியாருக்கன்றி வேறு யாருக்கு வரும்? இதனுல்தான் உலகத்தில் இஸ்லாமென்னும் உண்மை மார்க்கம் பரவி நன்னெறி தழைக்க உரிய காவ லாய் இருந்து, ஆட்சியாளர்களுக்கிடையே வீரத்தில் அடலேறுபோன்று வாழ்ந்த அலியாரை,

"நலிவற வுலகநீதி நெறிமுறை பெருக நாளும்
நமருயி ரரிய காவலாய்
ஒலிகடல லுலகமீது தெரிதர வரியதீனும்
உறுகதி ருதய மாகவே
மலுபுக ழரசர்சீய மிர்கமத நறைகுலாவும்
மறைநபி மருகர்......................"

என்று பாடிப் பரவுகின்றுர் உமறுப் புலவர்.

தாம் சென்று மூன்று நாட்கள் கடந்தபின், தம் சுற்றத்தாரையும், தோழர்களையும் மதீனுவை நோக்கிப் பயணமாகி வருமாறு பணித்துவிட்டு நபியார் புறப்பட்டனர். அதன்படியே, மூன்று நாட்களுக்குப் பின் மதீனு விலிருந்த நபியவர்களையும் அன்னுரை நம்பிய மதீனுவாசிகளையும் சென்ற டைந்த மக்கத்து முஸ்லிம்கள், காந்தத்துடன் சேர்ந்துகொள்ளும் இரும்பு போன்று இணைந்துகொண்டனர்.

"ஏடவிழ் மாலையர் பலரும் ஏந்தலும்
பீடுபெற் றவ்விடத் திருப்பப் பெய்ம்முகில்
ஓடிய தெனநறை வூற்றுத் தாருடை
ஆடக வரைப்புயத் தலியும் வந்தனர்".

(மதீனம் புக்க படலம் - 27

தம் அருமைப் பெரிய தந்தையாரின் புதல்வரும், அல்லும் பகலும் ஆதரவாயிருந்தவரும் ஆருயிரனைய தோழருமான அலீயவர்கள் மதீனுவை வந்தடைந்தவுடன் அண்ணலெங்கள் கோமான் (ஸல்) அவர்கள், அன்னுரை ஆரத் தழுவி அகமிகமகிழ்ந்தனர். அண்ணலாருடன் வீற்றிருந்த ஆருயிர்த் தோழர்களும் மலைபோன்று உயர்ந்த தம்புயங்கள் அலியாரின் புயங்களுடன் பொருந்துமாறு கட்டியணைத்துக் கழிபேருவகை எய்தினர். அண்ணல் பெரு மானுரை அலியார் சென்றடைந்த காட்சி, சிறந்த - உயர்ந்த உயிர் உடலைச் சென்றடைந்தது போன்றிருந்தது என்று உமருப்புலவர் உவமித்துக் கூறுகிறுர்.

"திருப்பரு முயிருடற் சேர்ந்த தொத்தென
வரிப்புலி யலிதமை மார்புறத் தழீஇ
இருப்பமற் றவ்விடத் திருந்த மன்னரும்
பொருப்பெனும் புயங்களிற் பொருந்தப் புல்லினுர்".

(மதீனம் புக்க படலம் - 29)

பெருமானாரின் திருமகளார் பாத்திமா அவர்களுக்குத் திருமண ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன அலீயவர்களுக்கு அவரை மணமுடிக்கவேண்டுமென்ற விருப்பம் இருந்தது. அதற்குரிய நேரம்வந்தது. இருவருக்கும் திருமணம் சிறப்புடன் நடைபெற்றது. இச்செய்திகளைப் புலவர் பாத்திமா திருமணப்படலம் 10ல் கூறுகின்றார். புலவர்கள் திருமண நிகழ்ச்சிகளை விளக்கும் மரபையொட்டியே உமறுப் புலவரும் இன்பச் சுவை ததும்பும் பாடல்கள் சிலவற்றை இப்பகுதியில் இணைத்துள்ளார்.

பாத்திமாவை மணம்முடிக்கவேண்டும் என்ற பெருவிருப்பில் அலீயவர்களின் உள்ளம் பட்டபாடு யாருக்கும் தெரியாது. இதனால், அவருள்ளம் காதல் நோயால் வாடியது.

"கவிதடுத் துலகங் காக்கும்
காவல சினிதி னீன்ற
ஒலிகட லமிர்த மொவ்வா
வொண்டொடி முகத்தின் வாய்ந்து
மலிதருங் கருமை யுண்ட
வரிவிழிக் கயல்கள் பாய
அலியெனும் வலிய வீரர்
அகக்கடல் கலங்கிற் றன்றே."

(பாத்திமா திருமணப்படலம் - 23)

அலீயவர்களின் உள்ளக் கடல் உணர்ச்சிப் பெருக்கால் கலங்கியதாம். தம் எண்ணத்தை - விருப்பை - வேட்கையை யாரிடம் கூறுவார்?

நனைதரும் வதுவை வேண்டி
நாடொறுங் கெஞ்சிக் கெஞ்சித்
தனியனுக் குரைத்தா ரன்றிப்
பிறர்க்குரை சாற்றி லாரே."

(பாத்திமா திருமணப் படலம் - 27)

இறைவனிடம் முறையிட்டாரேயன்றிப் பிறரிடம் கூறவில்லை. அன்னாரின் முறையீடு ஆண்டவனால் ஏற்கப்பட்டது. வானவத் தலைவர் ஜிப்ரயீல் மூலமாக இறைவன் தன் தூதருக்குச் செய்தி அறிவித்தான். இறைவனிடமிருந்து வந்த கட்டளையைப் பெருமானார் தம் தோழர்களிடம் தெரிவித்தனர்.

மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிய தோழர்கள், இவ்வாறுதான் யாமும் நினைத்தோம். இறைவனும் எம் விருப்பினையே நிறைவுசெய்தான். இதன் மூலம் அலியார் பெற்ற பெரும்பேற்றின் அருமையை யார்தான் வகுத்துக் கூறமுடியும்? என்று வியந்துரைத்தனர்.

“கனகநா டதனி னுற்ற
காரண வமுதந் தேக்கு
அனைவரும் களிப்பு வெள்ளத்
தானந்தக் கடலின் மூழ்கி
இனையென நினைத்தோ மியாங்கள்
நினைத்தவை இறையோன் செய்தான்
வினைகழல் அலியார் பேறின்
மகிமையார் வகுக்க வல்லார்?”

(பாத்திமா திருமணப் படலம் - 35)

இவவாறு மகிழ்ச்சி பொங்க மங்கலமான முறையில் மணக்கோலம் பூண்டு தெருவில் பவனிவரும் செய்திகளில் சில மிகையான வருணனைகளாகத் தோன்றுகின்றன. தமிழுள்ளத்துடன் சீருவை யாத்துள்ள புலவர் உமறு, இத்திருமணத்தை ஒரு தமிழகத்துத் திருமணமாகவே வருணனை செய்கிறார். அதனால். தமிழ் பண்பாட்டுடன் இணைந்த ஓரிரு நூதன நிகழ்ச்சிகள் இப்படலத்தில் இருப்பினும், புலவர் காட்டும் உணர்ச்சிமிகு வருணனைகள் படித்து சுவைக்கத்தக்கவை.

அதோ, திருமண ஊர்வலம் வந்துகொண்டிருக்கிறது. நடுவில் மணமகன் வருகிறார். வீதியில் அலியார் வருகிறார் என்பதைக் கூறவிழைந்த புலவர் அன்னாரைப் பல கோணங்களில் வருணனை செய்யும் பாங்கு அருமையானது.

“நரர்புலி அலியார் வந்தார்
நபிதிரு மருகர் வந்தார்
அரியபித் தாலி பீன்ற
ஆணினில் அழகர் வந்தார்
பரிவலி வீரர் வந்தார்
பாத்திமா கணவர் வந்தார்
திருவுலா வெண்ணிப் போற்றித்
திருச்சின்ன மியம்பிற் றன்றே.”

(பாத்திமா திருமணப் படலம் - 164)

இது, மணமகனைப்பற்றிய வருணனைதான் என்றாலும், அலியாரின் வீரத்தன்மையினைப் புலப்படுத்தும் ஓசைநயத்துடன் பாடல் அமைந்திருப்பது உற்று நோக்கத்தக்கது.

பல போர்கள் இஸ்லாமிய வரலாற்றில் நிகழ்ந்துள்ளன. பதுறுப் போரில் முஸ்லீம்கள் சிறுபான்மையினராயிருந்தாலும், வெற்றி அவர்களுக்கே கிட்டியது. அப்போரின் ஓர் அணிக்கு அலியாரே தலைவர். எதிரிப் படையிலும் கோத்திரச் சிறப்புடைய அபூஜஹில், உத்பா, உமையா, ஷைபா, வலீது போன்ற பெரும் மன்னர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

வலீது என்பான் எதிர்த்து வந்தபோது அலீயவர்கள் தீரத்துடன் முன்வந்து அவனை மல்லுக்கழைத்தார்கள். அலியார் தோற்றத்தில் சற்றே குள்ளமானவர். அதனால் வலீது அலியாரைப் பார்த்து,

கலின வாம்பரி வீரரி லெனதுகை யறிய
வலிய வஞ்சக முகம்மதே யெதிர்வரல் வேண்டும்
சிலையுந் தண்டமுங் கட்கமுந் தரித்தொரு சிறுவன்
நலிவி லாதிவ னேவெதிர் பவனென நகைத்தான்."

தம்மைச் சிறுவனென்று இகழ்ந்துகூறித் தன்னுடன் பெருமானாரே பொருதத் தகுதியுடையோர் என்ற வலீதின் நச்சு உள்ளத்தில் நன்றாகப் பதியுமாறு வினக்கினார்கள் வீரர் அலீ!

"அறிவின் உதவியால் செய்யவேண்டுவது எது, செய்யத்தகாதது எது என்பதை அறியாத மடையர்களே! இங்கு சிறுவனாகத் தோற்றத்தில் இருந்தாலும், நான் செம்மையான 'தீன்' என்னும் இஸ்லாத்தை நேர்வழி என்று ஏற்று, நல் வணக்கமும், நல்லொழுக்கமும் பெற்றிருப்பதில் முதிர்ச்சி பெற்றுள்ளேன். எமக்கு வீரமும் ஆண்மையும்தான் இச்சமர்க்களத்தில் பெரிது என்றார்.

இவ்வாறு வலீதுக்குச் சினம் வருமளவுக்கு வீரத்துடன் அலியார் மொழிந்ததும், அவன் பாய்ந்துவந்து எதிர்த்தான். அவனையும், அவனைச் சார்ந்த சிலரையும் அலீயவர்கள் வெட்டி வீழ்த்தினார்கள். அலீயைப் போன்ற வலிய வீரர்கள் பதுறுப் போரில் பங்கேற்றதால், அதில் இறைவன் முஸ்லீம்களுக்கு வெற்றியை நல்கினான்.

அடுத்து, அலீயாரை உமறுப் புலவர் நமக்கு அறிமுகம் செய்யும் 'உயை வந்த படலம்' எகிப்து நாட்டை ஆண்டுவந்த உயைனா மதீனாவை

நோக்கிப் படையெடுத்து வந்து முன்லீம்களை வெல்ல முயன்றான். இதனை உணர்ந்த பெருமானார், தம் அருமை மருகர் அலீ அவர்களை விளித்து எதிரிகளை வென்றுவருமாறு பணித்தார்கள். புலிபோன்று பாயும் அலியார் செருகளத்தில் புகுந்து போருற்றும்போது ஏற்பட்ட நிலையைப் புலவர் வருணிக்கிறார்.

உந்தியுந்தி வந்த குதிரைகளையெல்லாம் குருங் சிந்தக் குப்புற வீழ்த்தினார் அலீயார். நெருப்பைப்போல் வீர ஆவேசத்துடன் வந்து மோதிய எதிரிப் படை வீரர்களைத் தம் 'துல்பிகார்' என்னும் வாளினால் வெட்டினார்கள். அதனால் எதிரிகள் பந்திபந்தியாக ஆங்காங்கு வீழ்ந்தனர். இக் கவிதையினைப் படிக்கும்போது, போர்க்களத்து நிகழ்ச்சியை உணர்ச்சி தோன்றக் காணும் நிலை நமக்கும் ஏற்படுகிறது.

ஹஸரத்அலி அவர்களைப் புலவர் பெரும்பாலான இடங்களில் அடல் செறிந்த வெற்றிவீரராகவே காட்டுகிறார். ஆனால் சில இடங்களில் அலியாரைப் பற்றிய குறிப்பே சீறாவில் காணப்படவில்லை. அவ்விடங்களிலெல்லாம் அலியாரின் பங்கு சிறப்பானது. எடுத்துக்காட்டாக, ஹிஜ்ரீ மூன்றாமாண்டில் நிகழ்ந்த உஹதுப்போரில், ஹிஜ்ரி ஐந்தாமாண்டில்நடந்த அகழ்ப் போரில் எல்லாம் அலியாரின் பங்கு அளவிடற்கரியது.

மேலும், அலியாரைப்பற்றி பெருமானார் அவர்கள் குறிப்பிடுகையில்

"அன மதீனத்துல் இல்மி
வ அலியுன் பாபுஹா"

நான் அறிவின் பட்டணம், அலீ அதன் தலைவாயிலாவார் என்று கூறிய புகழ் மொழியோ, அண்ணலாருடன் அலியார் கொண்டிருந்த பேறுறவு பற்றிய முழு விபரங்களோ சீறாவில் இடம் பெறாதது ஒரு குறையே. ஆனால், பெருமானாரின் அரிய வாழ்க்கையையே இலக்கியமாக வடிப்பது புலவரின் நோக்கமாக இருந்தது. அந்த நோக்கிலேயே உமறுப் புலவர் நிறைவு எய்தாதபோது, அலியாரைப்பற்றி எவ்வாறு முழுமையாகக் கூறிவிட முடியும்?

# நாட்டுப் படலத்தில் இரு பாடல்கள்

**அ. அப்துல் ரசாக்**, எம். ஏ.
தமிழ்த் துணைப்பேராசிரியர்,
ஆதித்தனர் கல்லூரி, திருச்செந்தூர்.

### மணிமுடியில் மாணிக்கம்

தமிழென்னும் குழவி, மதங்களென்னும் செவிலித் தாயராலும் சிறப்புற வளர்க்கப்பெற்ற வரலாற்றை அறிவோம். இனிய தமிழ் மொழிக்கு இஸ்லாம் ஆற்றியுள்ள தொண்டும் எண்ணிப் பார்ப்பதற் குரியது.[1] ஏனைய இஸ்லாமிய இலக்கியங்கள் தமிழ்த் தாயின் மணி முடியென்ருல், அதில் பதிக்கப்பெற்ற மாணிக்கம் சீருப்புராணம். அது, புதுமைகள் பலவற்றைத் தோற்றுவித்த புனிதராம்[2] முகம்மது நபியின் (ஸல்) வரலாற்றைக் கூறும் வண்டமிழ்க் காப்பியம். இஸ்லாமியக் கருத்துப் பெட்டகம்.

### மகிழுறு மணம்

தமிழ்ப் புலவோர் வரிசையில் சீரிய இடத்தையை—முஸ்லிம் தமிழ்ப் புலவோர் அணியில் முதன்மை பெற்று மிளிர்வோர் உமறுப் புலவர். இளமையிலேயே இன்தமிழ்ப் பாப்புனேயும் திறம் பெற்றவர். முன்னோர் தம் படைப்புக்களை முழுமையாய்க் கற்றறிந்தவர். இந்நிலை, புகழ்மிக்க காப்பியம் ஒன்றைப் படைக்க அவருக்குத் துணை நின்றது. மணப்பொருள் விற்கும் பரம்பரையில் பிறந்ததாலோ, தமிழ் மணங்

---

1 தமிழ் வளர்ச்சிக்குச் சமணம், பௌத்தம், வைணவம், கிறிஸ்தவம், இஸ்லாமியம் போன்ற சமயத்தைச் சார்ந்தோர் செய்த பணி அளவிடற்கரியது. இத்தகையோர் செய்தளித்த நூற்களே தமிழில் பல.

**டாக்டர் எஸ். சுப்பிரமணியம்**, எம். ஏ., பீ. ஓ.எல்.
அணிந்துரை — உமறுப் புலவரின் சீருப்புராணம்
(நாட்டுப் படலம்) வெற்றிச்செல்வன் உரை

2 நபிமணியின் தோற்றம், மனித இனத்திற்குப் புதியதோர் வாழ்வை, புதியதோர் ஒளியை, புதியதொரு நம்பிக்கையை, புதிய தொரு உணர்வை, புதியதொரு சமுதாயத்தை - புதியதொரு பண்பாட்டை அளித்தது.

**அல்லாமா ஸய்யித் அபுல்ஹஸன் அலீநத்வீ**
தமிழாக்கம் : ''ஷிப்லீ'' - நற்பணியாற்றிய நபிமணி

கமழும் தென்பாண்டிச் சீமையிலே தோன்றியதாலோ, தெய்வமணங் கமழச்செய்த திருத்தூதர் வரலாற்றை எழுதத் தொடங்கியதாலோ, தம் நூல் முழுவதிலும் கவிதை மணம் கமழச்செய்துள்ளார், உமறுப் புலவர்.[3] அந்நூலைத் "தொட்டாலும் கை மணக்கும்; சொன்னாலும் வாய் மணக்கும்."

## காப்பியங்களில் நாட்டுப் படலம்

காப்பியங்களில் நாட்டுப் படலம் அமைக்கப் பெறுவதின் நோக்கம் என்ன? அறநெறியைப் பாடவேண்டுமென்பதே காப்பியம் எழுதுவோரின் குறிக்கோளாகும். அந்த அறநெறி நிலைபெற வேண்டுமாயின், சமுதாயச் சூழல் செம்மையாக அமைந்திருத்தல் வேண்டும். அத்தகு சமுதாயத்தில் உறைவோரே அறம்போற்றும் செம்மல்களாய்த் திகழ முடியும். இந்த நோக்கிலேயே கம்பர் போன்றோரும், தம் காப்பியங்களில் நாட்டுப் படலத்தை நவிலுங்கால், நனிசிறந்த நாட்டுப் பின்னணியை நம் கண்முன் காட்டுகின்றனர். ஒப்பரிய நாயகத்தின் வரலாற்றைக் காப்பிய வடிவில் பாடவந்த உமறுப் புலவரும் அவ்வாறே பாடுகின்றார். மேக வருணனையில் தொடங்கி, வளத்தில் முடிக்கும் முன்னோர் போக்கினை முறையாகக் கைக்கொண்டு இவர் எழுதுவதற்குக் காரணம், நாட்டில் அறம் தழைக்கச் செழுமைச் சூழல் தேவை என்பதை நிலைநாட்டுதற்கேயாம்.

## நபிநாதரும் நாட்டுப் படலமும்

காப்பிய இலக்கணத்திற்குத் தேவையான நாட்டுப படலம், சீறாப்புராணத்துக்குச் சிறப்புச் செய்கிறது. காப்பிய நெறிகளோடு இயங்கிச் செல்கின்றது. இப்படலத்தின் இரண்டாவது பாட்டிலிருந்து படிக்கத்தொடங்கினால், எந்தக் காப்பியத்திற்கும் பொருந்துமாறு அமைந்த வருணனைகளை உணரலாம். ஆகவேதான், இக்காப்பியம், இஸ்லாத்தின் நெறிகளையும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்

---

3 அவர் (உமறுப்புலவர்) தரும் சீறா என்னும் செந்தமிழ்க் காப்பியம் மாறாமணம் பரப்பும் மனக்கினிய இலக்கியமாகத் திகழ்கிறது.

**பேராசிரியர் கா. அப்துல் கபூர்,** எம். ஏ.

அணிந்துரை — உமறு தரும் சீறா

விளக்கம் : வி. நூர்முஹம்மது

வரலாற்றையும் கூற எழுந்தது என்பதை நினைவுகூற, முதற் பாட்டிலேயே பாட்டுடைத் தலைவனை உவமைமுகத்தான் கூறித் தொடங்குகிறார்.[4]

## மணமாலை

தமிழகவெல்லைக்குப் புறத்தே நடந்த வரலாறாயினும், நூலைப் படிப்போர் தமிழரேயெனவுணர்ந்த பெற்றியால், அவர்கள் புரிந்து கொள்ளுதற்கும், சுவைத்தின்புறுதற்கும் ஏற்றவகையால் நாட்டுப் படலத்தை அமைத்துள்ளார் உமறுப் புலவர். நானில வருணனை களையும் நயமுறத்தந்து, முழுக்கமுழுக்கத் தமிழ்நாட்டுப் பின்னணி யையே நம் கண்முன் நிறுத்தி விடுகின்றார்.[5] இதில்வரும் பாடற் பொருட்கள் தொடர்ச்சியாக ஒன்றன்பின் ஒன்றாக அமைக்கப்பெற்றுக் காப்பியச் சுவையை மிகுதிப்படுத்துவதாக அமைந்துள்ளன. ஓசைச் சிறப்புக்களும், அணி நயங்களும் கொஞ்சிக் குலவுகின்றன. சிறப்பாக, அருமையான உவமைகள் பல அமைந்துள்ள அழகுதமிழ்மாலையாகவும் மணக்கிறது. இத்தகைய நாட்டுப் படலம் என்னும் நறுமண மாலையில் இருமலர்களின் எழிலையும், மணத்தையும் எடுத்தியம்ப விழைகின்றேன்.

## வான் சிறப்பு

மழையின் மாண்பினை நாமறிவோம். அது பொய்த்தால் பொல்லாங்கு நேரும். உணர்வோம்; உணர்கின்றோம். எனவே,

---

4 ''தருங்கொடை நயினார் கீர்த்தி சகமெலாம் பரந்து விஞ்சி
நெருங்கியே விசும்பி லண்ட முகடுற நிறைந்த வேபோல்
இருங்கண வெள்ளை மேக மிரைபசுங் கடல்வீழ்ந் துண்டோர்
கருங்கட லெழுந்த தென்னக் ககனிடை செறிந்து மீண்ட''

சீறாப்புராணம் — நாட்டுப் படலம் 1.

5 நபியின் நாடாகிய அரபு நாட்டை வருணிக்கும் புலவர், தமிழ் நாட்டில் உள்ள மரம் செடிகொடிகளும் பறவை விலங்குகளும் விளங்க வருணனை அமைத்துள்ளார். நான்கு நிலங்களாகப் பகுத்து இயற்கை வளத்தை விளக்கியுள்ளார். அரபுநாடு பாலை வனம் மிகுந்தது, ஆறுகள் இல்லாதது என்ற எண்ணமே தோன்றாதவாறு வருணனை உள்ளது. வெள்ளம் பெருக்கெடுத் தோடும் தமிழ் நாட்டின் காட்சியே காப்பியத்தில் உள்ளது.

மு. வரதராசன்,
தமிழ் இலக்கிய வரலாறு
இஸ்லாமிய இலக்கியம் — பக் 224

வளமார் புலவர்கள், வான்சிறப்பை வருணித்திருப்பது எண்ணற்குரிய தாம். ஒவ்வொரு புலவரும், உள்ளவாறும், உணர்ந்தவாறும் தம் கருத்துக்களை எடுத்தியம்புகின்றனர். உமறுப் புலவரும் தனக்கேயுரிய தனித்தன்மையுடன், மழையின் வருகையையும் அதன் செயல்களையும் செப்புகின்றார்.

## மனமொன்றிய மாக்கள்

கடல் நீரையுண்டு கறுத்த மேகம், வானத்தை நண்ணிற்று. எங்கும் இடி முழக்கம்; மின்னல் வெட்டு. திக்கெங்கும் மழைக்குறி: இதோ மழை, வந்தேவிட்டது. பெருமழை; பேய்மழை. சற்றுமுன் காட்சிதந்த மலைகளும் சிகரங்களும் மறைந்தன. அவ்வளவு அடர் மழை; அதிர் மழை; தொடர் மழை. குளிர் காற்றும் சேர்ந்து கொள் கிறது. கேட்கவாவேண்டும் நடுக்கத்திற்கு? குறிஞ்சி நிலத்து விலங்கு களின் கலக்கத்தையும் நடுக்கத்தையும் காட்டுகின்றார் புலவர். அவை, தம் தலைகளை வயிற்றினிடமாக வளைத்து வைத்துக்கொண்டனவாம். இந்த அளவோடு விட்டுவிடவில்லை புலவர். இதற்கு மேலும் ஒருபடி சென்று, வியத்தகு காட்சியொன்றை நயமுறக் காட்டுகின்றார். எத்தனையோ நன்மைகளைத் தருகின்ற மழை, யாரும் செய்யமுடியாத ஒரு புதுமையைச் செய்கிறது என்றால் வியப்பில்லையா? ஆம். அந்த மழை பிணக்கறுத்துப் பிணைப்பை ஏற்படுத்துகின்றது. எப்படி? மழைக்குளிரால் நடுங்கலுற்ற மதம்பொழியும் யானைகளும் சிங்கங்களும் தம் பகைநீங்கி ஒன்றுபட்டு, ஒரே பக்கத்தே ஒதுங்கிக் கிடக் கின்றனவாம்.

"பம்மி யெங்கணும் பொழிதரு சாரல்வாய்ப் பட்டுக்
கம்மி னத்தக டுறக்கொடு கியகுளிர் கலக்க
மும்ம தக்கரி களுமரி களுமுர ணறவே
சம்ம தித்தொரு புடைகிடப் பனவெனச் சாரும்"

என்று இக்காட்சியினை வருணிக்கிறார் புலவர். யானை, தன் மதத்தை விட்டொழிக்கிறது. அதை வீழ்த்திப் பழக்கப்பட்ட சிங்கம் தன் மாறு பாட்டை மறக்கிறது. இரண்டும் ஒன்றாய்க்கலந்து காட்சி தருகின்றன. மழையும் குளிரும் மலிந்து இருப்பதால், ஒன்றையொன்று தெரியாத நிலையில் இவை இணைந்துவிட்டன என்று நாமெண்ணிவிடக் கூடா தென்பதற்காகவே, 'முரண் அறவே சம்மதித்து ஒருபுடை கிடப்பன வெனச்சாரும்' என்கிறார். இரண்டும் ஒன்றையொன்று புரிந்து கொள்கின்றன. எதிர்க்கும் எண்ணத்தை விட்டொழிகின்றன. இரண்டும் உடன்பட்டு உளம் ஒன்றி, ஒரேயிடத்திலேயே சார்ந்திருப் போம் என்ற முடிவுக்கும் வருகின்றன. முரட்டு விலங்கினங்கட் கிடையே, இப்படியொரு வியத்தகு ஒற்றுமைக் காட்சியை மழை ஏற்படுத்தி விட்டதாகப் புனைகிறார் புலவர். சிந்தை குளிரச் செய்யுளை மீண்டும் மீண்டும் படித்துப் பார்க்கிறோம்.

## ஒற்றுமை மணம்

மேற்கண்ட பாடற் கருத்தோடு நெடுநல்வாடையென்னும் சங்கப் பாடலில் வரும் மழைக்காலக் காட்சியையும் ஒப்பிட்டு நோக்கலாம். "பொய்யா வானம் புதுப்பெயல் பொழிகிறது. விலங்குகள் மேய்தல் தொழிலை மறக்கின்றன. குரங்குகள் குளிரால் நடுங்குகின்றன, மரத்தில் தங்குதற்குரிய பறவைகள் நிலத்திலே வீழ்கின்றன. பசுக்கள் பால் குடிக்க வரும் தம் கன்றுகளை உதைத்துத் தள்ளுகின்றன."[6] என்று பாடுகின்றார் புலவர் நக்கீரனார்.

இங்கே மாறுபட்ட விலங்குகள் தம்முள் எதிர்ப்பட்டனவென்றோ, வேற்றுமையை விடுத்தனவென்றோ புலவர் கூறவில்லை. ஆனால், உமறுப் புலவரோ முரண்பாடு கொண்ட விலங்குகளைச் சந்திக்க வைத்து அவை முரணவிந்து, முயங்கிக்கிடக்கும் நிலையையும் காட்டுகிறார். மனித இனம் பேண வேண்டிய மாபெரும் படிப்பினை. மேலும், சிதறுண்டு கிடந்தோரையெல்லாம், சங்கிலித் தொடர் போன்று இணைந்து பிணைந்து இருக்குமாறு பணித்த அண்ணல் நபியின்[7] வரலாற்றை எழுத முனைகின்ற உமறுப்புலவர், உலகம் உய்யத் தேவையான ஒற்றுமை மணத்தைத் தன் கவிதை மலரில் பரப்புகின்றார்.

## நாற்றும் நல்லறிவாளரும்

இனி, மற்றொரு மலர் மணம் நுகரச் செல்வோம். மழை, ஆறாய்ப் பெருகி வருகிறது "விளங்கிழை மகளிரைப் போல" வரும் ஆற்று வெள்ளம், குறிஞ்சி, பாலை, முல்லை நிலங்களைக் கடந்து, மருதநிலம் நோக்கி வருகின்றது. அந்நீரை உழவர் பெருமக்கள் குளம், ஏரி, பொய்கை, வயல்வெளி ஆகிய இடங்களில் பெருக்கு கின்றனர். வயல் வேலைகள் தொடங்கி விட்டன. உழவு நடக்கிறது.

---

6 "மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழியக் கடிய வீசிக்
குன்றுகுளிப் பன்ன கூதிர்ப் பானாள்"

7 முஸ்லிம்கள் ஒரு கட்டிடத்தின் அஸ்திவாரத்தைப் போன்றவர் கள். அந்தக் கட்டிடத்தின் ஒரு பாகம் மற்றொரு பாகத்தின் பாரத்தைத் தாங்குகிறது.

அண்ணல் நபி அருள் மணிகள் :-

ஸையித் இபுறாகீம் (தொகுப்பாசிரியர்)

உழவர் குழுவினர், "கதிரவன் தனைக் கையாற்ருெழுது, குலந்தரு தெய்வ வணக்கமுஞ் செய்து," நெல் விதைகளைத் தூவுகின்றனர். நாட்கள் சில நகர்ந்தன. வயலெங்கும் நாற்றுக்கள் வளமாக வளர்ந்துள்ளன. இக்காட்சியினைப் பாட வருகின்ருர் உமறுப்புலவர். நாற்றுத்தானே? நாமெல்லாம் நாளும் காண்பதுதானே? என்று எளிதாக விட்டுவிடாமல், இனியதொரு உவமையால் பாடி முடிக்கிருர். இதோ பாட்டு.

" அருமறை நெறியும் வணக்கமுங் கொடையும்
அன்புமா தரவும்நல் லறிவும்
தருமமும் பொறையு மிரக்கமும் குணமும்
தயவுஞ்சீ ரொழுக்கமு முடையோர்
பெருகிய செல்வக் குடியொடு கிளையும்
பெருத்தினி திருந்துவாழ் வனபோற்
மருமலர்ப் பழனக் காடெலாம் நெருங்கி
வளர்ந்தது நெட்டிலை நாற்றே ".

விழுமிய சான்ருேர் கூட்டத்தைக் காட்டுகின்ருர் புலவர். அவர்கள் அருமையான வேதநெறி உணர்ந்தவர்கள். வணக்கமும் வழிபாடும் அவர்தம் கடமைகளாகும் கொடை, அன்பு, ஆதரவு, நல்லறிவு, அறம், பொறுமை, இரக்கம், நற்குணம், தயவு, நல்லொழுக்கம் ஆகிய பண்புகளையும் ஒருங்கேயுடையவர்கள். அத்தகைய சான்ருேர், செல்வமிக்க நற்குடியோடு, உயர்ந்த கிளையும் மிக்கிருந்து, இனிது வாழ்வதுபோல், நீண்ட இலைகளைக் கொண்ட நாற்று, நெருங்கி வளர்ந்துள்ளதாம். களங்கமற்ற நாற்றைக் களங்கமற்ற சான்ருேருடன் ஒப்பிட்டிருப்பது எத்துணை நயம் பயக்கிறது?

நாற்றின் வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டுமில்லை. ஒன்றுபோல் எல்லாவிடங்களிலும் வளர்ந்துள்ளதென்பதைக் காட்ட, " மருமலர்ப் பழனக்காடெல்லாம் நெருங்கி வளர்ந்தது " எனக் கூறுகின்ருர் புலவர். நாட்டிலுள்ள அனைவோரும் கள்ளங் கபடமற்றவராய் இருக்க வேண்டுமென்பதே புலவர்தம் விழைவாகும். நாற்றுக்களிலே ஒரு களைகூட இல்லையென்பதை, எல்லாக் குணங்களும் நிறையப் பெற்ற சான்ருேர்களை உவமை காட்டி உணர வைக்கிருர். உழவுத் தொழிலின் ஒவ்வொரு நிலையையும் பாடி வரும் புலவர், களையெடுப்பைப் பற்றி ஒருவரிகூடப் பாடவில்லை என்பதை நினைவு கொள்ள வேண்டும். அடியுரம், தண்ணீர், வெப்பம் முதலிய நிலைகளாலே நிமிர்ந்து நிற்கிறது நாற்று. அடிப்படைப் பண்புகளாலே

செம்மாந்து நிற்பர் சான்றோர். நாற்றைப் பிடுங்கி மற்றோர் இடத்தில் நட்டாலும் மாறாத வளம் தரும். சான்றோரும் எங்கே சென்றாலும் தம் இனிய பண்புகளில் தலைநிற்பர். பண்பு மிக்க சான்றோர், சுற்றமும் நட்பும் சூழப் பாங்காக வாழ்கின்றனர். மகிழ்ச்சிக்குக் குறைவேயில்லை. நாற்றும் கண்ணுக்கினிய தாய்க்காட்சி தருகிறது. தன்னொத்த நாற்றுக்களோடு களிநடம் புரிகிறது. நல்லோர் வாழ்வில் மகிழ்ச்சிக்கென்ன குறை? தமக்கெனவாழாப் பிறர்க்குரியாளர் சான்றோர். நாற்றும் வளர்ந்து பயிராகிப் பிறரை வாழவைக்கப் போகிறது. சான்றோர்க்கும் நாற்றுக்கும் ஒப்புமை கூறிய புலவர் இப்படியெல்லாம் எண்ணிப் பார்க்க வைக்கிறார்.

நாட்டிலே, வஞ்சனை, சூழ்ச்சி நீங்கி, நல்ல நெஞ்சம் படைத்தவர்கள் வாழவேண்டுமென்று கவிஞர் கருதுவதற்குக் காரணமும் உண்டு. பாட்டுடைத் தலைவனும் பார் புகழும் நாயகத் திருமேனி, நெறிகெட்டு நிலை தவறி, துறவற இல்லற நிலைகள் பாழ்பட்டு, இருண்ட வீடுபோல் கிடந்த நாட்டினை உய்விக்கவந்த உயர்ந்தோர் என்று உமறுப்புலவரே பின்னர் பாடுகின்றார்.[8] ஆகவே, அறநெறி முதலிய அரும் பண்புகள் கொண்டோரின் கூட்டத்தை நாட்டுப் படலத்திலேயே காட்டுகின்றார். இன்னொன்றும் எண்ண வேண்டும். இப்பாட்டிலே புலவர் பெருமான் காட்டும் சான்றாண்மைப் பண்புகள் பலவற்றை அண்ணல் நபி அருளியுள்ளனர். அவற்றையெல்லாம் மனத்திற்கொண்டே அரிய இப்பாடலை உமறுப்புலவர் உரைத்துள்ளார் எனலாம்.

## உணர்வும் உருவமும்

மனித இனம் பின்பற்ற வேண்டிய அறக் கோட்பாடுகளை அணிநயம் செறியச் சொல்லிச் சிந்தனையைத் தூண்டியிருப்பதை இவ்விரு பாடல்களிலும் காணலாம். நபிகள் நாயகம் (ஸல்) நானிலத்திற்கு வழங்கிய நன்மொழிகளையும் ஊன்றி உணர்ந்து அவற்றிற்கு உருவம் கொடுக்க விழைந்துள்ளார், புலவர். தமிழ் இலக்கிய உலகிற்கும், இஸ்லாமிய உலகிற்கும் அவர் வழங்கியுள்ள காவியப் பேழையைக் கருத்தோடு காப்போமாக.

---

8 'நெறிநிலை திரியா மருண்மத மிகுந்து
நெடுநில மெங்கணும் பரந்து
துறவறந் தவறி யில்லற மடிந்து
சுடரிலா மனையது போலக்
குறைபடுங் கால மிருளெனுங் குபிரின்
குலமறுத் தறநெறி விளக்க
மறுவிலா தெழுந்த முழுமதி போல
முகம்மது நபிபிறந் தனரே'.
—நபியவதாரப் படலம், பாட்டு 91.

# நபி அவதாரப் படலம்

ரெ. சிங்காரவடிவேலன், எம். ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
ஸ்ரீ சேவுகன் அண்ணமலை கல்லூரி, தேவகோட்டை

### நெஞ்சில் தமிழே நீ நில்!

தமிழ் வணக்கம்

உமறுப் புலவர் உமிழ்நீரும் பாட்டாய்
அமர எழுந்தவளே! அன்னய்! — எமதருமைக்
கல்லூரி மாணவர்கள் கல்லெடுக்கும் முன்னலே
சொல்லெடுத்து வாராய் தொடர்ந்து.

நீராட வழியின்றி நிலம்வறண்டு போனலும்
சீருவில் நீராடத் திரண்டிருக்கும் காரணத்தால்
கணக்குக் கடங்காத கல்லூரி மாணவரே! — எந்தக்
கணக்குக்கும் அடங்காத கல்லூரி மாணவரே!
வணக்கம் ஒருகோடி வரவுவைத்துக் கொள்ளுங்கள்!
மாசிரியச் செய்து மாணவரை மணியாக்கும்
ஆசிரியப் பூசாரி அனைவருக்கும் வணக்கங்கள்
கல்லூரி முதல்வருக்கென் கனிந்தமனக் கைகூப்பு

அடியார்க்கு விருந்தூட்ட அகல்வயலில் விழுந்தவிதை
செடியாக ஒட்டாமல் திரட்டிவந்த மெய்யடியார்
*மாறனர் அடிபடர்ந்த மண்ணைச் சிவபெருமான்
நீருக எண்ணி நெற்றியிலே பூசுகிறேன்!
சிற்றூர்! வயல்வெளிகள்! தென்னையிளங் கன்றுகளும்
கற்றுயர வேண்டுமெனக் கால்கடுக்க நிற்குமிடம்!
தவழும் குழந்தை தலைதூக்கிப் பார்ப்பதுபோல்
சுவர்கள் எழும்பித் துளிர்த்துவரும் கட்டடங்கள்!
தென்றல் தவழ்ந்து சிரித்து விளையாடும்
மன்றின் இருபுறமும் மாசறியா நெஞ்சங்கள்!
தேரேறும் தெய்வத்தைத் தெரிசிக்க வந்ததுபோல்

---

* இளையான்குடி மாற நாயனர்

காரேறி வந்து கவிசுவைக்கும் பெரியோர்கள்
என்னை உருவாக்கும் என்னருமை ஆசான்மார்
கூடி இருக்கும் கொஞ்சுதமிழ்ப் போவையிற்
பாடி வருகவெனப் பணித்ததினால் வந்துள்ளேன்.
தென்னை அளவு சிறந்திருக்கும் செந்தமிழை
தொன்னை அளவு சுவைத்ததனல் அழைத்தீரோ?

அரபுத் திருநாட்டில் அவதாரம் செய்தவரை
மரபு தவருமல் மண்வாடை மாருமல்
வங்கக் கடல்போன்று வற்ருத கற்பனையால்
கங்கையெனப் பொங்கிக் கரைபுரளும் செந்தமிழால்
"உண்ணீரோ!" என்றே உலகத்தை அரவணைக்கும்
கன்னித் தமிழ்நாட்டில் கரும்பாக நட்டமகன்!
நெல்வேலி வட்டத்தில் நெஞ்சம் பழகியதால்
சொல்லென்னும் உலையிட்டுச் சோருக்கித் தந்தமகன்!
நிமிரும் நடையுடையான்! நெகிழும் மனமுடையான்!
உமறுப் புலவரெனும் ஒப்பற்ற கவியரசன்
பாட்டுப் பதங்காணப் பயலை அழைத்துள்ளீர்.

கூட்டுக் கிளியா கோபுரத்தை எடைபோடும்?
மோனை தழுவி முத்தளக்கும் சொற்கலையில்
ஆனையினை அளவெடுக்க அணிலாலே முடிந்திடுமா?
ஆழியெனப் பொங்கி அருவியெனக் கொட்டுவதை
நாழியினைக் கொண்டு நண்டளக்க முயலுவதா?
சீருப் புராணமெனும் 'ஜீரா'வில் ஊறியவர்
மேருவென வந்து மேடையிலே வீற்றிருக்க
'கோவேந்தர் முன்னாலே கூலி பணிவது போல்' [1]
பாவேந்தர் சந்நிதியில் பணிந்து தொடங்குகிறேன்.

இரும்பைப் பொடியாக்கி 'இமயத்தைத் தூளாக்கும்
அரும்புயலின் முன்னாலே எறும்புவிடும் மூச்சுப்போல்' [2]
உமறு கவித்திறத்தை உள்வாங்கிச் செரிக்காமல்
கமறுகின்ற பிள்ளைக் கவிவாயால் கக்குகிறேன்.
'இடிமுழக்கம் அவர்கவிதை என்கவியோ நகவிரலை
நொடிக்கின்ற சிற்றொலியாம்' [3] நோக்கி உணருங்கள்.
நபியின் அவதாரம் நாக்கில் விளையாடும்
கவியாம் மலைதூக்க கையை உயர்த்துகிறேன்.

---

1, 2, 3: உமறுப்புலவரின் அவையடக்கப்பகுதி உவமை

உமறுப் புலவரென ஒருமுறைதான் சொன்னாலும்
உமிழும் கவியாகும் ஊமைக்கும் பாட்டுவரும்.
ஆதலினால் நாயேனும் அஞ்சாமற் பாடுகிறேன்
காதலினால் கேளுங்கள் கையொலித்து மகிழுங்கள்.

கடலைப் பருப்பா ? கவிதைச் சுவையென்ன
குடலையிலே பூவா ? கொய்திங்கு கொண்டுவர ?
அஞ்சு புலத்தாய்க்கும் அறிவென்னும் அப்பனுக்கும்
நெஞ்சிற் கருவாகி நினைவில் உருவாகி
வயிறு வலிக்காமல் வார்த்தையெனும் குடல்கிழிய
உயிரு வலிக்க உலகிற் பிறப்பெடுக்கும்
கவிதைச் சிறுக்கி கைவீசி நடப்பாளேல்
புவியை வெறுத்துப் புண்ணியத்தைத் தேடுகிற
காவி உடையாரும் காதல் தலைக்கேறி
ஆவி உருகி அடிமைகளாய் மாறிடுவர்.

பெருமைக் கவியின்பம் பெண்ணின்பம் என்றால்தான்
போடாமல் மயக்குகிற போதைத் கவிச்சுவையை
வாடாமலர் அகத்து மாணவர்கள் அறிவார்கள்
தாயொருத்தி மகளுக்கு தான்பெற்ற உடற்சுகத்தை
வாயாலே உரையென்றால் வடித்துரைத்தல் எந்தவிதம் ?
ஆசைத் துடிப்பும் அரும்புலவர் கவிதையெனும்
ஓசைத் துடிப்பும் ஒன்றென் றுணருங்கள் !
வழிபட்ட தெய்வம் விழிமுன்னே நிற்பதுவும்
ஒலிகொட்டும் கவிதையிலே உண்மை தெரிவதுவும்
ஒன்றென்றே காணுங்கள் ! உளமுருகிக் கவிசுவைத்தல்
நன்றென்று நம்புங்கள் ! நாவாலே மேயுங்கள் !
சுவையும் பசியுணர்வும் தோகையரின் உடற்சுவையும்
அவையேறிக் காட்டவொணா அற்புதங்கள் ! அற்புதங்கள் !
ஏற்ற பணிக்கேற்ப இரண்டொன்று சான்றுகளை
சோற்றுப் பதமாகச் சொல்லி முடிக்கின்றேன்.

குலமயில் ஆமீனா குணநலம் உமறுவின்
புலமையின் உச்சியாம் புந்தியின் வெற்றியாம் !
''அறத்தினுக் கில்லிடம் அருட்கோர் தாயகம்
பொறுத்திடும் பொறுமையிற் பூமிக்கெண் மடங்(கு)''
என்றவர் கூறிடும் இனமயில் வருணனை
குன்றினில் வேலவன் கொடியெனத் துலங்குமே!

மாதருக் கரசியார் ஆமீனுத் தாயரின்
தீதறு வயிறெனும் திவ்விய தலத்தினில்
நல்வழிப் பொருளென நபிகள் பிறந்ததை
சொல்வழி வாயினில் சுவைவழிந் தோடுமாம்

சிரசினை உயர்த்தியும் செய்யதாள் தாழ்த்தியும்
பரசியும் நபிபிரான் பாரில் - உதித்ததைக்
கரத்தினுல் எழுதிடாக் கனியினுல் எழுதிடும்
தரத்தினைக் கூறிடத் தமிழும் களைக்குமே

ஊனுடல் தாங்கியே உயிர்களைக் காத்திட
வானவன் நபிபிரான் மண்ணிற் பிறந்ததும்
மான்மதம் மணக்குமாம்! வாகையும் விளங்குமாம்!
தேன்துளி தோற்குமே சிறந்தவன் சொல்முனே!

புவனம் இறக்கவும் புண்ணியம் தழைக்கவும்
தமமகன் நபிபிரான் தரையினிற் பிறந்ததை
உவப்பினுல் பாடிடும் உமறுவின் பாடலில்
தவப்பயன் பெற்றதால் தமிழ்மகள் வாழ்கிருள்.

இல்லறம் துறவறம் இரண்டுமே கெட்டிடில்
நல்லறம் நாட்டிட நபிகள் வந்ததைச்
சொல்லறம் தவறிடாச் சுவையடைக் கவிதையைக்
கள்ளரும் படித்திடில் கடவுளாய் மாறுவர்.

எத்தனை சொல்லியும் இனித்திடும் அவர்கவிதை
முத்தினைக் காட்டிட முடியுமோ? — விடியுமே
பத்து மணித்துளிப் பாடலில் எய்த்தவும்
நத்தி யுணருவீர் நற்கவி முடிக்கிறேன்.

வாய்ப்பை அளித்தார்க்கும் வந்திருந்து கேட்பார்க்கும்
தாய்ப்பாலைப் போலத் தமிழ்குடிக்கும் மாணவர்க்கும்
நன்றியினைச் சொல்லி நாளைப் பணிநோக்கிச்
சென்று வருகின்றேன் இன்று.

# ஷாம்நகர் புக்க படலம்

பேராசிரியர். தேசிகன்
அழகப்பா கல்லூரி - காரைக்குடி

காலமெலாம் கமகமக்க வாழ்க வென்றே
கடவுளருள் தூதன்றன் வாழ்த்துப் பெற்ற
சீலநிறை அப்துல்லா இப்னு பாகிர்
சேமித்த தவக்கொழுந்து; சேகு மைந்தன்;
பாலமுதம் இளம்பிறையில் வடித்தெடுத்துப்
பகுந்தமிழாம் தேன்கலந்து 'சீரு' என்னும்
மூலஒளிக் கிண்ணத்தில் ஏக தெய்வ
முறைமணக்கச் செய்உமறுப் புலவன் வாழ்க!

" என்றெனது மூலத்தில் மூங்கிற் காட்டில்
இணைந் தொன்ருய் விளங்குவதென் " றேங்கி ஏங்கி
மன்றுதொறும் வேய்ங்குழல்தான் புலம்பும் ஓசை
மனங் கனிந்த பண்ணென்பர் மானிடர்தாம்;
" நன்றுனது திருவடியிற் சாந்தி கொள்ள
நபியேநீ அருளாயோ " என்னும் ஏக்கம்
சென்றுதிசை பரவிகவிச் சீர்கள் பெற்றுச்
சீருவாய்ச் செந்தமிழில் மணக்கும் "ஆமீன்!"

முன்னிருந்து நடத்துதற்காம் தூதன் றன்னை
" முஃஜிஸா " செய்வித்து மூடர் தம்மை
நன்னெறியாம் சாந்திவழி நாடச் செய்யும்
நடைமுறைகள் நபியின்பால் இறக்கி வைத்தான்
பொன்னெளிகொள் வானவரும் போற்றி செய்யப்
புதுமைக்கும் புதுமை *'திருப்புர்கான்' தோன்ற
மன்னவரும் அடிபரவ ஏழைத் தூதன்
மாநிலத்தை யாண்ட திருக்கதையே சீரு.

* திருப்புர்கான்— திருக்குர்ஆன் வேதம்.

எழுவானப் படிகடந்து தன்னில் தானே
ஏற்றிருக்கும் பரம்பொருளைக் கண்டு, மீண்ட
முழுஞான முகம்மதுதன் இருபத் தைந்தில்
மூதறிஞர் நபியென்னும் முனைப்பே யின்றி
வழுவாது கடனாற்றி வாய்மை கொண்டு
வாணிகனாய் 'ஷாம்' நகரில் புக்க செய்தி,
தொழுதேநம் உமறுவழி தொட்டுத் தொட்டுத்
தொடைநடுங்க உரைசெய்வேன் துதிகொள்வீரே!

நெடுவானில் பறக்கின்ற பறவை யாக
நினைவெல்லாம் ஆக்கியதில் இசையைக் கூட்டித்
தொடுவானத் தெழுங்கதிர்போல் உண்மை தோன்றத்
தூயபரம் பொருளோடு தொடர்பு காட்டி
விடுவாரை எப்பொருளும் வீண்போ காமல்
விளையாடச் செய்வாரை இதய வீட்டில்
நடுவாக *'ஜின்னத்'தை நாட்டும் பாங்கில்
நாடெங்கும் ஒன்றேகாண், கவிஞர் நாட்டம்!

சீதையினைத் திருமகளாய்க் கம்பன் கொண்டு
செப்பிடுவான் மிதிலை மதில் கமலப் பூவாம்!
ஓதுதமிழ்க் 'கன்னிமதில்' தொடரை உன்னி
உமர்தந்த உருவகத்தோ டொப்புக் காண்போம்
சீதஅகழ் ஆடையினைச் சேரக் காட்டிச்
செறிந்தமுகில் குழல்முடித்து, வாயில் என்னும்
தீதறுநல் முகமுடையாள் அழியா மாதர்
திருவுருவம் ஷாம்நகர மதிலென்றானே.

"மணமகளிங் கிருக்கின்றாள், வருக!" என்று
மணிக்கொடிகள் மிதிலைக்குள் அழைக்கும்! இங்கே,
"மணமகனார் வருகின்றார் ஷாமில் வாழும்
மன்னரெலாம் வரவேற்கப் போவீர்!" என்னும்!

---

* ஜின்னத்— சுவர்க்கம்

மணநிகழு மிடம் மிதிலை யாதலாலே,
மணிக்கொடிகள் அரம்பையரின் ஆடல் காட்டும்!
வணிகரென நபிவந்தார்! குவித்துக் கைகள்
வரவேற்க விரிதல்போற் கொடிகள் ஆடும்.

மிதிலைநகர் உள்நுழைவோன் மேக வண்ணன்,
மேன்மாடக் கொடிதடவும் மேகந் தன்னை!
நிதிமிகுந்த ஷாம்நகரில் புகுதற் குள்ளோன்
நிறைதூய்மை 'ஒலு'க்கண்ட நிமலன் என்றே
மதிமிகுந்த கொடிமாடந் தூசு போக்கி
மணிபதித்த பொற்கலசந் துடைத்தல் காட்டும்!
கொதி கொதித்த ஊழியிலே 'லிவாவுல் ஹம்துக்'
கொடிநிழலில் வாழ்வளிக்கும் கோமா னென்றே.

* 'மலக்கு'களும் 'ஜின்'களுமே நீல வானில்
மலருதிர்ந்து பரவல்போல் ஒளியில் நீந்தி,
விலக்குநெறி வேண்டுநெறி ஈதென் றேதி
விதித்தபடி செயல்புரிவர்! வேறென் றெண்ணார்
இலக்கியமுங் கற்பனையும் புலவர்க் கேதாம்
இறைவழியின் இடைப்புகுவர் ஏன்ஏன் என்பர்
நிலக்கணியாம் இயற்கையில்தம் குறிப்பை ஏற்றி
நினைவுகளை இடம்மாற்றி நீளச் செல்வர்

(வேறு)

சென்று ஷாம்நகரில் வாணிகம் புரியச்
சிறந்ததோர் ஒட்டகை ஏற்றி
நன்றுகாண் சரக்குப் பொதி யிருநூறு
நடுக்கமில் இருபது பணியாள்
ஒன்று நூறுயிரம் ஒன்பதி னுயிரம்
ஓங்கு பொற்காசுடை வாளும்
வென்றிவே லொடும் விடைதந்தனர்—கதீஜா
வித்தகர், திரளொடும் எழுந்தார்.

---

* மலக்குகள் — இறைவனின் ஏவலர்

(வேறு)

முன்னிலை யானெனும் *'அபுஜகில்' வீழ்ந்து
முகமுடைந் துதிரமே யானன்!
பின்னொரு முதல்வன் உத்துபா ஒட்டகம்
பெரியதோர் வேங்கையுங் கவ்வ
இன்னுமோர் தலைவன் ஆசெனும் பெயரான்
இயக்கிய வழி தடுமாறப்
பின்னரே தலைமை முகம்மது பெற்றார்
பேரிடர் தேசிகர் களைந்தார்.

ஒட்டகை வலக்கால் உதைத்திடச் சுரத்தில்
ஓடிய புனல் நதியாகக்
கெட்டதோர் நாகம், மான்வழி காட்டக்
கிளர்நதி கடந்தபின் வேங்கை
தொட்டதும் பணிந்து தூதரே என்னத்
தூயதாய் பாந்தளும் போகக்
கட்டையாம் ஈந்தும் தளிர்த்திடக் கூவல்
கலித்தெழு வெள்ளமுங் கண்டு

(வேறு)

விருந்தளித் * திசுரு போற்றி
"வித்தக நபிநீ யென்னத்
தெரிந்தனன்", என்று வீழ்ந்தான்
திவ்விய அடக்கம் செய்தார்
வருந்திடக் கள்ளர்க் கங்கே
வழிமறித் திட்ட தாறு
பொருந்தினர் சோலை யொன்றில்
பொழுதிருட் கழியக் கண்டார்.

---

* அபுஜகில் — அண்ணலாரை எதிர்த்த ஒரு கொடியவன்
* இசுரு— விவிலிய வேதநூல் வல்லான்

(வேறு)

அண்ணலார் நபிப்பெருமான் அற்புதத்தில்
உமறுமனம் ஆழ்ந்த தாலே
கண்ணெலாம் இயற்கையொடு கலந்து களித்
ததிலூறும் காட்சிதானுய்
மண்ணுளார் செயலாக்கித் தமிழ்ப் புலமை
மாண்புணர மகிழ்ந்து பாடல்
நண்ணு ஷாம்நகர் புக்க படலத்து
நாம்கண்டோம் உமறு வாழ்க!

(வேறு)

அருள்பொழி முகம்ம தையன்
ஆங்கெழுந் தருளல் நோக்கித்
திரள்குலைத் சாய்த்தி றைஞ்சும்
தேன்பொதி கதலி வாழை
தருங்கனி யுண்க வென்று
தளிர்க் கரத்த ழைக்கும் மாவும்
பெருங்குடம் மகளிர் கொண்ட
பெற்றியே பலவின் கொம்பு;

வெள்ளியே பாளை யாக
விளங்கு பொன் குலைக் காயாகக்
கள்ளமில் அழகு செய்யும்
கமுகுகள் மலர்ப் பொற்ருது
வள்ளலார் அடியில் பொன்னை
வானவர் பொழிதல் காட்டும்;
அள்ளிய முத்தம் விண்மீன்;
அணிவயல் நீல வானம்;

ஆடிய மயில்கள் அங்கே
ஐயனின் அழகு கண்டே,
கூடிய தோகைக் கண்கள்
குவிந்தொரு கூராய் நோக்கும்!

தோடணி மலர்கள் வாசம்
தூர்ந்திட ஐயன் மெய்யில்
தேடிய நபிதான் என்று
மான்மதம் தெரியக் காட்டும்

இல்லற நெறியின் மாண்பை
எழில்தமிழ் நாட்டு வாழ்வை
நெல்லென வகுத்தார் உமரின்
நினைவெலாம் இங்கே நீளும்

புல்லினைக் கரும்பின் பூவைப்
போன்றவர் பெண்டிர் அல்லர்;
நல்லவர் மகளிர் செந்நெல்
நலமெலாம் விளக்கும் *பாடல்

(வேறு)

## திருவும் செல்வமும்

வருகலி வெயிலால் வாடும்
மானுடப் பயிர்கட் கெல்லாம்
பொருளெனும் மாரி சிந்திப்
பூவிடத் தினிது நோக்கி
அருமறை மலருட் காய்ந்த
அறிவெனும் கனியை யுண்ட
திருநமர் குலச் சஞ்சீவிச்
செழுங் கொழுந் தனையபூவை

(வேறு)

வானவனே, 'ஜிபுறயீல்'! ஓர் இறகு தாராய்!
வளர்சரிதம் செந்தமிழில் உமறு பாட
ஞானவிழி சற்றேதான் திறப்பதே போல்,
ஞாலமிசை அருள்பொழியும் தெய்வப் பாங்கை
வான்வெளியில் வண்ணமுறக் காட்டி நிற்கும்
வளர்பிறையில் அமுதூற வழித் தெடுத்தே
ஆனஅமீர் அலிநாவில் தடவல் வேண்டும்
'அல்லாஹு அக்பர்'! அனைத்துலகும் வாழ்க!

---

* ஷாம்நகர் புக்க படலம் — பாடல் எண் 11

# கதீஜா கனவு கண்ட படலம்

**டாக்டர். பா. செளந்தரா,** எம். ஏ., பி. எச்டி.,
கோ. வே. கோ. விசாலாட்சி மகளிர் கல்லூரி, உடுமலைப்பேட்டை

மொழிக்குச் சாதி சமய வேறுபாடு இல்லை. அதிலும் தமிழோ வந்ததையெல்லாம் தனதாக்கி வளம் பெற்று வாழும் மொழி. இஸ்லாமும் கிறிஸ்தவமும் இன்பத்தமிழுக்கு உரம் சேர்த்து வளம் பெருக்குவனவாகவே அமைந்தன. வேற்று மொழியினரான வீரமா முனிவராலேயே தமிழ் அன்னை பொலிந்துள்ளாள் எனின் தமிழர் உமறுவால் தமிழ்பெற்ற நலத்தினைச் சொல்லவும் வேண்டுமோ ? தமிழிலக்கியக் கடலை உமறுப் புலவர் கடைந்து திரட்டித் தந்த இன்னமுதமேயன்றோ, எழிற் சீறா !

தமிழ்க் காப்பிய மரபுகட்கு ஏற்பவே சீறாவை வடித்துள்ள மையால், பொதுவான காப்பியச் சுவைகள் அனைத்துமே இதிலும் இயல்பாக அமைந்துவிட்டன. ஒருசோறு பதங் காண்டலாக, கதீஜா கனவு கண்ட படலத்தினைக் காண்போம்.

பெருமானாரின் துணைவியாகும் பேறு பெற்றவர் கதீஜா. அந்த நற்பேற்றினை முன்னதாகவே கனவினால் குறிப்பாக அறிந்து கனவு நனவாகும் நல்வினை வாய்க்கப் பெற்றவர்.

கனவும்கூடக் காப்பியங்களின் ஒரு அங்கமாக, இலக்கிய உத்தியாகவே இருந்து வந்திருக்கிறது. கண்ணகி, கோப்பெருந்தேவி, விசையை, திரிசடை, மனோன்மணி, புருடோத்தமன் போன்ற பாத்திரங்களின் கனவுகள் கதையின் முக்கிய திருப்பு முனைகளாக-வருபொருள் உணர்த்தும் குறிப்புக்களாகக் கதையை நடத்திச் செல்வது போல், இக்கனவும் அமைக்கப்பட்டுள்ளது. பிறைமதி இறங்கிவந்து தன் மடியில் இடம் பெறுவதாகக் கனவு காண்கிறார் கதீஜா. மூதறிஞர் ஊசா, தேவதூதராகிய முகமது நபிகள் கதீஜாவை நாடி வந்து மணம் புரிந்து கொள்ளப் போவதையே அது குறிக்கும் எனப் பொருள் கூறுகிறார்.

அண்ணலின்மேல் காதலுற்ற கதீஜாவிற்குக் கனவுகள் தொடருகின்றன. காதலும் கடிமணமும் கன்னியரின் கலையாத கனவுகளேயல்லவோ ? கோவிந்தன் வந்து கைத்தலம் பற்றக் கோதைநாயகி கண்ட கனவு, பக்தி உலகிலும் பண்பாடுகின்ற பவித்திரக் கனவன்றோ?

பல்லியம் கறங்கக் கொடித்திரள் நுடங்க பரித்திள் தொடர, வானவர் ஈண்டி, தெருத்தலை புகுந்து பவனியில் உலவி என்பதாக,கதீஜாவும்கூட மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத முப்பத்துமுக்கோடி தேவர் புடை

சூழ, முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தர்கீழ் முகமது புகுதரவே கனவு காண்கிறார்.

இக்கனவினைக் கூறக் கவிஞர் அமைக்கும் களமே மிகச் சுவையானது. முகை முறுக்கவிழ்ந்து, முருகு கொப்பளிக்கும் முளரியும், முழுமணி நீல நகை விரித்தனைய குவளையும், துகிரின் நறுமலர் விரிந்தென விரிந்து திகழ்தரும் சேதாம்பலும், குடியிருக்கும் திருவளர் வாவிகண்கொண்ட சோலை வருணனையோடு படத்தைத் தொடங்குகிறார். மலர் உறை திருவன்னப் பூங்கொடியாளின் மகிழ் கனவினைக் கூறவந்த ஆசிரியர், அழகியதோர் பூஞ்சோலையின் வருணனையுடனேயே தொடங்குகிறார். இந்த வருணனைப் பகுதி அத்தனையுமே செவி நுகர் கனிகள்.

'முருகு கொப்பளிக்கும் முளரி' என்கிறார் கவிஞர். முருகு எனும் சொற்கு அழகு, தேன், மணம். எனும் பல பொருள் உண்டாயினும் இங்கு அழகு கொப்பளிக்கும். என்பதை ஏற்புடைத்து. அழகு சிரிக்கிறது என்றார் புரட்சிக் கவிஞர். இங்கோ அழகு பொங்கித் ததும்புகின்றது என்கிறார் புலமைக் கவிஞர். அடுத்த வரியில் 'நகை விரித்தனைய வேலை' சிரிப்பது போன்ற குவளைமலர் என்று சொல்லுவதோடு பொருத்திப் பார்க்கும் போது முளரியும் அழகு கொப்பளிக்குமாறு இதழ் விரிந்து மலர்ந்தது எனவே நயமன்றோ? உமறுவின் உவமைகள் உள்ளத்தைக் கொள்ளை கொள்வன. செந்நிற ஆம்பல் மலர்கள் பவழத்தாலேயே செய்து பரப்பியது போலிருந்தது என்கிறார் கவிஞர். 'துகிரின் நறுமலர் விரிந்தென' என்பது எவ்வளவு பொருத்தமான அழகிய உவமை! பின்னும் மாணிக்கக்கற்கள் மலர்ந்தது போன்ற குருந்த மலர்கள் என்பார்.

கவிஞர்கள் இயற்கையைக் கவின் சுவைக்காக மட்டும் வருணிப்பதில்லை. அவை உள்ளுறையாக, பல கருத்துக்களையும் உணர்த்தி நிற்பன. வாவியில்வாளை மீன்கள் துள்ளுந்தோறும் அன்னப்பறவை வெருவி ஒதுங்கும். மீனைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. மட அன்னத்தின் மெல்லியல்பு அவ்வாறு அஞ்சச் செய்கிறது. தன் கனவு பலிக்குமோ பலிக்காதோ என்று கலங்கிச் சோர்கின்றார் மெல்லியலார் கதீஜா. இந்த அச்சமும் தேவையற்றதே தலைவியினது அக அழகினையும் புற அழகினையும் குறிக்கத்தானே வடிவாற் பொலிந்த வாச மலர்களையும் நமக்குக் காட்டுகிறார்.

சிறுசிறு செய்திகளையும் கூட மிக நுட்பமாகக் கூறும் ஆசிரியரது நுண்மான் நுழைபுலம் வியத்தற்குரியது.

நித்திலத் திரளின் அரும்பிளம் புன்னை
நிரைமலர் சொரிவன ஒரு பால்

கொத்தரும் பவர்த்திச் சண்பகத் தகுதி
குவைதரச் சொரிவன ஒருபால்
பத்தியிற் செறிந்த பாடலம் விரித்த
பாயலிற் சொரிவன ஒருபால்.

என பல மலர்கள் உதிர்ந்து கிடந்த காட்சியைக் கூறுகின்றார். அவற்றைக் கவிஞர் பாகுபடுத்திக் காட்டும் திறன் மிக அற்புதமானது. புன்னைமலர்கள் சிறியவை, வெண்மையானவை. உதிரும்போது சிறிய, லேசான, அவை காற்றில் அலைப்புண்டு நாற்புறமும் சிதறும்—அதனை, முத்துக்கள் சிதறியது போல என்கிறார். வண்ணம், வடிவு, தன்மை அனைத்தாலும் ஏற்புடைய உவமை. சண்பக மலர்கள் சற்றுப் பெரியவை. எனவே மரத்தின் அடியிலேயே குவிந்து கிடக்கின்றன. அதனைச் சண்பகத் தொகுதி குவைதரச் சொரிவன என்கிறார். பாடலம் அதைவிடப் பெரியது, கனமான; இதழ்கள் அகன்ற பூ. எனவே பாய் விரித்தாற் போல இருந்ததாம். நாமும் கண்டிருக்கும் சாதாரணக் காட்சிதான். ஆனால் கவிஞனின் பார்வை நமக்கு அதை எப்படிப் புதுமையாகக் காட்டிவிடுகிறது!

காற்றிலே மரங்கள் அசைவதைக் காட்டுகிறார். குட்டையான ஈச்ச மரங்களின் மேற்பகுதி காற்றில், ஆடுகின்றதாகையால் 'குறுங்கழுத்து அசைவன்' என்கிறார், குட்டைக் கழுத்துடையன வேகமாக ஆட இயலாது. சற்றே அசையத்தான் முடியும். பாக்கு மரங்கள் மெலிந்து உயர்ந்து மகளிர் போல் இருப்பன. அவை காற்றில் ஆடுவதை 'ஒசிவன' என்கிறார். சிறிது ஆடுதலை அசைவன என்பதிலும், சற்றே நுடங்கி—ஒல்கி ஆடுதலை ஒசிவன என்ற அழகான சொல்லால் காட்டுகிறார். சொற்கள் அவர் ஏவல் கேட்டு ஒழுகுகின்றன; செஞ்சொற் கவியின்பம் என்பதும் இதுதானே!

இந்தச் சொல் ஆளுமைச் சிறப்பினால்தான் இன்பம் என்பதில்லை.

218
8-36

சந்தகில் திலகங் குரவுதேக் காரந்
தான்றிகோங் கேழிலைப் பாலைச்
சிந்துர மசோகு மாதவி நெல்லி
செண்பகம் பாடலந் தேமா
மந்தரைக் கமுக புன்னைநா ரத்தை
மகிழ்விளா மருதெலு மிச்சை
குந்தமா சினிமா கடம்பில விதழி
குங்குமஞ் செறி திரட் சோலை

தெரிந்த மரங்களின் வெறும் பட்டியல்தான். மரங்களுக்கு அடைமொழி

கூடத்தரவில்லை. ஆனாலும் சொல்லமைப்பும் இன்னோசையும், தனிச் சுவை நல்குகின்றது. இழுமென் மொழியால் விழுமியது பயிறல் எனும் வனப்பும் இதுதானே!

இவையே இப்படி என்றால் உணர்ச்சிப்பிழம்பாகிப் பாடும் பாடல்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? கனவு கைகூடுமோ எனக் கவலும் கதீஜாவின் நிலையை அற்புதமான அவல ஓவியம் வரைகின்றார் 'மதிநிகர் முகம்மதின் மனைவியாக வென்விதிவசம் பொருந்துமோ விலக்குமோ' 'எண்ணம் முற்றும் உலைதர உடல் மெலிந்துருகி வாடுமால், 'செய்தி யாவையும் தெரிதரவில்லை எனத்திகைத்துத் தேம்புமால்' என்றெல்லாம் ஐந்து பாடல்களில் மனப்போராட்டத்தைச் சித்திரித்து, ஆறும் பாடலில் அந்த ஊசலின் உச்ச கட்டத்தையும் காட்டுகின்றார்.

விம்முறும் ஏங்கும் மெய்வருந்தும் வெய்துயிர்த்து
அம்மவோ எனுமுளத் தடக்கி ஆழ்கடல்
மம்மரைக் கடப்பதெவ் வகைகொல் எனச்
செம்மலர் முகம் கரிந் திருந்து தேம்புமே

என உமறு காட்டும் கதீஜாவின் கனிவான ஓவியம்,

விழுதல் விம்முதல் மெய்யுற வெதும்புதல் வெருவல்
எழுதல் ஏங்குதல் இரங்குதல் இராமனை எண்ணித்
தொழுதல் சோருதல் துளங்குதல் துயருழந்து உயிர்த்தல்
அழுதல் அன்றிமற் றயலொன்றும் செய்குவ தறியாள்

ஆகிய சிறையிருந்த செல்வியின் சித்திரத்தை நினைப்பூட்டுகின்றது.

இந்நிலையில் ஆறுதலாக ஒரு கடிதம் வந்தால் எப்படி இருக்கும்? முகம்மது வருவார் என்று கடிதத்தில் கண்டிருக்கிறது "தெரிதர முகம்மதென்றெழுதும் சித்திர வரிதொறும் இருவிழி வைத்து முத்தமிட்டு உரியதம் உயிர் பெறும் உவகை யாயினர்"—என்கிறார் கவிஞர் முகம்மது என்றெழுதும் சித்திர எழுத்தாம்! ஓவியம் வரைந்தா எழுதியிருந்தது? அல்லது சித்திர வேலைப்பாடமைந்த கலை எழுத்தா? எதுவும் இல்லை. சாதாரண எழுத்துத் தான். கதீஜாவின் கண்களுக்குத்தான் அவை சித்திர எழுத்து, சிங்கார எழுத்து. கடிதம் முழுதும் கூடச் சித்திரமாக படவில்லை, 'முகம்மது என்ற எழுத்துமட்டும்தான் சித்திரமாய்த் துலங்கியதாம்; காதல் உள்ளத்தின் தன்மையை எவ்வளவு நுட்பமாக இந்த ஒரு சொல்லிலேயே காட்டி விடுகிறார். முகம்மது என்று எழுதியிருந்த வரியிலேயே இருவிழிகளும் நிலை

பெற்று விட்டனவாம். மேலும் கீழும் இருந்த ஏனைய வரிகளில் கண்பதியவே இல்லையாம் எவ்வளவு நயமான குறிப்பு!

ஊசாவின் கடிதத்தைப் பெற்ற கதீஜா மகிழ்ந்த நிலையை "உத்தரந் தனையுணர்ந்தறிய உள்ளமும் புத்தியும் களித்து உடல் புளகம் பூத்ததே" என்கிறார், உள்ளம் உணர்ச்சி வயப்படக் கூடியது. அதன் மகிழ்ச்சியில் சிறப்பில்லை. அறிவு பூர்வமாகச் சிந்தித்து உணர்வதே உண்மை மகிழ்ச்சி. அந்தத் தெளிவே பெண்மைக்கு அணி. அறிவுக்களிப்பை உடல் புளகம் வெளிக் காட்டும். பொதுவாக, உள்ளம், உடல், இரண்டையுமே எவரும் கூறுவர். உமறுவோ கதீஜாவின் அறிவின் மாட்சியையும் மிகநுணுக்கமாகக் காட்டி விடுகிறார்.

இந்த ஒரு படலத்திலேயே எத்தனை வகை உணர்ச்சிகள்! காட்சிகள். பெண்மையின் எல்லா நிலைகளையுமே மின்வெட்டுப் போலக் காட்டி விடுகிறார் கனவிலே மகிழும் பேதை, நனவிலே ஏங்கும் பெண்மை, வரவிலே மகிழும் வனிதை என ஒவ்வொரு கதீஜாவின் ஓவியமும் உமறுவின் வண்ணத் தூரிகையினால் மின்னிப் பொலிகின்றது.

ஒருமுறை கூறிய உவமைக்கு இசையவே பின்னரும் தொடர்ந்து கூறிவரும் சிறந்த போக்கினையும் உமறுவிடம் காணலாம். கனவு கண்டு கண்விழிப்பது எதிரே தன் காதலனைக் காணாது ஏமாற்றமடைந்த கதீஜாவின் நிலையை, "கருதிய துயரெனும் கடற்குளாயினர்" என்கிறார். அந்த நிலையில் நல்லசேதி தாங்கிக் கடிதம் வருகின்றது. அதனை,

திரைப்படும் கடலிடை தியங்கு வார்க்கொரு
கரைப்படுத் திடுமரக் கலத்தை ஒத்ததே

என முற்கூறிய உவமைக்குப் பொருத்தமாகவே காட்டுகின்றார்.

கதீஜாவின் மகிழ்ச்சியைக் கூறும்போது கதிரவனையும் தாமரையையும் கூறும்கவிமரபுக்கு மாறாக "வருமதிக்கின்புறு மலர்கள் ஒப்பவே"—என்கிறார். முகம்மதின் தண்மை, இனிமை, தூய்மை ஆகிய பண்புகளைக் குறிக்க 'மதி' என்றாரோ? மடிமிசை மதிவந்ததாகத்தானே கதீஜா கனவும். அந்த மதி, உருவகமாக முகம்மதுவைத்தானே குறித்தது! இந்தக் கனவு கண்ட படலத்தில் நாகில வருணனையும் அமைந்துளது. பாலையின் வெம்மை ஒரு சிறிது காட்டப்பட்டு ஏனைய பாடல்கள் அனைத்தும் இயற்கையின் பசிய எழிலையும், குளிர்ச்சியையும், இனிமையையுமே காட்டுவன. அவதாரப் படலத்திலேயே நபிகளை பானுவின் கதிரால் இடருறும் உலகில் படர்தரு குளிர் நிழலாய் வந்தவர் என்றதற்கு ஏற்ப அவரை எங்குமே தண்ணியல்பு கொண்டவராகவே காட்டுகிறார் ஆசிரியர். கருத்துக்கள் ஒரே சீராகப் பொருந்திவரும் இத்தகைய புலமைச் சிறப்புக்களை நூல் முழுதும் —குறிப்பாக இப்படலத்தில்— காணமுடிகின்றது.

# உசைனர் பிறந்த படலம்

மு. தமிழ்க்குடிமகன், எம். ஏ.
யாதவர் கல்லூரி, மதுரை.

நபிகள் நாயகத்தின் வரலாற்றை விரிவாகக் கூறியிருக்கும் உமறுப்புலவர் தமது சீருப்புராணத்தை மிக அருமையான காப்பிய மாகச் செய்திருக்கிருர். தமிழின்பால் அவர் கொண்ட ஈடுபாட்டையும், தமிழ்மரபுகளை மனத்தில் இருத்திக் கொண்ட திறத்தையும் நூலில் பரக்கக் காணலாம். அதுவுமன்றி, கோடிக்கணக்கான மக்களின் வாழ்வுக்குக் கைகாட்டியாக, நெறி காட்டும் செம்மலாக, உலகைக் கடைத்தேற்றி உரிய இடத்தில் சேர்க்கும் கொள்கைக் கலமாக விளங்கிய பெருமானுரின் வீறுமிக்க செயல்களை மிக ஆழமாகக் காணும் சீருப்புராணம், கவிதை வளத்தால், செய்திகளை விரித்துரைக் கும் மாண்பால் சிறந்து நிற்கிறது என்ருல் மிகையாகாது.

5027 பாடல்களைக் கொண்ட இந்நூலில் ஒரு படலத்தில் மட்டும் நின்று சில பகுதிகளின் நயம் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இப்படலத்தில் பெருமானுர் ஒரு நிறைவான தோற்றத்தோடு காட்சியளிக்கிருர். பல செயல்களைச் செய்து, இன்பமும் துன்பமும் கலந்ததே உலக வாழ்க்கை என்பதை உணர்ந்து மன்பதைப் பணி யாற்றுவதில் ஏற்பட்ட மனநிறைவோடு காட்சியளிக்கிருர். அதிலும் தம் பெயரனுகிய உசைன் பிறக்கும் நேரம், நபிகள் நாயகத்தின் வாழ்வில் நிறைவான வேளை என்றே சொல்லலாம். இவரது வளர்ச்சி பொருமல், இவரது நல்ல செயல்களின் விளைவைத் தாங்கிக் கொள்ள முடியாமல், பகைநஞ்சு கக்கிய கூட்டத்தை அறவே ஒழித்து விட்ட வேளை. "நல்லது செய்ய நாலு இடையூறு வரும்" என்பது தொன்மொழி. பகையினை, அதிலும் புறப்பகையினை முற்றிலும் வெல்வதென்பது அரிது. ஆனல் நபியவர்களோ பகையினை வேரறக் களைந்திருக்கிருர். மீண்டும் தலைதூக்க முடியாதபடி அழுத்தியிருக்கிருர். அவரது செங்கோல் ஆட்சி சிறந்து விளங்குகிறது. அவரது செயல் களால் நாடெங்கும் ஒளி பரவுகிறது. இருள் அகல்கிறது. பகையையும் ஒழித்து, பணி செய்யும் வாய்ப்பும் முழுமையாகக் கிடைத்து விட்டால் அதை விட மகிழ்ச்சி வேறென்ன இருக்க முடியும்? இந்த நேரத்தில் அவர் என்ன செய்தாலும் புகழ்தானே! புலவர் அந்தச் சூழலை

அருமையான உவமையால் விளக்குகிறார். சுவரில் அழுக்கேறியிருக்கிறது. பார்ப்பதற்கே அருவருப்பாக இருக்கிறது. அந்தச்சுவரில் சுதை (சுண்ணும்பு) பூசப்பட்டவுடன் சுவரின் தோற்றமே மாறிவிடுகிறது. வெண்திரை போல விளக்கமுறுகின்றது. பெருமானாரின் புகழ் பரவப் பரவ உலகின் அறியாமை இருள் மெல்ல மெல்ல அகல்கின்றது. புகழ் வென்சுதை போல. சுவர் விளக்கமுறுவதுபோலத் திசையெலாம் விளக்கமுறுகின்றது. என்ன அழகான நயம்!

"காயும் வெங்குபிர்ப் பகையினை
வேரறக் களைந்து
தேய மெங்கணும் நீண்டசெங்
கோலினைச் செலுத்தி
மேய வெண்புகழ்ச் சுதையினால்
திசையெலாம் விளக்கி
ஆயும் வேதநம் நபிமகிழ்ந்
திருக்குமந் நாளில்"

பெருமானாரின் மகளாகிய பாத்திமா இரண்டாவது மகனை ஈன்றெடுக்கிறார். அகவை முதிர்ந்துள்ள நிலையில் ஒவ்வொருவரும் மீண்டும் குழந்தையாகி விடுகின்றனர். அதிலும் பெயரக்குழந்தையோடு விளையாடும் ஒவ்வொருவரும் குழந்தையாகித்தான் தீர வேண்டும். பகை களைந்து மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்திக் கொண்டிருக்கும் பெருமானாரின் வாழ்வில், இந்நிகழ்ச்சி எவ்வளவு உச்சகட்ட மகிழ்ச்சியைத் தந்திருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை!

"உயிரெ னத்திரண் டுவகைகூர் மகள்வயிற் றுதித்த
செயிர றும்புகழ் பேரனை மடிமிசைச் சேர்த்தி" மகிழ்கின்றார்.

இந்நிலையில் இந்தப் படலத்தின் போக்கே மாறி விடுகிறது. வாழ்வின் உண்மையை விளக்குவதற்காக உமர்கய்யாம் ஒரு காட்சியைக் காட்டுவார்.

புலர்ந்து விடியும் பொழுதினிலே
பொய்கைக் கரையஞ் சோலையிலே
மலர்ந்து நல்ல மணம்வீசி
மகிழும் மலர்கள் ஆயிரமாம்

உலர்ந்து வாடிச் சேற்றினிலே
உதிரும் அவையும் ஆயிரமாம்
கலந்த உலக வாழ்வையிதில்
கண்ணால் கண்டு தெளிவாயே!

காலையில் மலர்ந்த மலர்களைப் பார்க்கும்போது அகல விரிந்த கண்கள், மாலையில் அதே மலர்களின் வாடிய நிலையைப் பார்த்துக் கண் கலங்குவது தவிர்க்க முடியாதது. அதுதான் வாழ்க்கை!

உசைனார் பிறந்த படலத்தில் ஒரு பிறப்பு நிகழ்ச்சியையும், அதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியையும் காட்டிய புலவர் தொடர்ந்து ஓர் சிறப்பு நிகழ்ச்சியையும் காட்டுவது, இப்படலத்தின் சிறப்பைத் தான் உணர்த்துகிறது. வாழ்வின் இரு நிலைகளும் இப்படலத்தின் தொடக்கமும் முடிவுமாகும். எனவே இப்படலம்தான் வாழ்வின் முழுப் படப்பிடிப்பாகும்.

அலிப்புலி (பெருமானாரின் மகள் கணவர் — மருமகன்) யின் தாயாகிய பாத்திமா அம்மையார் முதுமை நிலையால் நலிந்து இயற்கையெய்துகின்ற நிலை. அவர்தாம் பெருமானாரை அன்புடன் வளர்த்தவர்.

"தந்தை வாட்டமும் தாயெனும் வாட்டமும் தவிர்த்துப்
புந்தி கூர்தர வந்த" தாயாக இலங்கியவர்.

அப்படிப்பட்டவரது மறைவு பெருமானார்க்குச் சொல்லொணாத் துயரைத் தருகிறது.

அவருக்கு இறுதிக்கடன் நிகழ்த்தும் வேளையில் பெருமானாரின் துயரம் கட்டுக்கடங்காமல் பீறிட்டெழுகிறது. உணர்வுகட்கு முதலிடம் தந்து உணர்ச்சிவயப்படாத நிலையை அனைவரும் பெற வழிகாட்டிய பெருமானாரே, உணர்ச்சியின் எல்லையைத் தொட நேர்கிறது. கடந்த ஞானியரும் கடக்க முடியாத பாசத்தால் கட்டப்படுகிறார். அவரது உருக்கமான நிலையைப் புலவர் எவ்வளவு நுணுக்கமாக நமக்குக் காட்டுகிறார்!

"மருவு லாவிய கபுறில்வைத்
திடமுகம் மதுவுள்
ளுருகி வாடிமெய் சோர்ந்துநெட்
டுயிர்ப்பெறிந் திரங்கி

யருகி னிற்படுத் தங்கையி
ஞலுற வணைத்துத்
திருவி ளங்கிய முகத்தொடு
முகத்தினைச் சேர்த்தார்''

இந்தப்படலத்தின் தொடக்கத்தில் 'மயக்குறு மக்கட்பேற்றின்' சிறப்பினை அறிமுகப்படுத்தி அதனல் பெருமானுர் மகிழ்ந்திருக்கும் காட்சியைக் காட்டிய புலவர், படலமுடிவில் அவரது துயர் நிலையைக் காட்டவேண்டியுள்ளது என்ருல் உறுதிப்படுத்தப்பட்ட வாழ்வின் இரு முனைகளை இணைத்துக்காட்டுகின்ற பாலமாகத்தான் இப்படலம் விளங்குகின்றது என்பதை நாம் உணரமுடியும். மனித வாழ்வே இப்படித்தான் நிலையில்லாமல் இங்கும் அங்கும் அலைப்புண்டு தாக்குறும் என்பதை எச்சரிக்கும் படலம்; அதிக ஆட்டம் போடுவாரைப் பார்த்து 'பெருமானுர்க்கே துன்பநிலை தவிர்க்க வியலாதது என்ருல், பேதைகளே! உங்கள் நிலையைப் பேசவும் வேண்டுமோ'? என்று சொல்வதுபோல நிற்கிறது இப்படலம்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 106828
EGMORE, MADRAS-600 008

# பனீ அகுமது மரைக்காயரின் சின்னச் சீறு.

**கேப்டன் என். ஏ. அமீர் அலி, எம். ஏ.**

தென் பாண்டிச்சீமை என்றதுமே திரையெழும்பி வானின் வழியொழுகும் தேனருவியோடு தெள்ளுதமிழ் இலக்கியங்கள் பலவும் நினைவை நிறைக்கின்றன. 'தென்னந் தமிழின் உடன் பிறந்த சிறுகால்' வீசும் மண்ணன்றோ பாண்டிமண்டலம்! இஸ்லாமிய இலக்கியங்களுள்ளும் பலவற்றைத் தென்பாண்டிப் புலவர்கள் படைத்திருக்கிறார்கள். செஞ்சொற் சீறுவைத் தந்த உமறுப்புலவர், பனீ அகுமது மரைக்காயர், ஹாஜி மொன்னுன், முகம்மது காதிரி சத்தாரி ஆகியோரும், குத்பு நாயகம் படைத்த புலவர் நாயகம், மிஃராஜ் மாலை ஆலிப் புலவர், திருப்புகழ் பாடிய காசீம் புலவர், சீறு வசனம் தந்த கண்ணகுமது மகுதூம் முகம்மது புலவர், பேரறிஞர் சதாவதானி மகாமதி சேகுத்தம்பிப் பாவலர், ஞானியார் சாகிபு ஒலியுல்லாஹ் ஆகிய புலமைச் சான்றோர் தென் பாண்டி நாட்டைச் சார்ந்தோராவர். இம்மேகங்கள் பொழிந்த கவிதைமழை தமிழ் நெஞ்ச ஏரிகளிலே இன்றளவும் இன் அலைகளை எழுப்புவதை யாரும் மறுக்க முடியாது.

உமறுப்புலவர் சீறுப்புராணம் என்ற பெயரில் வள்ளல் நபி பெருமானாரின் வாழ்வை 5027 செய்யுள்களில் பாடினார். இருந்தாலும் காவியத் தலைவருடைய வாழ்வை அவர் நிறைவுறப் பாடவில்லை. அவருக்குப்பின் வந்த காயற்பட்டினம் பனீ அகுமது மரைக்காயர் உமறுவிட்டுச் சென்ற இடத்தில் தொடங்கி 39 படலக்கண்ணிகளில் 1823 கவிதை மலர்களால் காவிய மாலையினை நிறைவு செய்கிறார்.

இந்நூலுக்குப்புலவர் சூட்டியபெயர் சிறுவென்கின்ற புராணம் என்பதாகும். அறிஞர் பெருமக்கள், உமறின் சீறுவினை இதனில் வேறுபடுத்திக் காட்டுவதற்காக, இதனைச் சின்னச்சீறு என்று செல்லப் பெயரிட்டு அழைத்தனர். உமறுப் புலவரின் சீறுவுக்கு ஓர் இயல்பான தொடர் காவியம் போல, எல்லாச் சிறப்பும் பெற்றி லங்கும் திருநூல் இது.

புலவர் பனீ அகுமது நல்ல பக்திமான். கவிதைத்தமிழ் நெஞ்சமுடையவர். நாயக வாழ்வினை நன்கு அறிந்தவர். ஆகவே

சீருப்புராணம் இடையிலேயே நின்றுபோனது அவருக்கு மனத்தில் பெருங்குறையாகவே இருந்தது. இக்காவியத்தை நிறைவு செய்யலாமா, கூடாதா என்ற ஐயமும் அவர் உள்ளத்திலிருந்தது. காத்தமுன் நபி அவர் கனவில் தோன்றித் தொடர்ந்து பாடத் தூண்டுகிருர்கள். இந்நூல் அச்சிடப்பட்ட சமயம் நூலுக்குப் பாயிரம் பாடியவர் இதனைச் சொல்கிருர்.

"அகுமது நயினுர் அற்புதச் சரிதையை
மிகுபுகழ்ச் செந்தமிழ் விருத்தச் செய்யுளால்
எத்தகை யோரும் இன்புறப் புலவருள்
உத்தம ராகிய உமறுப் புலவர்
காண்டமோர் மூன்றெனக் கணித்தனர், மூன்ருங்
காண்டச் சரிதம் கடைவற முற்ருக்
குறையை யறிந்து அக்குறை தவிர்த்திடவே
... ... .... ... ... ... ... ... ... ... ... ... ... ...
வண்பனீ அகுமது மரைக்காய ரென்னும்
ஒண் பெயருடைய உயர்மொழிப் புலவர்,
கண்வளர் காலைக் கனவில் நன் நயினுர்
தன்வளர் மேனித் தரிசனங் காட்டித்
தேம்பட மொழிந்த திருவாக்கின்படி"

—படலங்களைத் தகவுற அமைத்து, சொற்சுவை பொருட்சுவை தோய்ந்து, மகிழ்ந்து, நாவலர் வழுத்த,

'இன்சுவைக் கனியின் இரதந்தி ரட்டித்
தென்சுவை இழுதும் தேனுங் கலந்து
மணம்பெற அமைத்த வாழைப் பழத்தில்
குணம்பெறு சர்க்கரை கூடக் கட்டி'

நமக்கு வழங்குவதாகப் பாயிரத்திலே குறிப்பிடுகின்ருர்.

எந்தமத நூலாயினும் இறைவனின் பொதுத்தன்மையினைப் பாடிய பிறகே சமய மரபு சார்ந்திடப் பாடுவது தமிழ் மரபு. உமறுவைப் போலவே அத்தமிழ் மரபைக் காக்கின்ருர் புலவர். பனீ அகுமது,

" உண்மையாய் உணர்வாய் அவ்வுணர் வொளியாய்
அவ்வொளிக்குள் ஒளியாய் எங்கும்
அண்மையாய் சேய்மையதாய் அருமையாய்
எளிமையதாய் அகிலந் தானய்
பெண்மையும் ஆண்மையும் அலியுமல்லாதாய்
எல்லாமாய் பேசற்கு ஒண்ணுத்
தண்மையாய் எங்குநிறை பரம்பொருளாகிய
பதியைத் தாழ்ந்து வாழ்வோம்." —என்கிருர்.

பக்தர் உள்ளத்தே இருக்கும் உண்மையாய், உணர்வாய், அவ்வுணர்வின் ஒளியாய்க் காண்பதோடன்றி அவ்வொளிக்குள்ளிருக்கும் ஒளியாயும் இறைவனைக் காண்கிருர் கவிஞர். வாழ்வின் ஒவ்வொரு அணுவிலும் வல்லவன் ஊடுருவி நிற்பதால் மிகவும் அண்மையாய்த் தெரிகிருன். இருந்தாலும் அவனை அறியா உள்ளங்களுக்கு சேய்மையிலும் சேய்மையாய், அருமையாய்அவனிருக்கிருன் என்பதையும் அழகுற உணர்த்துகிருர் புலவர்.

நபிகள் நாயகம் பெருமானரின் வாழ்வில் கடைசி ஆறு ஆண்டு வரலாற்றைத்தான் சின்னச்சீரு நமக்குச் சொல்கிறது. இந்த ஆறு ஆண்டுகள் நிகழ்ச்சிகள் நிறைந்த ஆண்டுகள். அண்டை நாடுகளின் அரசர்களுக்கு பெருமானர் நிருபம் அனுப்பினர்கள். செல்வாக்கு மிக்க கூட்டங்களின் தலைவர்களை இசுலாத்தின் பக்கம் அழைத்தார்கள். கைபர், ஹுனைன், தபூக் போன்ற பெரும் போர்களை மேற்கொண்டார்கள். மக்காவினை வெற்றி கொண்டு, குறைசியர்களை இசுலாத்தில் இணைத்தார்கள். இவை எல்லாமே சின்னச் சீரு பாடும் கால இடைவெளியில்தான் நடந்தேறின.

தமிழ்க் காவியப் புலவன் தன் கற்பனை வளமெல்லாம் ஒன்று கூட்டி நாட்டுப் படலம் பாடுவான். நகரப்படலம் வரைவான். தலைமுறைப் படலம், அவதாரப்படலம் தீட்டுவான். அந்த வாய்ப்பெல்லாம் இந்தப் புலவருக்கு இல்லாமற்போனது. இருப்பினும் அங்கெல்லாம் காட்ட வேண்டிய கற்பனைத்திறனை இடையிடையே தெளித்துச் செல்கிருர்.

அண்ணல் நபி அரசிருந்து ஆண்ட பெருநகர் மதீனவில் தாமரை மலர் குலுங்கும் குளங்களைச் சூழ்ந்திருக்கும் வண்டலில்

முத்துக்கள் நிறைந்து கிடக்கின்றன. பசிய சூட்டினைத் தலையில் கொண்ட அன்னம், இந்த முத்துக் கூட்டத்தை முட்டைகளோ வென்றெண்ணி அணைத்து உறங்குகிறது. இத்தகைய வளம் செறிந்த மதீனா நகரைப் புலவர் காட்டுகிறார்.

முளரி, அரக்கு, ஆம்பல், நெய்தல், அல்லி, நீலம், குவளை ஆகிய மலர்களின் மொட்டு வாய் விள்ள, யாழ்போல இசைக்கும் வண்டினம் அம்மலர்களில் தேன் சுவைத்துப் பண்பாடும் சுனைகள் நிறைந்த சோலைகளையும் பாடித் தம் நகரப் படல உணர்வை நிறைவு செய்கிறார் கவிஞர்.

ஒளிப்பொருள் ஒன்று தெரிகிறது. அதுவும் உயரத்தே தெரிகிறது. வட்ட வடிவம் கொண்டு தெரிகிறது. ஏழு பரிகள் பூட்டிய ஆழிமணி நெடுந்தேரில் காதற் கதிரவன் வரவெண்ணிக் காத்திருந்த தாமரைகள் முகையவிழ்கின்றன. கவிஞரோ சிரிக்கிறார். தெரிவது கதிரவனல்ல. உயர்ந்த மாடத்தின் உச்சியிலே பொருத்தப் பெற்ற கும்பமே அது என்று நமக்கு விளக்குகிறார்.

வீழியிதழ் மாதர்பயில் மேனிலை நிரைத்த
பாழிமணி யின்குடம் பசும்பரி பிணித்த
ஆழிநெடுந் தேரின்வரும் ஆதவனென்று அல்லும்
தாழிமுகைத் தாமரைகள் தோடிதழ் அவிழ்க்கும்.

தாமரைகள் மட்டுமா மயக்கமுற்றன? குவளைகளும்தான். கவிஞரின் கற்பனையைப் பாருங்கள். அண்ணல் பெருமானார், ஈறிலா இறைவன் தூதர் வருகின்றார். வையத்து உயிர்கள் அவர்தன் வளர்மேனித் தரிசனம் பெறுகின்றன. வளரும் குவளைமலர் பெருமானார் மதிமுகம் கண்டு கண்விழிக்கிறது; தளை அவிழ்க்கின்றது. கண்ணே உடம்பான குவளைமலர் விரைவிலே தெளிந்து கொள்கிறது. கண்டது, மதியையல்ல—பெருமானாரின் மதிமுகத்தை என்று. இருப்பினும் ஏமாற்றமுறாது சமாளித்துக் கொள்கிறதாம். எப்படித் தெரியுமா?

மதி வராவிட்டால் என்ன? மதியை வரவழைக்கும் மதித்தூதரல்லவா வந்திருக்கிறார். இப்பெருமான் நினைத்தால் மதியை உடனழைக்க முடியாதா என்ன? இப்படி நினைத்துக் கொள்கிறதாம் அந்தக் குவளைமலர்.

குழைத்தசிலை யொத்தபுரு வக்கொடியின் நல்லார்
மழைக்குலம் நிகர்த்தகுழல் கண்டுமயில் ஆலும்
அழைத்துமதி யைக்குடி அமைத்தமுகம் கண்டு
தழைத்த இதழ் மைக்குவளை தண்தளை அவிழ்க்கும்.

குறைஷிகளும் இசுலாத்தில் இணைய வகை செய்த மக்கத்து வெற்றி ஹிஜ்ரி எட்டாம் ஆண்டில் நபிகள் நாதருக்குக் கிடைத்தது. மக்கம் பிடித்த படலத்தை 156 செய்யுள்களில் பாடுகிறார் புலவர்.

'நெடுங்கழுத்தன்' ஒட்டகையிலேற்றி, போருக்கு ஆயத்தமாக வார்செறி முரசினை இடியென முழக்குகின்றனர். கதிரிலைவேல் பட்டையம், குணில், சக்கரம், கார்முகப் பாணம், வட்ட மேவிய கிடுகு, ஒளிரும் வசியொடு பிறவும், பொற்கழல் வீரர் ஏந்தி வந்தடைகிறார்கள்.

அரியின் ஏறு எனத்திறத்து அபூபக்கர் வருகிறார். அடையார் புரம் எரித்திடும் வாள்வலி உமரும் வருகிறார். நீள்புரசைக் கரிகளொத்து அமர்கடந்த ஒண்வேல் உதுமானுடன், வரிசெறிந்த வெம்புலியென அலியும் போருக்கு ஆயத்தமாய் வருகிறார்கள். பார் சிறுக்கப் பெருகிய படை இது. எனினும் தங்கள் நகரின் மீதுதான் முசுலீம்கள் படை எடுத்து வருகிறார்கள் என்று மக்க நகரத்தவர் ஓர்ந்திடா வகையில் நபிகள் படை நடத்துகிறார்கள். பெரிதும் இரத்தம் சிந்தாமலே மக்காவினைப்பிடிக்க வேண்டுமென்பதே பெருமகனாரின் நோக்கம்.

"நெருங்கி உம்மோடெதிர்த்தவரை நிணங்கள் தெறிப்பச் செகுப்பதல்லால், கரங்கள் தன்னில் ஆயுதமுனைகள் காட்டாதவரைக் கொல்ல வேண்டாமெ"ன அண்ணலாரிடமிருந்து கட்டளை பிறக்கிறது.

படை மக்காவை நெருங்குகிறது. சிங்கநேர் சயீதென்பார் ஓர் அணிக்குத் தலைமை தாங்கிச் செல்கிறார். வெற்றியுணர்ச்சி வயப்பட்ட அவர். "மக்கநகர் சங்கைகள் அழியும் நாள் இது" வெனக் கூறி விடுகிறார். இதனை அறிந்த பெருமானார் "பொங்கிய சிறப்பு நல்கும் நாள் இது"வென விளக்கம் சொல்லி, தார் குடியிருக்கும் திண்தோள் சயீது தப்புரைத்தார் என்று அன்னார்

கரத்திலிருந்த வெற்றியுயர் கொடியினைப் பறித்துப் பார்புகழ் அலிக்கு" அளித்து அணித்தலைமை நல்கினார்கள். படையொழுக்கத்தினை எவ்வாறு நபிகள் நாயகம் போற்றினார்கள் என்பதைக் கவிஞர் புலப்படுத்தும் முறை இது.

ஒற்றறிய வந்த அபுசுபியான், கடல்புடைபெயர்ந்த தென்னக், கதிப்பரி, பதாதி மற்றப் படையோடு நிசார்கள் கொண்டு பகுப்புற நபிகளாரின் படை வருவதைக் காண்கிறார்.

'அல்கல்இல் சேனை நீளத்து
அணியணிவருதல் நோக்கி
செல்அபா சுபியான் வாந்த
சிந்தையில் அதிசயித்தார்'

அவருடைய அதிசய உணர்வை ஒருகவிதையாக்குகிறார் புலவர் பனீ அகுமது.

"குரைகடல் ஏழும் பொங்கி குவ்விடத்து எதிர்த்துவந்தால்
கரை செய வல்லயாவர் ககனவர் தாமும் மிக்க
தரையிடத் தரசர் தாமும் சமர்க்கெதிர் பொருதலாகா
வரைகளும் நிலை விட்டேகு மென்ற பாசுபியான்,"

சொன்னார்.

போர் மேல் செல்லும் படையினைக் கடலுக்கு உவமை சொல்லுவது தமிழ் மரபு. அதற்கேற்ப நபிகள் நடத்திச் செல்லும் படையினை, ஏழு கடலும் பொங்கி வந்ததற்கு ஒப்பிடுகிறார். பொங்கி எழுந்து வந்துவிட்ட எழு கடலை கரை செய்து கட்டித் தடுக்க யாரால் முடியும்? ககனவராகிய வானவரும், இத்தரையிடத்தரசரும் எதிர்த்து நிற்கலாகாப் பெரும் படையின் எழுச்சியைக்கண்டு எண் திசைக் காவல் யானைகளும் நிலைவிட்டேகினவாம். புலவர் வியந்து நிற்கின்றார்.

மிகுதியும் இரத்தம் சிந்தாமல் மக்க நகரைப் பணிய வைக்கிறார்கள் இறுதி நபி.

இந்தியக் காவியங்களும், தமிழ்க் காவியங்களும் தலைமகனின் மறைவை எப்படிச் சுட்டுகின்றன என்பது ஆராய்தற்குரிய ஒன்றாகும். ஒரு மாவீரனின் மறைவும்கூட மிகப் பெரிதாகவே அமைய

வேண்டும் என்பது இங்கே மண்ணின் மரபாகவே இருந்துவந்திருக்கிறது.

ஆனாலும் புலவர் பனீ அகுமது இம்மரபினை மீறி ஒரு புதுமையைப் படைக்கின்றார். பெருமானாரின் மண்ணுலக வாழ்வு முடியும் வகையினைப் புலவர் பாடுவதைக் காண்போம். சீறுப் பாராயணம் கேட்போர், நல்லறங்களை உணர்ந்து பெரியோர் ஒருவரின் பொற்புடைய வாழ்க்கை வரலாற்றைச் செவிமடுத்தோம் என்ற மனநிறைவோடும், அவர் வழி நடப்போம் என்ற உறுதியோடும் செல்ல வேண்டுமென்பதே கவிஞர் விருப்பம். அதைக் கேட்டவர்கள் உணர்ச்சி வசப்பட்டுக் கண்ணீர் சிந்தியவர்களாக வீடு செல்ல வேண்டுமென்று அவர் விரும்பவில்லை.

இதுவே மனித மன இயல்பைப் பிரதிபலிக்கும் முடிவும் ஆகும். இதற்கும் ஒருபடி மேலே சென்று சீரு இரண்டாம் 'வாலியம்' பாடிய மொன்னன் முகம்மது, நாயகத்திருமேனி ரவுலா ஷரீபில் ஜீவித்திருந்தபடலம் வேறு பாடுகிறார்.

காவியத்தில் இறந்தாரை இறந்தவராக விட்டு விடுகின்ற துன்பியல் முடிவு தமிழ் மனத்திற்கு ஏற்புடயதல்ல என்பதையே இது காட்டுகிறது.

கொலையுண்ட கோவலனைக் கூட பூப்பல்லக்கில் ஏற்றி நம்முன்னே வரச்செய்துதானே தம் காவியத்தை முடிக்கிறார் இளங்கோ!

இசுலாத்தில் மரணம் என்பது அஞ்சத் தகாத ஒன்று. "நமனையஞ்சோம்" எனுந் துணிவு இறைவனின் நல்லடியார்க்கு இயல்பாகும். அதுவும் நல்ல செயல் செய்தோர்க்கு மரணம் மிக எளிதாக அமையும் என்பது முசுலீம்களின் நம்பிக்கை. நபிகள் நாதர் அவனியோர்க்கெல்லாம் அழகிய முன்மாதிரியாக வாழ்ந்த உத்தமர், தம் மரணத்தைப் பற்றித் தாமே அறிந்து அதனை ஏற்றுக் கொண்ட பாங்கினைக் கவிஞர் பாடுகிறார்.

'வாரிசூழ் புவியில் எவ்வுயிர்களாலும் மன்பதை நபிகளாலும் மான்புறும் அமரர்தானும், துன்புறும் மவுத்தைத் தட்டும் சூக்ஷமொன்றில்லையம்மா' என்று உலக நிலையாமையினைச் சொல்லிக்

கேட்போர் உள்ளத்தை ஒரு துயர முடிவுக்கு ஆயத்தப் படுத்துகிறார். வானுலகம் அடுத்து விட்டது என்பதை நபிகள் திலகம் உணர்கிறார்கள். 'சோதி வானுலகம் புக்கி அமுதங்கள் துய்ப்ப, எற்கு இப்போது இறை கற்பித்திட்ட பொழுது வந்து அணித்தது' என்கிறார்கள். அருகிருந்தவரைப் பார்த்து, உங்கட்கும் எமது தீனில் பின்னுறுபவர்களுக்கும். பெரியவன் ரகுமத்தோடே என் சலாமும் உண்டாகட்டும் என்று வாழ்த்துகிறார்கள்.

நாயகம் அவர்களின் இன்னுயிர் திடீரெனப் பிரியவில்லை. அப்படி யாரும் எதிர்பாராவண்ணம் பிரிந்திருக்குமேயானல் வையத்து மக்கள் நிலையழிந்திருப்பர். உமறுப்புலவரே, அண்ணலாரின் வாழ்வு நிறைவும் நேரத்தைப் பாடி இருந்தாலும் உணர்ச்சிகள் கரை கடந்து பெருகா அளவில் மிகச் சில பாடல்களிலேயே பாடி இருப்பார் என்பது உறுதி.

நபிகளாரின் வருகைக்கென மேலுலகம் அலங்கரிக்கப்பட்டு, சுவர்க்கப் பரிமளம் தெளிக்கப்பெறுகிறது. அது திகாந்தம் தோறும் வீசி, சுடர்விட்டொளிரும் நபி இருக்கும் தூய மதீனம் எனும் நகரின் இடமுற்று எங்கும் கமகமவென மணத்தது. ஹூருலின் என்ற விண்ணுலக மங்கையர் நபியுல்லா நம் உலகுக்கு வருகிறார் என்று கூறி ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

அந்த நேரத்தில் மா நபியின் நெற்றியிலே வியர்வை துளிர்க்கிறது. அருகிருந்த அண்ணல் மகளார் பாத்திமா நாச்சியார் உளங்கலங்கி, பெருகும் துயரொடு, வேர்வுதனைத் துடைக்கிறார்கள். அப்போது புதுமணம் ஒன்றெழுந்து திசைதிசைகள் முழுவதும் புதிதாய்க் கமழ்ந்தது. அன்னை ஆயிசா, நாயகத்தை நோக்கி, "தங்கள் நுதல் வியர்ப்பதேன்" எனக் கேட்க, அதற்கு "உற்ற மறைதேர் மூமின்கள் உயிர் வானுதல் வேர்வுடன் அகலும்" என்றார் நபிகளார்.

அதன்பின் அருகிருப்போரிடம், "சோதி இறையை அஞ்சொகுத்தும் தொழுமின், தொழுமின், தொழுதிலையேல், ஏதமகற்றும் நன்மை அணுவளவேனும் கிட்டாது" என்றார்கள், நபிகள் நாதர் இப்புவி நீத்ததைச் சொல்வதை விட மேலுலகில் குடிபுகுந்த காட்சியினைப் பாடுதலே சிறப்பெனக் கொண்டு புலவர் பாடுகிறார்.

ஜிபுரீலும், மீக்காயிலும் இருபுறமிருக்க 'நிலங்கொண்டிருந்த

பல்லுயிரும் நிமிடத்து அருந்தும் எமதருமன்' அஞ்சி, நடுங்கித் தடுமாறி, ஆகங்கலங்கி வெண்ணையிறுங் குஞ்சி மெதுவாய் வாங்குவதுபோல் கோமான் இரசூல் நபியுயிரைக் கஞ்சி மலர்ப் பூங்கரத்து ஏந்திக் கத்தன் கலுறத்திடைக் கொடுபோய் எஞ்சல் அணுகா உவணை அறுசு எவையும் சிறப்பவைத்தனரால்.

அப்பொழுது, விண்ணில் உறையும் விபுதர்களும் அழுதார்கள். மண்ணில் உறையும் மக்கள் எலாம் வாய் புலர்ந்தனர். முகம் வாடினர். சோர்ந்தனர். மதிமயங்கினர். கண் சிவந்தனர், கரைத்தழுதனர். தீயினில் பட்ட தளிர் போலக் கருகினர். தீய்ந்தனர். கானில் மலர்கள் பொதியவிழ்ந்து மலர மறந்து விட்டனவாம். புதிதாக ஈன்ற இளங்கன்றுக்குகூடப் பாலூட்ட தாய்ப் பசு மறந்து நின்றதாம். வானில் இயங்கும் பறவைகள் தங்கள் கூடுகளில் பசியுடன் துடிக்கும் குஞ்சுகளுக்கு இரையூட்ட மறந்தனவாம். இவ்வாறு பெருமானார் இப்புவி விட்டகன்ற துன்பத்தைச் சொற்சித்திரமாக்கி,

“தாயினிறி பரிவாய் மகுசறில் தாக்கும்
[சையதுமுகம்மது நபிக்கும்
மேயவால் அசுகாபிகளவர் தமக்கும்
[இக்கதைக்குதவி செய்தவர்க்கும்
தூய செந்தமிழால் கோவை செய்தவர்க்கும்
[சொற்கவி செய்தவர் தமக்கும்
நேயமுற்று எழுதிப் படித்தவர் தமக்கும்
[ஆதிநீ கிருபைசெய் ஆமீன்”

எனத் துதி செய்து காவியத்தை நிறைவு செய்கிறார் பனீ அகுமது மரைக்காயர்.

—நன்றி: AIR நெல்லை.

0—, 1KUm:ž
N75
106828

21B
36
8